**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 30-12-2011 Issued : 30-12-2011

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் செயலக வெளியீடு

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, ஆகஸ்ட் 29, 2011—தொகுதி 11—எண் 2**

**Monday the 29th August 2011—Volume 11—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

29–8–2011

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. விதி 110–ன்கீழ் அறிக்கை—** | |
| திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட மூவரின் தண்டனையையும் இரத்து செய்வது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 391-396 |
| **2. மானியக் கோரிக்கைகள், 2011-2012, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 39 – கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)— } தொடர்ச்சி | |
| (ஆ) கோரிக்கை எண் 40 – பாசனம் (பொதுப் பணித் துறை) } தொடர்ச்சி | |
| மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் | 398-418 |
| திரு. சு. குணசேகரன் | 438 |
| *திரு. க. பாலகிருஷ்ணன் | 438-439 |
| (இ) கோரிக்கை எண் 21 –நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் } தொடர்ச்சி | |
| *மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 418-437 |

பக்கங்கள்

**2. மானியக் கோரிக்கைகள், 2011-2012, விவாதமும் வாக்கெடுப்பும்**—*தொடர்ச்சி*

*(ஈ) கோரிக்கை எண் 10 – வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)*
*(உ) கோரிக்கை எண் 11 – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)*
*(ஊ) கோரிக்கை எண் 54 – வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)*
*(எ) கோரிக்கை எண் 15 – சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)*
} *தொடர்ச்சி*

| | |
|---|---|
| *மாண்புமிகு திரு. அக்ரி எஸ்எஸ். கிருஷ்ணமூர்த்தி* | 442-443, 463, 466, 474-475 490-491, 530-531 |
| **மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்* | 450, 463, 470, 471, 479, 494, 496, 497-498, 504, 506, 508-511, 513-514, 521-522, 528, 550-558 |
| *மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா* | 457, 464, 471, 531-549 |
| **திரு. சி.எச். சேகர்* | 464-474 |
| *மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்* | 470 |
| *திரு. ஓ.கே. சின்னராஜ்* | 475-478, 480-490 |




பக்கங்கள்

**2. மானியக் கோரிக்கைகள், 2011-2012, விவாதமும் வாக்கெடுப்பும்**—*தொடர்ச்சி*

*(ஈ) கோரிக்கை எண் 10 – வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)*
*(உ) கோரிக்கை எண் 11 – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)*
*(ஊ) கோரிக்கை எண் 54 – வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)*
*(எ) கோரிக்கை எண் 15 – சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)*
} *தொடர்ச்சி*

| | |
|---|---|
| *திரு. சு. குணசேகரன்* | 461, 479 |
| *மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்* | 479-480 |
| *திரு. ப. டில்லி பாபு* | 491-500 |
| *மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்* | 492-493, 523, 526 |
| *திரு. சு. மாதேஸ்வரன்* | 500-505 |
| **மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி* | 503 |
| **திரு. பி.எல். சுந்தரம்* | 505-515 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* | 512, 522, 558-559 |
| *திரு. கா.கோ. ரமேஷ்* | 515-523 |
| *திரு. ஆர். அருள்செல்வன்* | 524-531 |
| **மாண்புமிகு திரு. பி. தங்கமணி* | 528 |

**3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 559-560

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 12

## 2011 ஆகஸ்ட் 29, திங்கட்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்*
*பிறவும் தமபோற் செயின்."*

*பிறர் பொருளையும் தம் பொருளாக நினைத்து, நடுவுநிலைமை தவறாது வாணிபம் செய்வதுதான் வணிகர்களுக்கு உரிய வாணிப முறை ஆகும்.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 1. விதி 110–ன்கீழ் அறிக்கை

### திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட மூவரின் தண்டனையையும் இரத்து செய்வது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டு, மே மாதம் 21 ஆம் நாள், முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஆகஸ்ட் 29

கூட்டத்தில் கலந்துகொள்ள வந்தபோது படுகொலை செய்யப்பட்டார் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். இது தொடர்பாக வழக்கு பூந்தமல்லி தடா நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. அதனை எதிர்த்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் உச்ச நீதிமன்றம்வரை சென்று மேல்முறையீடு செய்ததில், உச்ச நீதிமன்றம் நளினி, ஸ்ரீஹரன் என்கிற முருகன், சுதேந்திரராஜா என்கிற சாந்தன், பேரறிவாளன் என்கிற அறிவு ஆகிய நான்கு பேருக்கும் தூக்கு தண்டனையை உறுதி செய்தது. மேலும், 3 பேருக்கு தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. எஞ்சிய 19 பேரை விடுதலை செய்தது. உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து, தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 4 நபர்களும் மறு ஆய்வு மனு தாக்கல் செய்தனர். இதனை 8-10-1999 அன்று உச்ச நீதிமன்றம் நிராகரித்து உத்தரவிட்டது.

17-10-1999 அன்று மேற்கண்ட தூக்கு தண்டனைக் கைதிகள், மேதகு தமிழக ஆளுநர் அவர்களுக்கு, கருணை மனுக்களைச் சமர்ப்பித்தார்கள். 27-10-1999 அன்று மேதகு தமிழக ஆளுநர், இவர்களின் கருணை மனுக்களை நிராகரித்து ஆணையிட்டார்.

தூக்கு தண்டனைக் கைதிகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் இது தொடர்பாக வழக்குகள் தொடுத்தனர். இந்த வழக்குகளை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், 25-11-1999 அன்று வழங்கிய தீர்ப்பில், மனுதாரர்கள் தொடுத்த வழக்குகளை ஏற்று, கருணை மனுக்களை நிராகரித்த மேதகு ஆளுநரின் ஆணையைத் தள்ளுபடி செய்து, அமைச்சரவையின் ஆலோசனையைப் பெற்று புதிய ஆணை வழங்குமாறு அறிவுறுத்தியது.

இந்தப் பொருள் குறித்து 19-4-2000 அன்று அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவு எடுக்கப்பட்டது:

"தூக்கு தண்டனை வழங்கப்பட்ட நான்கு கைதிகளில் ஒருவரான நளினியின் பெண் குழந்தை அனாதை ஆகிவிடும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்திற்கிணங்க, நளினி ஒருவருக்கு மட்டும் கருணை காட்டி, மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம் என்றும், மற்றவர்களைப் பொறுத்தவரையில் அவர்களது கருணை



2011 ஆகஸ்ட் 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மனுக்களை நிராகரிக்கலாம் என்றும் ஆளுநருக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவை முடிவெடுத்தது."

திரு. கருணாநிதி தலைமையிலான அமைச்சரவையின் முடிவினை ஏற்று, மேதகு ஆளுநர் அவர்கள் 21-4-2000 அன்று ஒப்புதல் அளித்தார். அதன்படி தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 4 நபர்களில் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரது தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்டது. இந்த மூன்று நபர்களும் மேதகு குடியரசுத் தலைவருக்கு அளித்த கருணை மனுக்களை தமிழ்நாடு அரசு 28-4-2000 நாளிட்ட கடிதத்தின்படி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது.

முற்பகல் 10-05

இதன்மீது மத்திய அரசின் உள் துறை, தனது 12-8-2011 நாளிட்ட கடிதத்தில், மேதகு இந்திய குடியரசுத் தலைவர், இந்தக் கருணை மனுக்களை நிராகரித்து உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்து, இதனை மேற்கண்ட கைதிகளுக்குத் தெரியப்படுத்துமாறு தெரிவித்துள்ளது. இந்தக் கடிதத்தின் விவரம், சம்பந்தப்பட்ட கைதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள், தூக்கு தண்டனை விதிக்கப்பெற்ற மேற்படி பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரைத் தூக்கு தண்டனையிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று எனக்குக் கோரிக்கைகள் விடுத்துள்ளதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. மேலும், பேரறிவாளனின் தாய் திருமதி அற்புதம் அம்மாள் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில், தனது மகனை விடுவிக்குமாறு வேண்டியுள்ளார். தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம், பேரறிவாளன் உள்ளிட்ட 3 நபர்களின் தூக்கு தண்டனையை இரத்து செய்ய என்னிடம் கோருவதாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளதாக, தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் தலைவர் திரு. பாரதிராஜா கடிதம் எழுதியுள்ளார். மேலும் சிலர் இதுபற்றிக் கடிதங்கள் எழுதியுள்ளனர்.

இதில் எல்லோரும் கவனிக்கவேண்டிய உண்மை என்னவென்றால், பேரறிவாளன் உள்ளிட்ட மூவரை, மரண தண்டனையிலிருந்து தமிழக முதலமைச்சராகிய நான் காப்பாற்ற

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஆகஸ்ட் 29

வேண்டுமென்று முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். ஆனால், 2000 ஆம் ஆண்டில் முதலமைச்சராக இருந்த இதே திரு. கருணாநிதிதான், தனது தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் கருணை மனுக்களையும் நிராகரிக்கலாம் என்றும், மூவருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதி செய்யலாம் என்றும் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியுள்ளார். அன்றைய முதலமைச்சர் கருணாநிதியின் இந்தப் பரிந்துரையை அன்றைய ஆளுநரும் ஏற்றுக் கொண்டார்.

இவ்வாறு பேரறிவாளன் உள்ளிட்ட மூவருக்கும் அளிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதி செய்துவிட்டு, செய்வதையெல்லாம் செய்துவிட்டு, இன்று ஒன்றும் தெரியாததுபோல், அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று திரு. கருணாநிதி அறிக்கை வெளியிடுகிறார் என்றால், இது இரட்டை வேடம் அல்லாமல், பித்தலாட்டம் அல்லாமல், கபட நாடகம் அல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) வேறு என்ன என்பதைத் தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையில், பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் தூக்கு தண்டனையை இரத்து செய்யும் அதிகாரம் எனக்கு இருப்பது போலவும், அந்த அதிகாரத்தை நான் பயன்படுத்தி அவர்களைக் காப்பாற்ற முடியும் என்பது போலவும் பேசப்படுவது சட்டத்தின்படி சரியானது அல்ல. பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் சட்டங்களைத் தெரிந்துகொண்டு, வேண்டுமென்றே இவ்வாறு எனக்கு அதிகாரம் இருப்பதுபோலச் சொல்லி வருகிறார்களா அல்லது சட்டங்களைப்பற்றி எதுவுமே தெரியாமல், முதலமைச்சருக்கு இத்தகைய அதிகாரம் இருப்பதாகக் கூறுகிறார்களா என்பது தெரியவில்லை. எனவே, சட்ட நிலைமை என்ன என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாகப் பொது மக்களுக்குத் தெரிவிப்பது எனது கடமையாகும் எனக் கருதுகிறேன்.

உச்ச நீதிமன்றத்தால் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு, மேதகு ஆளுநரோ அல்லது மேதகு குடியரசுத் தலைவரோதான், இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி மன்னிப்பு அளிக்க முடியும். இவர்களுக்கு மேதகு



2011 ஆகஸ்ட் 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ஆளுநர் அவர்கள் மன்னிப்பு அளிக்க வேண்டுமெனக் கருதப்பட்டிருந்தால், 2000 ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில்தான் அதற்கான முடிவு எடுத்திருக்கமுடியும்; எடுத்திருக்க வேண்டும். அமைச்சரவையின் அறிவுரைப்படி, மேதகு ஆளுநர் அவர்களால் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு, பின்னர் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களாலும் மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ள இந்த நிலையில், தூக்கு தண்டனையை இரத்து செய்வதற்கோ, நிறுத்தி வைப்பதற்கோ எந்தவித அதிகாரமும் தமிழக முதலமைச்சராகிய எனக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில், மீண்டும் அதே பொருள் தொடர்பான கருணை மனுவை மாநில ஆளுநர் பரிசீலிக்க வேண்டுமென மாநில அரசு கோரமுடியாது என 1991 ஆம் ஆண்டே மத்திய அரசு தெளிவுரை வழங்கியுள்ளது.

முற்பகல் 10-10

5-3-1991 நாளிட்ட கடிதத்தில் மத்திய உள் துறை அமைச்சரகம் பின்வருமாறு தெரிவித்துள்ளது:

"The Government of India, on an examination of the matter, and after taking all relevant constitutional aspects into view, direct in terms of article 257(i) of the Constitution of India that in cases of death sentences where a petition for grant of pardon etc. has earlier been rejected by the President of India in exercise of his powers under article 72 of the Constitution of India, it would not be open for the Government of a State to seek to exercise similar powers under article 161 in respect of the same case. However, if there is a change of circumstances or if any new material is available, the condemned person himself or any one on his behalf may make a fresh application to the President for reconsideration of the earlier order. Once the President has rejected a mercy petition, all future applications in this behalf should be addressed to and would be dealt with by the President of India."

அதாவது, இப்பொருள் தொடர்பாக அரசமைப்புச் சட்டத்தின் பொருத்தமான தன்மைகளைக் கருத்திற்கொண்டு பரிசீலித்த மத்திய அரசு, மரண தண்டனை குறித்த நிகழ்வுகளில்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஆகஸ்ட் 29

அதன் தொடர்பான கருணை மனு, இந்திய அரசமைப்புச் சட்டம் 72-ன்கீழ் குடியரசுத் தலைவருக்கு உள்ள அதிகாரத்தின்படி குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்டிருந்தால், அது தொடர்பாக இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுகூறு 161-ன்படி உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த மாநில அரசிற்கு அதிகாரம் இல்லையென்று அசரமைப்புச் சட்டத்தின் பிரிவுகூறு 257 உட்பிரிவு (1)-ன்படி கட்டளையிடுகிறது.

இருப்பினும் சூழ்நிலைகள் மாறுபட்டிருந்தாலோ அல்லது புதியதாக ஏதாவது ஆதாரம் இருந்தாலோ, மரண தண்டனை பெற்ற நபரோ அல்லது அவர் சார்பாக வேறு ஒருவரோ, குடியரசுத் தலைவரின் முந்தைய உத்தரவை மறுபரிசீலனை செய்யுமாறு புதியதாக ஒரு மனுவினை குடியரசுத் தலைவருக்கு சமர்ப்பிக்கலாம். குடியரசுத் தலைவரால் கருணை மனு நிராகரிக்கப்பட்ட பின்னர், அது தொடர்பாக பின்னர் தாக்கல் செய்யப்படும் அனைத்து மனுக்களும் குடியரசுத் தலைவருக்குத்தான் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதுகுறித்து நடவடிக்கையைக் குடியரசுத் தலைவர்தான் எடுப்பார்.

எனவே, பேரறிவாளன் உள்ளிட்ட மூன்று நபர்களின் கருணை மனு, மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில், இதனை மாற்றுவதற்கு எந்தவித அதிகாரமும் மாநில முதலமைச்சர் என்ற முறையில் எனக்கு இல்லை என்பதை வலியுறுத்தி தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நிலையில் எனக்கு இதற்கான அதிகாரம் இருக்கிறது என்ற பிரச்சாரத்தை அரசியல் கட்சித் தலைவர்கள் எவரும் மேற்கொள்ள வேண்டாம் என்று இந்தப் பேரவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

குடியரசுத் தலைவர் அவர்களால் கருணை மனு நிராகரிக்கப்பட்ட நிலையில், இந்த மூவரின் உயிரைக் காப்பாற்ற தற்கொலை செய்துகொள்வதாக ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு, மக்கள் மன்றம் என்ற அமைப்பைச் சேர்ந்த செங்கொடி என்ற இளம்பெண் தற்கொலை செய்து கொண்டதாக வந்துள்ள செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது. உணர்ச்சி வயப்பட்டு, இதுபோன்ற செயல்களில் யாரும் ஈடுபட வேண்டாம் என்றும் நான் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.



2011 ஆகஸ்ட் 29]

## 2. மானியக் கோரிக்கைகள், 2011–2012 விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)–**தொடர்ச்சி

**(ஆ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)–**தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2011-2012 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். 26-8-2011 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதத்திற்கு பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கையின்மீது எந்தவித விவாதமும் கிடையாது. (குறுக்கீடுகள்) No clarification, no question. Please sit down, Dr. Krishnaswamy and Thiru Kalai Arasu, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No clarification, no question. அரசமைப்புச் சட்டத்தில் மாநில அரசின் அதிகாரம் இவ்விஷயத்தில் எந்த அளவுக்கு வரையறுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லிவிட்டார். தயவுசெய்து உட்காருங்கள். . Please sit down Doctor. Please sit down. திரு. கலை அரசு, நீங்கள் உட்காருங்கள். No clarification, no question. Please sit down. (குறுக்கீடு) Rule 110-ல் no clarification, no question. Please sit down. (குறுக்கீடு) அரசமைப்புச் சட்டத்தில் மாநில அரசினுடைய அதிகாரம் எந்த அளவிற்கு வரையறுக்கப்பட்டிருக்கிறது என்று தெளிவாக மாண்புமிகு முதலமைச்சர் சொல்லிவிட்ட பிறகு (குறுக்கீடு) அதில் என்ன clarification வேண்டியிருக்கிறது? (குறுக்கீடுகள்) Please sit down. No debate on the statement presented under Rule 110. No debate, no discussion on Rule 110. Please sit down.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

[2011 ஆகஸ்ட் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110–ன் கீழ் அளிக்கப்பட்ட அறிக்கையின்மீது எந்த விவாதமும் கிடையாது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், Please sit down.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். கழகத்தினுடைய வாழ்நாள் பொதுச் செயலாளர், அலை மகள், கலை மகள், மலை மகள் ஆகிய முப்பெரும் தேவியரின் பரிணாமமாக விளங்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1994 ஆம் ஆண்டு முதல் ஒன்றியக் கழகச் செயலாளராக்கி, 2001 முதல் 2006 வரை ஈரோடு மாவட்ட வேளாண் விற்பனைக் குழு உறுப்பினராக்கி, பின்னர் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவராக்கி, 2006 முதல் மாவட்டக் கழகச் செயலாளராக்கி, 2010 ஆம் ஆண்டு இந்திய அரசிலே உயர்ந்த பதவிகளில் ஒன்றான பிரபுக்கள் சபை என்று ஆங்கிலேயர்களால் அழைக்கப்பட்ட மாநிலங்களவை உறுப்பினராக்கி, பின்பு புதிதாக அமைந்த ஈரோடு மேற்கு தொகுதியிலே போட்டியிட வைத்து, வெற்றி பெற வைத்து, பாரம்பரியத் துறையான பொதுப் பணித் துறைக்கு என்னை அமைச்சராக்கிய மனித தெய்வம், மகா பாரதத்திலே கண்ணன்கூட தன் தாய்க்கு வரம் கொடுத்தபொழுது, இரண்டு வரங்களை நிபந்தனைகளுடன்தான் கொடுத்தார்; ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களோ, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற வரங்களையெல்லாம் "கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா, கிருஷ்ணா" என்று கிருஷ்ணனைப்போல தன்னிடம் கேட்பவருக்கெல்லாம் வாரி, வாரி வழங்குகின்ற மனித தெய்வமாக இங்கே விளங்கிக்கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) தாயை வணங்குகிறேன்.

அண்ணாவிற்கு மூன்றெழுத்து; எம்.ஜி.ஆருக்கு மூன்றெழுத்து; அன்புக்கு மூன்றெழுத்து; பண்புக்கு மூன்றெழுத்து; பாசத்திற்கு மூன்றெழுத்து; பரிவிற்கு மூன்றெழுத்து; பணிவிற்கு மூன்றெழுத்து; துணிவிற்கு மூன்றெழுத்து; நேர்மைக்கு மூன்றெழுத்து; கடமைக்கு மூன்றெழுத்து; உண்மைக்கு மூன்றெழுத்து; அமைதிக்கு மூன்றெழுத்து; இவை அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற எங்கள் அன்னை அம்மாவுக்கும் மூன்றெழுத்து. (மேசையைத் தட்டும் ஒலி)



2011 ஆகஸ்ட் 29] [திரு. கே.வி. இராமலிங்கம்]

கடந்த மைனாரிட்டி அரசின்மீது மக்களுக்கு ஏற்பட்ட சினம் என்ற மூன்றெழுத்தால், தி.மு.க. என்ற மூன்றெழுத்தோ முடிந்து போனது, திஹார் என்ற மூன்றெழுத்தில். (மேசையைத் தட்டும் ஒலி)

பயணச் சீட்டு இல்லாமல் இரயிலிலே பயணம் செய்ய இவருக்குத் தெரியாது; பயணச் சீட்டு இல்லாமல் படிக்கும் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப மட்டுமே இவருக்குத் தெரியும். இலவசம் என்ற பெயரில் மக்களின் வரிப் பணத்தைத் தன் வசமாக்கும் செப்படி வித்தை இவருக்குத் தெரியாது; இலவசத்தால் மக்களின் ஏழ்மையைப்போக்கி, வாழ்க்கையை வளமாக்க மட்டுமே இவருக்குத் தெரியும். வீராணம் திட்டத்தை விரயமான திட்டமாக்கி, மக்களின் வரிப் பணத்தை அபகரிக்க இவருக்குத் தெரியாது; புதிய வீராணம் திட்டத்தினை, புதிய பொலிவுடன் கொண்டுவந்து மக்களின் தாகம் தீர்க்க மட்டுமே இவருக்குத் தெரியும். கள்ள லாட்டரி அதிபரோடு கூட்டு சேர்ந்து கொள்ளையடிக்கும் கள்ள வித்தை இவருக்குத் தெரியாது; கள்ள லாட்டரி சாம்ராஜ்ஜியத்தைச் சமாதியாக்கும் சூத்திரம் மட்டுமே இவருக்குத் தெரியும். ஒரு மணி நேர உண்ணா விரத நாடகமிருந்து, போர் நிறுத்தம் என்ற பொய்யான அறிவிப்பால் ஒரு இலட்சம் இலங்கைத் தமிழர்களைக் கொன்று குவித்த கபட வித்தை இவருக்குத் தெரியாது; இலட்சம் பேரைக் கொன்று குவித்த ராஜபக்ஷேவைப் போர்க் குற்றவாளியாக்கி, பொருளாதாரத் தடை விதித்து, சட்டமன்றத்திலே தீர்மானம் இயற்றவே இவருக்குத் தெரியும்.

"ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விட மாட்டேன்" என்று பாடிச் சென்ற புரட்சித் தலைவர் பாடல் வரிகளை (மேசையைத் தட்டும் ஒலி) செயல்படுத்திக் காட்டிக்கொண்டிருப்பவர் நமது அம்மா. அழிப்பது என்பது இவருக்குத் தெரியாது; ஆக்குவது மட்டுமே இவருக்குத் தெரியும். சீரழிக்க இவருக்குத் தெரியாது; சீரமைக்க மட்டுமே இவருக்குத் தெரியும். உருக்குலைக்க இவருக்குத் தெரியாது; உருவாக்க மட்டுமே இவருக்குத் தெரியும். தொகை நோக்கும் பார்வை இவருக்குத் தெரியாது; தொலைநோக்குப் பார்வை மட்டுமே இவருக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

சுனாமி என்றதும் முதல் மாடியிலிருந்து மூன்றாவது மாடிக்கு ஓடி ஒளிந்துகொள்ள இவருக்குத் தெரியாது; சுனாமி வந்ததும்

தன் உயிரைத் துச்சமென மதித்து மக்களைக் காக்க, சுழன்று சுழன்று பணியாற்ற மட்டுமே இவருக்குத் தெரியும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அரைகுறையாகக் கட்டடம் கட்டி, அதற்கு செட்டுப் போட்டு, மெட்டு அமைத்து, காசடிக்க இவருக்குத் தெரியாது; ஆனால் பன்னாட்டுத் தரத்திலே நம் நாட்டில் நேரு விளையாட்டு அரங்கம் அமைக்கவே இவருக்குத் தெரியும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நேற்று சட்டமன்றத்திற்கு வந்த மைனாரிட்டி எதிர்க்கட்சி உறுப்பினர்—மக்கள், எதிர்க்கட்சியிலும்கூட மைனாரிட்டி பலம்தான் தந்துள்ளார்கள். வசதிகள் சரியாகச் செய்யப்படாததால் சட்டசபைக்கு வர முடியவில்லை என்று இங்கே கூறியிருக்கிறார்கள். அதற்காக ஜெயில் போன்ற வசதிகள் எல்லாம் சட்டசபையிலே செய்ய முடியாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கூறுகின்றபொழுது, தரங்கெட்ட அரசியல்வாதி என்று கருணாநிதியைப் பற்றிச் சொன்னார்கள். கருணாநிதி அவர்கள் *2006* ஆம் ஆண்டு தன்னுடைய அரசியல் வாழ்க்கையையெல்லாம் முடித்துக்கொண்டு, *2006* முதல் அபகரிப்பு வாழ்க்கையைத் தொடங்கி, இன்று வரை சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் *2005* ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலே ஆற்றிய பேருரையிலிருந்து சிலவற்றை இத்தருணத்திலே மாமன்றத்திற்கு நினைவுபடுத்துவது எனது கடமையாகக் கருதுகிறேன். "ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உண்மையிலேயே உயர வேண்டுமானால், வேளாண்மை மற்றும் நீர்ப் பாசனத் திட்டங்கள் செம்மைப்படுத்தப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ள அம்மா, "அதற்குத் தற்போதுள்ள நீர்ப் பாசன அமைப்புகளைப் புனரமைப்பு செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும், அதற்கு மத்திய அரசு A.I.B.P. என்று சொல்லக்கூடிய விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்தின்கீழ் தமிழகத்திற்கு நிதி உதவியளிக்க வேண்டும்" என ஆணித்தரமாக எடுத்துரைத்தார்கள். ஆனால், தொடர்ந்து வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசோ எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால், அந்த மத்திய அரசின் திட்டப் பயன் தமிழகத்திற்குக் கிடைப்பதில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டுவிட்டது.



*முற்பகல் 10-20*

மேலும், அன்றைய தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், பயனுள்ள வகையில் நீர் மேலாண்மை செய்ய நீர்வள, நிலவளத் திட்டத்தைக் கொண்டு வருவதன் அவசியத்தை வலியுறுத்தி பேசியது மட்டுமல்லாமல், உலக வங்கியின் இயக்குநருடன் பேசியதன் விளைவாக அத்திட்டத்திற்கு உலக வங்கி ரூ.*2,547* கோடி நிதியுதவி அளித்திருக்கிறது என்பதனை இந்த மாமன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லதரசு"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக்கேற்ப பொருள்வரும் வழிகளை ஆராய்ந்து தோற்றுவித்து, அவற்றை வளர்த்து, வந்து சேர்ந்த பொருளைப் பாதுகாத்து, பாதுகாத்த பொருள்களால் பயன்பெற, வகுத்த வழிகளில் செலவிட்டு, ஓர் இலட்சிய அரசாக விளங்கி வருகிறது நம் அம்மா அவர்களின் அரசு *(மேசையைத் தட்டும் ஒலி)*. மலருக்கு மணமும், தேனுக்குச் சுவையும் நாம் சேர்க்கத் தேவையில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* அதைப்போலவே, நம் அம்மாவின் புகழும், செயலுமாகும்.

"தூய உள்ளம், அன்புள்ளம், பெரிய உள்ளம் தொல் உலக மக்களெல்லாம் ஒன்றே என்று என்னும் தாய் உள்ளம் வேண்டும்" என்று சொன்னார் பாரதிதாசன். அத்தகைய தூய அன்பு உள்ளத்தோடு, உலக மக்கள் எல்லாம் ஒன்றே என்னும் தாய் உள்ளம் கொண்டு அனைவரையும் அரவணைக்கும் உள்ளம்தான் நம் அம்மாவின் உள்ளம்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக மக்களின் நிலையறிந்து, அவர்களின் பசிக்கு உணவும், பிணிக்கு மருந்தும், விலையின்றி அளித்து, அவர்கள் வாழ்வு செழிக்கச் செய்துள்ளார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

"மனிதன் என்பவன் தெய்வமாகலாம்,
வாரி வாரி வழங்கும்போது வள்ளல் ஆகலாம்,
வாழைபோல தன்னைத் தந்து தியாகி ஆகலாம்,
உருகியோடும் மெழுகுபோல, ஒளியை வீசலாம்"

என்ற வரிகளுக்கு இலக்கணமாக வாழ்ந்து வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் மக்கள் பணியில், நாம்

[திரு. கே.வி. இராமலிங்கம்] [2011 ஆகஸ்ட் 29

என்றென்றும் துணை நிற்பதில் பெருமை அடைகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பாரதிதாசன் அன்று சொன்னதுபோல் "புதியதோர் உலகம் செய்வோம், கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்" என்று சபதமிட்டு, நாம் அனைவரும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் பொற்கால ஆட்சி தொடர்வதற்கு உறுதி ஏற்போம் என்று உறுதி கூறி, எனது உரையினைத் துவக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"

என்ற திருவள்ளுவரின் இந்த வாக்கை மெய்ப்பிக்கும் வண்ணம், எங்களது நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் நாடாளும் வேந்தருக்கு இருக்க வேண்டிய நல்ல பண்புகளான அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கத்துடன் அயராது செயல்பட்டு, தாம் எண்ணியதை எண்ணியவாறு செய்து, தமிழகத்தை மீண்டும் செழுமையான வளர்ச்சிப் பாதையில் நடத்திச் செல்லும் மகத்தான பணியை ஏற்றுள்ளார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் வழிகாட்டுதலுடன் உருவாக்கப்பட்ட 2011-2012 ஆம் ஆண்டிற்கான பொதுப் பணித் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையை அம்மா அவர்களின் கனிவான ஆசியுடன், இந்த அவையின்முன் வைக்க விழைகிறேன்.

உரிய நேரத்தில் செய்யப்படும் ஒன்றுதான் மக்களின் துயர்துடைக்க பயன்படும். அவ்வகையில் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படும் கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகள் மக்களுக்குச் செவ்வனே சென்றடைய பெரிதும் உதவியாக இருக்கும்.

இந்திய அளவில், சமூகப் பொருளாதாரம் மற்றும் சுகாதார குறிகாட்டியில் முன்னோடியாக விளங்கும் தமிழக அரசு, அதற்கான உள் கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்துவதற்கு இத்துறை அயராது பாடுபடும். இந்நிலையைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ளும்.



2011 ஆகஸ்ட் 29] [திரு. கே.வி. இராமலிங்கம்]

சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், வருவாய், நீதிமன்றம் மற்றும் பிற துறைகளுக்குத் தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளையும், அயராமல் அளிப்பது பொதுப் பணித் துறையின் கடமையாகும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறைக்கு உரிய நேரத்தில் சிறந்த சேவை செய்யும் வகையில் மண்டல தலைமைப் பொறியாளர்களின்கீழ் தனி மருத்துவ வட்டங்கள் அமைக்கப்பட உள்ளன. சென்னை, திருச்சி மற்றும் மதுரை வட்டங்களில் அமையப்படும் கட்டடக் கட்டுமான மற்றும் பராமரிப்பு வட்டத்தின்கீழ், சென்னை, வேலூர், திருச்சி, திருவாரூர், திருப்பூர், தஞ்சாவூர், மதுரை, சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் கட்டடக் கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்டங்கள் அமைக்கப்பட உள்ளன.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதித் துறை அலுவலர்களின் குடியிருப்பு ரூ.53.27 கோடியில் ஒன்பது இடங்களில் கட்டப்பட உள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்களுக்காக ரூ.5.7 கோடி செலவில் கட்டடம் கட்டப்படவுள்ளது. மதுரை மற்றும் கோயம்புத்தூரில் மாநில மண்டல மைய நீதித் துறை பாடசாலைக் கட்டடங்கள் ரூ.17 கோடி செலவில் அமைக்கப்படவுள்ளன.

நீதிமன்றத்திற்குச் செல்லும் முன்பாகவே, நட்பான முறையில் வழக்குகளை விசாரித்து தீர்வு காண்பதற்காக மாற்று வழித் தீர்வு மையம் ஒன்று, சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் ரூ.4.2 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி கட்டப்படவுள்ளது.

நீலகிரி மாவட்டம், குந்தாவில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், வாழப்பாடியில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டிலும் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவர்களுக்காக 142 விடுதிகள் கட்டும் பணி மாண்புமிகு அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, ரூ.202.87 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு அமைச்சர்களுக்காக நான்கு குடியிருப்புகள் பொதிகையிலும் ஒரு குடியிருப்பு தரமணியிலும், குடியிருப்பு ஒவ்வொன்றும் 3,814 சதுர அடி பரப்பளவிலும் கட்டப்படவுள்ளன.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, புதுடில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில், 1962 இல் கட்டப்பட்டு, தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள கட்டடத்தை இடித்து 12,000 சதுர அடி பரப்பளவில் அதாவது, தரை மற்றும் முதல் தளம், அதனுடன் இணைந்த அரங்கத்துடன் புதிய பல்நோக்கு மண்டபம் கட்டப்படவுள்ளது.

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள புராதனக் கட்டடங்கள், அதன் தொன்மையான கட்டடக் கலை, கலைநயம், வரலாற்றுச் சிறப்புகள், தனித்துவமான அடையாளங்கள் மற்றும் தொல்லியல் மரபுகள் மாறாவண்ணம் சீரமைத்துப் பாதுகாத்துப் பராமரிக்க கட்டடக் கலைஞர்கள் மற்றும் பொதுப் பணித் துறை பொறியாளர்களுக்கு உரிய சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, புராதனக் கட்டடங்களின் தொன்மைச் சிறப்பு பாதுகாக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் நிதிநிலை கடுமையான நெருக்கடிக்குள்ளான சூழ்நிலையில்தான், மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்றுள்ளது என்பதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

“நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு”

அதாவது உலகில் மழையே இல்லையென்றால் ஒழுக்கமே கெடக் கூடும் என்ற வள்ளுவரின் வாக்கிலிருந்து நீரின் இன்றியமையாமையை உணரலாம்.

முற்பகல் 10-25

தமிழ்நாட்டின் மேற்பரப்பு நீர் ஆதாரத்தில் 95 விழுக்காடும் நிலத்தடி நீரில் 85 விழுக்காடும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளதால், தண்ணீர் திட்டமிடல் மற்றும் அதன் மேலாண்மை மூலமாகத் தண்ணீர் மேம்பாட்டுத் திறனை மேம்படுத்துவது அவசியமாகிறது.



தமிழ்நாட்டின் 21 இலட்சம் ஹெக்டேர் பாசனப் பரப்பிற்குத் தேவையான நீர் தவிர, குடிநீர் மற்றும் தொழிற்சாலைக்குத் தேவையான நீர்த் தேவைக்குத் தமிழகத்தில் உள்ள 89 அணைகள் மற்றும் 13,699 பொதுப் பணித் துறை ஏரிகளின் திறனை மேம்படுத்துதல் அவசியமாகிறது. இந்நோக்கத்திற்கான செயல்பாடுகள் படிப்படியாக எடுத்துக்கொள்ளப்பட்டு, பாசனத் தரம் மேம்படுத்தப்படும்.

கால்வாயின் உள் கட்டமைப்புமூலம் கடத்துத் திறன் மேம்படுத்துதல் மற்றும் நீர்நிலைகளைப் புனரமைத்தல், நீர்நிலையின் சேமிப்புத் திறனைக் கூட்டுதல்மூலம் பாசனப் பரப்பின் இடைவெளி நிரப்புதல் மற்றும் தற்போதுள்ள பாசனப் பரப்பை உறுதிப்படுத்துதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டு தண்ணீர் பயன்பாட்டுத் திறன் மேம்படுத்தப்படும்.

பங்கேற்புப் பாசன மேலாண்மையில், முன்னோடியான மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கின்றது. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் இயற்றப்பட்டது. 2002 ஆம் ஆண்டு இதற்குரிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் இயற்றப்பட்டன. இச்சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம், திட்ட முன்மொழிவு மற்றும் அமலாக்கத்தில் தீவிர பங்கேற்பு கொள்கிறது. நீர்ப் பங்கீடு மற்றும் நீர் மேலாண்மையில் விவசாயிகளின் தீவிர பங்கேற்பினால் பாசனப் பகுதிகளில் தண்ணீர் பயன்பாட்டுத் திறன் மேம்படுத்தப்படுகிறது. மேலும் சிறந்த நீர் மேலாண்மைக்காக மாநில நீர் ஆதார மேலாண்மை முகமை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் கடற்கரை 989 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. 2004 ஆம் ஆண்டு ஆழிப் பேரலைக்குப் பிறகு கடலின் சீற்றம் அதிகமாக உள்ளதால், கடற்கரைக் கிராமங்களைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக ரூ.200 கோடி மதிப்பீட்டில் 13-வது நிதிக் குழு மானிய பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2011-2012 ஆம் ஆண்டில் 24 பணிகள் ரூபாய் 50 கோடி செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளவாறு, தமிழ்நாட்டிலுள்ள நதிகளை இணைக்கும் திட்டம், மாண்புமிகு அம்மா அரசினுடைய முதன்மையான திட்டமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன்மூலம் பாசன வசதிகளை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், வெள்ள நீர் மேலாண்மை மற்றும் உள்நாட்டு நீர்வழிச் சாலைகள் செயலாக்கப்படும்.

நதிகள் இணைப்புத் திட்டத்தின்படி கட்டளைக் கதவணையிலிருந்து குண்டாறு வரை இணைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை விரைவில் முடிவு செய்யப்பட்டு வெள்ள மேலாண்மைத் திட்டத்தின்கீழ், இரண்டு கட்டங்களாக மாண்புமிகு அம்மாவின் அரசால் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) முதல் கட்டமாக ரூபாய் 3 ஆயிரத்து 787 கோடி மதிப்பீட்டில் கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களில் உள்ள 36 ஆயிரத்து 475.40 ஹெக்டேர் பாசனம் பெறும் வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) 175.255 கிலோ மீட்டர் நீளக் கால்வாய் மூலமாகக் கட்டளைக் கதவணை, அக்னியாறு, தெற்கு வெள்ளாறு மற்றும் மணிமுத்தாறு வரை இணைக்கப்படும். முதற்கட்ட பணியினைத் தொடங்குவதற்காக, நடப்பு நிதியாண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.60 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டாவது கட்டமாக ரூபாய் ஆயிரத்து 1,379 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 39 ஆயிரத்து 86.58 ஹெக்டேர் பாசனம் பெறும் வகையில் 82.737 கிலோ மீட்டர் நீளக் கால்வாய்மூலமாக மணிமுத்தாறு, வைகை மற்றும் குண்டாறு ஆகியவற்றை இணைக்கும் நடவடிக்கை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையின்படி எடுக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக ரூபாய் 1.7 கோடியில் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைத் தவிர தமிழ்நாட்டின் தாமிரபரணி மற்றும் நம்பியாறு ஆகிய ஆறுகளை இணைக்கும் பணி, ரூபாய் 369 கோடியில் நடைபெற்று வருகிறது. இவ்வாண்டில் இப்பணிக்காக ரூபாய் 90 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கிருஷ்ணா நதிநீர் ஒப்பந்தப்படி, ஒவ்வொரு வருடமும் ஆந்திர மாநிலம், 12 டி.எம்.சி. தண்ணீரை சென்னை மாநகரத்திற்கு



வழங்க வேண்டும். ஆனால், ஆந்திரப் பிரதேசத்திலிருந்து சென்னை மாநகருக்கு வந்தடையும் தண்ணீர் தற்போது சென்னை நகரில் உள்ள பூண்டி, செங்குன்றம், செம்பரம்பாக்கம் மற்றும் சோழவரம் ஆகிய நான்கு ஏரிகளில் சேமிக்கப்பட்டு வருகிறது. இந்த நான்கு ஏரிகளின் மொத்த கொள்ளளவு 11 டி.எம்.சி. அடிதான். மேலும், வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் மழை நீரினால் இந்த ஏரிகள் நிறைந்து வெள்ளமாகி, நீர் வீணாகக் கடலில் கலக்கும் முன்னர் சேதங்களை ஏற்படுத்தி வருகின்றது. கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள தண்ணீரை முழுமையாகப் பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, குடிநீர் சேமித்து வைக்கும் வசதிக்காக சென்னை மாநகரில் உள்ள சோழவரம், போரூர், நேமம், அயனம்பாக்கம் மற்றும் செம்பரப்பாக்கம் ஏரிகளின் கொள்ளளவினை அதிகரித்து, கூடுதலாகத் தண்ணீர் சேமிக்கத் தேவையான பணிகள் இந்த நிதியாண்டில் ரூபாய் 169.63 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நீர்வள ஆதாரத் துறையை வலுப்படுத்தவும் மற்றும் திறனை மேம்படுத்தவும் கூட்டுக் கணினி மற்றும் மின்னனுத் தகவல் பரிமாற்ற முறைமூலம் செயலாக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே பொதுப் பணித் துறை அலுவலகங்களில் உள்ளமைப்புப் பிணைப்பு உள்ளது. மேலும், பொது மக்களுக்குச் செவ்வனே சேவை செய்வதற்காக இவ்வலுவலகங்கள் பரந்த உள்ளமைப்பு பிணைப்புமூலம் இணைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வரசு, அணையின் பலத்தினை உறுதிப்படுத்துதல் மற்றும் அணையைத் தொடர்ந்து பராமரிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. இதற்கிணங்க, அணை புனரமைத்தல் மற்றும் மேம்பாட்டுத் திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

இத்திட்டத்திற்கு 745.49 கோடி வழங்க கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள 104 அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாடுகள் செய்யப்படும். 2011-2012-இல் 18 அணைகள் இத்திட்டத்தின்கீழ் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வரசு நிலத்தடி நீர் இருப்பினை மேம்படுத்த அனைத்து வகையான முயற்சிகளையும் மேற்கொள்ளும். 13-ஆவது நிதிக்

[திரு. கே.வி. இராமலிங்கம்] [2011 ஆகஸ்ட் 29

குழுவின் உதவியுடன் ரூபாய் 200 கோடி செலவில் பாரம்பரிய நீர்நிலைகள் புனரமைத்துச் சீரமைக்கப்படும். இவ்வாண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10-30*

நீர்க்கொள்ளளவுத் திறனை மேம்படுத்த நபார்டு நிதியுதவியுடன் இவ்வருடத்தில் 4 திட்டங்கள் ரூபாய் 67 கோடி மதிப்பீட்டில் அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க செயல்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* செயற்கை முறையில் நிலத்தடி நீரைச் செறிவூட்டுவதற்காக, தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள், நிலத்தடி நீர்ச்செறிவூட்டும் துளைகள் கட்டுமானங்களை மேற்கொள்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முக்கியத்துவம் அளிக்கும். இவ்வாண்டில் இத்திட்டத்திற்கென ரூபாய் 11.27 கோடி செலவிடப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* NADP என்ற தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பாசனத் திறனை மேம்படுத்துவதற்காக கட்டமைப்புகளைப் புனரமைக்க ரூபாய் 74 கோடி செலவில் திருக்கோவிலூர், குண்டாறு, குடகனாறு, வைகை, தெற்கு வெள்ளாறு மற்றும் கொடுவேரி-கட்டளை ஆகிய பகுதிகளில் செயல்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழகத்தில் உப வடிநிலக் கட்டமைப்பு முறையில் ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையின்மூலம் வேளாண் உற்பத்தித் திறனை மேம்படுத்த 6 ஆண்டுத் திட்டமாக தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உட்பட பிற 7 துறைகள் ஈடுபட்டு வருகின்றன. இத்திட்டத்தில் 6.17 இலட்சம் ஹெக்டேர் பாசனப் பரப்பு அடங்கிய, தெரிவு செய்யப்பட்ட 60 உப வடிநிலங்களில் ரூபாய் 2,547 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாண்டில், ரூபாய் 367 கோடி செலவில் 761 ஏரிகள், 5 அணைகள் மற்றும் 1,056 கிலோ மீட்டர் வாய்க்கால்கள் புனரமைக்கப்படுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் *(மேசையைத் தட்டும் ஒலி)* இத்திட்டப் பணி முடிவடைந்த பகுதிகளில், ஒரு குறிப்பிட்ட சிறிய பகுதி, மூன்றாம் நிபுணர்மூலம் ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பயனாகப்



2011 ஆகஸ்ட் 29] [திரு. கே.வி. இராமலிங்கம்]

பாசனப் பரப்பின் இடைவெளி 65 சதவீதம் நிரப்பப்பட்டதுடன், நீர், கடைமடை சென்றடையும் நேரமும் பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளது என இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல, தமிழகம் எங்கும் இத்திட்டச் செயல்திறனை மேம்படுத்த இவ்வரசு மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு அம்மாவினுடைய ஆணைக்கிணங்க இம்மாமன்றத்தில், காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் பிரசுரம் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிப்பு செய்ததற்கிணங்க, *(மேசையைத் தட்டும் ஒலி)* உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள சிவில் மேல்முறையீட்டு மனுக்களை விரைந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியோ அல்லது காவிரி நடுவர் மன்றத்தின் முன்பு நிலுவையில் உள்ள விளக்கங்கள் கோரும் மனுக்களை உடன் விசாரித்து உத்தரவு வழங்க வேண்டியோ, இடைக்கால மனு ஒன்றினை, இவ்வரசு 25-7-2011 அன்று தாக்கல் செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உச்ச நீதிமன்றம் இந்த இடைக்கால மனுவை விரைவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் என்றும் நான் நம்புகிறேன். முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை, உச்ச நீதிமன்றத்தில் பரிசீலனையில் உள்ளதால், இப்பிரச்சினையில் கேரள அரசு தற்சமயம் உள்ள நடுநிலையினைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று மத்திய அரசினைத் தொடர்ந்து வலியுறுத்தும். அதேபோல, ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க உத்தேசித்திருப்பது சம்பந்தமாக மத்திய அரசின் உதவியுடன் இரு மாநிலங்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பயன் அளிக்காததால், உச்ச நீதிமன்றம்மூலம் தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* புதுச்சேரி அரசு, ஆழ்கடல் துறைமுகம் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டால், விழுப்புரம் மாவட்டத்தின் கடற்கரையோரக் கிராமங்களில் பேரழிவு ஏற்படும் என்று அம்மா அவர்கள் அறிவித்ததற்கிணங்க, இத்திட்டத்திற்குத் தமிழக அரசின் ஒத்திசைவு பெற்ற பிறகே, இதுபற்றி எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்பதனைத் தமிழக அரசு, புதுச்சேரி அரசினை வலியுறுத்தும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவித்தபடி, காவிரி ஆற்றின் குறுக்கே முத்தரசநல்லூர் அருகே

[திரு. கே.வி. இராமலிங்கம்] [2011 ஆகஸ்ட் 29

கம்பரசன்பேட்டை கிராமத்தில் ரூபாய் 32 கோடி செலவில் ஒரு தடுப்பணை கட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் திருச்சி மாநகருக்குத் தேவையான குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதன்பொருட்டு, அரசாணைகள் பிறப்பித்துள்ளார்கள். மேலும், இத்திட்டத்தினால் மேற்படி பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் உயரும் என்பது திண்ணம். (மேசையைத் தட்டும் ஒலி)

வினாடிக்கு 2,000 கன அடி நீர்கடத்தும் திறன் கொண்ட கால்வாய்மூலம் பவானிசாகர் அணையின் உபரி நீரைக் கொண்டு 71 ஏரிகள் மற்றும் 538 குளங்களை நிரப்பி, 25,000 ஏக்கர் நிலம் பாசன வசதி ஏற்படுத்துவதற்கான அத்திக்கடவு-அவினாசி திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களால் ஒதுக்கப்பட்டு, ரூபாய் 30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அணைப் பாதுகாப்புச் சட்டம், 2010 மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்திலுள்ள உட்பிரிவு (1) பிரிவு 26-இன்படி, அணை எந்த மாநிலத்தின் எல்லைக்குள் உள்ளதோ அந்த மாநிலத்தின் கட்டுப்பாட்டில் அவ்வணையின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புக்குள் வந்துவிடும் என்று அறியப்படுகிறது. இச்சட்டத்தின் சில பிரிவுகளில் மாற்றங்கள் மற்றும் புதிய பிரிவுகள் சேர்ப்பது தேவையென்று இவ்வரசு கருதுகிறது. இதனை வலியுறுத்தி மாண்புமிகு அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு இதுதொடர்பாக மத்திய நீர்வள ஆதார அமைச்சகத்திற்குத் தகுந்த உத்தரவு பிறப்பிக்குமாறு 29-7-2011 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளதைத் தொடர்ந்து, மாண்புமிகு பாரதப் பிரதமரும் பரிசீலனை செய்ய ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-35

சென்னை மாநகரில், 2011 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பே, பெரிய நீர் வழித்தடங்களில் கொட்டப்பட்டுள்ள குப்பைகள், திடக் கழிவுகள், செடி, கொடிகள் ஆகிய தடைகளை அகற்றி வெள்ளநீர் தங்குதடையின்றி வடிய ஏதுவாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 57 அத்தியாவசியமான பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி), அதற்காக 3 கோடியே, 62 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள். இதன்மூலம், சென்னை மாநகரில் வெள்ளநீர் தேங்காமலும், மழைக் காலங்களில் பொதுமக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கைக்குக் குந்தகம் ஏற்படாமலும், அதன் காரணமாக தொற்று நோய்கள் பரவாமலும் இருக்க வழிவகுக்கும் என்று கூறப்படுகிறது. இத்துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசியபோது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கும், கருத்துகளுக்கும் பதில் அளிக்க விரும்புகிறேன்.



2011 ஆகஸ்ட் 29] [திரு. கே.வி. இராமலிங்கம்]

கோவை அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை உட்பட ஆயிரம் படுக்கை வசதிகளுடன்கூடிய கட்டடப் பணிகள், ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் துவக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ளன.

தொகுதி மறுசீரமைப்பின் அடிப்படையிலே புதிய சட்டமன்றத் தொகுதிகளுக்குச் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டும் பணி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைகளோடு நடைபெறவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தகுதிவாய்ந்த தினக்கூலிப் பணியாளர்களைத் தற்போதுள்ள விதிமுறைகளுக்கேற்ப பணிவரன்முறை செய்ய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கட்டடங்களைப் பாதுகாக்க காவலர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முல்லைப்பெரியாறு சம்பந்தமாக, உச்ச நீதிமன்றத்திலும் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட குழுவிலும் தமிழகத்தின் நலனைப் பாதுகாத்திட உரிய நடவடிக்கை இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

போடிநாயக்கனூர் தொகுதியில், கொட்டகுடி ஆற்றில் அணை கட்டும் திட்டத்திற்கு இவ்வாண்டு மதிப்பீடு தயாரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வைகை ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்து (மேசையைத் தட்டும் ஒலி), தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி,

அரசம்பட்டி பகுதிகளில் உள்ள திப்பரவு வாய்க்கால்மூலம் 1,445 ஏக்கர் புன்செய் நிலங்கள் பயனடையும் வகையிலே திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டதில் (மேசையைத் தட்டும் ஒலி), பயன் செலவு விகிதம் மிகக் குறைவாக இருந்ததால், 7 ஏரிகள் மட்டும் பயன் அடையும் வகையிலே 25 கிலோ மீட்டர் நீளத்திற்கு வழங்கு கால்வாய் அமைக்க மாற்றுக் கருத்துரு தயாரிக்கப்பட்டு வருகிறது. விரிவான கருத்துருவின் அடிப்படையிலே மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், புள்ளிமான் கோம்பை கிராமம், வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதன்மூலம் நிலத்தடி நீரைச் செறிவூட்ட, விரிவான தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்படும்.

ஆனைமலையாறு-நல்லாறு திட்டம்பற்றி கேரள அரசுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு, திட்டச் செயலாக்கம் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப் பாசனப் பரப்பில் உள்ள விவசாயமில்லாத பகுதிகளைக் கண்டுபிடித்து, அதன் அடிப்படையிலே மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருமூர்த்தி மற்றும் ஆழியாறு அணைகள் நிரம்பும்போது, கோதவாடிகுளம், தேவம்பாடிகுளம் ஆகியவற்றிற்குத் தண்ணீர் வழங்குவதுபற்றி தொழில்நுட்ப ரீதியில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கிணத்துக்கடவு தொகுதிக்கு உட்பட்ட எட்டிமடைப் பேரூராட்சியில் உள்ள, புதுப்பதி என்ற வனப் பகுதியிலிருந்து வரும் உபரி நீரைப் பயன்படுத்துவது குறித்து விரைவில் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்பேரில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கும்மிடிப்பதி ஆற்றின் வழியாகச் செல்கின்ற உபரி நீரை, கால்வாய் வெட்டி கோழிமடை, வழுக்குப்பாறை, கண்ணமாநாயக்கனூர் முதல் சொக்கனூர் கிராமம் வரை கொண்டு செல்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



கிணத்துக்கடவு தொகுதிக்கு உட்பட்ட போத்தனூர், செட்டிப்பாளையம் குளத்திற்கு நொய்யல் ஆற்றுத் தண்ணீரைத் திருப்பி விடுவது குறித்து ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

திருமூர்த்தி அணை திட்டக் குழு—வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மேல்அரசம்பட்டு பகுதியில் கோயில்மலையாற்றின் குறுக்கே அணை அமைக்கும் திட்டம் ஏற்கெனவே 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களால் இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உரிய மேல்நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாத்தனூர் அணையிலிருந்து உபரி நீரை நந்தன் கால்வாய்க்கு வழங்கும் திட்டம், மத்திய அரசின் நிதி உதவியுடன் செயலாக்கப்படவுள்ள பெண்ணையாற்றுடன், செய்யாற்றை இணைக்கும் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிதம்பரம் பகுதியில் மடுவங்கரை அருகே இரயில்வே பாதையை வெள்ளப் பாதிப்பிலிருந்து தடுக்க வெள்ளாற்றில் பணிகள் மேற்கொள்வதற்கு மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காவிரி கொள்ளிடத்தில் கதவணைகள் கட்டி நீர்தேக்கி வைக்க சாத்தியக்கூறு சம்பந்தமாக விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அசுவமாநதி நீர்த்தேக்கத்தை உயர்த்த, அது சம்பந்தமாக புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு, சாத்தியக்கூறு இருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும்.

தோரப்பாறை திட்டத்திற்கு நிலத்தினைக் கையகப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொண்டு அதற்கேற்ப இத்திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேட்டூர் தொகுதி, தோனி மடுவு பாசன அணை திட்டத்தினைப் பொறுத்தவரையில், திட்டத்தின் பயன்செலவு விகிதம் மிகக் குறைவாக உள்ளதால் சாத்தியக்கூறு மிகவும் குறைவு. இத்திட்டத்தினை நிறைவேற்ற மறுபரிசீலனை செய்யப்படும்.

[திரு. கே.வி. இராமலிங்கம்] [2011 ஆகஸ்ட் 29

கடலூர் மாவட்டம், பெருமாள் ஏரியைத் தூர் வாரும் பணிக்கான மதிப்பீடு மாண்புமிகு அம்மாவின் அரசால் தயாரிக்கப்பட்டு, செயலாக்கத்திற்கான வழிமுறைகள் ஆராய்ந்து மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

குமரி மாவட்டத்தில் அணைகளில் வண்டல் மண் படிந்துள்ள விகிதாச்சாரத்தைக் கணக்கிடும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வுகள் முடிந்தவுடன் தொழில்நுட்பச் சாத்தியக்கூற்றினை ஆராய்ந்து மேல்நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

குமரி மாவட்டம், சுங்கான் ஓடையைப் பலப்படுத்தியும், இரப்பையாற்றை மேம்படுத்தியும், பொய்கை அணைக்கு வரும் நீர் வரத்தினை அதிகப்படுத்தும் திட்டம் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில், நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ளது என்பதனைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு புதிய அறிவிப்புகளை இங்கே வெளியிடுகிறேன்.

செயற்கை முறையில் நிலத்தடி நீரைச் செறிவூட்டும் பெருந்திட்டம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, செயற்கை முறையில் நிலத்தடி நீரைச் செறிவூட்ட தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள், நிலத்தடி நீர் செறிவூட்டும் துளைகள் போன்ற 102 கட்டுமானங்களை ரூபாய் 49.00 கோடி மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தவும், நிலத்தடி நீர் இருப்பை மேம்பாடு செய்யவும் இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

நபார்டு நிதியுதவியுடன் அணைக்கட்டுகளைச் சீரமைத்தல். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஒப்புதலின் பேரில், அமராவதி ஆற்றின் குறுக்கே உள்ள பழைய அணைக்கட்டுகள், ரூபாய் 18.00 கோடி மதிப்பீட்டில் 15,202 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையிலே புனரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடலூர் மாவட்டம், மணிமுக்தா நதியின் குறுக்கே உள்ள விருத்தாச்சலம் அணையினை, ரூபாய் 13.00 கோடி மதிப்பீட்டில், 6,257 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையிலே



2011 ஆகஸ்ட் 29] [திரு. கே.வி. இராமலிங்கம்]

நடப்பாண்டில் சீரமைக்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மதுரை மாவட்டத்தில் பழுதடைந்த அணைக்கட்டுகள் மற்றும் அவற்றின் வழங்கு கால்வாய்களில், ரூபாய் 20.00 கோடி மதிப்பீட்டில் 19,774 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையிலே, புனரமைப்புப் பணிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின் பேரில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தேனி மாவட்டத்தில், மேல்மங்கலம், ஜெயமங்கலம் வழங்கு கால்வாய்கள் மற்றும் மஞ்சளாறு பிரதானக் கால்வாயை, ரூபாய் 10.51 கோடி மதிப்பீட்டில், 3,732 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையிலே நவீனப்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஒப்புதலின்பேரில், கடலூர் மாவட்டம், பெரிய ஓடையின் குறுக்கே 5.50 கோடி மதிப்பீட்டில் 1,700 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையிலே படுகை அணை கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அனுமதியின் பேரில், காஞ்சிபுரம் மாவட்டம், செம்பூண்டியில் உள்ள அணைக்கட்டு, ரூபாய் 2.20 கோடி மதிப்பீட்டில் 283 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையிலே சீரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலூர் மாவட்டம், மோர்தானா வலது பிரதானக் கால்வாயில், ரூபாய் 1.40 கோடி மதிப்பீட்டில் 2,086 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையிலே புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, தருமபுரி மாவட்டம், கல்லாற்றின் குறுக்கே உள்ள 16 அணைக்கட்டுகள், ரூபாய் 2.15 கோடி மதிப்பீட்டில் 1,298 ஏக்கர் பாசன வசதி பெறும் வகையிலே சீரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நபார்டு நிதியுதவியுடன் பாசனக் கட்டுமான அடைப்பான்களைச் சீரமைத்தல். திண்டுக்கல் மாவட்டம், அணைப்பட்டி பெரியாறு பிரதானக் கால்வாய் அடைப்பான்கள் ரூபாய் 3.00 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி சீரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஒப்புதலுடன், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில், கீழ்பவானி கால்வாயின் அடைப்பான்கள் ரூபாய் 3.00 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நபார்டு நிதியுதவியுடன் ஏரிகளைப் புனரமைத்தல். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஏரி, ரூபாய் 2.30 கோடி மதிப்பீட்டில், 109 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையிலே புனரமைக்கப்படும். மேலும், 207 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில், ரூபாய் 1.75 கோடி மதிப்பீட்டில் மற்ற ஐந்து ஏரிகளுக்கு வழங்கு கால்வாய்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்கள் புனரமைத்தல். கோயம்புத்தூர் மாவட்டம், நெல்லித்துறை அணைக்கட்டினை ரூபாய் 40.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், மதுரை மாவட்டம், பெரியாறு பிரதானக் கால்வாயினை ரூபாய் 2.00 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தஞ்சாவூர் மாவட்டம், சென்னம்பட்டி கிராமத்திலுள்ள கீழப்புடையன் ஏரி, புதுக்குடி கிராமத்திலுள்ள கிள்ளுக்குடி பீமன் ஏரி மற்றும் பழையப்பட்டி கிராமத்தின் பழைய ஏரி ஆகியவற்றை ரூபாய் 60.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



விழுப்புரம் மாவட்டம், இராமராஜபுரம் அணைக்கட்டு, வழங்கு கால்வாய் மற்றும் அதன் உட்கட்டமைப்புகளை ரூபாய் 2.00 கோடி மதிப்பீட்டில் புனரமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், திருவாரூர் மாவட்டம், பாமினி ஆற்றின் குறுக்கே ரூபாய் 75.00 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்புச் சுவர்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய பாலம் அமைத்தல். ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கீழ்பவானி பிரதானக் கால்வாயின் குறுக்கே ரூபாய் 60.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பாலம் நடப்பாண்டில் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வாகனங்கள் கொள்முதல் செய்தல். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களது ஆணையின்படி, பொதுப்பணித் துறையின் உபயோகத்திற்காக 50 புதிய வாகனங்கள் ரூபாய் 258.88 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆய்வுக் கருவிகள் கொள்முதல் செய்தல். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க, சென்னை தரமணியில் உள்ள தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி மையத்தின் சோதனைக்கூடத்திற்கு ஆய்வுக் கருவிகள் ரூபாய் 29.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நூலக அரங்கு புதுப்பித்தல். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க, சென்னை, சேப்பாக்கம் வளாகத்தில் உள்ள கட்டட மையம் மற்றும் பாதுகாப்புக் கோட்டத்தின் நூலக அரங்கு ரூபாய் 26.00 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-45

புதிய குடியிருப்புகள் கட்டுதல். கோயம்புத்தூர், திருநெல்வேலி, சிதம்பரம் மற்றும் திருச்சி பொதுப் பணித் துறை வளாகங்களில்,

ரூ.78.50 இலட்சம் மதிப்பீட்டில் பொறியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் இங்கே தெரிவித்த கருத்துகளெல்லாம் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கிறேன். ஆகவே, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டு, என்னுடைய உரையை நிறைவுசெய்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

### (இ) கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

*__மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டியாய், அரசியல் தலைமைக்கு ஓர் எடுத்துக்காட்டாய், தொண்டர்களுக்கு பரிவுகாட்டும் தூய தலைவியாய், தமிழகத்தை வழிநடத்தும் திராவிட சக்தியாய்த் திகழும் எங்கள் அன்னை சக்தியே! (மேசையைத் தட்டும் ஒலி) சிங்கத்தின் கம்பீரமாய், சீறிவரும் நதியின் ஆளுமையாய், செந்தமிழ் மந்திரச் சொல்லாய், காலம் தந்த நன்கொடையாய், கருணை பொங்கும் இதயமாய், கடல்போல உள்ளமையாய், புறநானூற்றுத் தாயின் வீரமாய், வான் மழையாய், வான் முகிலாய், வையகம் புகழும் வரலாறாய், (மேசையைத் தட்டும் ஒலி) எவரும் தொடமுடியாத துருவ நட்சத்திரமாய், (மேசையைத் தட்டும் ஒலி) பூபாளம் சிறக்க, புதிய யுகம் பிறக்க, புரட்சித் தலைவியாய் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இதய இயக்கத்தின் இதயமாய், இயக்கத் தொண்டரின் உயிராய், (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இதய தீபமாய், தமிழகத்தின் முதல்வராக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு எனது பணிவான வணக்கங்களைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை 1989 ஆம் ஆண்டு சேவல் சின்னத்திலே எடப்பாடி சட்டமன்ற வேட்பாளராக நிறுத்தி வெற்றிபெறச் செய்தும், 1989 ஆம் ஆண்டு சேலம் வடக்கு மாவட்டக் கழக இணைச் செயலாளராகவும், 1991 ஆம் ஆண்டு சேலம் வடக்கு மாவட்டக் கழகத்தினுடைய செயலாளராகவும், 1991 ஆம் ஆண்டு எடப்பாடி சட்டமன்ற வேட்பாளராக நிறுத்தி வெற்றிபெறச் செய்தும், 1998 ஆம் ஆண்டு திருச்செங்கோடு பாராளுமன்ற வேட்பாளராக நிறுத்தி வெற்றிபெறச் செய்தும், 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் தலைவராகவும், கழகக் கொள்கை பரப்புச் செயலாளராகவும், கழக அமைப்புச் செயலாளராகவும், தற்போது சேலம் புறநகர் மாவட்டக் கழகச் செயலாளராகவும், 2011-ல் எடப்பாடி சட்டமன்ற வேட்பாளராகவும் அறிவித்து வெற்றிபெறச் செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் சீரிய தலைமையில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் அமைச்சராகவும் பணியாற்ற வாய்ப்பு அளித்து, சாதாரணத் தொண்டனான என்னை இந்த உலகத்துக்கே அடையாளம் காட்டி, முகவரி தந்த, எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி எனது நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட என்னை வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மாவினுடைய ஆணையை ஏற்று வெற்றிக்காக உழைத்த கழக நிருவாகிகள் மற்றும் தொண்டர்களுக்கும், கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த நிருவாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பதிலுரையைத் துவக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பாரம்பரியமாக, வலிமையான தொழில் அடித்தளம் பெற்று விளங்குவதால், நாட்டின் தொழில் உற்பத்தியில் பெரும்பங்கு வகிக்கின்றது. பொருளாதாரத்தின் அங்கங்களான தொழில் துறை, தொழில்நுட்பம், வேளாண்மை போன்றவற்றின் வளர்ச்சிக்கு சாலைகள், பாலங்கள் மற்றும் துறைமுகங்கள் பெரும்

பங்காற்றுகின்றன. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, தமிழ்நாட்டில் சாலை கட்டமைப்பு சிறு துறைமுகங்களை நிருவகித்து வருகிறது.

பயணிகள் மற்றும் சரக்குகளின் பாதுகாப்பான, சிக்கனமான மற்றும் விரைவான போக்குவரத்திற்குச் சாலைகள் அத்தியாவசியமானவை. பெருகிவரும் வாகனப் போக்குவரத்திற்கும், அனைத்து இடங்களையும் இணைக்கும் வகையிலும் சாலை உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது.

இதன் அடிப்படையில், சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், அனைத்து இடங்களையும் இணைக்கும் வகையிலும், திறனான மற்றும் பாதுகாப்பான பயணத்திற்கு ஏற்ற சாலைகளை அமைத்து மாநிலத்தில் அனைத்துத் தரப்பு மக்கள் சமநிலை, சமூகப் பொருளாதார வளர்ச்சியினை அடைய உதவுவது நெடுஞ்சாலைத் துறையின் கொள்கையாகும்.

முற்பகல் 10-50

ஒரு நாட்டின் பொருளாதாரம் மேம்பாடு அடைவதற்கு சாலை வசதிகள் சரியாக அமைய வேண்டும் என்பதைப் பறைசாற்றிவரும் பைந்தமிழ் நாட்டின் பாசத் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நெடுஞ்சாலைத் துறையை ஆய்வு செய்தபொழுது, தமிழகத்தில் அகலமான சாலைகள், பாதுகாப்பான பயணம் மற்றும் நெரிசலற்ற போக்குவரத்து வழங்குவதைக் குறிக்கோளாகக்கொண்டு அதற்கேற்றவாறு திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

இதன் அடிப்படையில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலை ஈடுசெய்ய சாலைகள் அமைக்கப்படுகின்றன. அதிவேகமாக முன்னேறிவரும் தொழிற்சாலைகள் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி காரணமாக தற்போதைய சாலைப் போக்குவரத்தின் கொள்ளளவைப் பல்வேறு வகையில் அதிகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்குமுரிய, வாழ்த்துதலுக்கும், வணக்கத்திற்குமுரிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி (மேசையைத் தட்டும் ஒலி) மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள அனைத்து இடைவழித் தடச்



சாலைகளை இருவழித் தடச் சாலைகளாகவும், மாவட்ட முக்கியச் சாலைகளில் உள்ள ஒருவழித் தடச் சாலைகளை இருவழித் தடச் சாலைகளாகவும், பெருகும் போக்குவரத்திற்கு ஏற்றவாறு மூன்று வருடத்திற்குள் அகலப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சாலைகளின் விவரம். தமிழகத்தில் சாலைகளின் மொத்த நீளம் 61,674 கிலோ மீட்டராகும். இதில் தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 4,861 கிலோ மீட்டர் நீளமாகும். இதில் 1,601 கிலோ மீட்டர் சாலைகள் மாநில அரசின் தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலமும் 3,260 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலமும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், நெடுஞ்சாலைத் துறை 10,561 கிலோ மீட்டர் நீள மாநில நெடுஞ்சாலைகளையும் 11,315 கிலோ மீட்டர் நீளமுள்ள மாவட்ட முக்கியச் சாலைகளையும், 34,937 கிலோ மீட்டர் நீளமுள்ள மாவட்ட இதர சாலைகளையும் பராமரித்து வருகிறது.

சூரியனுக்கே சூடு வைத்து, சுடர் ஒளியாய் எழுந்து நிற்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிப் பொறுப்பேற்ற 100 நாட்களுக்குள் இந்தத் துறையின் பல்வேறு அலகின்மூலம் ரூபாய் 623 கோடி மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) 1,642 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் 80 பாலப் பணிகள் மற்றும் ஓர் இரயில்வே கடவு மேம்பாலம் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

16-8-2011 அன்று ரூபாய் 41 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட 12 பாலங்கள், புகழுக்கே புகழ் தந்து, வெற்றிக்கே வெற்றியைத் தந்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் (மேசையைத் தட்டும் ஒலி) Video Conferencing

மூலம் திறந்து வைக்கப்பட்டன என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்நிதியாண்டில் ரூபாய் 954 கோடி மதிப்பீட்டில் 1,154 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்தும் பணிகள், ரூபாய் 1,515 கோடி மதிப்பீட்டில் 1,936 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை உறுதிப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் நடைபெறவுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பாலங்கள் கட்டுதல் மற்றும் புறவழிச் சாலை அமைத்தல். 2005-2006 ஆம் ஆண்டு தென்றலுக்கு பாதை சொல்லி, தென்னிந்தியாவிற்கே வழிகாட்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் *(மேசையைத் தட்டும் ஒலி)* பொற்கால ஆட்சியில் நெடுஞ்சாலைத் துறையின் முக்கிய திட்டமான ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக 40 சதவிகிதத்திற்கும் மேலாக ஆதி திராவிட மக்கள் குடியிருக்கும் கிராமங்களை இணைக்கும் மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ், 139 சாலைப் பணிகள் மற்றும் 22 பாலங்கள், சிறு பாலங்கள் கட்டும் பணிகள் ரூபாய் 138 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

போக்குவரத்து நெரிசல் மிகுந்த முக்கிய நகரங்களில் வாகனப் போக்குவரத்து சீராக நடைபெறவும் மற்றும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும் புறவழிச் சாலை, ஆரச் சாலை அமைக்கும் பணி அவசியமாகும். பிறர் துயரம், தன் துயரம், பிறர் கண்ணீர், தம் கண்ணீர் என்று கருதும், தாய் உள்ளம் படைத்த, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இத்துறை ஆய்வின்போது, புறவழிச் சாலைகளுக்குத் தனிக் கவனம் செலுத்தும்படி அறிவுறுத்தியுள்ளார்கள். தற்போது 84 புறவழிச் சாலைப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. மேலும் 16 புறவழிச் சாலைப் பணிகள் ஆய்வில் உள்ளன.

சாலைகள் மற்றும் பாலங்களைப் புதுப்பித்தல், இந்திய சாலைக் குழுமத்தின் வழிகாட்டுதல்களின்படி, திட்டம்சாரா பராமரிப்பு நிதியின்கீழ் செயல்படுத்தப்படுகின்றது. நடப்பாண்டில் இத்திட்டத்தின்கீழ் 1,990 சாலைப் பராமரிப்புப் பணிகள் சுமார் ரூ.293 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



*முற்பகல் 10-55*

NABARD வங்கி உதவியுடன் சாலைப் பணிகள் மற்றும் பாலங்கள். NABARD வங்கிக் கடன் உதவித் திட்டம்மூலம் மாவட்ட இதர சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் பாலங்கள் ஆகியவற்றை மேம்பாடு செய்தல், உறுதி செய்தல் மற்றும் அகலப்படுத்துதல் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில், இத்திட்டத்தின்கீழ், 56 சாலைப் பணிகள் மற்றும் 161 ஆற்றுப் பாலங்கள் கட்டும் பணிகள் சுமார் ரூ.463 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட உள்ளன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இருப்புப் பாதை குறுக்கிடும் சாலைகளில், ஒரு நாளைக்கு, ஒரு இலட்சத்திற்கும்மேல் இரயில் வாகன அலகுகள் (Train Vehicle Unit) இருக்கும், இருப்புப் பாதை கடவுக்குப் பதிலாக, சாலை மேம்பாலம், கீழ்ப்பாலம் கட்டும் பணி முன்னுரிமை அடிப்படையில் இரயில்வே பணித் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 52 பணிகள் சுமார் ரூ.1,198 கோடி மதிப்பில் நடைபெற உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளவேண்டிய பணிகள் - கடமைக்கு இலக்கணமாய், கண்ணியத்திற்கு இலக்கியமாய், கட்டுப்பாட்டிற்கு இதிகாசமாய்த் திகழ்ந்து, புதிய பாதை கண்ட புறநானூற்றுத் தாய், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முந்தைய பொற்கால ஆட்சியில், *(மேசையைத் தட்டும் ஒலி)* 2005 ஆம் ஆண்டு, சென்னை மாநகரத்தின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக, சென்னை அண்ணா நகரில், திருமங்கலம்-முகப்பேர் சாலை சந்திப்பிலும், போரூர் சந்திப்பிலும் மற்றும் மூலக்கடை பகுதியிலும் சாலை மேம்பாலங்கள் கட்டும் பணிகள் துவக்க ஆணையிடப்பட்டது. அதன்பின் வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு, மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்த திட்டம் என்ற ஒரே காரணத்திற்காக, கடந்த 5 ஆண்டுகளாக இப்பாலப் பணிகளில் போதுமான அளவு ஈடுபாடு காட்டாமல் மெத்தனப்போக்கைக் கையாண்டதன் விளைவாக, பணிகளில் சுணக்கம் ஏற்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, போதுமான நிதியொதுக்கீடு செய்து பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும் பெரியார் ஈ.வெ.ரா. சாலையில், நெல்சன் மாணிக்கம் சாலை சந்திப்பு மற்றும் அண்ணாநகர் 3-ஆவது நிழற்சாலை சந்திப்புகளில் சாலை மேம்பாலம், வாகனச் சுரங்கப் பாதை மற்றும் சுரங்க நடைபாதைகள் கட்டும் பணிகளுக்கும் நிதியொதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் 2005 ஆம் ஆண்டு அநீதியை வேரோடு சாய்த்து, நீதிக்குப் பாதை சொல்லி, நியாயத்தின் பக்கம் நின்று, ஆட்சி செய்யும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அறிவிக்கப்பட்டு, மெத்தனப் போக்கில் நடைபெற்றுக்கொண்டிருந்த நெற்குன்றம் பகுதியில் கூவம் ஆற்றின் குறுக்கும், அடையாற்றில் திரு.வி.க. பாலம் அருகிலும் மற்றும் எண்ணூரிலும் ஆற்றுப் பாலப் பணிகள் அனைத்தும் துரிதமாக நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் மேற்குறிப்பிட்ட பாலப் பணிகள் எல்லாம், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், மெத்தனப்போக்கில், அதாவது 5-இல் ஒரு பங்கு பணிகள்தான் 5 ஆண்டுக் காலமாக நடைபெற்றுள்ளன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டம் என்பதற்காகவே, இத்தகைய நிலையை, கடந்த ஆட்சியாளர்கள் கையாண்டனர். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 2005 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட பாலங்களின் பணிகள் அனைத்தும் 2012 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையைச் சுற்றி வெளிவட்டச் சாலை அமைத்தல். சென்னை வெளிவட்டச் சாலையில் முதற்கட்டமாக வண்டலூர் (தே.நெ.45) முதல் நெமிலிச்சேரி (தே.நெ.205) வரையிலான 30 கி.மீ. நீளத்திற்கு ரூ.1,081 கோடி மதிப்பில் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.



இத்திட்டத்தில், சாலையில் 50 மீட்டர் அகலத்தில் இருபுறமும் மூன்று வழித்தடங்கள் மற்றும் சேவைச் சாலைகள் ஒவ்வொன்றும் 5.50 மீட்டர் அகலத்திற்கு இருபுறமும் அமைக்கவும், 6 பெரிய மேம்பாலங்கள், 5 பெரிய பாலங்கள், 100 சிறு பாலங்கள், 21 பாதசாரி சுரங்கப் பாதைகள் மற்றும் 8 வாகனச் சுரங்கப் பாதைகள் அமைக்கும் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சாலைப் பணியில் சுமார் 11 கி.மீ நீளத்திற்கு மண் வேலை முடிவுற்றுள்ளது. 6 பெரிய மேம்பாலங்களில், 4 பணிகளும் மற்றும் 5 பெரிய பாலங்களும் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) 100 சிறு பாலப் பணிகளில், 29 பணிகள் முடிவுற்று 15 பணிகள் நடைபெற்று வருகின்றன. 21 பாதசாரி சுரங்கப் பாதைகளில், 16 பணிகள் முடிவுற்று, 2 பணிகள் நடைபெற்று வருகின்றன. 8 வாகனச் சுரங்கப் பாதைகளில், 6 பணிகள் முடிவுற்று 1 பணி நடைபெற்று வருகின்றது. எஞ்சிய பணிகள் விரைவில் துவக்கப்படும். அனைத்துப் பணிகளையும் நவம்பர் 2012-இல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கட்டம்-II. சென்னை வெளிவட்டச் சாலை கட்டம்-I-இன் தொடர்ச்சியாக, தே.நெ.205-இல் நெமிலிச்சேரி முதல் தே.நெ.5-இல் உள்ள பாடியநல்லூர் வழியாக திருவொற்றியூர்-பொன்னேரி-பஞ்செட்டி சாலையில் உள்ள மீஞ்சூர் வரையிலான 32 கி.மீ. நீள சாலையினை இரண்டாம் கட்டமாக ரூ.1,075 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்குத் தேவையான நில எடுப்புப் பணிகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்மூலம் நடைபெற்றுவருகின்றன. இதில் மொத்தமுள்ள 275 ஹெக்டேர் நிலத்தில் இதுவரை 253 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய 22 ஹெக்டேர் நிலம் கையப்படுத்தப்படும். இந்தப் பணிகள் முடிக்கப்பட்டபின் சென்னை, எண்ணூர் துறைமுகங்களுக்கு வந்து செல்லும் கனரக வாகனங்கள் போக்குவரத்து நெரிசலின்றி எளிதாகச் செல்ல முடியும். மேலும், சென்னை மாநகரத்தில் போக்குவரத்து நெரிசல் கணிசமாகக் குறையும்.

முற்பகல் 11-00

ராஜீவ் காந்தி சாலையில் இரண்டாம் கட்டமாக சிறுசேரி முதல் கிழக்குக் கடற்கரை சாலையிலுள்ள மகாபலிபுரம் வரையிலான 25 கிலோ மீட்டர் நீள ஆறு வழிச் சாலையினை, பொது, தனியார் பங்கேற்புடன் நிறைவேற்ற உத்தேசித்து ரூ.70/- கோடி மதிப்பீட்டில் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒரகடம் தொழிற் பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம், முதற்கட்டமாக சிங்கப்பெருமாள்கோவில், திருப்பெரும்புதூர்வரை மற்றும் வண்டலூர், வாலாஜாபாத் சாலையில் நில எடுப்புப் பணிகள் மற்றும் சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்டமான சிங்கப்பெருமாள்கோவில்-திருப்பெரும்புதூர் நான்கு வழித்தடச் சாலையை, ஆறு வழித்தடச் சாலையாக மாற்றிச் சீரமைக்க ரூ. 87 கோடிக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை-எண்ணூர்-மணலி சாலையில் சென்னைத் துறைமுகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்காகக் குறைந்தது 40 டன் முதல் 100 டன் வரையுள்ள கனரக வாகனங்கள் மற்றும் பெட்டக வாகனங்கள் வருகின்றன. இதனால் துறைமுகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாகன நெரிசல் ஏற்படுவதுடன், பல விபத்துகளும், உயிர்ச் சேதமும் ஏற்படுவதால் அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்கள் மிகவும் பாதிப்படைகின்றனர். அதற்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக, நித்தம், நித்தம் சிந்திக்கும் சத்தியத் தாயின் தருமமிகு ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முந்தைய பொற்கால ஆட்சியில் 2003 ஆம் ஆண்டில் சென்னை-எண்ணூர்-மணலி சாலை மேம்பாட்டுத் திட்டம் ரூ.165 கோடி செலவில் வகுக்கப்பட்டது.

இதன்படி, திருவொற்றியூர்-பொன்னேரி-பஞ்செட்டி சாலை, மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைப் பகுதி சாலை, உள்வட்ட சாலையின் வடக்குப் பகுதி, சென்னை-எண்ணூர் விரைவுச் சாலை மற்றும் துறைமுகப் பகுதி ஆகிய சாலைகள் அகலப்படுத்தி, மேம்படுத்தப்படும். நில எடுப்புப் பணிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே 2004-2005 ஆம் ஆண்டே மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம், மகத்தான திட்டம்,



மாபெரும் திட்டம், மனிதாபிமானமுள்ள திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் போற்றும் திட்டம். இத்திட்டத்தைக் கிடப்பில் போட்டு, மக்களை மதிக்காத மாக்களாய் இருந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் மெத்தனப் போக்கினால் பணிகளில் சுணக்கம் ஏற்பட்டது. காலதாமதம் ஏற்படுத்தியதால் ரூ.165 கோடி மதிப்பீட்டில் போடப்பட்ட இத்திட்டம் தற்போது ரூ.600 கோடி கூடுதல் மதிப்பீட்டில் செய்யப்பட வேண்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 30-6-2011-ல் இந்தப் பணிகள் தொடங்கப்பட்டன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி இத்திட்டத்தின் மேம்பாடு குறித்து 1-8-2011 அன்று மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் அனைத்து அதிகாரிகளையும் அழைத்து, இந்தப் பணிகள் வேகமாக, துரிதமாக நடைபெறவேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி இப்பொழுது அந்தப் பணிகள் வேகமாக, துரிதமாக நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்பணிகளை விரைவாக முடிக்க காலக் கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்பணி முடிவடைந்தால், சென்னை மற்றும் எண்ணூர் துறைமுகங்களுக்கு வரும் கன்டெய்னர் லாரிகளின் போக்குவரத்து சீராக அமைவதோடு, துறைமுகங்களில் சரக்குகளை விரைவாகக் கையாளுவதற்கு ஏதுவாக அமையும். மேலும், துறைமுகத்தில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அதிக அளவில் நடைபெறும். வடசென்னைப் பகுதி மக்கள் பெருமகிழ்ச்சி அடைவார்கள். ஏனென்றால், இங்கு மிகப் பெரிய கன்டெய்னர் லாரிகளெல்லாம் அதிகமாக வருவதால் அங்கே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, வடசென்னை மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, அந்தப் பணிகள் முடிவடைகின்றபொழுது வடசென்னை மக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சென்னை மாநகரின் முக்கியச் சாலைகளான அண்ணா சாலை, ஜி.என்.டி. சாலை, சென்னை உள்வட்ட சாலை, பெரியார் ஈ.வே.ரா. சாலை ஆகிய சாலைகளில்

போக்குவரத்து நெரிசல் குறைவதோடு, எளிதான, விரைவான போக்குவரத்திற்கு இது வழி வகுக்கும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சேலம் தாசநாயக்கன்பட்டியைச் சார்ந்த ஓய்வுபெற்ற காவல் துறை ஆய்வாளர் திரு. குப்புராஜ் உட்பட அவரது குடும்பத்தினர் ஆறு பேர் சொத்துத் தகராறு காரணமாகக் கடந்த ஆண்டு கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்தக் கொலை வழக்கை விசாரித்துவந்த மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறை, சேலம் மாவட்ட ஊராட்சிக் குழுத் துணைத் தலைவரும், பனமரத்துப்பட்டி தி.மு.க. ஒன்றியச் செயலாளருமான, மைனாரிட்டி தி.மு.க. அரசின் முன்னாள் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகத்தின் தம்பி மகனுமாகிய பாரப்பட்டி சுரேஷ் குமாரை கைது செய்தது. இந்தக் கொடூரக் கொலைக்குக் காரணமான சுரேஷ் குமாரை மைனாரிட்டி தி.மு.க. அரசின் முன்னாள் வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் சிகப்பு விளக்கு பொருத்தப்பட்ட, தேசியக் கொடி கட்டப்பட்ட அரசு வாகனத்தில் சேலம் மத்திய சிறைச் சாலைக்குச் சென்று சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார். கருணாநிதியாலும் அதைத் தட்டிக் கேட்க முடியவில்லை. இப்படிப்பட்ட கருணாநிதிக்கு தற்போது சட்டம்-ஒழுங்கைப் பற்றிப் பேச என்ன தகுதி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

அதுமட்டுமல்ல; இந்த வழக்கிலும், அங்கம்மாள் காலனி மற்றும் பிரிமியர் மில் வழக்கு என்ற இரண்டு வழக்குகளிலும் காவல் துறையைச் சேர்ந்த ஓர் ஆய்வாளர் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார். தமிழகத்தைக் காவல் காக்கக்கூடிய காவல் துறை அதிகாரி, அந்த இரண்டு வழக்குகளிலுமே சம்பந்தப்பட்டு, அவர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அவர் இப்போது ஜாமீனிலே வெளிவந்திருக்கின்றார். பல்வேறு வழக்குகளின்மூலம் மீண்டும் அவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். அப்படியென்று சொன்னால், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி ஆட்சியிலே சட்டம்-ஒழுங்கு எந்த நிலையிலே இருந்தது என்பதை நீங்கள்



எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) பயிரை வேலி காப்பதைப்போல, மக்களைக் காக்க வேண்டிய பொறுப்பு காவல் துறை அதிகாரிகளுக்கு இருக்கிறது. (குறுக்கீடுகள்) Sorry, மன்னிக்க வேண்டும். வேலியே பயிரைக் காப்பதைப்போல, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, பழமொழி, “வேலியே பயிரை மேயும்” என்பதுதான்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிரை வேலி போட்டுக் காக்கின்றார்கள். அதைப்போல, பொதுமக்களைப் பாதுகாப்பது காவல் துறை அதிகாரிகள். (குறுக்கீடு) கிராமப் புறங்களிலெல்லாம் ஆடு, மாடுகள் கடிக்கக்கூடாது என்பதற்காக, பயிர்களை வேலி போட்டுப் பாதுகாக்கின்றோம். அதைப்போல, தமிழ்நாட்டு மக்களைக் காவல் துறையினர் பாதுகாக்கின்றார்கள். அப்படிப்பட்ட காவல் துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர், அந்த வழக்குகளிலே ஈடுபட்டிருக்கின்றார் என்று சொன்னால், எப்படி அந்த ஆட்சி இருந்தது என்பதைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்பதற்காக இதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல். சுற்றுப்புறத்தைப் பாதுகாக்கும் முக்கிய நோக்கோடு, சாலைகளின் கட்டமைப்பு திட்டமிடப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதற்குச் சான்றாக, சாலைகளின் எல்லையோரம் மரக் கன்றுகள் நடும் திட்டத்தினை இத்துறை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னதத் திட்டம், உள்ளம் தொடும் திட்டம், ஈரமுள்ள திட்டம், வீரமுள்ள திட்டம், விவேகமுள்ள திட்டம், மனிதச் சமுதாயமே நன்றியோடு நினைக்கும் திட்டம், மழைநீர் சேகரிப்புத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துச் சாலைகள், பாலங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் திறந்தோ அல்லது மூடியோ வடிகால்கள் மூலமாகவோ இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இதோடு மட்டுமல்லாமல், மிக்சி, கிரைண்டர், ஃபேன் ஆகியவற்றை அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்குவதன்மூலம் அக்குடும்பத்திலுள்ள அத்தனைபேரும், அதாவது தமிழ்நாட்டிலுள்ள அத்தனை மக்களும்

பயன்பெறுகின்ற இதுபோன்றதொரு திட்டத்தை எந்தவொரு முதலமைச்சரும் தீட்ட சிந்திக்கவே இல்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தியத் துணைக் கண்டத்திலேயே, ஏன் இந்திய வரலாற்றிலேயே எவராலும் சாதிக்க முடியாத மகத்தான சாதனையைச் செய்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நிகர், மாண்புமிகு அம்மா ஒருவர்தான் என்பதை நிரூபித்துக் காட்டிக்கொண்டிருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கணினிமயமாக்குதல். துறை முழுவதும் கணினிமயமாக்கப்பட்டு அதற்குரிய வன்பொருள் மற்றும் மென்பொருள் நிறுவப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம், புவியியல் சார்ந்த தகவல் அமைப்பு மென்பொருளைத் தனிப் பயனாக்கம் செய்து, நடைமுறைப்படுத்த ஆலோசகரை நியமித்துள்ளது. இத் துறையின் தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மைத் திறன்களை மேம்படுத்த, இவ்வமைப்பு உருவாக்கப்பட்டு வருகின்றது. தற்போது இந்திய நில அளவை வரைபடத்தின் தகவல்களைக் கொண்டு, புவியியல் சார்ந்த தகவல் அமைப்பு மேம்படுத்தப்பட்டு வருகிறது. இத்துடன், சாலை மேலாண்மை அமைப்பு, மனிதவளம் மற்றும் நிதி மேலாண்மை அமைப்பு ஆகியவை ஒருங்கிணைக்கப்படும்.

சாலை பராமரிப்புத் திட்டங்களில் முன்னேற்றம், செலவினங்கள் மற்றும் பணியாளர்களின் விவரங்கள் அனைத்தையும் கணினியின் உதவியுடன் கண்காணிக்க மென்பொருள் தயாரிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

உலக வங்கி நிதியுதவியுடன் சாலைகளை மேம்படுத்துதல். மேலும், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம், தமிழகத்தில் உள்ள நெடுஞ்சாலைத் தொகுப்பிலிருந்து மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க சுமார் 2,500 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை, சாலை முன்னுரிமைத் தேர்வுக்கான ஆய்வுக்காகத் தேர்வு செய்து, *(மேசையைத் தட்டும் ஒலி)* தேர்வு செய்யப்பட்ட சாலைகளை முன்னுரிமை அடிப்படையில் உலக வங்கி உதவியுடன் மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 11-10

உலக வங்கி நிதியுதவியுடன் பொது, தனியார் துறை கூட்டமைப்புத் திட்டத்தின்கீழ் சாலைகளின் தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார சாத்தியக்கூறுகள்பற்றி ஆய்வுகள் மேற்கொள்வதற்கு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு, வரைவு சாத்தியக்கூறு அறிக்கை பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன.

விபத்துகளைத் தவிர்க்கும் நோக்கோடு விபத்துகள் அதிகம் நிகழும் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள மனித நேயம், மானுடப்பற்று, மக்கள்மீது வைத்திருக்கும் அன்பின் வெளிப்பாடாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆணைப்படி *(மேசையைத் தட்டும் ஒலி)* நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை, காவல் துறை ஆகிய துறைகளின் ஒருங்கிணைப்போடு நெடுஞ்சாலைகளில் நடக்கும் விபத்துகளைப் பற்றிய தகவல்கள் மூன்று துறைகளின்மூலமும் சேகரிக்கப்பட்டு கணினியில் பதியப்படுகிறது. அத்தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு மேலும் விபத்துகள் நடக்காமல் இருக்க வழிமுறைகள் ஆராயப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகள்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையின் சாலைகளை மேம்பாடு செய்ய தெரிவு செய்வதற்கு சாலை மேலாண்மை அமைப்பு உருவாக்கப்பட்டு, தகவல்கள் சேகரிக்கும் தள ஆய்வு நடைபெற்று வருகிறது. அதன் அடிப்படையில் மேம்பாட்டுப் பணிகளுக்கான சாலைகள் தெரிவு செய்யப்படும்.

மைய அரசின் நிதியுதவிடன் புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டம், மாநிலங்களை இணைக்கும் திட்டம், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் 430 கி.மீ. நீளமுள்ள நெடுஞ்சாலைகள் மற்றும் 12 பாலங்களை மேம்படுத்திப் பராமரிக்கும் பணிகள், ரூபாய் 225 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சிறு துறைமுகங்கள். தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை நிருவகித்து வந்த முந்தைய தமிழ்நாடு துறைமுகங்கள்

துறையானது தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டம் 1995-இன்படி தமிழ்நாடு கடல்சார் வாரியமாக மாற்றப்பட்டு தமிழ்நாட்டில் துறைமுக வசதிகளை நிருவகித்து மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. சுமார் 1,076 கி.மீ. நீளக் கடற்கரையைக் கொண்டுள்ள தமிழ்நாட்டில் எண்ணூர், சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் 3 பெரிய துறைமுகங்கள் மைய அரசின் கட்டுப்பாட்டிலும், 7 அரசு துறைமுகங்கள் உட்பட 22 சிறு துறைமுகங்கள், மாநில அரசின் கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன. அரசின் கொள்கையின் அடிப்படையில் கடல்சார் வாரியத்தின் செயல்பாடுகளும், வருவாயும் வருங்காலத்தில் அதிகரிக்கும் என்பதில் ஐயப்பாடு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தரமான சாலைகள் மற்றும் சிறப்பான இணைப்பு வசதி ஆகியவை நீடித்த பொருளாதார வளர்ச்சியைப் பெற அவசியமாகிறது என்பதன் அடிப்படையில் தரமான சாலைகளை அமைப்பதன்மூலம் சுகமான, பாதுகாப்பான மற்றும் குறைந்த நேரத்தில் பயணத்தை மேற்கொள்ள சாலைப் பயணத்தில் பாதுகாப்போடு பயணிக்க விலை மதிக்க முடியாத மனித உயிர்களின்மீதுள்ள அக்கறை, அதீத பாசம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) வழிகாட்டுதலின்படி இத்துறை சீரிய முறையில் செயல்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

## புதிய அறிவிப்புகள்

### 1. ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பெருமளவில் சாலைகளை அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல், மேம்படுத்துதல், பாலங்கள் கட்டுதல் மற்றும் விபத்துப் பகுதிகளில் பாதுகாப்பு கட்டமைப்புகளை மேம்பாடு செய்தல் ஆகிய பணிகள் பெரும் நிதியொதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நடப்பாண்டில் சி.ஆர்.ஐ.டி.பி. திட்டத்தில் ரூபாய் 1,900 கோடி மதிப்பில் 1,667 கி.மீ. நீளத்திற்கு சாலைகளை அகலப்படுத்துதல், 3,675 கி.மீ. நீளத்திற்கு சாலைகளை மேம்பாடு செய்தல், 244 பாலங்கள் மற்றும் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



ஆளுநர் உரையில் அறிவித்தபடி விரைவான வாகனப் போக்குவரத்திற்கும், பாதுகாப்பை அதிகரிக்கவும், பயண நேரத்தைக் குறைக்கவும், மாநில நெடுஞ்சாலைகள் இருவழித் தடமாகவும் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளை இடைவழித் தடமாகவும் மேம்படுத்த ரூபாய் 529 கோடியில் சுமார் 1,321 கி.மீ. நீளத்திற்குச் சாலைகளை அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், இத்திட்டத்தின்கீழ் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் தொகுதியான (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்ரீரங்கம் தொகுதியில், திருச்சி-குழுமணி-ஜீயபுரம் சாலையில் ரூபாய் 1.88 கோடி மதிப்பிலும், 1.4 கி.மீ. நீள சாலையை இடைவழித்தடத்திலிருந்து இருவழித் தடமாகவும், ரூபாய் 1.40 கோடி மதிப்பில் 4.6 கி.மீ. நீள சாலையை ஒரு வழித்தடத்திலிருந்து இடைவழித் தடமாகவும், அகலப்படுத்தி மேம்படுத்தப்படும் பணியும் மற்றும் கொட்டப்பட்டி-மறவனூர் சாலையில் நடப்பாண்டில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பில் இரண்டு சிறு பாலப் பணிகளும் மேற்கொள்ளப்படும். மேலும், சாலை அகலப்படுத்துதல் மற்றும் மேம்பாடு செய்ய ரூபாய் 14.24 கோடியில் 27 பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

### 2. கோட்ட அலுவலகங்கள் மற்றும் உட்கோட்ட அலுவலகங்கள் கட்டுதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைப்படி, இந்த ஆண்டில் பழைய, பழுதடைந்த மற்றும் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. ரூபாய் 97 இலட்சம் மதிப்பில் தென்காசி, இராமநாதபுரம் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் கோட்ட அலுவலகங்களும், ரூபாய் 2.28 கோடி மதிப்பில் பாளையங்கோட்டை, மதுரை, முதுகுளத்தூர், கிருஷ்ணராயபுரம், பாப்பிரெட்டிப்பட்டி, நாமக்கல், துறையூர், அறந்தாங்கி, அம்பத்தூர், செய்யாறு மற்றும் தேனி ஆகிய 11 இடங்களில் உட்கோட்ட அலுவலகங்களும் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**3. பயணியர் மாளிகைகள் மற்றும் ஆய்வு மாளிகைகள் கட்டுதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைப்படி, பாளையம்பட்டி, போடிநாயக்கனூர், கொடைசாலை, காரைக்குடி, கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம், ஆனைமலை, ஏற்காடு, சேலம், எடப்பாடி, பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி, வேலூர், விழுப்புரம், பெரியகுளம், துறையூர் மற்றும் ஏலகிரி ஆகிய 17 இடங்களில் உள்ள பயணியர் மாளிகைகள் மற்றும் ஆய்வு மாளிகைகளின் பழுதடைந்த பழைய கட்டடங்களுக்குப் பதிலாக, புதிய கட்டடங்கள் நடப்பாண்டில் ரூபாய் 538 கோடி செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**4. புராதனமான கட்டடங்கள் பாதுகாத்துப் பராமரித்தல்**

இத்துறையின் பயன்பாட்டில் பல புராதனமான பாரம்பரியமிக்க கட்டடங்கள் உள்ளன. இவை கண்டறியப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு, வரலாற்றுத் தொன்மை பாதிக்கப்படாமல் பழுதுபார்க்கப்பட்டு, பாதுகாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**5. திட்டம் சாராப் பணிகள்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைப்படி, நடப்பாண்டில் திட்டம் சாரா பணிகளின்கீழ் சாலை மற்றும் பாலப் பராமரிப்பிற்கு ரூபாய் 977 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்நிதியைப் பயன்படுத்தி 5,000 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலைகள் புதுப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**6. தர உறுதி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளுதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைப்படி, தர உறுதி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின்மூலம், காலத்தினால் நிலக்கீல் தன்மை மாறுவது குறித்த ஆராய்ச்சி, மணலுக்குப் பதிலாக கற்துகள்கள் பயன்படுத்தி உருவாக்கப்படும் கற்கலவையின் தாங்குதிறனை ஆராய்தல், சென்னை மாநகர எல்லைக்குள் ஏற்படும் விபத்துகள் மற்றும் போக்குவரத்து இடர்ப்பாடுகளால் பாதசாரிகளுக்கு ஏற்படும் சாலை விபத்துகள் குறித்த விரிவான ஆய்வு, நிலக்கரிமூலம் பெறப்படும் சாம்பல் மற்றும் செம்புக் கசடுகளை வலுவில்லாத



மண்ணோடு சேர்த்து பல்வேறு உள்நிலைகளில் அதன் தன்மைகளில் ஏற்படும் மாற்றங்கள் குறித்த ஆய்வு போன்ற ஆராய்ச்சிப் பணிகள் ரூபாய் 52 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**7. பாதசாரிகளுக்கு ஏதுவாக சுரங்க நடைபாதைகள் மற்றும் நடைமேம்பாலங்கள் கட்டுதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைப்படி, எதிர்வரும் ஆண்டுகளில் நகர்ப் பகுதிகளில் போக்குவரத்துக் கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில், முன்னுரிமை அடிப்படையில் சென்னைப் பெருநகரில் அண்ணா சாலை, சின்னமலை பேராலயம் அருகிலும், ஈக்காடுதாங்கலில் உள்வட்டச் சாலை, காசி திரையரங்கு அருகிலும், சென்னைப் புறநகரப் பேருந்து நிலையம் அருகிலும், ஜி.எஸ்.டி. சாலையில் எம்.கே.என். சாலை சந்திப்பு ஆகிய இடங்களில் சுரங்க நடைபாதைகளும், ஈ.வெ.ரா. சாலையில் பூங்கா நகர், சென்ட்ரல் இரயில் நிலையம், அரசுப் பொது மருத்துவமனை ஆகியவற்றை இணைத்து ஒரு உயர்மட்ட நடைபாதை பாலமும் ரூபாய் 39 கோடி மதிப்பில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், பாதசாரிகள் பாதுகாப்பாகச் சாலையைக் கடப்பதற்காகவும், விபத்துகளைத் தவிர்ப்பதற்காகவும், சேலம், ஐந்து ரோடு சந்திப்பில் இரயில்வே நிலையம் செல்லும் சாலை மற்றும் ஓமலூர் செல்லும் சாலையிலும், சேலம், புதிய பேருந்து நிலையம் அருகில் தனியார்-பொது பங்களிப்பின்மூலம் நடைமேம்பாலங்கள் அமைக்கப்பட உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

**8. சென்னைப் பெருநகர மேம்பாட்டுத் திட்டங்கள்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைப்படி, எதிர்வரும் ஆண்டுகளில் சென்னைப் பெருநகரப் பகுதியில் போக்குவரத்துக் கட்டமைப்பு மேம்பாட்டிற்குக் கீழ்க்கண்ட திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவையாவன:

ரூபாய் 40 கோடி மதிப்பில் உள்வட்டச் சாலையில், கோயம்பேடு பகுதியில், சென்னைப் புறநகரப் பேருந்து நிலைய,

நகர்ப்புறப் பேருந்து நுழைவு வாயில் மற்றும் காளியம்மன் கோயில் சாலை சந்திப்பில் ஒரு மேம்பாலம் கட்டுதல். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ரூபாய் 20 கோடி மதிப்பில் ஜி.என்.டி. சாலையில் புழல் மற்றும் உள்வட்டச் சாலையில் ஆமுல்லைவாயில் பகுதியை இணைக்கும் வகையில் புதிய இணைப்புச் சாலையை அமைத்தல். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ரூபாய் 25 கோடி மதிப்பில் தாம்பரம் கிழக்குப் புறவழிச் சாலையின் முதற்பகுதி 4 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் அமைந்தகரை, சீமாவரம், குன்றத்தூர், ஆவடி ஆகிய பகுதிகளில் 8 இடங்களில் பாலங்கள் அமைத்தல். *(மேசையைத் தட்டும் ஒலி)*

வேளச்சேரி, விஜயநகரம் பேருந்து நிலையம் அருகில் தரமணி சாலை மற்றும் தாம்பரம்-வேளச்சேரி சாலை சந்திப்பில் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் ஓர் மேம்பாலம் கட்டுதல். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஜி.எஸ்.டி. சாலையில், பல்லாவரம் பகுதியில் குன்றத்தூர் சாலை சந்திப்பு, சந்தை சாலை சந்திப்பில் ரூபாய் 65 கோடி மதிப்பீட்டில் ஓர் மேம்பாலம் கட்டுதல். *(மேசையைத் தட்டும் ஒலி)*

உள்வட்டச் சாலையில், கொளத்தூர் பகுதியில் இரட்டை ஏரி அருகில் பெரம்பூர், செங்குன்றம் சாலை சந்திப்பில் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் ஒரு மேம்பாலம் கட்டுதல் ஆகிய பணிகள் அத்தனையும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-20*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சூரியனைச் சுட்டெரிக்கும் சுடராய், சூட்சுமத்தை வேரறுக்கும் வேங்கையாய், தவழ்ந்து வரும் தென்றலாய், மணம் வீசும் மலராய், ஒளி வீசும் நிலவாய், அள்ளித் தரும் வள்ளலாய், பிறர் துயர் போக்கும் தாயாய்,



தன்மானத் தங்கமாய், சுயமரியாதைச் சிங்கமாய்த் திகழும் எங்கள் அன்னையாய், தாயாய், தெய்வமாய் விளங்கும் *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, எனது நெஞ்சார்ந்த நன்றியைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை தொடர்பான மானியக் கோரிக்கைகள்மீது வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் வெட்டுத் தீர்மானங்களில் கொடுத்துள்ள பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கவனத்தோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு பணிவன்போடு கேட்டுக்கொண்டு அமருகின்றேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 2003 ஆம் ஆண்டு வட சென்னையில், அதுவும் குறிப்பாக, இராயபுரம் பகுதியிலிருந்து Container Lorry-களின் போக்குவரத்து நெரிசலிலிருந்து விடுதலை பெறவேண்டுமென்ற வகையில் ஒரு பெரும் திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்தினார்கள். கடந்த காலத்தில் அது நத்தை வேகத்திலே நகர்ந்து, இப்பொழுது Super Fast, அதாவது ஒரு Super Express என்று சொல்லக்கூடிய அளவுக்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* திட்டத்தை வேகப்படுத்தி, விரைவுபடுத்தி, குறித்த காலத்திற்குள் அது நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொல்லி, வட சென்னை போக்குவரத்து நெரிசலிலிருந்து விடுதலை பெறவேண்டும், இராயபுரம் போக்குவரத்து நெரிசலிலிருந்து விடுதலை பெறவேண்டுமென்று ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வட சென்னை மக்கள் சார்பிலும், இராயபுரம் தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள், சுருக்கமாகக் கேளுங்கள். மற்றவையெல்லாம் பிறகு பேசலாம்.

**திரு. சு. குணசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்புகளை வெளியிடுகிற நேரத்தில், காவிரி ஆற்றிலே தடுப்பணைகள் கட்டப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். காவிரி ஆற்றில் தடுப்பணைகள் கட்டுவதற்குப் பதிலாக கதவணைகளாக கட்டப்பட வேண்டுமென்று பொறியாளர்கள் கூறுகிறார்கள். எனவே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதிலே ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். காவிரி ஆற்றிலிருந்து ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் 100 அடி தூரம் பள்ளமாக இருக்கிற காரணத்தால் வெள்ளம் ஏற்படுகிற காலத்தில் மணல் தடுப்பணைகளிலே மேவி, எதிர்காலத்திலே கரைகள் உடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, கதவணைகள் கட்டுவது என்பது பாதுகாப்பாக இருக்குமென்று பொறியாளர்கள் சொல்லுகிறார்கள். அந்த அடிப்படையில், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொகுதியான, ஸ்ரீரங்கம் தொகுதி, முத்தரசநல்லூரிலேகூட கட்டப்படவிருக்கிற தடுப்பணையைக் கதவணையாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றித் தரவேண்டும்.

அதைப்போல, திருவாரூர் மாவட்டத்தில், காவிரி டெல்டா பகுதியில் ஆண்டுதோறும் பருவமழை கூடுதலாகப் பெய்கிற நேரத்தில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. அதற்கு ஒரு பெரும் திட்டத்தை, சிறப்புத் திட்டத்தை உருவாக்கி, மழை நீர் வடிவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்டக் காலமாகக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்தில் எடுத்து, பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, அந்தச் சிறப்புத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, காவிரியிலே, முத்தரசநல்லூரிலே



தடுப்பணை கட்டுவது என்பது மிகவும் ஆபத்தானது என்று பொறியாளர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். எனவே, தடுப்பணைக்கு மாற்றாக கதவணையாக, அது வெள்ளம் வருகிற காலத்திலே தண்ணீரைத் திறந்துவிட்டு, தேவையான அளவுக்கு தண்ணீரைத் தேக்கிக் கொள்கிற வகையில் அதைக் கதவணையாக மாற்றித் தருவதுதான் உரிய பயனைத் தரும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முகத்துவாரங்களிலே கடல் நீர் உள்ளே புகுந்து பல இடங்களிலே நிலத்தடி நீர் உப்பு நீராக மாறிக்கொண்டிருக்கிற பேராபத்து ஏற்படுகிறது. எனவே, அந்த முகத்துவாரங்களிலே கடல் நீர் உள்ளே புகாதவாறு அங்கே தடுப்பணை கட்டி, கடல் நீரைத் தடுத்து நிறுத்துவதற்கான திட்டங்கள் வேண்டுமென்கிற கோரிக்கை நீண்ட காலமாக இருந்துவருகிறது. குறிப்பாக, காவிரி டெல்டா மாவட்டங்களிலும், கடலூர், நாகை மாவட்டங்களிலும் இந்தக் கோரிக்கை இருக்கிறது. அதையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 21 - நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை. 26-8-2011 ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,674,76,16,000/-, மூலதனக் கணக்கில் ரூ.3,540,24,59,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-25

**(அ) கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 39 - கட்டடங்கள் (பொதுப் பணித் துறை). 26-8-2011 ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.199,73,24,000/-, மூலதனக் கணக்கில் ரூ.785,00,83,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)



**(ஆ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)**
—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40 - பாசனம் (பொதுப் பணித் துறை). 26-8-2011 ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,293,44,04,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,735,03,92,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

**(இ) கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)**

**(உ) கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)**

**(ஊ) கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)**

**(எ) கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)**

-----

[2011 ஆகஸ்ட் 29

**(ஈ) கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 10-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தாயின் தலைமகளே, செந்தமிழைச் சீர்மணக்கச் செய்திட்ட செந்தமிழின் சந்தனமே; செந்தமிழ் நாடு சிறப்புறவே செயல்படும் அறிவே, ஆற்றலே; பண்பின் தொகையே, பாசப் பெருமழையே! வளர்பிறையாய், முழுமதியாய், வந்துதித்த பெருந்தவமே, அருள்நதியே, (மேசையைத் தட்டும் ஒலி) எம் அன்னையே! வீர வரலாறு படைத்திடும் வெற்றித் தேவதையே! தத்துவமே, எம் தாரக மந்திரமே; நிறைந்த புகழால் உயர்ந்து விளங்கும் தேசியத் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளின் கூடாரத்தை வேரோடும், வேரடி மண்ணோடும், குழிதோண்டிப் புதைத்து, போர் முரசு கொட்டி, பூபாளம் பாடி வெற்றிக் கொடியை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே (மேசையைத் தட்டும் ஒலி) பட்டொளி வீசிப் பறக்கவிட்ட தமிழ்கூறும் நல்லுலகின் ஒப்பற்ற தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் பிரபஞ்சத்தின் வெற்றித் திருமகளே! தொட்டதைத் துலங்க வைக்கும் எங்களின் தூய தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) அரசியலின் அகரமே; அறிவுலகச் சிகரமே; நாங்கள் நித்தமும் வணங்கும் எங்கள் குல தெய்வமே; எம் தாயே! தமிழே! தன்னிகரில்லா தன்மான வரலாற்றுத் தலைவியே; (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழகச் சட்டமன்றப் பேரவையின் அரியணையில் மக்களின் மகத்தான ஆதரவைப் பெற்று, மூன்றாவது முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராக, கம்பீரமாக, அரியணையிலே அமர்ந்திருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களை என்னுடைய சிரம் தாழ்ந்து வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை), பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்*



2011 ஆகஸ்ட் 29] [திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி]

*ரூ.227,71,02,000/-, மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 20, திரு. வி.சி. சந்திரகுமார்.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.227,71,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 486, திரு. ஆர். சுந்தர்ராஜன்.*

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.227,71,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 1387, திரு. வி. முத்துக்குமார்.*

**திரு. வி. முத்துக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.227,71,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1206, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.227,71,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2004, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.227,71,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2565, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.227,71,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2192, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.227,71,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1721, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகர் மற்றும் அதனைச் சுற்றி சுமார் இருபதாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரும் வெள்ளித் தொழிலில் பயன்படுத்தப்படும் கச்சா வெள்ளிக்கு வரிவிலக்கு அளித்ததுபோல் உருக்கப்பட்ட வெள்ளிக்கும் வரி விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.227,71,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1809, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் சரிகைப் பொருட்களுக்கு 4% வாட் வரி விதிக்கப்பட்டது. அதை 12.5% ஆக உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.227,71,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2223, திரு. க. பாண்டியராஜன்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சமையல் எண்ணெய்க்கு விதிக்கப்பட்ட 5% வாட்

வரியினைக் குறைக்கவும், மிகுந்த தீங்கு தரக்கூடிய ரூ.5 கோடி என்ற வரிவிலக்கினை நீக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.227,71,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**(உ) கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 11 - முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.171,47,32,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 21, திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.171,47,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 487, திரு. ஆர். சுந்தர்ராஜன்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.171,47,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1208, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.171,47,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2003, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.171,47,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2198, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.171,47,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *422, திரு. சி. மைக்கேல் ராயப்பன்.*

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் செயல்படும் பத்திரப் பதிவு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.171,47,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *743, திரு. ம. கலை அரசு.*

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அணைக்கட்டு தொகுதி, ஒடுக்கத்தூரில் சார்-பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.171,47,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1432, திரு. வி. முத்துக்குமார்.*

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருத்தாச்சலம் சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு ஓர் கூடுதல் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



*"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.171,47,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1810, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.*

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென் தமிழகத்தில் பத்திரப் பதிவுத் துறையில் போதிய பணியாளர்கள் இல்லாததால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுவதைத் தடுக்க போதிய பணியாளர்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.171,47,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2241, திரு. ர.ம. பாபு முருகவேல்.*

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேசூரில் ஏற்கெனவே இயங்கிவந்து மூடப்பட்ட சார்-பதிவாளர் அலுவலகத்தை மீண்டும் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.171,47,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2390, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.*

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பத்திரப் பதிவுத் துறையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.171,47,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2483, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாநிலம் முழுவதும் உள்ள பத்திரப் பதிவு அலுவலகங்களைக் கணினிமயமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.171,47,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2570, திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

முற்பகல் 11-30

**(ஊ) கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 54 - வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை), மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாத மலர்களை வணங்கி,

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.292,59,29,000/-, மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.106,81,47,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 23, திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1210, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2177, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *455*, திரு. பி.வி. கதிரவன்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதியில் மேற்குப் பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலை இருப்பதால் வன விலங்குகளின் ஊடுருவலைத் தடுத்து விவசாயத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *740*, திரு. ம. கலை அரசு.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மலைவாழ் மக்கள் வசிக்கும் மீஞ்சமந்தை, பாலாம்பட்டு, ஜார்தான் கொள்ளை ஆகிய ஊராட்சிகளுக்குச் சாலை வசதி செய்து தருவது குறித்தும் வனத் துறைக்குச் சொந்தமான காட்டுப் பகுதியில் இடத்தைக் கையகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *973*, திரு. சி. மைக்கேல் ராயப்பன்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் வழியாகச் செல்லும் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் விளைநிலங்களில் உள்ள பயிர்களைக் காட்டு விலங்குகள் அழிப்பதைத் தடுத்திட மின் கம்பி வேலிகள் அமைக்க



வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1241*, திருமதி ர. சுபா.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட நரிப்பாடி முதல் பச்சமலை வரை சென்று வருவதற்கு குறுகிய மண் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1435*, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதாச்சலம் தொகுதி, இருப்பு கிராமத்திற்கு நெய்வேலியிலிருந்து சென்று வர ஏதுவாக வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் சாலை அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1741*, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், சிற்றாறு கோட்டத்தில் உள்ள அரசு இரப்பர் கழகக் களப் பணியாளர் தொழில் சமயத்தில் காட்டு யானை மிதித்து கடந்த 8-9-2008 அன்று இறந்து போனார். அவருக்கு அரசு சார்பில் இறப்பிற்கான நஷ்ட ஈடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1765, திரு. எஸ்.ஆர். பார்த்திபன்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், கொளத்தூர் பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் நுழைந்து பயிர்களை நாசம் செய்யும் யானைகளைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1812, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் வனத்தைச் சார்ந்த பகுதிகளில் மரங்களை வெட்டி இயற்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதைத் தடுத்து, வனத்தைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1916, திரு. ந. நஞ்சப்பன்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜப்பான் நாட்டு உதவியுடன் செயல்படுத்தப்படும் வன வளர்ப்புத் திட்டத்தின்மூலம் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மற்றும் அதில் ஏற்பட்டுள்ள படிப்பினைகள் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1963, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழங்குடி மக்களுக்கு அவர்கள் பயன்படுத்தும் நிலங்களுக்குப் பட்டா வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2097, திரு. அ. பாஸ்கர்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதி, தருமபுரி நகரத்தில் வனத் துறை அலுவலகம் உள்ளது. வனத் துறை அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2107, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் கிழக்குக் கடற்கரை சாலை ஓரம் மரம் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2315, திரு. ர.ம. பாபு முருகவேல்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சமூக மற்றும் காப்புக் காடுகளில் மரங்கள் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2370, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனத் துறைக்குச் சொந்தமான முந்திரி மரங்களை அழித்து தைல மரங்கள் நடப்படுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2471, திரு. டி. இராமச்சந்திரன்.



**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளித் தொகுதியில் வன விலங்குகளால் ஏற்படும் பயிர்ச் சேதத்திற்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,59,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,81,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2619, திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

### (எ) கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 15 - சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த மக்களுக்கு, ஏற்றம் தரும் எங்கள் தாயே, மூன்றே பொதுக் கூட்டங்களில், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த எங்கள் அன்னையே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதம்தொட்டு வணங்கி,

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.18,51,87,000/-, மூலதனக் கணக்கில் ரூ.100,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.10,00,01,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 22, திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,51,87,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1209, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,51,87,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2005, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,51,87,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2482, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,51,87,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2195, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,51,87,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 490, திரு. ஆர். சுந்தர்ராஜன்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாயப் பட்டறைகளினால் மாசுபடும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,51,87,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1474, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருத்தாசலம் தொகுதி, காணாதுகண்டான் கிராமத்தில் உள்ள எரிசாராய ஆலையின் இரசாயனக் கழிவுகள் பொது இடத்தில் வெளியேற்றப்படுவதாலும், ஆலையிலிருந்து

வெளியேறும் புகை, காற்றில் பரவி, சுற்றியுள்ள கிராம மக்களுக்குக் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துவதாலும் ஆலையின்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,51,87,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1578, திரு. அ. சவுந்தரராசன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கரியைப் பயன்படுத்தும் மின் நிலையங்களைக் குறுகிய எல்லைக்குள்ளாகவே நிறைய தொடங்குவதைத் தவிர்த்து, பரவலாக நல்ல இடைவெளி தூரத்தில் அதுபோன்ற தொழிற்சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,51,87,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1723, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுற்றுச்சூழல் பாதிக்காவண்ணம், சேலம் வடக்கு தொகுதியில், கன்னங்குறிச்சி பேரூராட்சியில், சோலார் தெரு விளக்கு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,51,87,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/- மற்றும் கடன் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1837, திரு. என்.ஆர். ரெங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை நகராட்சிப் பகுதிகளில் பாலிதீன் பைகளின் உபயோகத்தினைத் தடை செய்ய நகராட்சிக்குப் பரிந்துரை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,51,87,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1964, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் நிலம், நீர், காற்று மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாக்க, சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,51,87,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2045, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாலைகளில் ஓடும் கணிசமான வாகனங்கள் பெருமளவு புகையைக் கக்கிச் செல்வதால் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படும் அபாயத்தைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,51,87,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2076, திருமதி ர. சுபா.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கெங்கவல்லி தொகுதியிலுள்ள தொழிற்சாலைகளின் கழிவுநீர்மூலம் குடிநீர் மாசுபடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,51,87,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2399, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் கிராமங்கள் மற்றும் நகரங்கள்தோறும் மரங்கள் நட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,51,87,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.100,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) மற்றும் முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 561 முதல் 597 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 598 முதல் 629 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக, ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று நான்கு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் நான்கு மானியக் கோரிக்கைகள் மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

முற்பகல் 11-35

*__திரு. சி.எச். சேகர்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த, “வறுமையை ஒழிக்கப் பிறந்த வள்ளல்”, எனது அரசியல் ஆசான் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களின் பொற்பாதங்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி), மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வணக்கம் கூறி, எனது உரையைத் தொடங்குகிறேன்.

வணிக வரித் துறை: தமிழகத்தில் 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்முதல் அமல்செய்யப்பட்ட மதிப்புக் கூட்டு வரி சட்டத்தின்படி, வணிகர்கள் பதிவு செய்யும்போது, அவர்கள் fixed deposit-ஆக எந்தப் பணமும் கட்ட வேண்டியதில்லை. ஆனால், கடந்த 1959 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை அமலில் இருந்த, தமிழ்நாடு பொது விற்பனை வரிச்

@ 630 முதல் 672 வரையிலான பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



2011 ஆகஸ்ட் 29] [திரு. சி.எச். சேகர்]

சட்டத்தின்படி வணிகர்கள் பதிவு செய்யும்போது, fixed deposit-ஆக ஒரு குறிப்பிட்ட தொகை கட்ட வேண்டுமென்ற விதி இருந்தது. இவ்வாறு வணிகர்களிடம் இருந்து பெறப்பட்ட fixed deposit பல வங்கிகளில் இருப்பாக வைக்கப்பட்டுள்ளது. மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்திய பிறகு, இந்தத் தொகையைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவித்தும், இதுவரை பலர் அந்தப் பணத்தைத் திரும்பப் பெறவில்லை. இன்றைய சூழலில், இந்தத் தொகைக்குத், தமிழக அரசுதான் உரிமையாளர் என்ற நிலை உள்ளது. எனவே, அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து இவ்வாறு வங்கிகளில் உள்ள fixed deposit பணத்தை அரசு கஜானாவிற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தத் தொகை சுமார் 150 கோடி ரூபாய் அளவிற்கு இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆட்சியாளர்களால், நிதி நெருக்கடியில் உள்ள இந்த அரசுக்கு, இந்தப் பணம் யானைப் பசிக்குச் சோளப் பொறியாகவாவது அமையும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

உலக நாடுகளில் தங்கத்தில் முதலீடு செய்வது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால், தங்கத்தின் விலையும் விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்து வருகிறது. எதையெடுத்தாலும், தங்க விலையைபோல் ஏறுகிறது என உதாரணமாகச் சொல்லும் அளவிற்கு நிலைமை மாறியுள்ளது. தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட அனைத்து நகரங்களிலும் தங்கம் விற்பனை செய்யும் கடைகள் அதிக அளவில் உள்ளன. பல கடைகளில் தங்க நகைகள் வாங்கும்போது bill வேண்டுமா என்று விற்பனையாளர்கள் கேட்கின்றனர். ஏற்கெனவே, செய்கூலி, சேதாரம் என பல மறைமுகக் கட்டணத்தை விலையாகக் கொடுப்பதால், மேலும் கட்டணம் செலுத்துவதைத் தவிர்க்க bill வாங்க பலரும் தயங்குகின்றனர். இதனால், விற்பனையாளர்கள், எஸ்டிமேட் என்ற பெயரில் ஒரு காகிதத்தில் அச்சிட்டுக் கொடுத்து தங்கத்தை விற்றுவிடுகின்றனர். விற்பனையாளர்கள் செய்யும் தந்திரத்தால், அவர்களுக்கு இலாபமும், அவர்களால் கோடிக்கணக்கான ரூபாய் வரி ஏய்ப்பும் செய்யப்படுகிறது. இதுபோன்ற வரி ஏய்ப்புகளைத் தடுத்தால் அரசுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் கிடைக்கும். எனவே, தங்க நகை விற்பனையை முறைப்படுத்த அவ்வப்போது கடைகளுக்குச் சென்று ஆய்வு செய்யவேண்டும். இதற்கென வணிக வரித் துறை உயர் அதிகாரிகள் தலைமையில் சிறப்புக் குழுக்களை இவ்வரசு அமைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின்படி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையின்படி, தமிழகத்திலே விற்பனை செய்யப்படுகின்ற தங்க நகைக் கடைகளில் வணிக வரித் துறை அலுவலர்கள் அடிக்கடி சென்று சோதனைகள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

***திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. தமிழகத்தில் உணவு எண்ணெய்க்கு 5 சதவிகிதம் விற்பனை வரி வசூலிக்கப்படுகிறது. அதனால், ஒரு கிலோ எண்ணெய்க்கு ரூபாய் 5 முதல் ரூபாய் 10 வரை விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. ஆனால், தமிழகத்தில் உற்பத்தியாகும் உணவு எண்ணெயில் சுமார் 10 சதவிகிதம் மட்டுமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. மீதமுள்ள 90 சதவிகிதம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இதனால், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவு எண்ணெய்களுடன் போட்டியிட உள்நாட்டு உற்பத்தியாளர்களால் முடியவில்லை. எனவே, தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் உணவு எண்ணெய்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கவேண்டும். வெளிநாடுகளிலிருந்து தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்படும் உணவு எண்ணெய்கள் அனைத்திற்கும் வரி என அறிவித்தால், சுமார் 10 இலட்சம் சிறு வணிகர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறுவர். அதோடு, ரூபாய் 5 கோடி வரை வரி இல்லை என்பதை மாற்றியமைத்து, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவு எண்ணெய்களுக்கு மட்டுமே வரி விதிக்கவேண்டும். இதன்மூலம், தமிழக எல்லைக்குள் வரும்போதே அதே இடத்தில் வரி வசூலிக்க இயலும். இதன்மூலம் பெருமளவில் அரசுக்கு வருவாய் வரும்.

M.N.C. எனப்படும் பன்னாட்டு நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்கும்போது, அவர்களுக்குக் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு வரி விலக்கு உள்ளிட்ட பல சலுகைகள்



வழங்கப்படுகின்றன. தமிழகத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பொதுமக்களின் வருவாய் பெருகும் என்பதால் பன்னாட்டு நிறுவனங்களைச் சிவப்புக் கம்பளம் விரித்து அரசு வரவேற்கிறது. தமிழகத்தில் உள்ள பன்னாட்டு நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் அனைத்துப் பொருட்களும், வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கும் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தமிழகத்தில் பொருட்கள் தயாரித்தாலும், விற்பனையில் தனிச் சலுகைகளை அவர்கள் இங்கு அளிப்பதில்லை. நாடு முழுவதும் ஒரே அளவில்தான் தயாரிப்பு விலையை நிர்ணயம் செய்கின்றனர். இதோடு, வரிவிலக்கு உள்ள குறித்த காலத்திற்கு மட்டுமே, தமிழகத்தில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகின்றனர். வரிவிலக்குக் காலம் முடிந்ததும், தங்கள் தேவைக்கேற்ப வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களைப் பணிக்கு அமர்த்திக் கொள்கின்றனர். எனவே, இதுபோன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கு வகுத்துள்ள கொள்கைகளை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும். இதுபோன்ற முறைகேடுகளில் ஈடுபட்டு வரும் பன்னாட்டு நிறுவனங்களைக் கண்டறிந்து கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இங்குள்ள பன்னாட்டு நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்குத் தமிழகத்தில் தனி விலை நிர்ணயம் செய்யவும் நடவடிக்கை வேண்டும்.

*முற்பகல் 11-40*

அடுத்து சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை. திடம், திரவம், வாயு ஆகிய மூன்று நிலைகளில் இருந்து பரவும் சுற்றுச்சூழல் மாசு என்பது, கண்ணுக்குத் தெரியாமல், பொது மக்களைப் பல்வேறு நோய் பாதிப்புகளுக்கு ஆளாக்கி வருகிறது. குடியிருப்புப் பகுதிகளிலேயே கிராமப்புற உள்ளாட்சி நிருவாகங்கள்மூலம் இரசாயனம் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் உள்ளிட்டவை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய தொழிற்சாலைகளைக் கட்டுப்படுத்த, கடந்த ஆட்சிக் காலத்தில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் மாசு அதிகரிக்கக் காரணம், உள்ளாட்சிப் பிரதிநிதிகளும், மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளும் நேர்மையாகச் செயல்படாததுதான். எனவே, தன்னிச்சையாக இயங்கும் தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கும் கிராமப்புற நிருவாகங்களை அரசு கண்டறிந்து அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

R.T.O அலுவலகங்களில் ஒரு வாகனத்தைப் பதிவு செய்யும்போது 15 ஆண்டுகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அதன்பிறகு, அந்தப் பதிவைப் புதுப்பித்து, மீண்டும் ஐந்தாண்டுகளுக்கு வாகனத்தை ஓட்டலாமென்ற renewal system உள்ளது. காயலான் கடைக்குச் செல்ல வேண்டிய நிலையிலிருக்கும் வாகனங்களெல்லாம் மீண்டும், மீண்டும் பதிவைப் புதுப்பித்து அதிக அளவில் இயங்கி வருகின்றன. தனியாரிடம் மட்டுமின்றி, அரசிடமும் இதுபோன்ற வாகனங்கள் அதிக எண்ணிக்கையில் இயங்கிவருகின்றன. இத்தகைய வாகனங்களுக்கு புகைக் கட்டுப்பாட்டு பரிசோதனைகள் முறையாகச் செய்யப்படுகின்றனவா என்றால், கேள்விக்குறிதான் விடையாக இருக்கிறது. இவ்வாறு வலம் வரும் வாகனங்களால் சுற்றுச்சூழல் மாசு ஏற்பட்டு, சுவாசக் கோளாறு உள்ளிட்ட பிரச்சினைகளுக்குப் பொது மக்கள் ஆளாக நேரிடுகிறது. எனவே, அதிகம் பயன்பாட்டில் இருக்கும் பஸ், லாரி, கார் உள்ளிட்ட வாகனங்களுக்கு 15 ஆண்டுகள் வரை மட்டுமே பதிவு வழங்க வேண்டுமென்றும், மேலும் பதிவைப் புதுப்பிக்க இயலாதவகையில் இவ்வரசு உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

டெல்லி மாநகரில் பழைய வாகனங்களையும், அதிகம் புகை கக்கும் வாகனங்களையும் இயக்கக்கூடாது என்ற விதி உள்ளது. அதனால், புகை கக்காத, கேஸ்மூலம் இயங்கும் சி.என்.ஜி பஸ்கள் அங்கு இயக்கப்படுகின்றன. தமிழகத்தின் தலைநகரான சென்னையிலும், கேஸ்மூலம் இயங்கக்கூடிய, புகை கக்காத சி.என்.ஜி. மாநகர அரசு பஸ்களை இயக்குவதற்கு இவ்வரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகளுக்கும், மனிதர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் 'பார்த்தீனியம்' செடிகளை அகற்ற இவ்வரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. விவசாயத்திற்கும், விவசாய நிலங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் 'வேலிகாத்தான்' முட்செடிகள் தமிழகம் முழுவதும் பரவிக் கிடக்கின்றன. நிலத்தடி நீரை "ஸ்ட்ரா" போட்டு உறிஞ்சிக் குடிக்கும் வேலிகாத்தான் முட்செடிகள் வளர்ந்துள்ள இடத்தில் ஆக்சிஜன் குறைவாக இருக்கும் என்பதால் அங்கு குருவிகள்கூட கூடு கட்டுவதில்லை. இந்தியாவில் விறகிற்காகவும், விவசாய வளர்ச்சியை அழிப்பதற்காகவும் வேலிகாத்தான் முட்செடிகளின் விதைகள் வெளிநாட்டிலிருந்து எடுத்துவரப்பட்டு, விமானம்மூலம் தூவப்பட்டதாக இருவேறு தகவல்கள் உள்ளன.



அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் விவசாயத்திற்கு எதிரி என்று கருதப்படும் செடிகளின் பட்டியலில் இந்தச் செடி இருக்கிறது. விவசாய நிலங்களை மலடாக்கி, நிலத்தடி நீரை உறிஞ்சிக் குடிக்கும் வேலிகாத்தான் முட்செடிகளை அழிப்பதற்கான நடவடிக்கையை இவ்வரசு உடனடியாகத் துவக்க வேண்டும். தற்போதுள்ள சூழ்நிலையில் இந்தச் செடிகளை அழிப்பது மிகப் பெரிய சவாலாக இருக்கும் என்பதால், சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள்மூலம் இதை ஒரு இயக்கமாகவே நடத்த வேண்டும். இதற்கான நடவடிக்கையை எடுக்க இவ்வரசு முன்வந்தால் சிறப்பாக இருக்கும்.

தேசிய வனக் கொள்கைப்படி, மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில், 33 சதவிகிதம் வனப் பகுதியாக இருக்க வேண்டும். ஆனால், தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பில் 21.76 சதவிகிதம் மட்டுமே காடுகள், மரங்கள் உள்ளன. பெருகிவரும் தொழிற்சாலைகள், சிப்காட் தொழிற் பூங்காக்கள், நகரமயமாக்கல் போன்ற காரணங்களினால், காடுகள் மட்டுமின்றி மக்கள் வசிக்கும் பகுதிகளிலும் மரங்களின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து வருகிறது. இதேநிலை தொடர்ந்தால் காலநிலை மாற்றங்கள் ஏற்பட்டு வெப்பம் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. எனவே, மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். இந்த ஆண்டில் தனியார் நிலங்களில் மரங்களை வளர்க்கும் திட்டத்தைச் செயல்படுத்த இவ்வரசு முயற்சியை மேற்கொண்டுள்ளது, வரவேற்கத்தக்கது.

பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடை, நோட்டுப் புத்தகம், காலணி உள்ளிட்டவை வழங்குவதுபோன்று, இலவச மரக் கன்றுகளையும் இவ்வரசு வழங்க வேண்டும். இதுகுறித்த விழிப்புணர்வைப் பொது மக்களுக்கும், மாணவர்களுக்கும் ஏற்படுத்த வேண்டும். தற்போது வீடு உள்ளிட்ட கட்டடங்கள் கட்டும்போது, மழைநீர் சேகரிப்புத் திட்டம் இருந்தால்தான், வீடு கட்ட அனுமதி வழங்கப்படும் என இவ்வரசு அறிவித்துள்ளது. குறிப்பிட்ட சதுர அடியில் கட்டடம் கட்டுபவர்கள், குறிப்பிட்ட எண்ணிக்கையில் மரங்களை வளர்க்க வேண்டுமென்ற ஆணையை இவ்வரசு பிறப்பிக்க வேண்டும். இந்த ஆலோசனையை அரசு செயல்படுத்தினால், தமிழகத்தில் மீண்டும் ஒரு 'பசுமைப் புரட்சி' ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மரங்களெல்லாம் வெட்டப்பட்டு, மலைகள் மொட்டையடிக்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதல்வராக வந்ததற்குப் பின்பு, தமிழகத்திலே அதிகமான எண்ணிக்கையில் மரங்களை நடுவதற்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகின்றார்கள். ஒவ்வொரு தொழிற்கூட வளாகத்தின் மொத்த நிலப்பரப்பில், 33 சதவிகித மரக் கன்றுகளை வளர்த்திட வேண்டுமென அரசு விதிமுறை வகுத்துள்ளது. ஒரு ஹெக்டேருக்கு 400 மரக் கன்றுகள்வீதம் நடப்படுகின்றன. அதோடுமட்டுமல்லாமல், தொழில்முனைவோர் மரக் கன்றுகளை நட முன்வரும்பட்சத்தில், அவர்களுக்கு வனத் துறையின்மூலம் மரக் கன்றுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளை அமைக்க அனுமதி வழங்கும்போது, இத்தனை ஏக்கரில் தொழிற்சாலைகள் அமைக்கப்படுமென்றால், இவ்வளவு மரக் கன்றுகள் நட வேண்டுமென்று ஒரு condition போட்டுத்தான் அனுமதி கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சி.எச். சேகர்:** தொழிற்சாலைகளில் 25 percent செடி வளர்ப்பு இருந்தால்தான், அந்தத் தொழிற்சாலைகளைப் பதிவு செய்யவேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ஆனால், இன்றைக்கு



தமிழ்நாட்டிலே இருக்கின்ற எந்தத் தொழிற்சாலைகளிலும் 25 சதவிகிதம் அவர்களுடைய நிலத்திலே செடிகள் வைத்துக்கொண்டு தொழிற்சாலைகள் தொடங்குவது என்பது இதுவரையிலும் எங்குமே இல்லை. அந்தச் சட்டத்தை யாருமே பின்பற்றுவது இல்லை. மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் அந்தத் தொழிற்சாலைகளுக்குச் சென்று ஆய்வு செய்வதும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், அந்த முறைகளைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தத் தொழிற்சாலையில் அதுபோன்று மரங்கள் வளர்க்கவில்லையென்று குறிப்பிட்டுப் புகார் கொடுத்தால், அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று அந்தத் தொழிற்சாலைகளின்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. தமிழகத்திலுள்ள சாலைகள் விரிவாக்கம் என்ற பெயரில், சாலைகளின் ஓரங்களில் இருக்கும் பல மரங்கள் வெட்டப்படுகின்றன. எனவே, சாலையோரங்களிலும், குறிப்பாக தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை ஓரங்களில், மரம் வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். இதன்மூலம் சுற்றுப்புறச்சூழல் மாசுபடுவது தடுக்கப்படும்.

தமிழகத்தில் ஆண்டுக்கு 12 இலட்சம் டன் பிளாஸ்டிக் தேவைப்படுகிறது. ஆனால், ஐந்து லட்சம் டன்கள் மட்டுமே உற்பத்தி ஆகிறது. இத்தொழிலின்மூலம் அரசுக்கு ஆண்டுதோறும் 1,000 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கிறது. பிளாஸ்டிக் தயாரிப்பு தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் வெவ்வேறு சட்டத்தைப் பின்பற்றுகின்றன. மத்திய அரசு இந்த ஆண்டு பிப்ரவரி மாதம், பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை மற்றும் நிர்வகித்தல் தொடர்பான புதிய சட்டத்தை இயற்றியுள்ளது. அதன்படி 40 மைக்ரான் அளவில் பிளாஸ்டிக் பொருட்களைத் தயாரிக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது. ஆனால், தமிழக அரசு 60 மைக்ரான் அளவில் பாலிதீன் பொருட்களைத் தயாரிக்க வேண்டும் என ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் தெரிவித்துள்ளது. கர்நாடகா, கேரளா, ஆந்திரா போன்ற அண்டை மாநிலங்களில் மத்திய அரசின் சட்டப்படி பிளாஸ்டிக் தயாரிக்கப்பட்டு குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. இதனால், தமிழகத்தைச் சேர்ந்த விற்பனையாளர்கள் மற்றும் பயன்பாட்டாளர்கள் குறைந்த விலையில் அண்டை மாநிலங்களில் கிடைக்கும் பிளாஸ்டிக் பொருட்களையே பயன்படுத்துவார்கள். இதனால், இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், அரசுக்கும் வருவாய் இழப்பும் ஏற்படும். எனவே, வெளி மாநிலங்களிலிருந்து தயாரிக்கப்படும் பிளாஸ்டிக் பொருட்களை இவ்வரசு தடை செய்யவேண்டுமென்று கூறுகிறேன்.

வருவாய்த் துறை அதிகாரியான தாசில்தார்மூலம் நிலப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. தவறான பட்டா வழங்கப்பட்டுள்ளது என பாதிக்கப்பட்ட நபர் புகார் மனு கொடுத்தால், அதை ஆய்வு செய்து, வழங்கப்பட்ட தவறான பட்டாவை இரத்து செய்யும் அதிகாரம் தாசில்தாருக்கு உள்ளது. பத்திரப் பதிவுத் துறையில், சார்பதிவாளர் பத்திரத்தைப் பதிவு செய்கிறார். அந்தப் பத்திரம் போலியானது என்று பின்னாளில் கண்டறியப்படுகிறது. பாதிக்கப்பட்டவர் போலீசாரை அணுகி வழக்குப் பதிவு செய்து, பின் நீதிமன்றம்மூலம் இந்த வழக்கில் தீர்ப்பைப் பெறுவதற்கு குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் கடந்துவிடுகின்றன. தற்போது Chit Fund மோசடி வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் பத்திரப் பதிவுத் துறைத் தலைவரின்கீழ் உள்ள மாவட்டப் பதிவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, பட்டாக்களை இரத்து செய்யும்



அதிகாரத்தை தாசில்தார்களுக்கு வழங்கியது போலவும், (Chit Fund) மோசடி வழக்குகளுக்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் மாவட்டப் பதிவாளர்களுக்கு வழங்கியுள்ளதைப்போலவும், போலி பத்திரங்களைக் கண்டறிந்து, அவற்றை உடனடியாக இரத்து செய்யும் அதிகாரத்தைப் பத்திரப் பதிவுத் துறைத் தலைவருக்கு வழங்க வேண்டும். இதன்மூலம் தேவையற்ற கால விரயமும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படும் அலைச்சலும் குறையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய முத்திரைச் சட்டம் 47-A(1)-இன் கீழ், சந்தை மதிப்பைவிட (Guideline Value) குறைவான விலையில் பத்திரப் பதிவு செய்யப்பட்டால், அதுகுறித்து ஆய்வு செய்வதற்கு மாவட்ட ஆட்சியருக்குப் பரிந்துரைக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியரின்கீழ் பணிபுரியும் தனித் துணை ஆட்சியர் (முத்திரை) இதுகுறித்து ஆய்வு செய்து, சந்தை விலையை நிர்ணயம் செய்து அனுப்புகிறார். இதுபோன்று சந்தை விலையை நிர்ணயம் செய்வதற்காக, ஏராளமான பத்திரங்கள் மாநிலம் முழுவதும் அதிக எண்ணிக்கையில் நிலுவையில் உள்ளன. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் பத்திரங்களைப் பெறமுடியாத நிலை உள்ளது. அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருவாயும் கிடைக்காமல் உள்ளது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க "சமாதான்" திட்டத்தை மீண்டும் அமல்படுத்த இவ்வரசு முடிவு செய்துள்ளது வரவேற்கத்தக்கது.

அதேநேரத்தில் பத்திரப் பதிவுத் துறையில் இருந்து வருவாய்த் துறைக்கு பத்திரம் சென்று விலை நிர்ணயம் செய்வதால் கால விரையம் ஆகிறது என்பதையும் இவ்வரசு கவனத்தில் கொள்ளவேண்டும். பொதுமக்களுக்கு அலைச்சல் ஏற்படுவதுடன், ஆய்வுக்காகச் செல்லும் அசல் ஆவணங்களும் காணாமல் போகும் பிரச்சினைகள் உள்ளன. எனவே, பத்திரப் பதிவுத் துறையிலேயே, இந்திய முத்திரைச் சட்டம் 47-A (1) ஒன்று தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தால் சிறப்பாக இருக்கும் என்பதை இவ்வரசு பரிசீலிக்க வேண்டும்.

தமிழகம் முழுவதும் ஆய்வு செய்து, வரும் செப்டம்பர் மாதத்திற்குள் புதிய வழிகாட்டு மதிப்பீடு தயாரித்து அமல்படுத்த அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. புதிய வழிகாட்டு மதிப்பின்படி, பத்திரப் பதிவுத் துறையின் வருமானம்

அதிகரிக்கும். ஒவ்வொருவருக்கும் சொந்தமாக வீடு, நிலம் வாங்க வேண்டும் என்ற ஆசை உள்ளது. பொதுமக்களின் ஆசையைப் பூர்த்தி செய்யவேண்டியது அரசின் கடமை என்றே எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே, முதன்முறையாக வீடு, நிலம் வாங்குபவர்களுக்கு பத்திரப் பதிவுக் கட்டணத்தைக் குறைத்துக் கொள்ளலாம். அடுத்தடுத்து தொடர்ச்சியாக நிலம், வீடுகள் வாங்குபவர்களுக்கு வேண்டுமானால் கூடுதல் பதிவுக் கட்டணம் வசூலித்துக்கொள்ளலாம். முதன்முறை பத்திரப் பதிவு செய்பவர்கள் மூலம் ஏற்படும் வருவாய் இழப்பை இதன்மூலம் அரசு சரிக்கட்டிக்கொள்ளலாம். இதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இவ்வரசு ஆராய வேண்டும்.

பத்திரப் பதிவு செய்ய பத்திரம் எழுதும்போது தஸ்தாவேஜி, விஸ்தீரணம் உள்ளிட்ட பல்வேறு வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. காலங்காலமாகப் பயன்படுத்தப்படும் இந்த வார்த்தைகளுக்கான அர்த்தம் பலருக்குப் புரிவதே இல்லை. ஆனால், பத்திரப் பதிவுத் துறை வெப்சைட்டில் பத்திரப் பதிவு, பவர் ஆப் அட்டர்னி ஆகியவற்றை எளிய முறையில் செய்வதற்காக விண்ணப்பங்கள் உள்ளன. இதுகுறித்த விழிப்புணர்வு இல்லாததால் பழைய முறையிலேயே பத்திரப் பதிவு வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதுபோன்ற வார்த்தைகளைப் பயன்படுத்திப் பதிவு செய்தால் மட்டுமே அது ஏற்றுக்கொள்ளப்படும் என்ற மனநிலையும் பலருக்கு உள்ளது. அதனால் பத்திரம் எழுதுபவர்களுக்கெனத் தனித் தொகையைச் செலவழிக்கும் நிலைக்கு பலர் தள்ளப்படுகின்றனர். எனவே, அரசின் எளிய முறை பத்திரப் பதிவு குறித்த விழிப்புணர்வைப் பொதுமக்களுக்கு ஏற்படுத்த இவ்வரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காப்புத் தொகையைப்பற்றி இங்கே



குறிப்பிட்டார்கள். காப்புத் தொகை, வணிகர்களின் கணக்குகள் சரிபார்க்கப்பட்டு, அவர்கள் வணிகத்தை நிறுத்திய பின்பு, வணிகர்களின் வேண்டுகோளின்பேரில் அது திருப்பிக் கொடுக்கப்படுகிறது. அதுவரை, அந்தத் தொகை வரி விதிப்பு அலுவலர்களின் பெயரில் வங்கிக் கணக்கில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

“மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை”

என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்ப, சூழ்நிலைகளை வேரறுத்து, சூழ்ச்சி செய்தோரையெல்லாம் வென்றெடுத்து, நல்லாட்சி தர அரியணை வீற்றிருக்கும் எங்கள் இதய தெய்வமே! *(மேசையைத் தட்டும் ஒலி)* இனி மூன்று முறை அல்ல; இனி என்றும் உங்கள் முறையே என்று மெய்பிக்கும்வகையில், அனுதினமும் மக்கள் வாழ்வில் ஏற்றம் தரவல்ல நல்ல திட்டங்களை வழங்கி வரும் வாழ்வு தெய்வமே! சான்றோர் பெருமக்கள் பலர் அமர்ந்த இந்த அவையிலே, என்னைப் போன்ற சாமானியனையும் இரண்டாவது முறையாக அமர்ந்திடச் செய்த அன்னையே! தங்கள் வாழ்நாள் காலத்திலே நாங்களும் வாழ்ந்தோம் என்ற பெருமையோடு எங்களை வாழ்த்திட்ட வள்ளலே! என் உயிர் மூச்சு உள்ளவரையிலும், அனுதினமும் தங்களைத் தொழுதே வாழ்வேன் என்று கூறி, தங்கள் மலர்ப் பாதங்களை வணங்கி சமர்ப்பிக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தன் மக்களுக்காக ஆட்சி நடத்திய சுயநலக் கூட்டத்தை விரட்டி, தன்னலமில்லாமல் மக்கள் நலம் பேணும் அரசை மீண்டும் அமைத்துத் தந்து தமிழக மக்களுக்கும், எனது தொகுதியைச் சார்ந்த மக்களுக்கும் இந்த மாமன்றத்திலே நன்றி சொல்ல விரும்புகிறேன். அல்லல்படும் மக்களுக்கு அனுதினமும் நல்ல பல திட்டங்களை வழங்கி,

“சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்”

என்னும் வள்ளுவரின் வாக்கினை மெய்ப்பிக்கும் வகையிலே, மெய்யாக்கும் வகையிலே, சொல்லிய எல்லாவற்றையும் செய்து முடித்திட, திட்டங்கள் தீட்டிச் சொல்லாதவற்றையும் செய்திட அனுதினமும் பல அரிய திட்டங்களை வழங்கிவரும் அகிலம் போற்றும் எங்கள் அற்புதத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் பொற்பாத மலர்களைத் தொட்டு என்னுடைய உரையைத் தொடங்குகிறேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிக வரி, பத்திரப் பதிவு, வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்த உங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய வருவாயில் மிக முக்கியப் பங்கு வகிப்பது வணிக வரி. இது 65 விழுக்காட்டிலிருந்து 70 விழுக்காடு அரசுக்கு வருவாயை ஈட்டித் தருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலே ஆட்சி அமைகிறபோதெல்லாம், வணிக வரித் துறையின்மூலமாக வரும் வருவாய், குறிப்பிட்ட இலக்கை மீறி சாதனை படைத்திருக்கிறது. கடும் வறட்சி, வெள்ளம், சுனாமி என்று எத்தனை இயற்கை இடர்ப்பாடுகள் வந்தாலும், புதிய வரிகள் விதிக்காமலே, நிர்வாகத் திறமையினால் வரி வருவாயை உயர்த்திக் காட்டி, சோதனைகளைச் சாதனைகளாக்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்பொழுதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வருகிறாரோ, அப்பொழுதெல்லாம் வணிக வரித் துறையிலே அரசு அதிக வருவாயைக் கண்டிருக்கிறது. 1996-2001 ஆம் ஆண்டு வரை திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, உச்சபட்சமாக, இறுதி ஆண்டிலே இந்தத் துறையினுடைய வருமானம் 7,380 கோடி ரூபாயாக இருந்தது. 2001-லிருந்து, 2006 ஆம் ஆண்டுவரையிலான மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக, இந்தத் துறையின் உச்சபட்ச வருமானம் ஏறத்தாழ 13,907 கோடி ரூபாய் என உயர்ந்தது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு, சேவை வரி என்ற வகையிலே தனக்கு வருவாய் வரக்கூடிய அளவிலே சட்டத் திருத்தம் கொண்டு வந்துள்ளது. இதிலே மாநில அரசுக்கு வரிவிதிப்பின்மூலமாகக் கிடைக்கும் நிதியாதாரம் முழுவதும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டது. ஆனால், இந்த வகையில் மாநிலத்தின் நிதி அதிகாரம் பறிபோவதைப்பற்றிக் கவலைப்படாமல், 'மானாட, மயிலாட' நிகழ்ச்சியைப் பார்த்துப் பொழுதைக் கழித்ததோடு அல்லாமல், முதலமைச்சர் பதவியைத் தனது மகன், மகள், மனைவி, பேரன்கள் என அனைவருக்கும் பங்கு போட்டுக் கொடுத்து, நாட்டையே கொள்ளையடிக்க வழிகோலியவர் மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசின் தலைவர் கருணாநிதி அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 100-ஆவது நாளிலே, "மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றத்தைத் தருவோம்" என்று பெருமிதத்தோடு கூறினார்கள். அந்தவகையில், தமிழக மக்களுக்காகத் தினமும் 20 மணி நேரம் உழைத்து வருபவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இங்கே பெருமிதத்தோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்புக் கூட்டு வரி 2007 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியாளர்களால் அமல்படுத்தப்பட்டது. "இந்த வரி முறையைக் கொண்டு வந்தால், மாநில அரசுக்கு வருவாய் இழப்பு எற்படும். இந்த இழப்பை மத்திய அரசு ஏற்க வேண்டும். இதனால் மிகப் பெரிய அளவிலே விலைவாசி உயரும்" என்றும், "மக்கள் பாதிக்கப்படுவார்கள்" என்றும் 2005-இலே முதல்வராக இருந்தபோது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீர்க்கதரிசனத்தோடு சொன்னார்கள். ஆனால், அதையெல்லாம் நடைமுறைப்படுத்தாமல், தலை, கால் தெரியாமல் ஆட்சி செய்தவர்களை மக்கள் இன்றைக்குத் தூக்கியெறிந்துவிட்டு, மக்கள் நலன் பேணும் மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராக ஆக வேண்டுமென்று சொல்லி, மிகப் பெரிய மௌனப் புரட்சியை ஏற்படுத்தித் தந்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சினிமா துறையிலே சுத்தமான தமிழ்ப் பெயர் வைக்கும் திரைப்படங்களுக்குக் கேளிக்கை வரிவிலக்கு அளிக்கப்பட்டது. தனது பேரன்கள் அனைவரும் இத்துறையினை ஆக்கிரமித்திருந்த

காரணத்தினால் மட்டும், அவர்கள் இதனால் பயனடைந்தார்கள். இதன் அடிப்படையிலேதான், தனது பேரன் தயாரித்த, மிக சுத்தமான தமிழ்ப் பெயரைக் கொண்ட "குவார்ட்டர் கட்டிங்" என்ற திரைப்படத்திற்கு வரிவிலக்கு அளித்து, தமிழகத்திற்குச் சேவை புரிந்தவர் கருணாநிதி அவர்கள். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே திரையுலகம் சுதந்திரக் காற்றைச் சுவாசித்துக் கொண்டிருக்கிறது. சுத்தமான தமிழ்ப் பெயர் மட்டுமல்லாமல், கலாச்சாரத்திற்குக் கேடு விளைவிக்கின்ற காட்சிகள் இருந்தாலும்கூட, வரி விலக்கு கிடையாது என அறிவித்து, தமிழையும், தமிழர்களின் கலாச்சாரத்தையும் காப்பாற்றிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சியின் 100-ஆவது நாள் சாதனை, வணிக வரித் துறையிலும் தொடருகிறது. மத்திய அரசு சமையல் எரிவாயு விலையை 50 ரூபாய் உயர்த்தியது. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்; கஷ்டம் அடைவார்கள் என்பதைக் கருத்திலே கொண்டு, 1-7-2011 ஆம் நாள் முதல், 4 சதவிகித மதிப்புக் கூட்டு வரியை விலக்கிக் கொண்டு, மத்திய அரசு அறிவித்த 50 ரூபாய் விலை உயர்வை, 35 ரூபாயாகக் குறைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோலத்தான், விவசாயிகள் பயன்படுத்தும் உரங்கள், விவசாயக் கருவிகள், இடுபொருட்கள் ஆகியவற்றின்மீது விதிக்கப்பட்ட 4 சதவிகித மதிப்புக் கூட்டு வரியினையும் விலக்கிக் கொண்டார்கள். வணிக வரிச் சங்கத்தினரின் கோரிக்கைகளை ஏற்று, நீண்ட காலமாக நிலுவையிலிருந்த வரிகளையெல்லாம் முடிவுக்குக் கொண்டுவர, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சமாதானத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ், பதிவுச் சான்றிதழ் பெறத் தேவையில்லாத சிறு வணிகர்களையும், வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களாகச் சேர்த்து பயன்பெற அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.



**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் பயன்படுத்துகின்ற உரத்திற்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையொட்டி ஒரு சின்ன கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யாரைக் கேட்கிறீர்கள்?

**திரு. சு. குணசேகரன்:** வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஆடு வளர்ப்பவர்கள், மழைக் காலங்களில் வனப் பகுதியில் பட்டியில் ஆடுகளைத் தங்க வைக்கிறார்கள். அங்கே மேய்ப்பதற்கு ரூபாய் 2,000 பணம் கட்டினால் பட்டி கொடுக்கிறார்கள். அதற்கு வனத் துறையும் அனுமதி வழங்குகிறது. ஆனால், அங்கே, இரவில் ஆடுகள் போடக்கூடிய உரத்தை, வயலுக்கு எடுத்துக்கொண்டு போவதற்கான அனுமதியை மறுக்கிறார்கள். அது எந்தவிதத்திலும் நியாயம் இல்லை. இன்றைக்கு இயற்கை உரம் தேவையாக இருக்கிற நேரத்தில், வனத் துறை அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, இரவு நேரங்களிலே பட்டியிலேயே இருக்கக்கூடிய உரங்களை வெளியிலே, வயல்களுக்கு எடுத்துச் செல்வதற்கான அனுமதியைப் பெற்றுத் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டுசென்று பரிசீலிக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் பேசுகிறபோது, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அப்படிப் பேசியதாகச் சொன்னார்கள். உரத்திற்கு

கொடுக்கப்படுகிற வரியை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரத்து செய்தது மட்டுமல்ல; விவசாயிகள் பயன்படுத்துகின்ற உரம், பூச்சி மருந்துகள், கருவிகள் அனைத்திற்கும் இந்திய வரலாற்றில், எந்த மாநிலத்திலும் செய்யாத ஒரு சாதனையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், விவசாயிகள் பயன்படுத்தும் உரங்கள், விவசாயக் கருவிகள், இடுபொருட்கள் ஆகியவற்றின்மீது 4 சதவீதம் கூட்டு வரியையும் விலக்கியுள்ளார் என்று சொல்லியிருந்தேன். வணிகர் சங்கத்தின் கோரிக்கைகளை ஏற்று, நீண்ட காலமாக நிலுவையிலிருந்த வரிகளை முடிவுக்குக் கொண்டுவர சமாதானத் திட்டம் என்ற ஒன்றைக் கொண்டுவந்து, தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பதிவு சான்று பெற, தேவையில்லாத சிறு வணிகர்களையும் வணிகர் நல வாரியத்தின் உறுப்பினராகச் சேர்த்து அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வணிக வரித் துறை கணினிமயமாக்கப்பட்டது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான். 2007-2008 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையின்படி தவறான வரிவிலக்கு மற்றும் தனிப்பட்ட வகையிலே வரிவசூல் செய்யாமை என்ற இரண்டு இனங்களில் அரசுக்கு 492.05 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு வருவாய் ஈட்டுகின்ற இனங்களில் மூன்றாம் இடம் வகிப்பது பத்திரப் பதிவுத் துறை. பத்திரப் பதிவுத் துறை கணினிமயமாக்கப்பட்டது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* 2005-2006-இல் இதற்காக ஒதுக்கிய தொகை, பின்னர் வந்த தி.மு.க. அரசால் செலவழிக்கப்படாததை, 2007-2008 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது. மேலும், பதிவு செய்யப்பட்ட



பத்திரங்கள் பிரிவு 47(A)-ன்படி நிலுவையில் உள்ள பத்திரங்களை உடனடியாக வழங்கும்பொருட்டும், அரசுக்கு வர வேண்டிய, வருவாய் கிடைக்கும்பொருட்டும் மீண்டும் சமாதானத் திட்டத்தை அமல்படுத்த இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது நடைமுறையிலுள்ள guideline value எனப்படும் வழிகாட்டி மதிப்பீடு, மார்க்கெட் மதிப்பீடு இரண்டுக்கும் இடையே இடைவெளியுள்ளது. இதனால் அரசுக்கு மிகப் பெரிய அளவிலே வருவாய் இழப்பை ஏற்படுத்தித் தந்துள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** ஆகவே, வழிகாட்டி மதிப்பீடு மற்றும் மார்க்கெட் மதிப்பீட்டுக்கு இடையேயுள்ள இடைவெளிகளைக் களைந்து, அரசுக்கு வருவாய் கிடைக்கிற வகையிலே அம்மா அவர்கள் திட்டத்தை நிறைவேற்றியுள்ளார்கள். ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி, அடிமாட்டு விலைக்குச் சொத்துக்களை அபகரித்தவர்கள், நிச்சயமாக உரிய கட்டணத்தைப் பத்திரப் பதிவுக்குச் செலுத்தியிருக்கமாட்டார்கள். தி.மு.க.-வினர் வழிகாட்டி மதிப்பீட்டை புறந்தள்ளிவிட்டு, குறைந்த விலையைச் செலுத்தி பதிவு செய்திருக்கக்கூடிய வாய்ப்புள்ளது. அதனால் அதனை ஆராய்ந்து, சொத்து மதிப்பீட்டுக்கு ஏற்றவாறு உரிய கட்டணத்தைச் செலுத்தியுள்ளார்களா என்பதை அறிய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வனம் என்பது இயற்கை நமக்கு இன்றைக்கு அருளிய விலை மதிப்பற்ற இயற்கை வளமாகும். வனம் ஒரு மழை நீர் சேகரிப்பு இல்லமாகவும், ஒரு துப்புரவுத் தொழிற்சாலையாகவும் பயன்படுகிறது. அதாவது ஒரு மரம் ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 50 ஆயிரம் முதல் 2 இலட்சம் கன அடி நீரைத் தேக்கி வைக்கிறது. அதேபோலத்தான் 14 மீட்டர் விட்டமுள்ள ஒரு மரம் ஒரு மணி நேரத்திலே 2,740 கிலோ கரியமில வாயுவை, அதாவது Carbon-di-oxide-ஐ உட்கொண்டுவிட்டு, 1,712 கிலோ Oxygen-ஐ வெளிவிடுகிறது. ஆக, மரங்களினால் நச்சு வாயுக்கள் அழிக்கப்பட்டு, உயிரினங்கள் வாழத் தேவையான Oxygen

கிடைக்கிறது. ஆகவே வனம் உயிர்கள் வாழ, புவியின் வெப்பத்தைக் குறைத்து, நீராதாரத்தைப் பெருக்கி, மனித குலம் வாழ வழி வகை செய்து கொடுக்கிறது. 1994 ஆம் ஆண்டு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் தமிழகத்தின்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.*

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** *வனப் பகுதியை 17 சதவிகிதத்திலிருந்து 21 சதவிகிதமாக அதிகரித்து, காட்டு வளத்திலே இந்தியாவிற்கே வழிகாட்டியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திகழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின் செயல்பாட்டின்மூலமாக இந்திய வனத் துறையின் மூலமாக வழங்கப்படுகின்ற இந்திரா, பிரியதர்சினி, விஸ்வாமித்திரர், என்ற மூன்று விருதுகளையும் பெற்றுக்காட்டியவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரங்களை அதிக அளவில் வளர்ப்பதன்மூலமாக வளி மண்டலத்தில் ஏற்படுகின்ற வெப்பத்தைச் சீராக்க முடியும், இன்றைக்கு நம்மில் பலரும் பெட்ரோல், டீசல், நிலக்கரி ஆகிய இயற்கை வளங்களை அதிக அளவிற்குப் பயன்படுத்துகிறார்கள். இதனால், அண்டவெளியிலே* Carbon-di-oxide, Nitrogen Oxide *போன்ற நச்சு வாயுக்கள் அதிக அளவிலே உருவாகின்றன. இதன் காரணமாக, பூமியின் வெப்பம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இந்த வெப்பத்தைக் கட்டுப்படுத்தி, அதனைச் சமச் சீராக வைத்திருக்கும் சக்தி மரங்களுக்கு உண்டு. வன வளத்தைப் பெருக்கி, அரசின் வருவாயைப் பெருக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் கடந்த 1991 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தை, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி கிடப்பிலே போட்டது. மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2003 ஆம் ஆண்டிலே இத்திட்டத்திற்குப் புத்துயிர் கொடுத்து, 10 கோடியே 78 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்து இத்திட்டம் தொடர வழிகோலினார். (மேசையைத் தட்டும் ஒலி)*



*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பிலே வனச் சாலைகளை மேம்படுத்த 16.78 கோடி ரூபாயும், பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த 30.09 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலமாக எங்கள் தொகுதியிலே வனத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள சாலைகள் மிக மோசமாகப் பழுதடைந்துள்ளவற்றை மேம்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

*பில்லூர் அணைப் பகுதியிலே பழங்குடியினர் அதிகம் பேர் வாழ்கிறார்கள். இந்த அணைக்கட்டிலே மீன்பிடிப்புத் தொழில் மேற்கொள்ளப்படுவதனால், அவர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்றும், அவற்றுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் மாசு உருவாக்கி இருக்கும் மிகப் பெரிய சவாலினால் புவியின் வெப்பம் அதிகரிக்கும் என்று உலக நாடுகள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். பூமியின் வெப்ப அளவு அதிகரிப்பதை ஒரு கால நிலை செய்தியைப்போல வாசித்து, கடந்து செல்வதல்ல. இது பூமியில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இது மனித குலத்தையே அழித்துவிடும். தமிழகத்தில் சுற்றுச்சூழல் என்ற துறையைப் புதியதாக உருவாக்கிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.*

*கடந்த 1994 ஆம் ஆண்டு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் முதன்முதலிலே இத்துறை உருவாக்கப்பட்டது. சுற்றுச்சூழல் மாசுப் படுவதினால் ஏற்படும் விளைவுகள் பொது மக்களை நேரடியாகப் பாதிக்கிறது என்பதனையும் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் துறையைக் கொண்டுவந்தார்கள்.*

*மேட்டுப்பாளையம் தொகுதி, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடியின மக்கள் அதிகமாக வாழுகின்ற பகுதி. வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ள இவர்கள் மேற்படிப்புக்கு, கோவையில் உள்ள அரசுக் கல்லூரிக்குச் செல்ல வேண்டியுள்ளது. தொகுதியின் உட்புற*

பகுதியிலிருந்து கோவை செல்ல சுமார் 75 கி.மீ. தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. மேலும், பொருளாதார சூழ்நிலை காரணமாக அதிகக் கட்டணம் கொடுத்து தனியார் கல்லூரிகளில் படிக்க முடியவில்லை. இதனால் பள்ளிப் படிப்புடன் நின்றுவிடுகின்றனர். எனவே, மாணவர்களின் நலன்கருதி மேட்டுப்பாளையம் பகுதியில் ஓர் அரசுக் கலைக் கல்லூரி அமைத்துக் கொடுக்க வேண்டுமாய்ப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இக்கல்லூரியை இந்து சமய அறநிலையத் துறைமூலம் துவக்கத் தேவையான சாத்தியக்கூறுகள் உள்ளன. இத்துறைக்குச் சொந்தமான அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் சுமார் 12 கோடி ரூபாய்க்கும் மேல் நிதி உள்ளது. அதேபோல அருள்மிகு குருந்தமலை குழந்தை வேலாயுதசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலம் 95 ஏக்கர் உள்ளது. எனவே, இப்பகுதிவாழ் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட ஆதி திராவிட மற்றும் மலைவாழ் பழங்குடியின மாணவர்களின் கல்வியைக் கருத்திற்கொண்டு, இங்கு அரசுக் கலைக் கல்லூரி தொடங்க மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் அருள்கூர்ந்து அனுமதி தரவேண்டும் என்று தங்கள் பொற்பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டுப்பாளையம் நகரவைப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1,700 மாணவிகள் படிக்கின்றனர். இந்தப் பள்ளி மிகுந்த இட நெருக்கடியில் நடைபெற்று வருகிறது. மொத்தம் 50 சென்ட் பரப்பளவுகொண்ட இடத்தில் போதிய வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிப்பிட வசதிகள் இல்லாமல் இப்பள்ளி நடைபெறுகிறது. இப்பள்ளிக்கென விளையாட்டு மைதானமே இல்லை. பல வகுப்புகள் மரத்தடியிலும், வராண்டாவிலும் நடக்கின்றன. ஆண்டுதோறும் நல்ல தேர்ச்சி விகிதத்தைக் கொடுக்கும் இப்பள்ளி மாணவிகள் இடப்பற்றாக்குறையால் எவ்விதப் பொழுதுபோக்குமின்றி மன இறுக்கத்தோடு படிக்கும் சூழ்நிலை உள்ளது. எனவே, இப்பள்ளியை நகரின் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியது மிகவும் அவசியமாகிறது. நகரத்தின் மற்றொரு பகுதியில் கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான இடம் 1.65 ஏக்கர் உள்ளது. இந்த இடம் நீலகிரி காய்கறி உற்பத்தியாளர் சங்கத்திற்குச் சொந்தமானது. இச்சங்கம் கலைக்கப்பட்டு செயலிழந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த இடம் கேட்பாரற்று, புதர் மண்டி,



நகரின் மையப் பகுதியில் உள்ளது. எனவே, மேற்படி பெண்கள் மேல்நிலைப் பள்ளியை இந்த இடத்திற்கு மாற்றித் தந்து, மன இறுக்கத்தோடு பயிலும் மாணவிகளை மன மகிழ்ச்சியோடு கல்வி கற்க உதவ வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் இந்த ஆண்டு மூன்று அரசு மேல்நிலைப் பள்ளிகள், பிளஸ் 2 தேர்வில் 100 சதவீத தேர்ச்சி பெற்றுள்ளன. அதாவது, புஜங்கனூர், வெள்ளியங்காடு, பெத்திகுட்டை ஆகிய மூன்று மேல்நிலைப் பள்ளிகளும் எனது மேட்டுப்பாளையம் தொகுதியைச் சேர்ந்தவை என்பதைப் பெருமிதத்தோடு இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

காரமடை ஒன்றியத்தின் மேற்குப் பகுதியில் மருதூர், காளம்பாளையம், கெம்மாரம்பாளையம், தோலம்பாளையம், வெள்ளியங்காடு ஆகிய ஊராட்சிகள் உள்ளன. இந்த ஊராட்சிப் பகுதிகளை ஒட்டி நீலகிரி மாவட்டத்தின் ஒரு பகுதியும், கேரள மாநிலத்தின் ஒரு பகுதியும் உள்ளது. மேற்கண்ட பகுதிகளில் வசிக்கின்ற பொதுமக்கள் எல்லாம் கோவைக்குச் செல்ல காரமடையைச் சுற்றிச் செல்கின்றனர். எனவே, இதற்கு மாற்றாக புதிய பாதை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, காரமடை-தோலம்பாளையம் சாலை 11 கி.மீ. தாயனூரில் இருந்து காட்டாஞ்சிமலை தண்டிபெருமாள்கோயில் வழியாக பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், கூடலூர் பேரூராட்சி செல்வபுரம் வரை, காரமடை ஒன்றிய நிதியில் புதிய மண் சாலை அமைக்கப்பட்டுள்ளது. செல்வபுரம் முதல் கோவை-மேட்டுப்பாளையம் சாலையில் வீரபாண்டி பிரிவு சென்று சேரும் வரையில் ஏற்கெனவே தார்ச் சாலை உள்ளது. ஆகவே, இந்த மண் சாலைப் பகுதியைத் தார்ச் சாலையாக மாற்றும் பட்சத்தில் கோவை செல்பவர்கள் காரமடையைச் சுற்றிச் செல்லாமல் நேரடியாக வீரபாண்டி பிரிவு சென்று சேரமுடியும். இதனால் 12 கி.மீ. தூரம் குறையும். இச்சாலையின் மற்றொரு சிறப்பு என்னவென்றால், இச்சாலை அமைக்கப்பட்டால் மேட்டுப்பாளையம்-ஊட்டி சாலையில் நிலச் சரிவு ஏற்படும் காலங்களில் இது ஊட்டி செல்வதற்கு மாற்றுப் பாதையாக அமையும். எனவே, பொதுமக்கள் பெருமளவில் பயன்பெறும் வகையில், வீரபாண்டி பிரிவு முதல் தண்டிபெருமாள்கோயில்

வழியாக தாயனூர் வரை சாலை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலமான ஊட்டியின் நுழைவாயிலாக மேட்டுப்பாளையம் நகரம் உள்ளது. இதனால் ஆண்டு முழுவதும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். நகரின் பிரதான சாலை குறுகலாக இருப்பதால் மிகக் கடுமையான வாகன நெரிசல் ஏற்படுகிறது. ஊட்டி சீசன் மாதங்களில் நள்ளிரவு தாண்டியும் போக்குவரத்து நெரிசலால் இப்பகுதி பொதுமக்களும் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகின்றனர். இதைக் கருத்திற்கொண்டு மேட்டுப்பாளையம் நகரத்திற்குப் புறவழிச் சாலை அமைக்கும் திட்டத்திற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கையகப்படுத்தப்படவேண்டிய நிலங்கள் குறித்து அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் இத்திட்டத்தை நிறைவேற்ற பல்வேறு முயற்சிகள் எடுத்தும் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகப் போய்விட்டது.

எனவே, மேட்டுப்பாளையம் பொதுமக்களைப் போக்குவரத்து நெரிசலில் இருந்து மீட்கவும், நீலகிரி மாவட்டத்திற்குச் செல்லும் வாகனங்கள் நகருக்குள் வந்து நெரிசலில் சிக்காமல் செல்லவும் ஏதுவாக மேட்டுப்பாளையம் புறவழிச் சாலைத் திட்டத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டுப்பாளையம் தொகுதி, கேரள மாநிலத்தின் எல்லையையொட்டி அமைந்துள்ளது. ஆனால், இந்த மாநிலத்திற்கு சாலை வழியாகச் செல்ல, கோவை நகருக்குச் சென்றுதான் செல்லவேண்டும். ஆகவே, கேரள-தமிழக எல்லைப் பகுதியில் கொடுங்கரை பள்ளத்தில் ஓர் உயர்மட்டப் பாலம் அமைத்துத் தந்தால் இரு மாநிலப் போக்குவரத்திற்கு ஏதுவாக அமைவதோடு நேரமும், எரிபொருளும் மிச்சமாகும் என்பதால் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தப் பாலத்தை அமைத்துத் தர ஆவன செய்யுமாறு தங்கள் பொற்பாதங்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டுப்பாளையம் நகரில் உள்ள அரசுப் பொது மருத்துவமனையில் சுமார் 75 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடங்கள் தற்சமயம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. மேலும், இங்கு தினமும் சுமார் 1,400 நோயாளிகள் சிகிச்சை



பெறுகின்றனர். ஆகவே, இங்கு புதிய மருத்துவமனைக் கட்டடங்களைக் கட்டி, நவீன மருத்துவ உபகரணங்களை வழங்கி அதிநவீன மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருமாறும், மேலும் இங்கு போதிய இடவசதி உள்ளதால் இதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் பயன்பெறும் விதமாக ஓர் அரசு செவிலியர் கல்லூரி துவக்க ஆவன செய்யவேண்டுமாய் தங்களின் பொற்பாதம் வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்திற்கு உட்பட்ட நெ.4 வீரபாண்டி பேரூராட்சி மிகப் பெரிய பேரூராட்சியாகும். இப்பகுதியில் வசிக்கும் மக்கள், மருத்துவமனைக்குப் பெரியநாயக்கன்பாளையம் செல்ல வேண்டியுள்ளது. இது மக்களுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்துகிறது. எனவே, இப்பகுதி மக்களின் நலனையும், சுற்றியுள்ள கிராம மக்களின் நலனையும் கருத்திற்கொண்டு நெ.4 வீரபாண்டி பேரூராட்சிப் பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், காரமடை ஒன்றியம் சீளியூர், சிறுமுகை, சின்னகள்ளிப்பட்டி ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, சீளியூரிலும், சிறுமுகையிலும் தினமும் 300-க்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். இது முழுமையான கிராமப்புறங்கள் அடங்கிய பகுதி. இங்கு வசிக்கும் மக்கள் மிகவும் ஏழை மக்கள். எனவே, இந்த மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு மேற்கண்ட இடங்களில் செயல்படும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய நெடுஞ்சாலை எண் 67-இல் கோவை-மேட்டுப்பாளையம் சாலையில் கோவையிலிருந்து நரசிம்மநாயக்கன்பாளையம் வரையில் 15 கி.மீ. தூரம் நான்கு வழிச் சாலையாக மாற்றப்படுகிறது. இதற்கான பணிகள் ஆமை வேகத்தில் நடக்கின்றன. இச்சாலைப் பணி ஆரம்பித்து 2 ஆண்டுகள் ஆகியும் 25 சதவீதப் பணிகள்கூட முடியவில்லை. இதனால், இச்சாலையில் செல்வதற்கு மிகவும் காலதாமதம் ஆகிறது. கல்லூரி செல்பவர்கள், வேலைக்குச் செல்பவர்கள், மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். இது தவிர,

இந்தச் சாலை நாள் முழுவதும் புகை மண்டலமாகக் காட்சியளித்து சுற்றுச்சுழலுக்கும் மாசு ஏற்படுகிறது.

எனவே, இச்சாலைப் பணியைத் துரிதப்படுத்தி முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இச்சாலையின் மற்றொரு பகுதியாக உள்ள நரசிம்மநாயக்கன்பாளையம் முதல் மேட்டுப்பாளையம் வரையிலான மீதமுள்ள 25 கி.மீ. தூரத்தையும் நான்கு வழிச்சாலையாக மாற்றித் தருமாறு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் காரமடையில் இரயில்வே கடவு அமைந்துள்ளது. இந்த வழியாக தினமும் 10 முறைக்குமேல் இரயில்கள் கடந்து செல்வதால் இப்பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனால், நீலகிரி மாவட்டத்திற்குச் செல்லும் அனைத்து வாகனங்களும், இப்பகுதியில் வசிக்கும் மக்களும் பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காரமடை இரயில்வே கடவைக் கடக்க ஒரு மேம்பாலம் அமைத்துத் தருமாறு தங்களது பொற்பாதம் வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டுப்பாளையம் தொகுதிக்குள்ளேயே பவானி நதி நீர் ஓடினாலும் சில ஊராட்சிகள் கடும் குடிநீர்த் தட்டுப்பாட்டில் சிக்கி உள்ளன. குறிப்பாக, தேக்கப்பட்டி ஊராட்சி சுமார் 35,000 மக்கள் தொகை கொண்ட மிகப் பெரிய ஊராட்சி. இப்பகுதி மக்களுக்குத் தற்போது குறைந்தபட்ச அளவு தண்ணீர்கூட வழங்கப்படாத நிலை உள்ளது.

அதேபோல, சிக்காரம்பாளையம், பெள்ளாதி, ஜடையம்பாளையம், சிக்கதாசம்பாளையம், பள்ளேபாளையம், இரும்பறை, இலுப்பநத்தம், சின்னகள்ளிபட்டி, மூடுதுறை ஆகிய 9 ஊராட்சிகளிலும் கடும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மேலும், காரமடை பேரூராட்சி, வளர்ந்துவரும் மிகப் பெரிய பேரூராட்சி. 1983-ல் போடப்பட்ட குடிநீர்த் திட்டத்தினால் இன்றைக்குப் போதிய குடிநீர் வழங்க முடியவில்லை. எனவே, மக்களுக்குப் போதிய குடிநீர் வழங்க 1. தேக்கம்பட்டி 2-வது குடிநீர்த் திட்டம், 2. ஒன்பது கிராம பஞ்சாயத்துக்களுக்கான கூட்டுக்



குடிநீர்த் திட்டம், 3. காரமடை பேரூராட்சி 2 ஆம் குடிநீர்த் திட்டம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றித் தருமாறு தங்களின் பொற்பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டுப்பாளையம் நகரின் கழிவுநீர் அனைத்தும் பவானி ஆற்றில் கலப்பதால், ஆற்று நீர் மாசுபடுகிறது. எனவே, மேட்டுப்பாளையம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைத்துத் தருமாறு தங்களின் பொற்பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டுப்பாளையம் நகரில் உள்ள பவானி ஆற்றங்கரையில் அமைந்துள்ள மிகவும் பழைமை வாய்ந்த அருள்மிகு சுப்ரமணியர் சுவாமி திருக்கோயிலுக்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனத்திற்காக வந்து செல்கின்றனர். இந்த ஆலயத்தின் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், இந்த ஆலயத்திற்குத் திருப்பணிகள் செய்து தருமாறு தங்களின் பொற்பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டுப்பாளையம் தொகுதியில் அமைந்துள்ள வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் மிகவும் பிரசித்திபெற்ற கோயிலாகும். இங்கு தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். ஆகவே, இத்திருக்கோயிலில் இராஜகோபுரம் ஒன்று அமைத்துத் தருமாறு தங்களின் பொற்பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டுப்பாளையம் நகராட்சி, தற்சமயம் நகராட்சி வணிக வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் நகராட்சி அலுவலகக் கட்டடம் கட்ட போதிய இட வசதி உள்ளதால் புதிய நகராட்சி அலுவலகம் கட்டித் தருமாறு தங்களின் பொற்பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டுப்பாளையம் நகரில் உள்ள வணிக வரி அலுவலகம் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஆகிய இரண்டும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. ஆகவே, வணிக வரி மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஆகியவற்றிற்குக் கட்டடம் கட்டித் தருமாறு தங்களின் பொற்பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) முதலிலே மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மேற்குறிப்பிட்டவற்றை எல்லாம் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இறுதியாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெய்வப் புலவர் வள்ளுவர் கூறியதுபோல,

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்"

அதாவது, உயர்ந்த புகழைத் தர உலகத்திலே ஒப்பற்றப் பொருளாக அழியாமல் நிலைத்து நிற்பது வேறு ஒன்றும் இல்லை என்பதைப்போல எங்கள் அன்னையே, தங்கள் பெயரும், புகழும் நிலைத்து இருக்க வேண்டும் என்று கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாளும் மேலும் மேன்மை பெற தாங்கள் நீடூழி வாழ வேண்டும் என ஆண்டவனைப் பிரார்த்தித்து தங்களுடைய பொற்பாதங்களை வணங்கி விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகிறபோது, பதிவுத் துறையில் விலை மதிப்புள்ள சொத்துக்களின் மதிப்பினைக் குறைத்துப் பதிவு செய்கிறார்கள். அதனைப் பதிவுத் துறை உடனே ஆய்வு செய்ய வேண்டும் என்று பேசினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே தமிழகத்திலே இதுபோன்ற தவறுகள் எங்கெல்லாம் நடைபெற்றன என்பதை ஆய்வு செய்ய ஏற்கெனவே அறிவுரை வழங்கி இருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-05*

அதன் அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொண்டபொழுது, உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். சேலம் மாநகர் சூரமங்கலம் சார் பதிவகத்தில் 2010 ஆம் ஆண்டில் மைனாரிட்டி தி.மு.க. அரசின் முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தின் மகன் திரு. ஏ. ராஜேந்திரன், சேலம் திரு. எம். தங்கவேல், தகப்பனார் பெயர் மாணிக்கம் என்பவரிடமிருந்து வாங்கிய சொத்தினை 3510/2010 எண்ணாக



ஒரு கிரைய ஆவணத்தைப் பதிவு செய்து, சொத்தின் உண்மையான மதிப்பினைக் குறைத்து, அரசுக்குச் செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வைத் தொகை 12,00,740 ரூபாய் இழப்பினை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அதேபோன்று இன்னொரு ஆவணத்திலும் 3520/2010 தொடர்பாக அரசுக்குச், சொத்தின் உண்மையான மதிப்பினைக் குறைத்து, அரசுக்குச் செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை தொகை 16,09,976 ரூபாய் இழப்பினை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தச் சொத்துக்களின் உண்மையான சந்தை மதிப்பைக் கண்டறிந்து, மேற்படி குறைவு முத்திரைத் தீர்வையை வசூலிக்க தனித் துணை ஆட்சியர் அவர்களால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இந்த மாமன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கான ஆதாரத்தை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, நரிப்பள்ளி என்ற கிராமத்தில் அருண்குமார் என்ற பத்தாம் வகுப்பு படித்த மாணவன், கடந்த 12-8-2011 அன்று மாலை பள்ளி மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது, கூடைப் பந்து கம்பம் துருப்பிடித்து இருந்ததன் காரணமாக, உயிரிழந்த அந்த மாணவனின் குடும்பத்திற்கு, மாணவன் இறந்த 48 மணி நேரத்தில் ரூபாய் ஒரு இலட்சம் நிவாரணத் தொகையை அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சியில் 48 நாட்கள் ஆனாலும் இப்பேர்ப்பட்ட நிவாரணம் வழங்க முன்வராத பட்சத்தில், உண்மையிலே 48 மணி நேரத்தில் நிவாரணம் வழங்கியிருப்பதற்கு என் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல், வனம், முத்திரைத்தாள், வணிக வரி மற்றும் பதிவுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பினை நல்கியமைக்கு நெஞ்சார்ந்த நன்றியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்”

மணிபோல தெளிந்த நீரும், செழிப்பான நிலமும், ஓங்கி உயர்ந்த மலையும், அம்மலைகளில் உள்ள மரங்களினால் ஏற்படும் நிழலை, அணிகலனாகக் கொண்டது ஒரு சிறந்த நாடாக இருக்க முடியும் என்று கூறுகிறார் வள்ளுவர். தமிழகத்தில் தற்போது 17.59 விழுக்காடு மட்டுமே வனப் பகுதிகளாக உள்ளது. வனப் பரப்பு மற்றும் மரங்களின் பரப்புடன் இந்திய வன நில அளவீட்டு நிறுவனத்தின் கணக்கின்படி 21.76% வனப் பரப்பு என கணக்கிடப்பட்டுள்ளது. 33% வனத்தை உயர்த்த வேண்டுமென தேசிய வனக் கொள்கை நிர்ணயித்துள்ளது என்றாலும், அதனை நிறைவேற்றிட கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் திட்டமிட்டாலும், சரியாகத் தீர்மானிக்கப் படாததனால் வனத்தைப் பாதுகாக்கப் போகிறோம் என்றும் வனத்தை 33% உயர்த்தப் போகிறோம் என்றும் பல மாவட்டங்களில் இரண்டு, மூன்று தலைமுறைகளுக்கு மேலாக வீடு கட்டிக் குடியிருந்த வீடுகள் இடிக்கப்பட்டன. பாசனக் கிணறுகள் மூடப்பட்டன. 60, 70 ஆண்டுகளாக அனுபவ நிலங்களில், வனத் துறை அத்துமீறி செடிகள் நட்டது. இதுதான் அன்றைய வனத் துறையின் வனம் உருவாக்கிடும் தற்காலிகமானக் கொள்கையாக இருந்தது.

மலைப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு அடிப்படையான மின்சார வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி செய்து தர வேண்டியது ஓர் அரசின் கடமையாகும். அதற்காகத்தான் அரசும், நிருவாகமும், சட்டங்கள் அனைத்தையும் நடைமுறைப்படுத்துகிறது. துரதிருஷ்டமாக இன்றைக்கும் தமிழகத்தில் 973 கிராமங்களில் மின்சார வசதியில்லாமலும், 1,012 கிராமங்களில் அடிப்படையான சாலை வசதி இல்லாமலும் மலைவாழ் மக்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள் தவறான புள்ளிவிவரத்தை இங்கே கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்தில் நிச்சயமாக, மலைப் பகுதி



கிராமங்களில் மின்சார வசதி பெறாத கிராமங்கள் மிகக் குறைந்த அளவிலே இருக்கின்றன. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், மின்சாரப் பாதை அமைக்க முடியாத கிராமங்களுக்கு சூரிய ஒளியுடன்கூடிய மின் சக்திமூலமாக மின்சார வசதி செய்துதர வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில், அந்தப் பணிகள் இப்போது அந்தக் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தனை கிராமங்களுக்கும் விரைவில் மின்சார வசதி பெற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 16 மாவட்டங்களில் 19 மலைக் கிராமங்கள் உள்ளன. 19 மலைக் கிராமங்களில் மின்சார வசதி இல்லாமல் இருக்கக்கூடியவற்றைதான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதேபோல் மலைப் பகுதியில் மனிதாபிமான அடிப்படையில்கூட மின்சாரம், சாலை வசதி பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருப்பதை, இந்த அரசாவது இனிமேல் அதைச் செய்துதர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

சேலம், விழுப்புரம், கல்வராயன் மலைகளில் உழுது பயிரிடப்பட்டு வந்த ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் செடிகள் நடுகின்றபோது, மலையே திரண்டு வந்ததுபோல் மலைவாழ் மக்கள் திரண்டு வனத் துறையினுடைய துப்பாக்கி எங்கள்மீது தாக்கினாலும், இந்தப் பூமியை விட்டு அகல மாட்டோம் என்று பல போராட்டங்களை நடத்தி நிலங்களை மீட்டது கடந்த கால ஆட்சியினுடைய வரலாறு.

கடந்த 3 மாதங்களுக்கு முன்பாக திருப்பத்தூர் ஜவ்வாது மலையில் புதூர் நாடு, புங்கம்பட்டு நாடு ஆகிய இடங்களில் 60 ஆண்டுக் காலமாக உள்ள அனுபவ நிலங்களில் வனத் துறையினர் செடிகளை நடுகின்றார்கள். மரியாதைக்குரிய திருப்பத்தூர் டி.எஃப்.ஓ. திருமதி பத்மாவதியை நானே நேரில் சென்று பார்த்துப் பேசினேன்.

கிளானூர்-பெரும்பள்ளி, நடுக்குப்பம், வழுதிளம்பட்டு, கொத்தனூர் போன்ற பல மலைக் கிராமங்களில் இன்றைக்கும் வனத் துறை செடிகளை நடுவது, 60, 70 ஆண்டுக் காலமாக உள்ளவர்களை வெளியேற்றுவதற்கான முயற்சிகள் ஒரு வார காலத்திற்கு முன்பாகக்கூட நடைபெற்றது. ஆடு மேய்த்தால் 4 ஆயிரம் ரூபாய் தண்டம், தலை சும்மாட்டில் காய்ந்த விறகு கொண்டு வந்தால் ரூ.600 அபராதம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் கோட்டத்தில் கிளானூர் கிராமம், மாம்பாக்கத்தில் காப்புக் காடு உள்ளது. இது 1886 ஆம் வருட காப்புக் காடாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இந்தக் காப்புக் காட்டிலிருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. கிளானூர் கிராமத்தில் உள்ள பட்டா நிலங்களிலிருந்து எவரும் வெளியேற்றப்பட்டு செடிகள் நடவு செய்யப்படவில்லை என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** விளக்கம் அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஆடு மேய்த்தால் 4 ஆயிரம் ரூபாய் தண்டம் வசூல் செய்யப்படுகிறது. தலை சும்மாட்டில் காய்ந்த விறகு கொண்டு சென்றால் ரூ.600 அபராதம் விதிக்கப்படுகிறது. ஏன் மலைவாழ் மக்களுடைய மாடுகள் வனத் துறை எல்லையிலே தண்ணீர் குடித்தால்கூட, ரூ.3,000 அபராதம் இதே திருப்பத்தூரிலே வசூல் செய்யப்படுகிறது. இதுகுறித்து தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, ஆதிவாசி பழங்குடியின மக்கள் வாழும் நிலங்களிலிருந்து வெளியேற்றுவதற்கு அவர்களுடைய ஜீவாதார உரிமைகளை, ஆடு, மாடு வளர்ப்பு இதையெல்லாம் பறிப்பதற்கு வனத் துறை நடவடிக்கை எடுப்பதைத் தடுத்து, இதுபோன்று வனத் துறை சம்பந்தமான பல்வேறுபட்ட விஷயங்களை இந்த அரசு பரிசீலனை செய்ய வேண்டுகிறேன்.



இன்றும் தமிழகத்தில் தேனி, வருசநாட்டுமலை போன்ற பல பகுதிகளில் மலைமாடுகள் மேய்த்திட வனத் துறையினர் அனுமதி மறுக்கின்றனர். மலைப் பகுதி மக்களின் வாழ்வாதாரமான கால்நடைக்கு அனுமதி அட்டை வழங்கியாவது அதைப் பாதுகாத்திட வேண்டுகிறேன்.

வன உரிமைப் பாதுகாப்புச் சட்டம் இந்தியாவில் பல மாநிலங்களில் அமலாக்கப்பட்டு, நிலப் பட்டா, சிறுவன மகசூல் உரிமை, பாதை வசதி, சாலை வசதி, பள்ளிகள், மின்சாரம் இப்படி அடிப்படையான ஜீவாதார கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் இச்சட்டத்தினை உடனடியாக அமலுக்குக் கொண்டு வருவதன்மூலமாக பழங்குடி மக்களது நில உரிமைகளை இவ்வரசு நிறைவேற்றிட முன்வர வேண்டுகிறேன்.

தமிழகத்தில் கொல்லிமலை, குத்தியாலத்தூர் மலை, திருமூர்த்தி மலை என்று பல்வேறு மலைகளில் ஃபாரஸ்ட் செட்டில்மென்ட் ஆக்ட் என்ற இச்சட்டத்தின்மூலம் பல கிராமங்கள் வருவாய் கிராமங்களாக மாற்றப்படாததனால் இன்றைக்கும் உடுமலை தாலுகா, மாவடிப்பட்டி, குழிப்பட்டி போன்ற பகுதிகளில் 20, 25 ஆண்டுக் காலமாக வீடுகள் கட்ட வனத் துறையினர் அனுமதிப்பதில்லையாம். அவர்களுடைய சொந்த நிலத்தில்கூட சொந்த வீடு கட்ட முடியாத அவல நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது. வன கிராமங்களை, வருவாய் கிராமங்களாக மாற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு 100 நாள் வேலைத் திட்டம்கூட வழங்கப்படுவதில்லை.

வருடா வருடம், வன விலங்குகளால் தமிழகம் முழுவதும் சுமார் 1,000 கோடி மதிப்பில் விவசாய வேளாண் பொருட்கள் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக, காட்டுப் பன்றிகள், யானைகள் போன்ற விலங்குகளால் பயிர்ச் சேதமும், உயிர்ச் சேதமும் ஏற்பட்டு வருகிறது. காட்டுப் பன்றியை பாதுகாக்கப்பட்ட வன விலங்கு பட்டியலிலிருந்து நீக்கிட தமிழக அரசு மத்திய அரசுக்குக் கோரிக்கை வைத்திட வேண்டுகிறேன். பயிர்ச் சேதங்களை ஏற்படுத்தும் காட்டுப் பன்றியை விவசாயிகள் சுடுவதற்கு அனுமதி வழங்கிட வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டம் நிறைவேறாததனால் எனது தொகுதிக்குட்பட்ட சித்தேரி மலை,

ஜவ்வாது மலை, ஜமுனாமரத்தூர் மலை, கொல்லி மலை, வெள்ளிமலை இன்னும் பல்வேறுபட்ட மலைப் பகுதிகளினுடைய மக்களுடைய வாழ்வாதாரங்கள் இன்றைக்கும் அமலாக்கப்படுவதற்குத் தடையாக உள்ளதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் யானைகள் வழித்தடத்திற்காக கடந்த ஆட்சிக் காலத்தில் அரசாணை எண் 125 வெளியிடப்பட்டது. மக்கள் வெளியேற்றம் அவ்வரசாணையில் இல்லை. யானைகள் வழித்தடத்திற்காக 583 ஏக்கர் நிலம் எடுப்பதாக அறிவிப்பு செய்து சிறிது, சிறிதாக கடந்த ஆட்சியில் 7,000 ஏக்கர் வரை யானைகள் வழித்தடத்திற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டது; வனத் துறை இதில் ஈடுபட்டு வருகிறது. இதனால் கால் ஏக்கர், அரை ஏக்கர், ஒரு ஏக்கர் வைத்திருக்கும் சிறு குறு விவசாயிகளது நிலங்களும், வாழ்வுரிமையும் பறிக்கப்படுகின்றன. அப்பகுதி மலைவாழ் மக்கள் விவசாயிகள், கிராமங்கள் பாதிக்காத வகையில் யானைகள் வழித்தடம் அமைத்துக்கொள்வதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கோ, மலைவாழ் மக்களுக்கோ எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் அவரவர் பட்டா நிலங்களில் சில்வர் ஓக் போன்ற மரங்கள் வளர்த்துக்கொள்வதற்கும், அதன்மூலம் வருவாய் ஈட்டிக் கொள்வதற்கும் முழு அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால், நம் நாட்டில் மட்டும், குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் இவ்வகையான மரத்தினை சொந்த நிலங்களிலே, சொந்த பட்டா நிலங்களிலே பயிர் செய்தவற்றை வெட்டிக் கொள்வதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது, கடந்த 2 மாத காலமாக..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே யானைகள் வழித் தடத்திற்கு, வழக்கறிஞர் திரு. ராஜேந்திரன் சென்னை உயர் நீதிமன்றத்திலே தொடர்ந்த வழக்கின்மீது நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட ஆணையின் அடிப்படையில் அரசாணை எண் 125, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 31-8-2010இன்படி, சீகூர் பீடபூமி யானை வழித் தடமாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இவ்வழித் தடத்தில் மொத்தம் 1,226.2 ஹெக்டேர் தனியார் நிலங்களும், 1,730.5 ஹெக்டேர் அரசு



நிலங்களும் அடங்கும். 7-4-2011-இல் வழங்கப்பட்ட உயர் நீதிமன்ற ஆணையினை எதிர்த்து உச்ச நீதிமன்ற ஆணையின்மீது 18 மேல்முறையீடு வழக்குகள் உச்ச நீதிமன்றத்திலே பதிவு செய்யப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்றத்தின் ஆணை நாள் 15-7-2011 வரிசை எண் 20154/2011 இதுசம்பந்தமாக 11-8-2011 அன்று முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அலுவலகம் 4 வாரத்திற்குள் எதிர்கூறு ஆவணம் பதிவு செய்ய ஆணையிட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தில் அரசின் ஒப்புதல் பெற்று விரைவில் எதிர்கூறு ஆவணம் பதிவு செய்யப்படும். இவ்வழித்தடத்திலுள்ள பழங்குடியினர் மாற்று இடத்தில் குடியமர்த்தப்படவும் அல்லது அவர்களுக்குரிய நிவாரணத் தொகை வழங்கிடவும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக்கொண்டு சென்று அரசு பரிசீலிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைகள் வழித்தடத்தை நாங்கள் ஒருபோதும் மறுக்கவில்லை. வரவேற்கின்றோம். ஆனால், அதேநேரத்தில், சிறிய மலைவாழ் மக்கள் வாழக்கூடிய கிராமங்களில் அரை ஏக்கர், 1 ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டிருக்கிற சிறு, குறு விவசாயிகள் பாதிக்கப்படுவதற்கு மாற்றாக வேறு வழிவகையிலே அந்தத் தடத்தை அமைத்துக்கொள்ளலாம் என்று எங்களுடைய கருத்தைத் தெரிவிக்கிறேன். நீலகிரி மாவட்டங்களில் இவ்வகையினை அதாவது சில்வர் ஓக் போன்ற மரங்களை சொந்த பட்டா நிலங்களில் அனுமதி பெற்று வெட்டிக்கொள்ளலாம் என்பது கடந்த இரண்டு மாத காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை மாண்புமிகு முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சுமார் 65,00 ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தனியார் நிலங்களிலிருந்து அதிக அளவில் மரங்கள்

அனுமதியுடனும், திருட்டுத்தனமாகவும் கடத்தப்பட்டு மலைகள் மொட்டையடிக்கப்பட்டன. இதனால் பெருமளவில் காடுகள் அழிக்கப்படுவதுடன், மலைகளிலே மண் சரிவும் மற்றும் மண் அரிப்பும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையினை மாற்ற மலைகளிலிருந்து மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவது குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையிலே தீர்வு காணப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகா, கேரளா போன்ற அண்டை மாநிலங்களிலே இப்பேர்ப்பட்ட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல, தமிழகத்திலும் குறிப்பாக, கோத்தகிரியை உள்ளடக்கக்கூடிய 65,000 சிறு, குறு விவசாயிகளுடைய நிலங்களில் அவர்களது சில்வர் ஓக் மரங்களை வெட்டிக்கொள்ள பிற மாநிலங்களில் வழங்குவதைப்போல அனுமதி வழங்கிட வேண்டுகிறேன். அதேபோல், தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், 5 சென்ட், 10 சென்ட், அரை ஏக்கர், ஒரு ஏக்கர் என்று விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற நிலைமையை இவ்வரசு பரிசீலித்திட வேண்டும். 2 ஹெக்டேருக்கும் கீழே உள்ள விவசாயிகளைப் பாதுகாத்திட வேண்டுகிறேன். நீலகிரி மாவட்டத்தில் மட்டும் சுமார் 46,600 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படும் என்று மாவட்ட நிருவாகம் தீர்மானித்துள்ளதால், சரிபாதி அந்த மாவட்டத்தினுடைய விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள்.

கன்னியாகுமரியில் இரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய ஒப்பந்தம் இம்மாதம் 31ஆம் தேதியுடன் முடிவடைகிறது. இவ்வரசு முழுமையான புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்திட வேண்டுகிறேன். வனத் துறையில் 7 ஆண்டுக் காலம், 10 ஆண்டுக் காலம், 15 ஆண்டுக் காலம் வரை ஓட்டுநராக தினக் கூலிகளாக பணிபுரிந்து வரும் 40 ஓட்டுநர்கள் கடந்த 10 ஆண்டுக் காலம், 20 ஆண்டுக் காலம் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை. அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுகிறேன். காவல் துறை ஓட்டுநர்களுக்கு இணையாக வனத் துறையின் ஓட்டுநர்களுக்கும் பதவி உயர்வு வழங்கிட வேண்டும். அரசாணை எண் 95-இன்மூலம்





சிறப்புத் தோட்டக் காவலர்கள் 2,200 நிரந்தர ஊழியர்களை வனக் காவலர்களுக்கு இணையான ஊதியம் வழங்கிட வேண்டுகிறேன். உளுந்தூர்பேட்டை வனச் சரகத்தில் 326 விவசாயிகளுக்கு நிவாரணம் இன்னும் வழங்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மிகவும் தோல்வியடைந்துள்ள துறை என்று ஒன்றைச் சொன்னால், கடந்த ஆட்சியில் சுற்றுச்சூழல் துறையென்று சொல்லலாம். மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் சரியான, உறுதியான நடவடிக்கைகள் எடுக்காததினால் பல உயிர்களையும் பலி வாங்கியுள்ளதை இங்கே நினைவுபடுத்துகிறேன். வாணியம்பாடி தோல் கழிவு பட்டறைகளில் கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக, ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாக 5 மனித உயிர்கள் மாண்டுபோன சம்பவம். சேலத்தில் கண்ணாடி தயாரிக்கும் தொழிற்சாலையின் துகள்களை நுகர்ந்ததாக கீளானூரைச் சேர்ந்த பல்வேறுபட்ட விவசாயிகள் ராமசாமி என்பவர்கூட சமீபத்திலே இறந்து போயிருக்கிறார். இப்படி, இத்துறையில் தமிழக சுற்றுச்சூழல் மட்டும் பாதிக்கப்படவில்லை, பல உயிர்களும் இதனால் பறிபோயுள்ளன என்பதை வேதனையுடன் சுட்டிக்காட்டுகிறேன்.

சுற்றுச்சூழல் மனிதர்களை பாதிக்கின்ற விஷயத்தில் அரசே அத்தகைய பாதிப்புக்கான அம்சங்களைக் கையாள்கின்றதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக, தூத்துக்குடி மாவட்டத்தில் ஏற்கெனவே பல அனல் மின் நிலையங்களில் வெளியேறும் சல்பர்-டை-ஆக்சைடு காற்றில் 30 புள்ளிகள் கலந்துள்ளதாக மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியமே தெரிவித்துள்ளது. இதுவே அபாயகரமான நிலைமையாகும். இந்நிலையில், மேலும் பல புதிய அனல் மின் நிலையங்களைத் தூத்துக்குடியில் துவக்கினால் 60 புள்ளிகள் என்ற நிலைக்கு உயர்ந்தால் பொதுமக்களுக்குக் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்துவதோடு, அப்பகுதியில் உள்ள உப்பளங்களிலும் சல்பர்-டை-ஆக்சைடு கலந்து தொழிலில் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, 20 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு அப்பால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள். உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன். கொள்கை விளக்கக் குறிப்பில்கூட, பிளாஸ்டிக் மேலாண்மைத் திட்டம் பற்றி குறிப்பிட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

சிமென்ட் உற்பத்தி ஆலையில் எரிபொருளுக்கு பயன்படுத்துவதுபோல் பிற மேலாண்மைத் திட்டத்தின்மூலம் மக்களை பாதிக்கின்ற பிளாஸ்டிக் இதர பொருட்களை, கிராம ஊராட்சிகளுக்கும் முழுமையாக அமலாக்கிட வேண்டுகிறோம்.

பெரும்பாலான தொழிற்சாலைகளில் கழிவை சுத்தப்படுத்துகின்ற ஏற்பாடுகள் சீராக இல்லை. அத்தகைய ஏற்பாட்டுடன்தான் கம்பெனிகள் இருக்க வேண்டும். சுத்திகரிப்பு மேலாண்மை இல்லாத எந்த மருத்துவமனையாக இருந்தாலும், இவ்வரசு கறாராக இதில் தலையிட்டு மேலாண்மையை அமல்படுத்திட வேண்டுகிறோம். திருப்பூர், ஈரோடு, பவானி, பள்ளிப்பாளையம் போன்ற பகுதிகளில் சாயப்பட்டறைக் கழிவுகளாலும், இதர கழிவுகளாலும் நிலத்தடி நீர் முதல் சுற்றுச்சூழல் வரை மிகுந்த பாதிப்பை ஏற்படுத்திவிடுகிறது. இதற்கு ஒரு தீர்வாக இயற்கை முறையில் ஆவியாக்கும் ஒரு தொழில்நுட்ப முறை, இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை மற்றும் இந்திய கெமிக்கல் கவுன்சில் ஆராய்ச்சி மையங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் Zero Liquid Discharge என்ற கோட்பாடு சாத்தியமானது. எனவே, திருப்பூர் பகுதியைக் காப்பாற்றுவதற்கு அப்பகுதியில் இத்தகைய திட்டம் அமலாக்கப்பட்டு, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முன்வர வேண்டுகிறேன். மதுரை நெடுங்குளம் ...

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள். (குறுக்கீடு) திரு. டில்லி பாபு, நீங்கள் நிறைய நேரம் உரையாற்றிவிட்டீர்கள்.

**திரு. சு. மாதேஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழகச் சட்டமன்றப் பேரவையில் நூறு நாட்களில், நூறு ஆண்டுக் கால சாதனையை நிகழ்த்திக் காட்டிய அற்புத சக்தியே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மாவே! மைனாரிட்டி தி.மு.க. குடும்ப ஆட்சி, ஆதிக்க சுனாமிப் பேரலைகளை அடக்கி, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றிய அருந்தவமே! (மேசையைத் தட்டும் ஒலி) ஆற்றலின் பிறப்பிடமே! தன்னம்பிக்கையின் சிகரமே! தமிழகத்தின் விடிவெள்ளியே! தரணி போற்றும் தங்கத் தாரகையே! தன்மானச் சிங்கமே! தாயுள்ளமே! உங்களை வணங்கி என் முதல் பேச்சைத் தொடங்குகிறேன், தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)



அம்மா, உங்களுக்கு எல்லாம் தெரியும். எங்களுக்கு உங்களை மட்டுமே தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) வயல்வெளிகளில் வாடி, வதங்கி விவசாயம் ஒன்றைத் தவிர வேறெதுவும் தெரியாத பாமரக் குடும்பத்தைச் சேர்ந்த தொகுதியின் ஓரத்தில் மட்டுமல்ல, வாழ்க்கையின் ஓரத்தில் வாழ்ந்து வந்த என்னை அடையாளம் கண்டு, ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் வேட்பாளராக நிற்க வைத்து, என்னை சட்டமன்ற உறுப்பினராக்கிய எங்களது குல தெய்வமே! மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாத மலர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன், தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

அறிஞர்களும், சாதனையாளர்களும், தன்னலம் கருதா தியாகிகளும் பணிபுரிந்த இந்த மாமன்றத்தில் இன்றையதினம் வனம், சுற்றுச்சூழல் மற்றும் வணிக வரித் துறை மானியக் கோரிக்கையின்மீது நடைபெறும் விவாதத்தில் கலந்துகொண்டு எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு மீண்டும் ஒருமுறை உங்கள் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன், தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

அதேநேரத்தில், என்னை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வாக்களித்த ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், தாயே!

வனவிலங்குகள் குடிநீருக்காக வயல்வெளிப் பக்கம் வந்து பயிர்களை நாசப்படுத்துவதைத் தடுக்கும் விதமாக, குடிநீருக்காக வெளியே வரும் வனவிலங்குகள் மனிதர்களைக் கொல்வதைத் தடுக்கும் வகையில் வனவிலங்குகளுக்காகக் குடிநீர்த் தொட்டிகளை வனப் பகுதியில் அம்மா ஆட்சிக் காலத்தில் அமைத்துக் கொடுத்த கருணை வடிவே! சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கும் அக்கறையுடன் திருப்பூர் சாயப்பட்டறைகளுக்குச் சுத்திகரிப்பு நிலையம் அமைத்திட 200 கோடி ரூபாய் வட்டியில்லாக் கடன் வழங்கிய அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) வறட்சி நீங்க, மழை வளம் பெற, உலகிலேயே முதல்முதலாக 'மழைநீர்ச் சேகரிப்புத் திட்டம்' கொண்டுவந்து மறுமலர்ச்சி ஏற்படுத்திய மாதரசியே! (மேசையைத் தட்டும் ஒலி) வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக புதுப்பித்தல் கட்டணம் ரூ.100/- செலுத்த வேண்டும் என்பதற்குப் பதிலாக, ஆயுட்கால உறுப்பினராக

ரூ.500/- செலுத்தினால் போதும் என்று ஆணையிட்ட எங்கள் அருட்கொடையே! (மேசையைத் தட்டும் ஒலி) ஆத்தூர் நகரமும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் நீர் ஆதாரம் ஏதும் இல்லாத வறட்சி மிகுந்த பகுதிகளாகும். இந்த நகர மக்களின் துயர் துடைக்கும் வகையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில் 1995 ஆம் ஆண்டு தங்களது பொற்கால ஆட்சியில் தங்களின் பொற்கரங்களால் மேட்டூர்-ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவந்து, ஆத்தூர் நகர மக்களின் தாகத்தைத் தீர்த்து வைத்தீர்கள். அதற்காக எனது தொகுதி மக்களின் சார்பில் மீண்டும் உங்கள் பொற்பாதம் தொட்டு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்தால் ஆத்தூர் நகர மக்கள் 3 நாட்களுக்கு ஒருமுறை குடிநீரைப் பெற்று வந்தார்கள், தாயே! 2001 முதல் 2006 வரை நடந்த மாண்புமிகு அம்மாவின் பொற்கால ஆட்சியில் இதே நிலை தொடர்ந்தது. அப்போது நிலவிய கடுமையான வறட்சிக் காலத்திலும்கூட ஆத்தூர் நகர மக்களுக்கு 3 நாட்களுக்கு ஒருமுறை காவிரி தண்ணீர் வழங்கப்பட்டது, தாயே! ஆனால் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இந்த வரப்பிரசாதத் திட்டம், குரங்கு கையில் கிடைத்த பூமாலையைப்போல அலங்கோலப்படுத்தப்பட்டது, தாயே! அம்மா ஆட்சியில் 3 நாட்களுக்கொருமுறை வழங்கப்பட்ட குடிதண்ணீர், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 20 நாட்களுக்கு ஒருமுறை வழங்கப்பட்டு, மிக மோசமான நிலை உருவாக்கப்பட்டது, தாயே!

அம்மா அவர்களின் பாதம் தொட்டு பணிந்து நான் வேண்டுவது, கடந்த தங்களது பொற்கால ஆட்சியில் வழங்கியதுபோல, ஆத்தூர் நகரப் பகுதிக்கு 3 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கிட ஆவன செய்யுமாறு புரட்சித் தலைவி அம்மா அவர்களை, பாதம் தொட்டு மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறேன், தாயே!

அதேபோல ஆத்தூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட அலுவலகம் ஆகும். இன்றைய வளர்ச்சி அடைந்த நிலையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.





பிற்பகல் 12-25

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல, கடந்த ஆட்சிக் காலத்தில், குடிதண்ணீர் மட்டுமல்ல. அவர்கள் எந்தெந்தத் துறைகளில் கைவைத்தார்களோ, அவர்கள் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய துறைகளை மட்டும் கவனித்துவிட்டு, மக்கள் நலனில் அக்கறை உள்ள துறைகளை விட்டுவிட்டார்கள். அதில் முக்கியமான துறை குடிதண்ணீர் துறை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு குடிமகனுக்கும் போதுமான குடிதண்ணீரை நிச்சயமாகத் தருவேன் என்று உறுதியளித்திருக்கிறார்கள். அதனடிப்படையிலே, கடந்த 1995 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணைக்கொடையால் கொடுத்த அந்தத் திட்டத்தை, தினமும் தண்ணீர் கொடுக்கின்ற நிலை ஏற்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன்.

**திரு. சு. மாதேஸ்வரன்:** மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி. ஆத்தூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட அலுவலகமாகும். இன்றைய வளர்ச்சிக்கு அந்தப் பழைமையான கட்டடம் போதுமானதாகவும், பாதுகாப்பானதாகவும் இல்லை. எனவே, இந்தப் பழைய பாதுகாப்பற்ற கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு, ஆத்தூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் அமைத்துத் தர ஆவன செய்ய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம்தொட்டு பணிந்து வேண்டுகிறேன்.

கல்வி வளர்ச்சியிலும், மாணவ மாணவிகளின் எதிர்காலத்தின்மீதும், அதிக அக்கறை கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நிதியாண்டில் 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தந்துள்ளீர்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் அதேவேளையில், ஆத்தூர் முல்லைபாடி நகராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித் தர ஆணை

வழங்கிட வேண்டுமென உங்கள் பொற்பாதம் தொட்டு வணங்கி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன் தாயே.

"தாயே உங்களுக்கு எல்லாம் தெரியும், எங்களுக்கு உங்களை மட்டும்தான் தெரியும்", என முன்பே குறிப்பிட்டேன், காரணம், தாயே நான் கேட்காமலேயே எனது தொகுதிக்கு ஒழுங்குமுறை விற்பனைக்கூடமும், எனது தொகுதியில் உள்ள ஆத்தூர் நகரில் உள்ள மயானத்தில் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் எரிவாயு தகனமேடை அமைத்திடவும் ஆணை வழங்கிய எங்கள் அம்மாவே, இத்திட்டத்தை எனது தொகுதிக்கு வழங்கியதற்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியை எனது தொகுதி மக்கள் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன் தாயே. *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கல்லாநத்தம் முட்டல் ஏரியானது, பெரிய கல்ராயன்மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. அதனால் மழைக் காலத்தில் நீர்ப்பிடிப்பு இருக்கும். ஆனால், இந்த ஏரியானது சுமார் 50 ஆண்டுக் காலமாக தூர் வாரப்படாமல் நீரின் கொள்ளளவு மிகவும் குறைவாக உள்ளதால், ஏரி வறண்டு விடும் நிலை உள்ளது. ஏரி 50 ஆண்டுக் காலமாக தூர் வாரப்படாமல் இருப்பதற்கு வனத் துறையின் அனுமதி மறுக்கப்படுவதே காரணம் எனக் கூறப்படுகிறது. இந்த ஏரி தூர் வாரப்பட்டால் இப்பகுதி விவசாயம் மட்டும் அல்லாமல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏரியானது காப்புக்காட்டின் எல்லைக்குள் அமைந்துள்ளது. இந்த ஏரியை வனத் துறையின்மூலம் தூர் வார மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன்.

**திரு. சு. மாதேஸ்வரன்:** மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில், சுமார் 15-க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. ஆனால், அரசுக் கலைக் கல்லூரியோ, அரசு பாலிடெக்னிக் கல்லூரியோ ஏதும் இங்கு இல்லை. எனவே, ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள ஏழை மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில், ஓர் அரசு பாலிடெக்னிக் கல்லூரியை எனது தொகுதியில் அமைத்துத் தர மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரியகல்ராயன்மலை, மேல்நாடு, கீழ்நாடு மற்றும் பைத்தூர் ஊராட்சிகளில் வாணாவரம், தவளப்பட்டி போன்ற 60 மலைக் கிராமங்கள் உள்ளன. இந்த 60 மலைக் கிராமங்களில் உள்ள மலைவாழ் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் மலைவாழ் மாணவ, மாணவிகளுக்காக "மாணவர் விடுதி" ஒன்றை ஆத்தூரில் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

அரசுக்குச் சொந்தமான அரசு விதைப் பண்ணை நிலம் சுமார் 250 ஏக்கர் எவ்விதப் பயன்பாடும் இல்லாமல் உள்ளது. ஆத்தூரைச் சுற்றி உள்ள 4 மாவட்டங்களில் அரசு விவசாயக் கல்லூரியோ, அரசுத் தோட்டக்கலைக் கல்லூரியோ ஏதும் இல்லை. ஆத்தூரில் உள்ள அரசு நிலத்தில் அரசு விவசாயக் கல்லூரி அமைத்துத் தந்து, சேலம் மாவட்டத்தில் விவசாயக் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்படுத்தித்தர மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு பணிந்து வேண்டுகிறேன். கோமாதாவைக் கொடுத்த எங்கள் குலமாதாவை வணங்கி அமர்கின்றேன் தாயே, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம்.

***திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே இடம்பெற்றுப் பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், எனது கட்சியினுடைய தலைவர் தோழர் தா. பாண்டியன் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும், வாக்களித்த எனது தொகுதி மக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த

நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பூமி சூடாவதைத் தடுப்பதுபற்றி உலகமே விவாதித்துக்கொண்டிருக்கும் நேரம் இது. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் இதன் அவசியத்தை உணர்ந்து இங்கே முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை முழுமையாக வரவேற்கின்றேன்.

*பிற்பகல் 12-30*

மழைநீர் சேமிப்பு, பசுமை வீடு, பிளாஸ்டிக் ஒழிப்பு ஆகியவற்றோடு தேசிய பசுமைப் படையின் நடவடிக்கைகளும் இணையும்போது தமிழகம் நிச்சயம் 'பசுமைத் தமிழகமாக' மாறும் என்பதில் ஐயம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பெயரைக் கேட்டாலே மக்கள் விரோதிகள் அஞ்சி ஓடுவதைப்போல (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது மண்ணின் விரோதியான பார்த்தீனியமும் ஓடத்தொடங்கி விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இதைப் போலவே, மண்ணின் மற்றொரு விரோதியான 'வேலிகாத்தான்' முள்செடியையும் விரட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) வனத்தை அழித்துக்கொண்டிருக்கின்ற 'உண்ணிச்செடி' என்று சொல்லப்படும் 'லண்டானாவையும்' அகற்ற மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஒரு பேரியக்கத்தை அறிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதிகளிலே பரவலாக ஆக்கிரமிப்புச் செய்துள்ள களைச் செடிகளில் குறிப்பாக லண்டானா, வேலிக்காத்தான், யூடோரியம் போன்றவற்றை முழுவதுமாக அகற்றி, அந்தப் பகுதிகளிலே உபயோகமான மரக் கன்றுகளை நட்டு வனத்தின் தரத்தினை உயர்த்த மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளார்கள். அந்த வகையிலே, இந்த ஆண்டு 2011-2012 ஆம் நிதியாண்டில் இக்களைச் செடிகளை 600 ஹெக்டேர் பரப்பளவில் அகற்றுவதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** அம்மாவுக்கும், அமைச்சருக்கும் நன்றி. 'லண்டானாவைப்' பயன்படுத்தி பர்னீச்சர்கள் தயாரிப்பதன்மூலம் மலைவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்பையும் அளிக்க முடியும். தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பவானி ஆற்றையும் கொண்டுவந்து மேட்டுப்பாளையம், சத்தியமங்கலம், பவானி நகராட்சிகளின் கழிவுகள் பவானி ஆற்றை மாசுபடுத்துவதைத் தடுக்க வேண்டுகிறேன். காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வனத்தில் மரக் கன்றுகளை நடும்போது உரிய பருவகாலத்தில் நடுவதை உத்தரவாதப்படுத்தவேண்டும்.

திருக்கோயில்களிலும், சுற்றுலாத் தலங்களிலும் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் திட்டம் மிகவும் வரவேற்கக்கூடிய ஒன்று. ஒரு புனிதத்தலம், சுற்றுலாத்தலம் என்ற வரையறையில்லாமல் அனைத்து இடங்களிலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுகிறேன். பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகளை அமைக்கும் திட்டம் மிகவும் வரவேற்கக்கூடிய ஒன்று. திருப்பூர் துயரத்தைப்போக்க நடவடிக்கை மேற்கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் பவானியிலும், ஈரோட்டிலும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்து உதவ வேண்டுகிறேன்.

வனத்திலிருந்து பொருளாதாரப் பலன்களைப் பெறுவது என்பது இரண்டாம்பட்சம்தான் என வனக் கொள்கையில் குறிப்பிட்டுள்ளதை வரவேற்கின்றேன். வனமே 'ஒரு தண்ணீர் உற்பத்தித் தொழிற்சாலை'தான். வன விலங்குகளுக்கு உணவாகவும், தண்ணீரைச் சேமித்துவைக்கும் கலன்களாகவும், விளங்குகின்ற மூங்கில்களையும், புற்களையும் காகித ஆலைகளுக்குப் பல காலம் வெட்டி அனுப்பியதன் விளைவைத்தான் நாம் இப்போது அனுபவிக்கின்றோம். 1970 ஆம் ஆண்டுகளில் ஒரு டன் மூங்கில் வெறும் 11 ரூபாய்க்கும், ஒரு டன் 'லெமன்கிராஸ்' வகைப் புல் வெறும் 6 ரூபாய்க்கும் காகித ஆலைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2006 ஆம் ஆண்டு மத்திய அரசு கொண்டுவந்த வன உரிமைச் சட்டம் சிறு வன விளைபொருட்களைப் பழங்குடி மக்களுக்கு உரிமையாக்கியதாகச் சொல்கிறது. ஆனால், இச்சட்டத்திற்கு முன்பாகவே 2003 ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு தமிழக

முதல்வர் அம்மா அவர்கள் சிறு வன விளைப்பொருட்களைப் பழங்குடி மக்களுக்கு விலையில்லாமல் வழங்கியுள்ளார்கள் என்பதை இங்கே பதிவுசெய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக 2003 ஆம் ஆண்டு வெளியிட்ட அரசு ஆணைகள் 78 மற்றும் 79 ஆகியவற்றைத் தமிழகம் முழுவதும் அமல்படுத்த வேண்டும். சில இடங்களில் மகளிர் குழுக்களை பினாமியாகக் கொண்டு கான்ட்ராக்ட்காரர்களே சிறு வன விளைபொருட்களை அபகரிப்பதைத் தடுக்கவேண்டும். சிறு வன விளை பொருட்களை மதிப்புக் கூட்டிய பொருளாக மாற்றி பழங்குடி மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் சிறப்பு நடவடிக்கை தேவை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** கடந்த மைனாரிட்டி தி.மு.க ஆட்சிக் காலத்திலே வனக் குழுக்களை, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் தங்களுடைய கட்சியினர் தலைவராக வருவதற்கு பல்வேறு குறுகிய நடவடிக்கைகளை எடுத்து பயன்படுத்தினார்கள். அதையெல்லாம் களைந்து நல்ல திறமையான வனக் குழுக்களை மாண்புமிகு அம்மாவுடைய அரசு தேர்வு செய்து அதனுடைய பலனை அவர்கள் அனுபவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** வன விலங்குகள் விரும்பி உண்ணும் பயிர்களை வனத்திலேயே உற்பத்திச் செய்வது நிச்சயமாக நல்ல பலனை அளிக்கும். உணவைப் போலவே நீருக்கும் பெரும் தட்டுப்பாடு வனப் பகுதியில் ஏற்பட்டுள்ளது. வனப் பகுதியை ஒட்டி பணப் பயிர் சாகுபடிக்காகவும், சுற்றுலா விடுதிகளுக்காகவும் போடப்படும் ஆழ்குழாய்க் கிணறுகளால் வன ஓடைகள் காய்ந்து விடுகின்றன. விலங்குகள் தண்ணீரைத் தேடி அலைகின்றன. மலைப் பகுதிகளில் மானாவாரி சாகுபடியை ஊக்குவிப்பதன்மூலம் பணப் பயிர் சாகுபடியைக் கட்டுப்படுத்தலாம். காட்டைவிட்டு வெளியே வரும் வன விலங்குகளால் ஏற்படும் உயிர் மற்றும் பயிர்ச் சேதங்களுக்கு இழப்பீட்டுத் தொகை உயர்த்தியிருப்பதை நன்றியோடு வரவேற்கின்றேன். காட்டுப் பன்றிகளுடைய



எண்ணிக்கை அதிகரித்துவிட்டன. இதனால் தொல்லைகளும் அதிகரித்துவிட்டன. அரிய வன விலங்குகள் பட்டியலிலிருந்து காட்டுப் பன்றியை நீக்க வேண்டுகிறேன். சத்தியமங்கலம், கோவை, ஓசூர் வனப் பகுதிகளில் பயிற்சி பெற்ற கும்கி யானைகள், தகுந்த வாகனங்கள் உள்ளிட்ட நவீனக் கருவிகளுடன்கூடிய சிறப்பு முகாம்களை அமைத்திட வேண்டுகிறேன்.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டின் வன உயிரினப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, வன உயிரினங்கள் பல்வேறு அட்டவணையிலே வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் காட்டுப் பன்றியானது அட்டவணை 3-இல் சேர்க்கப்பட்டுள்ளது.

அட்டவணை 5-இல் சேர்க்கப்பட்ட உயிரினங்கள் காகம், எலி, சுண்டெலி, பழந்தின்னி வெளவால் தவிர மற்ற வன உயிரினங்களை வேட்டையாடுவது சட்டப்படி குற்றமாகும். இருப்பினும், தற்பொழுது காட்டுப் பன்றி பெருமளவில் அதிகரித்துவரும் நிலையில் வனப் பகுதிகளையொட்டியுள்ள விளை நிலங்களிலே பயிர்ச் சேதம் ஏற்படுத்துவதைக் கருத்திற்கொண்டு அவ்வாறு ஏற்படும் இழப்பிற்கு விவசாயிகளுக்கு இழப்பிற்கு ஏற்றவாறு நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இம்மாதிரியாக காட்டுப் பன்றிகளின் தொந்தரவுகள் அதிகமுள்ள பகுதிகளைக் கண்டறிந்து, அவற்றைக் களைந்திட மாவட்டம் மற்றும் வட்ட வாரியான விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதுதொடர்பான ஒட்டுமொத்தக் கருத்துரு தயாரிக்கப்பட்டு மாநில அரசு, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறைக்கு அனுப்பி, அதற்குரிய நடவடிக்கையை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

***திரு. பி.எல். சுந்தரம்:** வனத்தில் வாழும் பழங்குடியினர் மற்றும் வனம் சார்ந்து வாழும் மக்களின் வன நில உரிமையை

அங்கீகரிக்கும்பொருட்டு 2006 ஆம் ஆண்டு மத்திய அரசு சட்டம் கொண்டு வந்தது. இந்தச் சட்டம் சம்பந்தமாக நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து முடிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இச்சட்டத்தை அமல்படுத்தாத ஒரே மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது. கடந்த ஆட்சி இதைப் பற்றி எந்தவிதமான அக்கறையும் கொள்ளவில்லை. இப்போது முன்வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பில் இதுபற்றிக் குறிப்பிட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். இச்சட்டம் கொண்டு வரப்பட்டபோது "ஆதிவாசி மக்களுக்கு இதுகாலம் வரை இழைக்கப்பட்ட அநீதிகள் எல்லாம் இச்சட்டத்தின்மூலம் சரிசெய்யப்படும்" என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஆனால் சட்டமே அமல்படுத்தப்படாமல் உள்ளது வேதனையான ஒன்றாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிப்படையிலே பழங்குடியினராக இருந்து, வனத்தையே தங்களுடைய வாழ்க்கையாக நம்பி வாழும் பழங்குடியினர் 13-2-2005-க்கு முன்பாக மூன்று தலைமுறையாக சுமார் 75 வருடம் வனத்தில் வாழ்ந்த பழங்குடியினருக்கு மட்டும் இந்தச் சட்டத்தின்மூலமாகப் பல்வேறு உரிமைகள், சலுகைகள் வழங்கப்படுகின்றன.

பயிர் செய்வதற்கு, சிறு வனப் பொருட்கள் சேகரம் செய்ய, சொத்துரிமை போன்ற சலுகைகள் பெறலாம். மேற்படி வன உரிமைகளை நிர்ணயிக்கும் அதிகாரம் கிராம சபாவிடமுள்ளது. வன உரிமைகள்மீதான கோரிக்கை மனுக்களை விசாரித்து உரிய பரிந்துரைகள் மாவட்டக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்படும். அதனடிப்படையிலே மாவட்டக் குழு முடிவெடுக்கும். மேற்கண்ட நடைமுறைகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும், பொறுப்பு மாநில பழங்குடியினர் நலத் துறையினுடையவசம் உள்ளது. ஜூலை 2011 வரையில் கிராம சபையில் 22,583 உரிமை கோரும் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு, 3,473 உரிமை கோரும் மனுக்கள் மாவட்ட அளவிலான குழுக்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தைச் செயல்படுத்துவது சம்பந்தமாகத் தொடரப்பட்ட ஒரு பொது நல வழக்கில் உயர் நீதிமன்றமானது எல்லா நடைமுறைகளும் முடிந்த பின்பு, உயர் நீதிமன்றத்தில் அனுமதி பெற்ற பின்பே உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டுமென்று



ஆணையிட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** பழங்குடி மக்களும் வனச் சட்டங்களும்: வன வளத்தையும், வன விலங்குகளையும், வனத்தில் வாழும் பழங்குடிகளையும் பிரித்துப் பார்க்க முடியாது. ஆனால் மரத்திற்கும், விலங்குகளுக்கும் கொடுக்கும் முக்கியத்துவம் அங்கு வாழும் பழங்குடி மக்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. "குளத்து மீன் குடிப்பதனால் குளத்து நீர் வற்றாது" ஆதிவாசி வாழ்வதனால் காடு ஒன்றும் அழியாது."

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் கிராமப்புற மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக ஆடுகளையும், மாடுகளையும் மக்களுக்கு வழங்க உள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் சரணாலயங்கள் என்ற பெயரிலும், வனச் சட்டங்களாலும், கால்நடை மேய்ப்பிற்கு பெரும்பாலான வனப் பகுதி தடை செய்யப்பட்டுள்ளது.

காலங்காலமாக பழங்குடி மக்கள் வழிபட்டு வந்த வனக் கோயில்களுக்குச் செல்வது தடுக்கப்படுகிறது; வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்ற அனுமதி மறுக்கப்படுகிறது; விவசாய விளைபொருட்களைக் கொண்டுவரவும் அனுமதி மறுக்கப்படுகிறது; காட்டில் வாழும் ஒரு ஆதிவாசி, குடிசை அமைக்க ஒரு குச்சியை வனத்திலிருந்து எடுத்தாலும் அவர் தண்டனை பெறுகிறார். இந்தச் சட்டங்களெல்லாம் மத்திய அரசால் போடப்பட்டன என்றாலும், அறியாமையில் உள்ள மக்கள் நம்மீதுதான் அதிருப்தி அடைகிறார்கள்.

வேதாந்தா, போஸ்கோ போன்ற பன்னாட்டுக் கம்பெனிகளின் புல்டோசர்களும், பொக்லைன்களும் வனத்தைப் பிளந்து சுரங்கம் தோண்ட ஒருபுறம் அனுமதிக்கும் மத்திய அரசின் வனச் சட்டம், மறுபுறம் கால்நடைகள் மேயத் தடை செய்கிறது. வன வளத்தைப் பாதுகாக்கும் அதேசமயம், பழங்குடி மக்களின் வாழ்வுரிமை பாதுகாக்கப்பட வேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள்தான் இதற்கு ஒரு தீர்வைத் தரவேண்டும்; உங்களால்தான் இது முடியும் அம்மா என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பிலேயே பத்தி 30-ல் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் என்று விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட, கிராம வளர்ச்சிப் பணிகள், தொடர்பு வசதிகள், கல்வி, சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதிகள் ஆகியவற்றைச் செயல்படுத்த 7.78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்துவதற்கு NABARD வங்கியின் நிதி உதவி கோரப்பட்டுள்ளது. பழங்குடியினரின் மேம்பாடு குறித்து தொடர்பு வசதியை மேம்படுத்துதல், கல்வி வசதிகள் மற்றும் இதர இனங்களுக்காக ரூ.30.09 கோடி மதிப்பீட்டிலான கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளதென்று விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி. வனத்தைக் காக்க வேண்டிய வனத் துறைக்கு, இப்போது விலங்குகளிடமிருந்து மனிதர்களையும், மனிதர்களிடமிருந்து விலங்குகளையும் காக்க வேண்டிய பொறுப்பு அதிகமாக உள்ளது. வனத் துறையில் இப்போதுள்ள களப் பணியாளர்களின் சராசரி வயது ஐம்பதிற்கும் மேல் உள்ளது. பல்லாண்டுகளாக, வனத் துறையில் போதுமான பணி நியமனம் இல்லாததால், இந்த நிலை ஏற்பட்டுள்ளது. வனத் துறையில், எல்லா நிலைகளிலும் உள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். புதிய பணியாளர்கள் தேர்வு தற்போது வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் நடைபெறுகிறது. இதற்குப் பதிலாக, காவல் துறை தேர்வாணையம்போல, வனத் துறை தேர்வாணையம் அமைக்கப்பட்டு, அதன்மூலம் பணியாளர்கள் தேர்வு நடைபெற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். வேலைவாய்ப்பு அலுவலக மூப்புப்படி தேர்ந்தெடுத்தால் ...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** 35 வயது கடந்த பின்பே பலர் தேர்வாக முடியும். களப் பணிகளுக்கு நல்ல உடல் திறன் உள்ள இளைஞர்கள் வந்தால் மட்டுமே, துறையின் பணித் திறன் மேம்படும். தற்போது வனத்தின் பாதுகாப்பு தற்காலிகப் பணியாளர்களாக உள்ள வேட்டைத் தடுப்புக் காவலர்களையே சார்ந்துள்ளது. பெரும்பாலும் பழங்குடியினராக உள்ள இவர்கள், வனத்தின் மனதை அறிந்தவர்கள்; இவர்கள் இரவு பகலாக உழைக்கிறார்கள். இவர்களுக்கு மாத ஊதியம் ரூ.3,000 மட்டுமே வழங்கப்படுகிறது. இவர்களது ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஐந்து ஆண்டுக் காலம் பணிபுரிந்த அனைவரும், பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.

வனத் துறைப் பணியாளர்கள் பணியின்போது உயிரிழந்தால், அவர்களது குடும்பத்திற்கும் 5 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வனத் துறையிலே, வனச் சரகர், வனவர், வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர் ஆகியோர் வனப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் நேரடி நியமனம் மூலமும் மற்றும் பதவி உயர்வின் மூலமும் பணியில் அமர்த்தப்படுகின்றனர். சரகர்களின் நேரடி நியமனம், தமிழ்நாடு பணியாளர் தேர்வு ஆணையத்தின்மூலம் மேற்கொள்ளப்படுகிறது. மேற்படி களப் பணியாளர்கள் நேரடி நியமனத்தைப் பொறுத்தவரையில், மாவட்ட அளவில் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டு, தேர்வுகள் நடத்தப்பட்டு, நியமன ஆணைகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறான நியமனங்களுக்கு, வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பதிவு மூப்பு அடிப்படையில் பட்டியல் கிடைக்கப்பெறுவதால், தகுதி வாய்ந்த இளைஞர்கள் நியமனம் செய்ய இயலாமல் போகிறது. வனப் பாதுகாப்புப் பணிகளில் திறமையான, தகுதி வாய்ந்த இளைஞர்கள் தேவைப்படுவதால், இத்தகைய நேரடி நியமனங்களை மாநில அளவில் பொது விளம்பரம் செய்து உரிய தேர்வுகள் நடத்தி

தேர்வு செய்யும் பட்சத்தில், துடிப்பான இளைஞர்களைப் பணி அமர்த்த ஏதுவாகும். எனவே, இவ்வாறான நியமனங்களை மேற்கொள்ள, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று தமிழ்நாடு வனத் துறை சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழு ஒன்றை அமைப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஈரோடு மாவட்டத்திலேயே கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கியும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரை அதிகமாக உள்ளடக்கியும் உள்ள பவானிசாகர் சட்டமன்றத் தொகுதியில் - பவானிசாகரில் ஒரு அரசுக் கலை-அறிவியல் கல்லூரியைத் தொடங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்திரவிட வேண்டுகிறேன்.

தற்போது புதிதாகத் தொடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ள 10 ஐ.டி.ஐ-களில் ஒன்றை எனது தொகுதியில் - சத்தியமங்கலத்தில் தொடங்கி உதவ வேண்டுகிறேன்.

ஆசனூர், கடம்பூர் ஆகிய மலைப் பகுதிகளில் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கான விடுதிகள் ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்.

ஈரோடு மாவட்டத்தில் மட்டும் அங்கீகரிக்கப்படாமல் உள்ள "மலையாளி" இன மக்களைப் பழங்குடியினராக அங்கீகரிக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மலை விளைநிலங்களுக்குப் பட்டா வழங்க விதிக்கப்பட்டுள்ள தடையாணை (1168/1989) யிலிருந்து ஈரோடு மாவட்ட மலைப் பகுதிக்கு விலக்கு அளிக்க வேண்டுகிறேன்.

தாளவாடி மலைப் பகுதியில், பயன்படுத்தப்படாமல் உள்ள சுமார் 800 ஏக்கர் பட்டு வளர்ச்சித் துறைக்குச் சொந்தமான நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்குப் பிரித்தளிக்க வேண்டுகிறேன்.



சத்தியமங்கலத்தில்-புளியங்கோம்பை, தாளவாடியில்-கரள்வாடி தடுப்பணைத் திட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் 3 கி.மீ தொலைவில் உள்ள குமாரபாளையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட சத்தியமங்கலம் அரசு மருத்துவமனையின் வெளிநோயாளிகள் பிரிவை மீண்டும் சத்தியமங்கலத்திற்கே இடமாற்றம் செய்ய வேண்டுகிறேன்.

கடம்பூர்-குன்றி, கடம்பூர்-மாக்கம்பாளையம் வனச் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றித்தர வேண்டுகிறேன்.

பவானிசாகர் அணைக்கட்டுக்கு முன்புறம், பண்ணாரி-புளியம்பட்டி மாநில நெடுஞ்சாலையில், பவானி ஆற்றின் குறுக்கே உள்ள பழுதடைந்த பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் அமைத்திட வேண்டுகிறேன்.

மணிநீரும், மண்ணும், மலையும், அணிநிழற் காடும் உடையதாக தமிழகம் மாறும் என்ற நம்பிக்கையோடு முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

**திரு. கா.கோ. ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14-ஆவது சட்டமன்றப் பேரவையின் சன்னிதானத்தில், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பில் சங்கநாதம் செய்கிற உயர்ந்ததொரு சந்தர்ப்பத்தை வழங்கி இருக்கிற மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) ஊழல் கரையான்களை ஒழித்த ஊழி நெருப்பாய், ஏழைகட்கு இரக்கங்களை இறக்கியருளும் இமயப் பொருப்பாய், பொன்மனச் செம்மலின் கருணை இதய காலக் கையிருப்பாய், ஏழு கோடித் தமிழ் மக்களின் இதயத் துடிப்பாய், உண்ணும் கரங்களை ஓரங்கட்டிவிட்ட ஊட்டும் கரமாய், தனக்குத் தானே தாரை வார்த்துக்கொள்ளும் கொள்ளைக் கூட்டத்தைச் சிறைப்பிடித்துக் கறையகற்றும் சரித்திரம் படைத்த சலவை மழையாய், அன்றாடங் காய்ச்சிகளுக்கு அள்ளி அள்ளித் தரும் கை எங்கள் தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்களே, சும்மா சனங்களை அம்மாசனமாக்கிச் சிம்மாசனத்தில் கொலுவீற்றிருக்கும் சிந்தைக்கினிய தாயே, தாள் கண்டால் தலைவணங்கும் பேனாபோல் தாயின் பாதம் வணங்கி, தொடங்குகின்றேன் அம்மா.

பிற்பகல் 12-45

அம்மா! இந்திய அரசியலில் ஈர்ப்பு மையமான விந்திய மலைக்குக் கீழிருந்து ஜனாதிபதிகள் வந்தது சராசரி சம்பவம். ஆனால், விந்தியத்திற்குக் கீழிருந்து ஓர் இந்தியப் பிரதமர் அரும்பும் சாத்திய சரித்திரம் சென்னையிலிருந்து, இல்லை, இல்லை, என் அன்னையிலிருந்துதான் ஆரம்பமாக இருக்கிறது. இது ஆரூடம் அல்ல (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் நோக்கர்களின் இதயம் முதல் இமைகள்வரை ததும்பி நிற்கும் தத்துவக் கனவு.

நிலத்தை நிராகரித்துவிட்டு நதிகள் எப்படி நடக்க முடியாதோ, நீல வானத்தை நிராகரித்துவிட்டு நிலவு எப்படி சிரிக்க முடியாதோ, அதைப்போல, மாண்புமிகு புரட்சித் தலைவி தமிழக முதல்வர், எங்கள் அம்மாவை நிராகரித்துவிட்டு இந்திய வரலாறு இனி எழுதப்பட முடியாது என்பதுதான் வரலாறு சொல்லப்போகின்ற உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

“The true magnanimity lies not in never falling, but in rising every time you fall” என்கிற சிந்தனையாளன் ‘மாக்கிவல்லி’-யின் மகரந்த வார்த்தையின் அர்த்தாம்ச அவதாரம்தான் அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தன் சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் ஃபீனிக்ஸ் பறவைபோல, ஆர்ப்பரித்து எழுந்த அக்கினிக் குஞ்சுதான் மாண்புமிகு அம்மா அவர்கள்.

புயலைக் கண்டு புலம்பி, பாறை இடுக்குகளில் பயந்து பதுங்கும் பெங்குவின் பறவை போலல்லாமல், பலமான புயல் அடிக்கின்றபொழுது மின்னல்களுக்கு மத்தியில் மூர்க்கமாகக் கர்ஜிக்கின்ற பெருங்கடலுக்கு மேலாக, வெற்றியின் தீர்க்கதரிசிபோல் முழங்கும் புயற்பறவையாக, அரசியல் குருஷேத்திரங்கள் அனைத்திலும் வெற்றி கொண்டவர்தான் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அஞ்சுகச் செல்வனின் அஸ்திவாரத்தை அறுத்தெரிந்து, முடியாட்சியின் முகத்திரையைக் கிழித்து, கோபாலபுரத்தை குப்பைமேடாக்கி, தான் வாழ்விலும், நாவிலும் பூஜித்த பொன்மனத் தலைவன் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ஆட்சி கண்டு பெண்களின் வலிமையை உலகிற்கு உணர்த்திய “ஜோன் ஆஃப் ஆர்க்” தான் நம் அன்னை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



விடுதலை பெற்ற இந்தியாவில் தமிழகச் சட்டமன்றப் பேரவைத் தேர்தல்களில் திராவிட இயக்கத்தின் தொட்டிலில், திருப்பத்தூர் தொகுதியில் 1991 தேர்தலில் மட்டுமே கழகம் வெற்றி பெற்றது. விதி வசத்தால், மாற்றாரின் கைவசம்போன திருப்பத்தூர் தொகுதியை மீட்டெடுத்து, விலைவசம் சென்ற வாக்குகளைத் தடுத்து, இலைவசம் கொண்டு வந்த வரலாற்று நாயகியின் வெற்றிப் பாதத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) நெற்றி வைத்து வணங்குகிறேன், அம்மா.

திக்கற்றோர் குடிசையின் விளக்காக இருந்த என்னை, மலைவிளக்காய் ஏற்றிவைத்த எங்கள் குலவிளக்கே! விசுவாசத்தை சுவாசமாகக் கொண்ட தொண்டர்களைக் கரையேற்றும் கலங்கரை விளக்கே! (மேசையைத் தட்டும் ஒலி) என்னைப் பிழிந்து, அன்னை விளக்கில் எண்ணெய் வார்ப்பேன் என உறுதி கூறுகின்றேன்.

திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், காக்கங்கரை என்ற குக்கிராமத்தில் பிறந்த என்னை, கிளைக் கழகச் செயலாளராக ஆக்கி, பின் கழக ஒன்றியக் குழு உறுப்பினராக இரண்டு முறை தேர்வு செய்து, தொடர்ந்து கந்திலி ஒன்றியக் குழுத் தலைவராகப் பணியாற்றிட வாய்ப்பு வழங்கி, பிறகு கந்திலி ஒன்றியக் கழகச் செயலாளராக வளர்ந்து, தற்போது திருப்பத்தூர் சட்டமன்ற வேட்பாளராகத் தேர்வு செய்தது மட்டுமின்றி, என்னை வெற்றிபெறச் செய்திட்ட தீர்க்கதரிசி தாயே, தியாகச் சுடரே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது கோடானு கோடி நன்றியினைக் காணிக்கையாக்கி, எனக்கு வாக்களித்து, வெற்றிபெறச் செய்த எனது தொகுதி மக்களுக்கும் எனது நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

மழை வருவதற்கு முன்பாக மண்வாசனை வருவதுபோல, அம்மா அவர்கள், ஆட்சிப் பீடத்திற்கு வந்தவுடனே ஏழை மாணவர்களின் கண்ணீர் துடைப்பதற்கு அரசுக் கலைக் கல்லூரி ஏற்படுத்தி, ஆணை பிறப்பித்து அவலம் தீர்த்தமைக்கு என் தொகுதி மக்களின் சார்பாக இதயம் கனிந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த காலத்தில் பட்ஜெட் என்பது வெற்று ஆரவார இடிகளும், விளம்பர மின்னல்களுமாக, சொட்டு மழையும் தராத சோகமாகவே இருந்தது. மக்களின் மனக்குளங்களுக்கு, மின்னாமல்,

முழங்காமல் வந்த மாமழைபோல் இருக்கிறது மாண்புமிகு அம்மா அவர்களின் பட்ஜெட் என்று நாடு முழுவதும் மக்கள் பேசுகிறார்கள், அம்மா!

பாலை எதிர்பார்த்துப் பசியோடு துடித்த பச்சிளங் குழந்தைக்கு, ஈரம்கூட காட்டாத கிழட்டு மாட்டின் மலட்டு மடியாகத்தான் கடந்த கால மைனாரிட்டி தி.மு.கவின் மக்கள் விரோத பட்ஜெட் இருந்தது. விவசாயிகளின் விழிகளில் எப்பொழுதுமே மழைக் காலம் மட்டுமே குடிகொண்டிருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) தேர்வு காலங்களில் ஏழை மாணவர்கள் கண்ணவிந்துபோன திருதராஷ்டிர விளக்குகளால் மாணவர்களின் படிப்பு பங்கப்பட்டுப்போன பாஞ்சாலியாக இருந்தது.

வயிற்றுக்குச் சோறு கேட்டால் வாய்க்கரிசி போட்டுவிட்டு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கொடுத்து வக்கணை பேசினார்கள். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கியது எதற்காக? (மேசையைத் தட்டும் ஒலி) 'தாய்க்குத் தாலி செய்தாலும் தங்கம் திருடுகின்ற பொற்கொல்லன்' என்ற முதுமொழிக்கேற்ப சொந்தச் சேனல்கள் செழிக்க வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களோ, அடுத்த தலைமுறை செழிக்க மடிக்கணினி கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா ஏழைகளும் சீரும், சிறப்போடும் வாழவேண்டும் என்ற திட்டத்தை, நாடு முழுவதும் மனதார வரவேற்கிறார்கள், தாயே.

அம்மாவின் ஆட்சியில் அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகம், கடந்த ஆட்சியில் சட்டத்தின் ஆட்சி சரிந்துபோய் சாம்பல் மேடாகிப் போனாலும், சாம்பலையும் விற்க முடியுமா என்று எண்ணியவர்கள் நாட்டை ஆண்டதால் தமிழ்நாடு ஆயுதக் கிடங்காக மாறிப்போனது.

*பிற்பகல் 12-50*

மைனாரிட்டி கருணாநிதி ஆட்சியில் தமிழகம் திறந்தவெளி சிறைச்சாலையாக இருந்தது. கடந்த காலத்தில் ஆயுதம் தாங்கிய ரௌடிகளின் ராஜ்ஜியம், வன்முறையாளர்கள், வாடகை மனிதர்களின் ராஜ்ஜியம், தமிழகம் முழுவதும் மக்கள் நிம்மதி இழப்பதற்குப் பெரிதும் காரணமாக இருந்தது. மதச் சார்பின்மையும், மத நல்லிணக்கமும், கேள்விக்குறியாகிவிட்டது. தென்காசியில் ஒரே குடும்பத்தைச் சார்ந்த 4 பேர்



கொல்லப்பட்டனர். ஆனால், மக்களுக்கு ஓர் நம்பிக்கை இருந்தது. பாபர் மசூதி தகர்க்கப்பட்ட அன்றைக்கு, இந்தியாவின் எல்லா திசைகளிலும் கலவரம் வெடித்தது. இரத்தத்தால் சிவந்து கிடந்தபொழுது, தமிழ்நாடு மட்டும் தென்றலின் தெருவில் அமைதியின் மடியில் இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம், ஆளுமையுள்ள அனைத்து மக்களின் உரிமைகளுக்கும், உடைமைகளுக்கும் உத்தரவாதம் தருகிற அம்மாவின் ஆட்சி இருந்தது. இன்று மீண்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி வளர்ந்திருக்கிறது. அம்மாவின் ஆட்சி நாட்டு மக்களுக்கு நிம்மதியையும், சமாதானத்தையும் கொடுக்கும் என்று மக்கள் பெரிதும் நம்புகிறார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் ஓர் பணிவான வேண்டுகோள். வேலூர் மாவட்டம் என்கிற தொண்டை மண்டலம், 13 சட்டப் பேரவைத் தொகுதிகள் உள்ள மிகப் பெரிய மாவட்டம். நகரங்கள் அதிகமின்றிக் கிராமங்களே வேலூர் மாவட்டத்தின் வேராக விளங்கி வருகின்றன. உப்பரிகைகள் மட்டுமே உறிஞ்சிக் குடித்த ஜனநாயக வெளிச்சத்தைச் சிற்றூர்களின் திசைக்குத் திருப்பிவிடும் தங்களிடம் என் பணிவான வேண்டுகோள். திருப்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்டம் அமைத்துத் தருமாறு பணிவுடன் வேண்டுகிறேன். நெடுங்காலமாக எழுப்பப்பட்டு, கொடுங்கோலர்களால் நிராகரிக்கப்பட்டு வந்த இந்தக் கோரிக்கையைச் செங்கோலேந்திய செந்தமிழ்த் தாயே, தாங்கள் மட்டுமே நிறைவேற்ற முடியும் என்று மக்கள் பெரிதும் நம்புகிறார்கள் எனப் பணிவோடு வேண்டுகிறேன்.

நாட்டில் மழை பெய்தால்தான் மயில்கள் தோகை விரித்தாடும். ஆனால், காட்டில், மர மயில்கள் தோகை விரித்தாடினால்தான், மழையே பெய்யும். வெட்டுபவனுக்கும் நிழல் வழங்கும் மரமாய், தோண்டுபவனுக்கும் தண்ணீர் வழங்கும் நிலமாய் விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் கானகத்தைக் களவாடிய வீரப்பனை, வானகத்துக்கு அனுப்பி, (மேசையைத் தட்டும் ஒலி) காடுகளைக் காப்பாற்றிய பெருமைக்குரிய அம்மா அவர்களே, ஜவ்வாது மலைகளின் சந்தன முந்தானையாக விளங்கும் திருப்பத்தூர் தொகுதியில் வன வளம் பெருக, மனவளம்மிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பணிந்து வேண்டுகிறேன்.

ஐம்பெரும் பூதங்களில் மண், குப்பை மேடாகி வருகிறது. தண்ணீர், சாக்கடையாகி வருகிறது. காற்று, புழுதிபடிந்துவிட்டது. வானம், புகை படிந்துவிட்டது. ஆனால், நெருப்பு மட்டும் மாசுபடாதிருப்பதுபோல், கவிழ்ந்தாலும் தலைநிமிர்ந்து எரிகிறது. சலவை நோட்டுக்களுக்காக அழுக்கானவர்கள் எல்லாம் 2ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசை, அலைவரிசையாக சிறைச்சாலைகளில் தலை குனிந்திருக்கிறார்கள். ஆனால், எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்னையே தாங்கள் மட்டும்தான் நெருப்பு மாதிரி தலை நிமிர்ந்தே இருக்கிறீர்கள்.

ஆறுகள் பிறக்கும் இடங்களில் தூய்மையாக இருக்கின்றது. மனிதர் வாழும் கரைகளைக் கடக்கையில் மாசுபடிந்துவிடுகின்றன. ஆமாம், இறைவன் படைப்பு தூய்மையாய் இருக்கிறது. மனிதப் புழக்கத்தால் ஆறுகள் மாசடைந்துவிடுகின்றன. ஆம். ஜீவநதிகளை இறைவன் படைத்தான். கூவ நதிகளை மனிதன் படைக்கிறான். ஆனால், கூவத்தைச் சுத்தப்படுத்துவதாகச் சொன்னவர்கள், தகிடுதத்தங்களால் கூவமாகவே மாறிப் போனார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இயற்கைச் சூழலை மட்டுமல்ல; பொதுவாழ்வுச் சூழலையும் தூய்மைப்படுத்தும் பணி, அம்மா உங்களால்தான் சாத்தியம். மாண்புமிகு அம்மா அவர்களே, சாத்தியமில்லாச் சவால்களே சாத்தியமாக்கப் பாடுபடும் சரித்திரத் தலைவியே, திருஷ்டிப் பொட்டைத் திலகமாய் ஆக்கும் தாயே, ஏதுமற்ற இல்லாதார் வாழ்க்கை ஏற்றம் பெற, உங்களின் உண்மைத் தொண்டன் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுக்கும் அனைத்துச் செயல்பாடுகளும் வெற்றிபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி என்னுடைய சிறு கோரிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன்.

திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலையில் ராஜபாளையத்திலிருந்து எஸ். குழந்தை வட்டம் முதல் வனத் துறைப் பகுதியின் வழியாக ஜவ்வாது வீரப்பன் கோயில் நடைபாதை, புங்கம்பட்டு ஊராட்சி, செக்கானூர் கிராமம் வரை 5 கிலோ மீட்டர் தூரம் தார்ச் சாலை, இணைப்புச் சாலை அமைத்தால், சுமார் 16 கிராமங்கள், 10,000 மலைவாழ் மக்கள், பழங்குடியினர் பயனடைவார்கள். மலைவாழ் மக்களே மேற்குறிப்பிட்ட 5 கிலோ மீட்டர் தூர மண் சாலையை அமைத்தும் உள்ளார்கள். அவ்விடத்தை நான் பார்த்தும் வந்துள்ளேன் என்பதையும் இம்மாமன்றத்தில் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். இத்திட்டத்தை அமைத்துக் கொடுத்தால், அந்த மலைவாழ் மக்கள் திருப்பத்தூர் பகுதிக்கு வருவதற்கு 60 கிலோ மீட்டர் சுற்றி வருகின்ற நிலை மாறி, 5 கிலோ மீட்டர் தூரத்தில் திருப்பத்தூரை வந்தடைவார்கள் என்பதைப் பணிவான வேண்டுகோளாக வைக்கின்றேன். அதுமட்டுமல்ல...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையத்திலிருந்து எஸ். குழந்தை வட்டம் வரை சுமார் 4 கிலோ மீட்டர் நீளத்திற்கு வனத் துறைப் பகுதிக்கு வெளியேயும், எஸ். குழந்தை வட்டம் முதல் செக்கானூர்வரை சுமார் 6 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஆண்டியப்பனூர் காப்புக் காடு வழியே இச்சாலை அமைகிறது. இடைப்பட்ட இரண்டு கிலோ மீட்டர் அகலத்திற்கு வனத் துறையால் அனுமதிக்கப்பட்ட வழித்தடம் உள்ளது. அனுமதிக்கப்பட்ட வழித்தடத்தை மேலும் தேவையான அகலத்திற்கு அகலப்படுத்துவதற்கு இந்திய வனச் சட்டம் 1980-ன்படி பயனீட்டாளர்களால் முறையான கோரிக்கை வைக்கப்பெற்றால் துறை உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

**திரு. கா.கோ. ரமேஷ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கை 1991 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் அம்மா அவர்களே நிறைவேற்றித் தருவதாக அந்த மலைவாழ் மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளார்கள் என்பதை இந்த நல்ல தருணத்தில் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் அந்தத் தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்து, அந்த மலைவாழ் மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்த திருப்பத்தூர் தொகுதி ஜவ்வாது மலையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை அமைக்கின்ற பணியை மத்திய வனத் துறையினுடைய அனுமதியைப் பெற்று, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டு சென்று நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தச் சாலை பற்றிய proposal என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்திலேயே மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆகவே, மத்திய அரசை துரிதப்படுத்தி, எப்படியாவது அந்த அனுமதியைப் பெற்று அந்தச் சாலையை அமைக்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

**திரு. கா.கோ. ரமேஷ்:** மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த ஜவ்வாது மலையில் 3 ஊராட்சிகள் உள்ளன. இந்த 3 ஊராட்சிகளும் 70 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கின்ற ஆலங்காயம் ஒன்றியத்தில் உள்ளதால், இந்த மலைவாழ் மக்களின் நலனை முன்னிட்டு, அவற்றை திருப்பத்தூர் ஒன்றியத்தில் இணைத்தால் அவர்களுடைய அன்றாட வாழ்க்கைக்கு அது மிகவும் நன்றாக இருக்கும் என்பதை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்றால், அந்தப் பகுதி மக்கள் 70 கி.மீ. தூரம் செல்ல வேண்டிய நிலை எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*



**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள் பேசுகின்றபொழுது, மலைவாழ் கிராமங்களுக்கு, அதாவது 900-க்கு மேற்பட்ட கிராமங்கள் மின் இணைப்பு பெறவில்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். முன்பு 200 கிராமங்கள் என்ற அளவிலே இருந்தது, இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு எடுத்த விரைவான நடவடிக்கையின் விளைவாக இப்போது 110 கிராமங்களுக்கு மட்டுமே மின் இணைப்பு தர வேண்டியிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* தற்போது அம்மாவினுடைய உத்தரவு கிடைத்ததற்குப் பிறகு, சமீபத்திலேகூட 5 கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை மாவட்ட வாரியாகச் சொல்லிவிடுகிறேன். தேனி மாவட்டத்தில் 31 கிராமங்கள் அவை குக்கிராமங்கள்தான், பெரிய கிராமங்கள்கூட கிடையாது. அதேமாதிரி திருவண்ணாமலை மாவட்டத்தில் 3, விழுப்புரம் மாவட்டத்தில் 1, சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் உள்பட 12. அதேபோல கோயம்புத்தூர் மாவட்டத்தில் 28. ஈரோடு மாவட்டத்தில் 7, நீலகிரி மாவட்டத்தில் 6, திண்டுக்கல் மாவட்டத்தில் 20, மதுரை மாவட்டத்தில் 1, கன்னியாகுமரி மாவட்டத்தில் 5, ஆக மொத்தம், 115 கிராமங்களுக்கு மட்டுமே கொடுக்க வேண்டியிருக்கிறது. அதுவும் இப்பொழுது அம்மாவினுடைய உத்தரவின்பேரில் அதன்மீது விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மிக விரைவிலே இந்த 115 கிராமங்களுக்கும் நிச்சயமாக மின் இணைப்பு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

**திரு. கா.கோ. ரமேஷ்:** இந்த 3 ஊராட்சிகளை திருப்பத்தூரில் இணைக்குமாறு பணிவோடு கேட்டுக்கொண்டு, புங்கமட்டூர்நாடு ஊராட்சியில் ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையும் வைக்கிறேன். கிருஷ்ணகிரி மாவட்டம், குண்டூர் ஏரியிலிருந்து உபரியாக வருகின்ற இந்த நீரை கந்திலி ஒன்றியத்தில் காக்கங்கரை கிராமத்தினுடைய ஏரிக் கரைக்கு வருவதற்கு வழித்தடம் ஏற்பாடு செய்து கொடுத்தால் சுமார் 25 கிராம விவசாயிகள் 2,200 ஏக்கரில் பயனடைவார்கள் என்ற கோரிக்கையை வைத்து இந்த நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி. வணக்கம் தாயே. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “இயன்றதைச் செய்வோம் இல்லாதவர்க்கே” என்ற தாரக மந்திரத்தை இளைஞர்கள் மனதில் விதைத்து அதற்கு முன்னுதாரணமாக ஆண்டுதோறும் பல உதவிகள் செய்து வருவதோடு, இந்த ஆண்டு தனது பிறந்த நாளில் சுமார் 3½ கோடி ரூபாய் அளவில் பல நல உதவிகளை வழங்கிய மனித நேயப் பற்றாளர், எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்த அன்புத் தலைவர், மாண்புமிகு கேப்டன் அவர்களுக்கு வணக்கத்தினைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மற்றும் வணிக வரி, முத்திரைத்தாள் மற்றும் பதிவுத் துறை ஆகிய துறைகள் மீதான மானியக் கோரிக்கைகளில் என்னைப் பேச அனுமதித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு கேப்டன் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 1-00*

இன்று உலகின் மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருப்பது புவி வெப்பமடைதல். தொழில்மயமாவதாலும், காடுகள் அழிக்கப்படுவதாலும், இயற்கைச்சூழலின் சமநிலை பாதிக்கப்பட்டு வருகிறது. அதனால் ஓசோன் படலத்தில் ஓட்டைகள் ஏற்பட்டு, பூமியின் சராசரி வெப்பநிலை உயர்ந்துவிட்டது. இதன் காரணமாகப் பருவகால மாறுபாடுகள் ஏற்படுகின்றன. சுற்றுச்சூழல் மாசுபாட்டை ஏற்படுத்துவதில் முக்கால் பங்கு வகிப்பது வளர்ந்த நாடுகளே. ஆனால், அதன் சுமையை சுமப்பதோ வளர்ந்துவரும் நாடுகள் என்று அமெரிக்க பெரும் சுற்றுச்சூழல் ஆர்வலர் Naomi Klein கருத்து தெரிவித்துள்ளார். எப்படி இருந்தபோதிலும், நாம் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியமாகிறது. தனியார் நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டத்தை தமிழக அரசு அறிமுகம் செய்து, இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 43.74 கோடி செலவில், 3 கோடி மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதனால் 71 ஆயிரத்து 454 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இந்தத் திட்டத்தை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

அடுத்து, கடற்கரையோரங்களிலே அலையாத்திக் காடுகள் என்று சொல்லப்படுகின்ற மாங்குரோவ் காடுகள் செயல்படுத்த



வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறோம். ஏனென்றால், கடந்த காலங்களில் சுனாமி வந்தபோது மரம் அதிகம் இருந்த இடங்களில் சுனாமியின் தாக்கம் குறைவாக இருந்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், நாகை மாவட்டத்திலே மட்டும் தற்போது ஒன்பது அனல் மின் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதனால் பல மீனவ கிராமங்களும், பல விவசாயத் தொழில் செய்யும் கிராமங்களும் எதிர்காலத்திலே இடம் பெயரக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் மீனவர்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இதைச் சொல்வதால் அனல்மின் நிலையம் உருவாக்குவதற்கு தே.மு.தி.க. எதிர்க்கிறது என்று பொருள் அல்ல. அனல்மின் நிலையம், சுற்றுச்சூழல் மற்றும் விதிமுறைகளின்படி, ஏழையெளிய மக்கள் பாதிக்காதபடி அமைப்பதை நாங்கள் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். அதேநேரத்திலே பொதுமக்களைப் பாதிக்கின்ற மீனவ மக்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களைப் பெருமளவில் பாதிக்கின்ற அனல்மின் நிலையத்தை உருவாக்குவதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம். குறிப்பாக ஒரு அனல்மின் நிலையம் தன்னுடைய மதிற்சுவரை கடற்கரை வரை நீட்டித்தும், கடற்கரையோரமாக நீண்ட நெடிய மதிற்சுவர் எழுப்பியுள்ளது. அதனால், அந்த அனல்மின் நிலையத்தின் compound-க்குள்ளே அரசுக்குச் சொந்தமான குளங்கள், வாய்க்கால்கள், அரசுப் புறம்போக்கு நிலங்கள், சுடுகாடு போன்றவற்றை அனல்மின் நிலையத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் compound-க்குள்ளே சென்றுவிட்டன.

அதிலும் குறிப்பாக, மகிமலை ஆறு ஓடி வந்து பல கிராமங்களுக்குள் புகுந்து தண்ணீர் பாய்ந்து கடலிலே கலக்கவேண்டும். ஆனால், அந்த ஆற்றையே தடுத்து நிறுத்தி, கடலுக்குள் தண்ணீர் செல்லமுடியாத அளவிற்கு மதிற்சுவர் எழுப்பப்பட்டு, அடைக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் அப்பகுதியினுடைய சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு இயற்கை வளங்கள் அழிகின்றன. அதேபோல் பல விவசாய நிலங்களை விலைக்கு வாங்காமலேயே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் அனல்மின் உற்பத்தி நிலையத்திற்கான திட்டத்தைக் குறிப்பிடுகிறார். அதிலே மத்திய அரசு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அனுமதியளித்திருக்கிறது. ஆனால், மாநில அரசு இன்னும் அதற்கு அனுமதி வழங்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதனால் இதுவரையிலும் அனல்மின் நிலையத்தால் வாங்கப்படாமல் உள்ள விவசாய நிலங்கள் எல்லாம் அவர்களின் கட்டுப்பாட்டில் மதிற்சுவர்களுக்குள்ளே சென்றுவிட்டன. அதன்மூலம் அந்த நிலத்தின் உரிமையாளர்கள்கூட உள்ளே செல்லமுடியவில்லை. அந்த அனல்மின் நிலையத்திற்குள்ளே வருவதற்கு வழியில்லை. எனக்குத்தான் விவசாய நிலத்தை விற்கவேண்டும் என்று சொல்லி, அடிமாட்டு விலைக்கு விவசாய நிலங்களை விற்கச் சொல்லி கட்டாயப்படுத்தும் நிலைமைகூட அங்கே இருக்கின்றது. விவசாயிகள் அந்த நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். கடந்த ஆட்சிக் காலத்தில் முறைகேடான அனுமதியின் காரணமாக சுற்றுச்சூழல் விதிகளை காற்றில் பறக்க விட்டுவிட்டு, இந்த அனல்மின் நிலையங்கள் வருவதற்கு அனுமதி வழங்கியுள்ளனர். நாங்கள் கேட்பது தமிழ்நாடு முழுவதும் கடற்கரையோரங்களில் தரிசு நிலங்களாக, விவசாயம் செய்யமுடியாத நிலையில் உள்ள இடங்களில் அனல்மின் நிலையம் அமைக்கலாம். அதை விடுத்து, தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப் போற்றப்படும் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் ஒரு பகுதியான நாகை மாவட்டத்தில் உள்ள கடற்கரையோரங்களில் மட்டும் 9 அனல் மின் நிலையங்கள் அமைப்பதற்கு கடந்த ஆட்சியில் அனுமதி கொடுத்ததன் காரணம் என்ன? அதனால், யார் யார் எந்தெந்த வகையில் பயன்பெற்றார்கள் எனத் தெரியவில்லை. அதை இந்த அரசு கண்டிப்பாகக் களையவேண்டும். மேலும், இப்பகுதியிலுள்ள மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குள் உப்புத் தண்ணீரில் சென்றுவிட்டு வருகின்றபோது நல்ல தண்ணீரிலே வந்து குளிக்கின்ற நிலைமை வரும். அப்போது பார்த்தீர்களென்றால்,



இவையெல்லாம் அடைபட்டவுடனே அவர்கள் குளிப்பதற்குக்கூட நல்ல தண்ணீர் கிடைக்காத நிலை அந்தப் பகுதியிலே இருந்துவருவதை உங்கள் முன்னாலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எனவே, சுற்றுச்சூழலைப்பற்றி ஒரு துளிகூட கவலைப்படாமல், ஏழையெளிய மக்களைப்பற்றி சிறிதும் சிந்திக்காமல், ஆணவத்துடன் செயல்படும் தனியார் அனல் மின் நிலையங்களுக்கு இந்த அரசு அறிவுரை வழங்கி, தக்க நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-05

மயிலாடுதுறையிலே பல ஆண்டுகளாக நகரத்தின் உட்பகுதியிலே சுமார் 7 கிலோ மீட்டருக்கு மேல் பழங்காவிரியில் தண்ணீர் தேங்கி சாக்கடைகளாக மாறி, கொசு உற்பத்தி செய்யும் பண்ணைபோலக் காட்சியளித்து வருகிறது. இதனால் இப்பகுதியில் உள்ளவர்களுக்கு மலேரியா, டெங்கு போன்ற மிகக் கொடிய வியாதிகள் உருவாகி கடைசியில் தவிர்க்கமுடியாத மூட்டு வலி வந்துவிடுவதாக இப்பகுதியைச் சேர்ந்த மருத்துவர்களும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் கருத்து தெரிவித்துள்ளனர். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி, மயிலாடுதுறை மக்களுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித உயிருக்கும், விவசாயப் பயிர்களுக்கும், உடைமைகளுக்கும் வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உடனடி இழப்பீடு வழங்க வழி செய்திருக்கும் திட்டத்தை வழங்கிய இவ்வரசைப் பாராட்டுவதோடு, மனித உயிரிழப்புக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை ரூ.1½ இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்த்தி வழங்கியதை வரவேற்கிறோம். ஆனால், மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தெந்த வன விலங்குகளால் பாதிப்பு ஏற்பட்டால் அது வன விலங்குப் பிரிவில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெளிவுபடுத்தினால் கொஞ்சம் நன்றாக இருக்குமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். இந்தப் பிரிவிலே பாம்பு கடித்து இறந்தாலும் ரூ.3 இலட்சம் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுத்தை, புலி, காட்டு எருமை போன்ற வன விலங்குகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. பாம்பு வகையானது வனத்தில் மட்டும் வசிப்பதில்லை. நிலத்தின் அத்தனைப் பகுதியிலுமே வசிக்கின்ற ஒரு பிராணி. ஆகையால், அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி வழங்குவதற்கு வனப் பாதுகாப்புச் சட்டத்தில் இடமில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *பாம்பு கடித்தால் நீங்கள் கேட்கும் நிவாரணம் கிடையாது, பேசுங்கள்.*

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாம்பு கடித்து இறந்தால், உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இப்போது ஒரு இலட்சம் ரூபாயும், அவரது இறுதிச் சடங்குக்கு 2,500 ரூபாயும் கொடுக்கப்பட்டு வருகிறது. அதைக் கொஞ்சம் சேர்த்துத் தரும்படிதான் கேட்டுக்கொள்கிறேனே தவிர, வேறல்ல. நிவாரணம் கொடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள். அதைக் கொஞ்சம் சேர்த்துத் தரும்படி தாழ்மையுடன் மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

****மாண்புமிகு திரு. பி. தங்கமணி**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இலட்சம் ரூபாய் மட்டுமல்ல, பாம்பு கடித்து குடும்பத் தலைவர் இறந்தால் மாண்புமிகு அம்மா அவர்கள் 10 ஆயிரம் ரூபாயும் சேர்த்துக் கொடுக்கிறார்கள் என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி அந்த நிவாரணம் வழங்கப்படுவதில்லை. ஆனால், உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்படி அதற்கு நிவாரணம் வழங்கப்படுகிறது.*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் பேசுங்கள்.*

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அந்த 1½ இலட்சம் ரூபாயை 3 இலட்சமாக உயர்த்திக் கொடுத்ததுபோல, எங்கள் பகுதியிலே விவசாயிகள் பயிரிடச் செல்லும்போதும்,—சாதாரணமாக இப்போது பாம்புகளை கிராமங்களிலே பிடிக்கக்கூடாது என்று சட்டம் இருக்கின்ற காரணத்தினாலும், பாம்புகளினால் அதிகமாக பாதிக்கப்பட்டு, அதிகமாக இறக்கின்ற காரணத்தினாலும் முதல்வர் அவர்கள் கனிவுடன் இதைப் பரிசீலித்து, இதற்கு ஒரு தொகையைச் சேர்த்து வழங்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, வணிக வரித் துறை. வணிக வரித் துறையிலே வரிகள், அபராதம், வட்டித் தொகை போன்றவை அதிக அளவில் நிலுவையில் உள்ளன. அவற்றை வசூலிக்கும்பொருட்டு, 'சமாதான்' திட்டத்தை மீண்டும் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளதை வரவேற்கிறோம்.

அடுத்து, தற்போது திரையரங்குகளில் அவர்களே கட்டணத்தை நிர்ணயித்துக்கொள்கிறார்கள். ஒவ்வொரு நாளும் ஒரு கட்டணத்தை வசூலிக்கிறார்கள். அவர்கள் வழங்கும் டிக்கெட்டுகளின் கட்டண விவரத்தைத் தவிர, அரசுக்குச் செலுத்தும் வரி பற்றிய எந்த விவரமும் கிடையாது. அவர்கள் எவ்வளவு கட்டணம் வசூலித்தாலும் அதற்கான அரசின் வரியை வசூலிப்பதற்கான முறையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, தற்போது நிலத்தை வாங்கி விற்பது ஒரு தொழிலாக மாறிவிட்டது. வசதி படைத்தவர்கள் நிலத்தில் பணத்தை முதலீடு செய்வது பெருகிவிட்டது. ஏழைகள், நடுத்தர மக்கள் குடியிருக்க குறைந்த அளவு நிலத்தை வாங்கும்போதும், பணம் படைத்தவர்கள் நில விற்பனைக்காகப் பெருமளவு நிலத்தை வாங்கும்போதும் ஒரே மாதிரி சதவிகித பத்திரப் பதிவு முத்திரைத்தாள் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதனைக் கொஞ்சம் மாற்றி, குறைந்த அளவு நிலத்தை வாங்கும்போது உள்ளதைவிட, அதிக அளவு நிலத்தை வாங்கும்போது கூடுதல் கட்டணம் வசூலிக்கலாம். மேலும், விவசாயம் மற்றும் குடியிருப்புப் பயன்பாட்டிற்காக வாங்கும் நிலங்களைத்தவிர, தொழில் பயன்பாட்டிற்காக வாங்கும் நிலத்திற்குக் கூடுதல் கட்டணம் வசூலிக்கலாம் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அடுத்து, உயில் எழுதி வைப்பது. அந்தக் காலங்களிலே உயில் எழுதி வைத்துவிடுவார்கள். உயில் எழுதி வைப்பதைப் பதிவு செய்ய வேண்டும். ஏனென்றால், ஒரு இடத்தை வாங்கும்போது வில்லங்கச் சான்றிதழிலே உயில் தொடர்பான விவரங்கள் எதுவும் வருவதில்லை. இடத்தை வாங்கிய பிறகு, உயிலை எடுத்துக்கொண்டு வந்து, இந்தச் சொத்து எனக்குச் சொந்தமானது, என் முன்னோர்கள் எனக்கு எழுதி வைத்திருக்கிறார்கள் என்று சொல்லி, அவர்கள் அதில் பல பிரச்சினைகளையும், வழக்குகளையும் உருவாக்குகிறார்கள். இதனைத் தவிர்க்க உயிலைப் பதிவு செய்யவேண்டும். இதுதொடர்பாக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், மக்கள் பெருக்கத்தின் காரணமாக இப்போது பார்த்தீர்களென்று சொன்னால், தெருக்களிலே சுடுகாடு வந்துவிட்டது. தெருக்கள் ஓரமாகவே மயானம் இருக்கிறது. ஆகவே, தாலுகாவிற்கு ஒரு மின் மயானமாவது ஏற்படுத்தித் தரும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், ஈரோட்டில் 50 ஆண்டுக் காலமாக பத்திரப் பதிவு அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் தற்போது இல்லை. தற்போது ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா அருகில் காலியாகவுள்ள நீதிமன்றக் கட்டடத்திற்கு பத்திரப்பதிவு அலுவலகத்தை மாற்றம் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், தமிழகத்திலே தனியார் கட்டடங்களிலே இயங்கி வருகின்ற அரசு அலுவலகங்கள், வருகின்ற ஐந்து ஆண்டுக் காலத்திற்குள்ளாக சொந்தக் கட்டடங்களிலே செயல்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், பழைய கட்டடங்கள் பழுதடைந்திருந்தால், அந்தக் கட்டடங்கள் தமிழக அரசின் சார்பிலே புதுப்பித்துத் தரப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் கூறுகின்ற பத்திரப் பதிவு அலுவலகம்பற்றி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு அறிவிப்பிலே வெளியிடப்படும் என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இறுதியாக ஒரு வேண்டுகோளை வைக்கின்றேன். நான் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவன் என்பதாலும், இப்போது குறுவை சாகுபடி நடந்து, நெல் கொள்முதல் நடந்து கொண்டிருக்கிற காலம் என்பதாலும் அம்மா அவர்கள் தயவுசெய்து பரிசீலனை செய்து, நெல்லுக்குக் கொள்முதல் விலையை ஏதோ ஓரளவு அதிகரித்துத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு, இந்த அவையிலே பேச அனுமதியளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்திசை நோக்கினும் புகழ் மணம் வீசும் கருணைக் கடலே! மக்கள் சக்தியே! ஏழை எளியோர்களின் தெய்வத் தாயே! எங்கள் அம்மா அவர்களே, அகில உலக அரசியல் அரங்கில் இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்க வைத்து, தமிழர் மானம் காத்து, தன்மானத்துடன் வாழ வழிகாட்டிட்ட தங்கத் தாரகையே! எங்கள் அம்மாவே! (மேசையைத் தட்டும் ஒலி) சுற்றுச்சூழல் நலன் காத்து, இந்த நாடே செழிக்க வழிவகை காணும் வகையில் பசுமை வீடுகள் திட்டம் தந்ததுடன், ஏழை விவசாயிகள் அவர்கள் வாழ்வில் முன்னேற்றத்திற்குப் பாதுகாவலனாக நின்று, ஆடு மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் தந்த ஏழைகளின் ஏந்தலே! (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு தங்க மாங்கல்யம் வழங்கி, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்த ஒளி விளக்கே! (மேசையைத் தட்டும் ஒலி) உலகம் முழுவதும் மக்கள் நலன் காணும் வகையில் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, உலக

முன்னோடித் திட்டங்களைத் தந்து, அதிநவீன தொழில்நுட்பத்தின்மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, திருப்பூர் சாயக் கழிவுநீர்ப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வினை ஏற்படுத்திட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் ஆசியுடன், அனுமதியுடன் என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

அடுத்து அம்மா ஆட்சி வரும்; பார்வையாளர்கள் மாடத்திலே அமர்ந்து, சபை நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டுமென்று நினைத்த என்னையும் அமைச்சராக்கி அழகு பார்த்த அன்புத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 27 ஆண்டுகளாக கழக சட்டமன்ற உறுப்பினர்களே பார்த்திராத என்னை தாம்பரம் தொகுதிக்கு வேட்பாளராக்கி, சட்டமன்ற உறுப்பினராக வெற்றிபெற வைத்து, அமைச்சராக ஆக்கிய இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் எனக்கு வாக்களித்த வணக்கத்திற்குரிய வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னை வெற்றிபெற வைத்த மக்களுக்கு நிறைய பணிகள் செய்ய வேண்டும். அம்மா அவர்கள் யார், யாரையெல்லாம் அமைச்சர்களாக ஆக்குகிறார்களோ, அவர்களையெல்லாம், தொகுதிக்கு அழைத்துவந்து மக்கள் நலப் பணிகளைச் செய்யவேண்டுமென்ற ஆவலில், அமைச்சரவைப் பட்டியலைத் தொலைக்காட்சியிலே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்த என்னையும் இந்த அவையிலே அமைச்சராக்கிய என்னுடைய அன்புத் தாய்க்கு என்னுடைய வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கழகத்திலே தாம்பரம் நகரத்தில் ஒரு வட்டக் கிளைப் பொருளாளராக, செயலாளராகக்கூட இல்லை; ஒரு பொருளாளராக அடியெடுத்து வைத்த என்னை, அதன் பிறகு, 1986-இல் என்னுடைய 22-ஆவது வயதிலேயே தாம்பரம் நகரமன்ற உறுப்பினராக ஆக்கி, சோதனை மிகுந்த 1996 ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் நகரமன்றத் தலைவர் வேட்பாளராகவும் ஆக்கி,



1987-1989-ல் கழக அணி இரண்டாகப் பிரிந்த நேரத்தில் அம்மா அணியிலே நகரக் கழக இணைச் செயலாளராகவும், 1995 முதல் இன்றுவரை நகரக் கழகச் செயலாளராகவும், நகர மன்றக் குழுத் தலைவராகவும், பணியாற்றிக் கொண்டிருந்த என்னை, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினராக்கி, மூன்றாம் முறையாக மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருக்கும் இந்த அமைச்சரவையிலே என்னை அமைச்சராக்கி அழகு பார்க்கும் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) பெரிய பெரிய மிட்டா மிராசுகள், ஜமீன்தாரர்களெல்லாம் மந்திரியான காலம் போய், மாநிலப் பொறுப்பிலே இருப்பவர்கள், மாவட்டச் செயலாளர்களெல்லாம் அமைச்சரான காலம் போய், ஒரு சாதாரண நகர கழகச் செயலாளரைக்கூட அமைச்சராக்கிய என்னுடைய அன்புத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

நகரக் கழகச் செயலாளர் மட்டுமல்ல, இங்கே இருக்கின்ற கம்யூனிஸ்டு தோழர்களுக்குக்கூட ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். Standard Motors-லே 10 வருடங்கள் பணிபுரிந்த தொழிலாளி, மூடப்பட்ட ஒரு தொழிற்சாலையினுடைய தொழிலாளியை மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு அமைச்சராக ஆக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தத் தொழிற்சாலைகூட 1989 ஆம் ஆண்டிலே தி.மு.க. ஆட்சியிலே மூடப்பட்டுவிட்டது. அம்மா அவர்கள் 1991-லே ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே, அந்தத் தொழிற்சாலையைப் பெருமுயற்சியெடுத்துத் திறந்து வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு வருட காலம் நடந்த தொழிற்சாலை, பின்னர், அந்த முதலாளியின் சதியால் மூடப்பட்டுவிட்டது. அத்தகைய தொழிற்சாலையிலே ஒரு சாதாரணத் தொழிலாளியாக இருந்த என்னை இன்றைக்கு அம்மா அவர்கள் அமைச்சராக ஆக்கியிருக்கிறார்கள்.

அம்மா அவர்கள் பட்ஜெட் போடுகிறார்கள் பட்ஜெட் போடுகிறார்கள் என்று அனைவரும் பேசுகிறோம். ஆனால், என்னைப் பொறுத்தவரை அம்மா அவர்களுடைய பட்ஜெட் இன்னும் முடியவேயில்லை. ஏனென்று சொன்னால், அம்மா அவர்கள் மனதிலே தினந்தோறும் பட்ஜெட் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்வரை அம்மா அவர்களுடைய பட்ஜெட்டுக்கு முடிவே கிடையாது.

அதைத்தான் நாம் தினமும் 110 அறிக்கையின்மூலம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

அம்மா அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு விடுதலை வாங்கித் தந்தார்கள் என்று சொல்கிறார்கள். நம்முடைய கம்யூனிஸ்டு உறுப்பினர் அருமை அண்ணன் திரு. சு. குணசேகரன் அவர்கள்கூட மலைக்கு விடுதலை வாங்கித் தந்தார்கள், மண்ணுக்கு விடுதலை வாங்கித் தந்தார்கள் என்று சொன்னார்கள். அம்மா அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, மலைக்கு மட்டுமல்ல, மண்ணுக்கு மட்டுமல்ல, தமிழ்ப் புத்தாண்டுக்கே விடுதலை வாங்கித் தந்தவர்கள் எங்கள் அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு அம்மா அவர்கள் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் திட்டங்களைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமின்றி, தினந்தோறும் பல்வேறு திட்டங்களை, கோடிக்கணக்கான ரூபாய் செலவு பிடிக்கும் திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் வீட்டிற்குக் காய்கறி வண்டி தள்ளிக்கொண்டுவரும் ஒரு பெண்மணி என்னைப் பார்த்துக் கேட்டார்கள், "ஏன் சார், அம்மா, தினம் தினம் பள்ளி மாணவர்களுக்கும், ஏழைகளுக்கும் திட்டத்தை அறிவித்துக்கொண்டிருக்கிறார்களே, பணத்திற்கு எங்கே போவார்கள்?" என்று கேட்டார்கள். ஒரு சாதாரண பெண்மணி, எனக்கு மிகவும் ஆச்சரியமாகப் போய்விட்டது. காய்கறி வண்டி தள்ளிக்கொண்டு வரும் ஒரு சாதாரணப் பெண்மணி, பணத்திற்கு அம்மா எங்கே போவார்கள் என்று கேட்கிறார். ஆனால், அந்தக் காய்கறி விற்கும் பெண்ணுக்கு இருக்கும் அறிவுகூட இன்றைக்கு காங்கிரஸ்காரர்களுக்கு இல்லையே என்பதை எண்ணும்போதுதான் வேதனையாக இருக்கிறது. காய்கறி விற்கும் பெண் என்று சொல்லும்போது, இன்னொன்றை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நீங்கள் இதைச் சாதாரணமாக எண்ணக்கூடாது. — இப்போதெல்லாம் அம்மா அவர்கள் தேர்தலுக்குப் பின்னாலே, தேர்தல் கூட்டணி அமைத்ததற்குப் பின்னாலே, பிரச்சாரத்திற்குச் செல்லும்போது, (மேசையைத் தட்டும் ஒலி) வந்த கூட்டத்தைப் பார்த்துவிட்டு, எல்லோரும் கருத்துக் கணிப்பைச் சொல்கிறார்கள். தேர்தலிலே அம்மா அவர்கள் கூட்டணி அமைத்ததற்குப் பின்னாலே, அம்மா



அவர்கள் பிரச்சாரத்திற்குச் செல்லும்போது, மிகப் பெரியக் கூட்டத்தைப் பார்த்துவிட்டு, அதற்குப் பின்னால்தான் மிகப் பெரிய கருத்துக் கணிப்பையெல்லாம் வெளியிடுகிறார்கள். ஆனால், அடுத்தது அம்மா அவர்கள்தான் ஆட்சிக்கு வருவார்களென்று அந்தக் காய்கறி விற்கும் பெண்மணி ஒரு வருடத்திற்கு முன்பாகவே சொல்லிவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பெண்மணி இன்னொன்றையும் சொன்னார்கள்; அந்தப் பெண்மணி எங்கள் தெருவிற்கு, எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவார்கள். அந்தப் பெண்மணி சொல்லும்போது; சார் அடுத்து அம்மாவின் ஆட்சிதான், நீங்கள்கூட தேர்தலில் நில்லுங்கள், அம்மாவிடம் சீட் கேளுங்கள் என்று சொன்னார்கள். அப்பொழுது நான் சொன்னேன்; என்னால் எல்லாம் வெற்றிபெற முடியுமா என்று கேட்டேன். அதற்கு அந்தப் பெண்மணி சொன்னார்கள்; "உனக்கு யார் சார் ஓட்டுப் போடப் போகிறார்கள்?" அம்மாவுக்குத் தானே ஓட்டுப் போடப் போகிறார்கள்" என்று சொன்னார்கள் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதையெல்லாம் ஏதோ கூட்டிக் குறைத்துச் சொல்லவில்லை, எங்கள் வீட்டிற்கு வரும் அந்தக் காய்கறிப் பெண்மணி உண்மையில் சொன்னது. ஒரு வருடத்திற்கு முன்பாகவே, கருத்துக் கணிப்பை, அந்தக் காய்கறிப் பெண்மணி சொல்லிவிட்டார்கள்.

பிற்பகல் 1-20

அதுமட்டுமல்ல; ஒரே ஒரு டி.வி.-ஐக் கொடுத்துவிட்டு, தான் செய்கின்ற தவறையெல்லாம் மறைத்துவிடலாம் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி நினைத்தார். ஆனால், இன்று டி.வி. கொடுத்தவர்களெல்லாம் ஜெயிலுக்குப் போவதை அந்த டி.வி.-யிலேயே மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் சிறப்பு.

கடந்த தி.மு.க. ஆட்சியில், ஜனவரி மாதம் என்று நினைக்கின்றேன். என் நண்பர் ஒருவர் கேரளாவிற்கு ஒரு நிகழ்ச்சிக்காகச் சென்றார். அந்த நிகழ்ச்சி முடியும்போது அங்குள்ள மக்கள் கருணாநிதி வாழ்க! என்று கத்தினார்களாம், உடனே, ஆச்சரியத்தில் நண்பர், அங்குள்ள மக்களிடம் கருணாநிதி வாழ்க என்று ஏன் கத்துகிறார்கள் என்று ஒருவரை அழைத்துக் கேட்கும்போது அவர் சொன்னாராம், "கருணாநிதியால்தான் எங்களுக்கு ரேஷன் அரிசி வருகிறது என்று". (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது அந்த அளவிற்கு அரிசிக் கடத்தல் இருந்தது

தி.மு.க. ஆட்சியில். ஆனால், இன்று கேரளாவிற்கு அரிசி போகவில்லை, அரிசியைக் கடத்தியவர்கள்தான் நடவடிக்கைகளிலிருந்து தப்பிப்பதற்காக கேரளாவிற்கு ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய வேகத்திற்குச் சான்று ஒன்றை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். என்னுடைய துறை சம்பந்தப்பட்ட திருப்பூர் சாயப் பட்டறைப் பிரச்சினையிலே, எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்; அது ஒரு நீண்டகாலக் பிரச்சினை; மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்ததற்குப் பிறகு, சாயப் பட்டறைப் பிரச்சினைகளுக்காக சம்பந்தப்பட்ட அமைச்சர்களை அழைத்து ஆலோசனைக் கூட்டம் போடச் சொன்னார்கள். அமைச்சர்கள் எல்லோரும் கூடுகிறோம்; பேசுகிறோம் ஒன்றும் புரியவில்லை. அதிகாரிகளும் கூடுகிறார்கள்; புரியவில்லை. அந்த நேரத்தில், அம்மா அவர்கள்; அத்துணைச் சங்கங்களையும், துணிவோடு போராடிக்கொண்டிருக்கின்ற, விவசாயச் சங்கங்களையும், சாயப் பட்டறை முதலாளிகளையும் அனைவரையும் அழையுங்கள்; நான் பேச்சுவார்த்தை நடத்துகிறேன் என்று சொன்னார்கள். அது சாதாரணப் பிரச்சினையல்ல. விவசாயிகளுக்கு ஆதரவாகப் பேசினால், இலட்சக்கணக்கான தொழிலாளர்களுடன் பிரச்சினை ஒரு பக்கம்; நெசவுத் தொழிலாளர்களுக்கு ஆதரவாகப் பேசினால் விவசாயிகளின் போராட்டம் இன்னொரு பக்கம்; எனவே, பயங்கரமான, நெருக்கடியான நேரம். அந்த நேரத்தில், துணிவோடு அனைத்துச் சங்கங்களையும் அழைத்து அம்மா அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அந்தநேரத்திலே, நம்முடைய அருமை அமைச்சர் அண்ணன்கள் எல்லாம் அமர்ந்திருக்கிறோம். என்ன நடக்குமோ, எப்படி இதற்குத் தீர்வு வருமோ என்று காத்திருந்தோம். அத்துணைச் சங்கங்களும் தீர்வுக்காக என்று வராமல், ஏதோ பேசுவதற்கு அழைக்கிறார்கள் செல்வோம் என்றுதான் வந்தார்கள். ஆனால், அம்மா அவர்கள் சாயப் பட்டறை முதலாளிகளை அழைக்கிறார்கள். Dyers Association; அவர்களும் வந்தார்கள், அமர்ந்தார்கள், அந்த நீண்ட காலப் பிரச்சினைக்காக அம்மா அவர்கள் 5 நிமிடங்கள் பேசினார்கள்; புரிந்து கொண்டார்கள்; ஆறாவது நிமிடம் உங்களுக்கு ரூபாய் 200 கோடியை வட்டியில்லாமல் தருகிறேன் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வந்திருந்த அத்துணை சாயப் பட்டறை முதலாளிகளும் கைகளைத் தட்டினார்கள்; எழுந்து சென்றுவிட்டார்கள்.



அடுத்து, விவசாயச் சங்கப் பிரதிநிதிகளை அழைத்தார்கள்; அவர்களும் வந்தார்கள். 5 நிமிடங்களில் அம்மா அவர்கள் அவர்களின் பிரச்சினைகளையும் புரிந்து கொண்டார்கள்; ஆறாவது நிமிடத்தில் உங்களுக்குத் தேவையான நிவாரணத்தை ரூபாய் 18 கோடியே 38 இலட்சத்தை உடனடியாகத் தருகிறேன் என்று அம்மா அவர்கள் சொன்னார்கள். அதுவரை போராடிக் கொண்டிருந்த மிகப் பெரிய சங்கங்களெல்லாம் எழுந்து கையைத் தட்டினார்கள்; சென்றுவிட்டார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால் 5 நிமிடங்களில் நீண்ட கால பிரச்சினையைப் புரிந்துகொண்டு தீர்த்த ஒரே தீர்க்கதரிசி எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்மா அவர்கள் எவ்வளவு வேகமாக, விவேகமாகச் செயல்படுகிறார்கள் என்பதற்கு அதே நிகழ்ச்சியில் இன்னொரு எடுத்துக்காட்டையும் நான் சொல்ல விரும்புகிறேன். திருப்பூர் விவசாயச் சங்கப் பிரச்சினைக்கு அருள்புரம் என்கிற இடத்திலே ஒரு C.E.T.P. இயங்குவதற்கு trial run- Zero liquid discharge செய்வதற்கு அம்மா அவர்கள் ஒரு அனுமதியை அளிக்கிறார்கள். அந்த அருள்புரத்திலே, C.E.T.P. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மாதிரிக்காக நடந்துகொண்டிருக்கிறது. அதையும் கருத்திலேகொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் மற்றொரு திட்டத்தையும் அறிவிக்கிறார்கள். குஜராத்தில், Nano Technology மூலமாக தொழிற்சாலை ஒன்று நடந்துவருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள், அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவை குஜராத்திற்கு அனுப்பி, அந்தத் தொழிற்சாலையைப் பார்வையிட்டு வரவேண்டுமென்று ஆணையிடுகிறார்கள். ஏனென்று சொன்னால், அருள்புரத்தில் இருக்கும் பொது சுத்திகரிப்பு நிலையத்தில் மாதிரி முறை failure ஆகிவிட்டால், Nano Technology முறை உபயோகமாக இருக்கும் என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு குழுவை குஜராத்திற்கு அனுப்புகிறார்கள். அங்கு பேச்சுவார்த்தை முடிந்துவிட்டது. மாலை 7 மணிக்கு நான் என்னுடைய செயலாளருடன் தொலைபேசியில், சார், நாளை காலையிலே 10-00 மணிக்கு என்று ஆரம்பிக்கிறேன். அதற்கு என்னுடைய செயலாளர், 10-00 மணிக்கா, சார் காலை 5-50 மணி விமானத்தில் எங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் குஜராத்திற்குப் போகச் சொல்லியிருக்கிறார்கள் சார் என்று சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால்,

குழு பேச்சுவார்த்தைக்காக குஜராத்திற்குச் சென்று தொழிற்சாலையைப் பார்வையிடுகிறது. அந்தக் குழு குஜராத் போவதற்கு ஒரு வாரம் அல்லது குறைந்தபட்சம் 2 அல்லது 3 நாட்களாவது ஆகும். ஆனால், பேச்சுவார்த்தை முதல் நாள் மதியம் 3 மணிக்கு முடிகிறது; மறு நாள் காலை 5.50 மணி விமானத்திலே மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தக் குழுவை அனுப்பி வைக்கிறார்கள். எவ்வளவு வேகமாக அம்மா அவர்கள் செயல்படுகிறார்கள் என்பதற்கு உதாரணமாக இதைச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-25

அதேநேரத்திலே, நம்முடைய குழு குஜராத்தில் Nano Technology முறையைப் பார்த்துவிட்டு வந்து, இன்றைக்கு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதேபோல், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1995 ஆம் ஆண்டு முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பில் இருந்தபொழுதுதான் சுற்றுச்சூழல் துறை உருவாக்கப்பட்டது. இந்தத் துறைக்கு அமைச்சராக இருப்பதற்காக நான் மிகவும் பெருமைப்படுகிறேன். ஏனென்று சொன்னால், இந்தத் துறையின் முக்கிய நோக்கம், தேசிய நதி நீர் மற்றும் ஏரிகள் பாதுகாப்புத் திட்டம், கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கை நடைமுறைப்படுத்துவது மற்றும் சுனாமி மறுசீரமைப்புத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவது ஆகும். பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் பொது மக்களிடையே சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, இத்துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, 7,500 பள்ளிகளில், 3,00,000 மாணவ, மாணவிகளைக் கொண்ட 'தேசியப் பசுமைப் படை' அமைக்கப்பட்டு பல்வேறு செயல்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

பொதுமக்கள் சுற்றுச்சூழல் பற்றிய விவரங்களை அறிந்துகொள்வதற்கு வசதியாக, வலைதளம் வாயிலாகத் தகவல்கள் அளிக்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்குச் சிறப்பாகப் பணியாற்றிவரும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களைச் சிறப்பிக்கும் வகையில், 'சுற்றுச்சூழல் விருது' வழங்கப்பட்டு வருகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதியொதுக்கீட்டின்கீழ் முனைப்பானச் செயல்பாடுகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மேற்கொண்டு வருகிறது.



அதேபோன்று, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் என்னுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் காலத்திலே, 1982 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு வாரியத்தைத் தொடங்கியது. இந்தியாவிலேயே இரண்டாவது சிறந்த மாசுக் கட்டுப்பாட்டு வாரியமாக, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் திகழ்வது பெரு மகிழ்ச்சியினை அளிக்கிறது. இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக பொது மருத்துவக் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்புகளை 11 இடங்களில் அமைத்து மருத்துவக் கழிவுகளைச் செவ்வனே சுத்திகரித்து வெளியேற்றி வருகின்றது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன், பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேச்சுப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும், வரும் சந்ததியினர் மாசற்ற சூழலை அனுபவிப்பதற்கும் தீவிரமாக அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தொழில்முனைவோர் இணையதளம்மூலம் இசைவாணை விண்ணப்பம் சமர்ப்பிக்கும் முறை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி 15-6-2011 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்த வசதிமூலம் தொழில்முனைவோர் தங்களது விண்ணப்பத்தின் தற்போதைய நிலை குறித்து உலகின் எந்த இடத்திலிருந்தும் தெரிந்துகொள்ளலாம். நாட்டிலேயே முதன் முதலாக 'காற்றுத் தர கண்காணிப்பு மையம்' தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின்மூலம் தலைமை அலுவலகத்திலே ஏற்படுத்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-30

அதுமட்டுமல்ல; அம்மா அவர்கள் வேகமாக மட்டுமல்ல; எவ்வளவு விவேகமாகச் சிந்திக்கிறார்கள் என்பதற்கும் ஓர் உதாரணத்தைச் சொல்லலாம். நமக்கெல்லாம் தேர்தல் அறிக்கை வருகிறது. அதிலே, மிக்சி, கிரைண்டர், மின் விசிறி தரப்படுமென்று அம்மா அறிவிக்கிறார்கள். மிக்சி சரி, கிரைண்டர் சரி, அது என்ன அம்மா அவர்கள் மின் விசிறி அறிவித்திருக்கிறார்களே என்று நான்கூட நினைத்தேன். தாய்மார்களெல்லாம் மிக்சியில் வேலை செய்கிறார்கள், கிரைண்டரில் மாவு அரைக்கிறார்கள், அதன்பின்னர் களைத்துவிடுவார்கள். அப்படிக் களைத்து

விடுபவர்கள் காற்று வாங்க மின் விசிறி. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அளவிற்கு அம்மா அவர்கள் விவேகமாகச் சிந்தித்திருக்கிறார்கள்.

அதேபோல, இந்த அவையிலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாங்களெல்லாம் நன்றி சொல்ல தொகுதிக்குச் செல்லும்போது, குறை கேட்கச் செல்லும்போது மக்களெல்லாம் எங்களை கிரைண்டர் எப்போது தருவீர்கள், மிக்சி எப்போது தருவீர்கள் என்று கேட்கவில்லை. ஆனால், அதற்கு பதிலாக எப்போது எங்கள் ஊர் தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. ஜெயிலுக்குப் போகப் போகிறார்? எப்போது எங்கள் ஊர் தி.மு.க. நகரச் செயலாளரைக் கைது செய்யப்போகிறார்கள் என்றுதான் அனைத்து மக்களும் கேட்கிறார்கள்.

சமீபத்தில்கூட ஸ்டாலின் ஒன்று சொன்னார்; அவர் தன் அப்பாவிடம் அனுமதி கேட்டிருக்கிறாராம், சிறை செல்லும் போராட்டத்திற்கு. நான் ஸ்டாலின் அவர்களுக்கு இந்தச் சபையின் சார்பாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஸ்டாலினுக்கு அந்த அவசியமே தேவையில்லை, ஏனென்றால் இன்னும் ஒரு மாதத்திற்குள் அவர் அப்பா உட்பட எல்லோருமே சிறையில் இருக்கப் போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் உங்களுக்குப் போராட்டம் நடத்த வேண்டிய அவசியமே நிச்சயமாக இருக்காது.

அதேபோல, மாண்புமிகு அம்மா அவர்கள் 1982-83 ஆம் ஆண்டு காலக் கட்டத்திலே, தினமும் தலைமைக் கழகத்திற்கு வருவார்கள். அந்த நேரத்திலே அம்மா அவர்கள் தலைமைக் கழகம் வருகிறபோது, பக்கத்திலே ஓலைக் கொட்டாய்தான் இருக்கும், பில்டிங் இருக்கும். அந்த நேரத்திலே அம்மா அவர்கள் அந்தக் கொட்டகைக்கு வருவார்கள். வருகை தந்திருக்கின்ற அத்தனைக் கழகத் தோழர்களிடத்திலுமே அம்மா அவர்கள் குறைகளைக் கேட்பார்கள். அப்போதெல்லாம் அம்மாவின் பின்னால்தான் நின்று கொண்டிருப்பேன்.

அதேநேரத்திலே, அம்மா அவர்கள் பொதுக் கூட்டங்களுக்குச் செல்வார்கள். காஞ்சிபுரமானாலும், வேலூரானாலும், கடலூரானாலும் எங்குச் சென்றாலும், ஒரு வாகனத்தை வைத்து அம்மா அவர்களின் பின்னாலே செல்கின்ற ஒரு சாதாரணத் தொண்டன்தான் நான். அதேபோல, அம்மா அவர்களை



சத்துணவுத் திட்டத்தின் உயர்மட்டக் குழு உறுப்பினராகப் புரட்சித் தலைவர் அவர்கள் நியமித்தபோது, அம்மா அவர்கள் சத்துணவுத் திட்டங்களைப் பார்வையிடுவதற்காக எங்களுடைய காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஊரப்பாக்கம் போன்ற பகுதிகளுக்கு வருகை தந்தபோது, அப்போதே அம்மா அவர்களின் பின்னாலே சென்ற தொண்டன் நான்.

இதையெல்லாம்விட ஒரு முக்கியமான நிகழ்வு, கொடுமையான நிகழ்வு என்னவென்று சொன்னால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், புரட்சித் தலைவர் அவர்கள் மரணம் அடைந்த நேரத்திலே, அந்தச் சடலத்தைத் தாங்கிய பீரங்கி வண்டியிலே அம்மா அவர்கள் ஏறுகிறார்கள். அந்த நேரத்திலே சில கயவர்கள், அவர்கள் பெயரைச் சொல்வதற்குக்கூட அருகதையில்லாதவர்கள் அம்மா அவர்களைத் தள்ளிவிடுகிறார்கள். அம்மா அவர்கள் உடனே தன்னுடைய போயஸ் தோட்ட இல்லத்திற்குச் செல்கிறார்கள். அப்போதும் அவர் பின்னாலே ஓடிய தொண்டர்களில் ஒருவன் நான்.

கழகம் இரண்டாகப் பிரிந்திருந்த அந்த வேளையிலும், அம்மா அவர்களின் பின்னாலே ஓடிவந்த இந்த அடியேனை இப்போது அமைச்சராக்கி, பின்னாலே அமர வைத்த என்னுடைய அன்புத் தாய்க்கு, எப்போதும் அவர்களது பின்னாலே வரும் இந்த எளிய தொண்டனை அம்மா அவர்கள் சட்டமன்றத்தில் அமர வைத்திருப்பதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியினை என்னுடைய குடும்பத்தின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தலைமுறை தலைமுறையாக அம்மா அவர்களுக்கு எங்கள் குடும்பம் விசுவாசமாக இருப்போம் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்பேரில் சில அறிவிப்புகளைப் படிக்க விரும்புகிறேன்.

## அறிவிப்புகள்

### பிளாஸ்டிக் பொருட்கள் குறித்த விழிப்புணர்வு இயக்கம்

2011-2012 ஆம் ஆண்டிற்கான திருத்த நிதிநிலை அறிக்கையில் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதற்கு ரூ.5 கோடியும், பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் அமைப்பதற்கு ரூ.50 கோடியும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதியிலிருந்து உள்ளாட்சி

அமைப்புகளுக்கு வழங்குவது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, சுற்றுச்சூழல் துறைமூலமாக பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தினால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள் உள்ளிட்ட சூழல் பிரச்சினைகள், பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தடுக்கும் செயல்திட்டம், பிளாஸ்டிக் பொருட்களுக்கான மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்துதல் தொடர்பான பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் ரூ.50 இலட்சம் செலவில் 2011-2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்மூலம் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாடு குறித்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு இயக்கம்:**

பிளாஸ்டிக் கழிவுகளின் தீமைகள் பற்றியும், இக்கழிவுகளைத் தக்க முறையில் மறு சுழற்சி செய்வது குறித்தும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும், தொழில் முனைவோர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பயிற்சி போன்றவை அளிப்பதற்கும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.32 இலட்சம் செலவிட முடிவு செய்துள்ளது.

*பிற்பகல் 1-35*

**நகராட்சி அலுவலர்களுக்குத் திடக்கழிவு மேலாண்மை குறித்த பயிற்சி:**

பெருகிவரும் திடக்கழிவுகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் கண்டறிந்து, அவற்றில் புதிய தொழில்நுட்பங்களைக் கையாளுவது குறித்து நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, 2011-2012-ல் ரூபாய் 3 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய கோயம்புத்தூர் மாவட்ட அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து, ஒரு புதிய அலுவலகம் ஏற்படுத்துதல்:**

கோயம்புத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு தற்பொழுது ஒரு மாவட்ட அலுவலகம் இயங்கி வருகின்றது. ஒரு மாவட்ட



அலுவலகத்திற்கு 1,500 எண்ணிக்கை தொழிற்சாலைகள் இருந்தால் மட்டுமே, அவற்றை ஒரு மாவட்ட அலுவலகம் கூர்ந்து கண்காணிக்க இயலும். இம்மாவட்டத்தில் 2,500-க்கும் அதிகமான அளவில் உள்ள வார்படத் தொழிற்சாலைகள், சாயத் தொழிற்சாலைகள், மின்முலாம் பூச்சுத் தொழிற்சாலைகள் போன்ற அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளைச் செவ்வனே கண்காணிக்கும்பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, கோயம்புத்தூர் மாவட்ட அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து, கோயம்புத்தூர் வடக்கில் ஒரு புதிய மாவட்ட அலுவலகத்தை ரூபாய் 40 இலட்சம் செலவில் வாரியம் ஏற்படுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி)

**கழிவுநீர்த் தொட்டிகளைச் சுத்தம் செய்யும்பொழுது ஏற்படும் உயிரிழப்பினைத் தவிர்க்க தொழிற்சாலைகளுக்குப் பயிற்சி அளித்தல்:**

தொழிற்சாலைகள், கழிவுநீர் சுத்திகரிப்புத் தொட்டிகளைச் சுத்தம் செய்வது வாடிக்கையான ஒன்றாகும். இப்பணியின்பொழுது, கவனக் குறைவின் காரணமாக, ஒவ்வோராண்டும் உயிரிழப்பு நடந்து வருகின்றது. இதனைத் தவிர்க்க, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, அனைத்துத் தொழிற்சாலைகள் மற்றும் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை இயக்குபவர்களுக்குத் தேவையான ரூபாய் 25 இலட்சம் செலவில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் உள்ள சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்மூலம் 2011-2012 முதல் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**புதிய தொழில்நுட்ப செயலாக்க மையம் ஏற்படுத்துதல்:**

தமிழகத்தில் தொழிற்சாலைகளின் வளர்ச்சி பெருமளவு உயர்ந்துள்ளது. புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, புதிய பொருட்களின் உற்பத்தியின் காரணமாக, புதிய வகையான கழிவுகள் மற்றும் வாயுக்கள் வெளியேற்றப்படுகின்றன. இச்சுற்றுச்சூழல் பிரச்சினைகளால், தொழிற்சாலைகள் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் துறைகள் பெரும் சவால்களை நேர்கொள்கின்றன.

எனவே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 2011-2012 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் ஒரு புதிய தொழில்நுட்பச் செயலாக்க மையத்தை ரூபாய் 5 கோடி செலவில் ஏற்படுத்தி, முன்னோடிக் கல்வி நிலையங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களின் உதவியுடன் ஆராய்ச்சிகள் மற்றும் செயலாக்கத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**பசுமை விருதுகள் வழங்கல்:**

சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காகப் பாடுபடும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குப் பசுமை விருதுகளை, தமிழக அரசின் சுற்றுச்சூழல் துறை வழங்கி வருகிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், சுற்றுச்சூழல் தரத்தை உயர்த்த நடவடிக்கைகள் எடுத்த மாவட்ட ஆட்சியர்களுக்குப் பசுமை விருதுகளை 2001 ஆம் ஆண்டு முதல் வழங்கி வந்தது. சென்ற ஐந்து வருடங்களாக இவ்விருது வழங்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்திலே நாம் ஒன்றை நினைத்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள், ஏதோ தி.மு.க. ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்களையெல்லாம், இரத்து செய்கிறார்கள் என்று பேசுகிறார் கருணாநிதி. ஒரு சாதாரண விஷயம்; சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை மாண்புமிகு அம்மா அவர்கள் பசுமை விருது என்ற விருதை வழங்கி வந்தார்கள். ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன், 2006-இலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை அந்த விருதுகள் வழங்கப்படவில்லை. ஒரு சாதாரண, அற்பத்தனமான காரியத்தைக் கருணாநிதி செய்திருக்கிறார். இந்தப் பசுமை விருது என்பது, சரியாகச் செயல்படுகின்ற தொழிற்சாலைகளுக்கும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகிறது. இதை ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பசுமை விருது என்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டது என்பதற்காக, தி.மு.க. அரசு அதைத் தொடர்ந்து வழங்கவில்லை என்பதைத்தான் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, அந்த விருதினை மாற்றியமைத்து, இவ்வாண்டிலிருந்து



சுற்றுச்சூழலை மேம்படுத்த, தொழிற்சாலைகள் எடுத்துள்ள நடவடிக்கைக்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் விருதுகள் வழங்கப்படும். இதன்படி, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காகச் சிறந்த முறையில் செயல்பட்டுவரும் தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு, பசுமை விருதுகள் வழங்கப்படும். தமிழகத்தை நான்கு மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு விருது வீதம், நான்கு மண்டலங்களுக்கு 4 விருதுகள் ஒவ்வோராண்டும் ரூபாய் 5 இலட்சம் செலவில் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**துரித கண்காணிப்புப் படையினை ஏற்படுத்துதல்:**

மணலி, கடலூர், இராணிப்பேட்டை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் உள்ள தொழிற்சாலை வளாகங்களை முனைப்பாகக் கண்காணிக்கவும், தோல் தொழிற்சாலைகள் மற்றும் சாயத் தொழிற்சாலைகள் உள்ள பகுதிகளைக் கண்காணிக்கவும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, இரண்டு புதிய துரித கண்காணிப்புப் படைகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் ஏற்படுத்தும். இக்கண்காணிப்புப் படைகள், சென்னை மற்றும் கோயம்புத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் தலைமையில் செயல்படும்.

**சட்டப் பிரிவினை வலுப்படுத்துதல்:**

மாசுபடுத்துவோர் மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு எதிராகத் தொடுக்கப்படும் வழக்குகள் மற்றும் ரிட் மனுக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இவ்வழக்குகள் மற்றும் ரிட் மனுக்களை எதிர்கொள்ள வாரியமானது, வாரியத்தின் வழக்குரைஞரிடம் அல்லது அரசு வழக்குரைஞரை அமர்த்தியோ அல்லது அறிவுரை பெற்றோ வழக்குகளை நடத்தி வருகின்றது. இருப்பினும், சாயத் தொழிற்சாலைகள், தோல் தொழிற்சாலைகளுக்கு எதிரான ரிட் மனுக்கள் மற்றும் பணி மற்றும் நிர்வாகம் குறித்த ரிட் மனுக்கள்மீது துரித மற்றும் தொடர் நடவடிக்கை அவசியமாகின்றது.

பிற்பகல் 1-40

எனவே, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் சட்டப் பிரிவினை வலுப்படுத்தும் வகையிலும், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் மற்றும் புதிதாக அமைக்கப்படவுள்ள தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்குகளை நடத்த சுற்றுச்சூழல் குறித்த விவரங்கள் அறிந்த ஒரு முதுநிலை சட்ட அலுவலரை நியமிக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**நொய்யல் ஆறு மற்றும் காளிங்கராயன் வாய்க்கால் நீரின் தன்மையினைத் தொடர்ந்து கண்காணித்தல்:**

துணி சாயமிடும் தொழிற்சாலைகள் பெரும்பாலும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள நொய்யல் ஆற்றின் கரைகளிலும், ஈரோடு மாவட்டத்தில் உள்ள காளிங்கராயன் வாய்க்கால் அருகிலும் அமைந்துள்ளன. இவ்விரு நீர்நிலைகளிலும் மாதந்தோறும் நீர் மாதிரிகள் எடுத்து நீரின் தன்மை கண்காணிக்கப்படுகிறது. இவ்விரு நீர்நிலைகளின் தன்மையினைத் தொடர்ந்து கண்காணிக்கும்பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, வரும் நிதியாண்டில் மேற்கூறிய நீர்நிலைகள் ஒவ்வொன்றிலும் மூன்று தொடர் கண்காணிப்பு நிலையங்களை மாசுக் கட்டுப்பாடு வாரியம் ரூபாய் 50 இலட்சம் செலவில் ஏற்படுத்தி நீரில் கரைந்துள்ள உப்புத் தன்மையினைக் கண்காணிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) கண்காணிப்புக் கருவிகள், ஆற்றின் மேல்புறம், கீழ்ப்புறம் மற்றும் நடுவில் பொருத்தப்பட்டு, மாசின் அளவு எல்லா நேரங்களிலும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு ஆற்று நீர் எப்பொழுதும் மாசுபடாமல் கண்காணிக்கப்படும். கண்காணிப்புக் கருவிகள் இணையதளம்மூலம் வாரிய அலுவலகம் மற்றும் அந்தந்த மாவட்ட அலுவலகங்களுடன் இணைக்கப்படும்.

**சுற்றுச்சூழல் நுண்துகள்களைக் கண்காணித்தல்:**

தொழிற்சாலைகளைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் உள்ளாட்சிப் பகுதிகளில் காற்றில் கலந்திருக்கும் நுண்துகள்களைக் கண்காணிக்கும்பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, வரும் நிதியாண்டில் $PM_{10}$ நுண்துகளினை அளவீடு செய்ய 48 கருவிகளையும், $PM_{2.5}$ நுண்துகளினை அளவீடு செய்ய 16 கருவிகளையும் ரூபாய் 1.28 கோடி செலவில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் 8 மாவட்டச் சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



**வாரிய அலுவலகத்தில் தொடர் காற்று தர கண்காணிப்பு மையத்தின் செயல்திறன் மேம்படுத்துதல்:**

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொழிற்சாலைப் பகுதிகளான திருவள்ளூர், அம்பத்தூர், காஞ்சிபுரம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் உள்ள 500-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் தமிழகத்தில் உள்ள மிக அதிக அளவு மாசு ஏற்படுத்தக்கூடிய 17 வகையான 233 தொழிற்சாலைகள் என சுமார் 700-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளை இம்மையத்துடன் இணைத்து அதனைச் செவ்வனே இயக்க, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ஒரு முதன்மை விஞ்ஞான அலுவலர், ஒரு துணை முதன்மை விஞ்ஞான அலுவலர் மற்றும் 6 சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள் ஆகிய பணியிடங்கள் வரும் நிதி ஆண்டில் உருவாக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**வாரியத்தின் 5 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு தரச் சான்றிதழ் பெறுதல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 2011-2012 ஆம் நிதியாண்டில் ரூபாய் 72 இலட்சம் செலவில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், கடலூர், சேலம் ஆகிய 5 இடங்களில் செயல்படும் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களின் தரத்தினை மேம்படுத்த புதுடெல்லியில் உள்ள ஆய்வகங்களின் தேசிய அங்கீகார வாரியத்திடமிருந்து தரச் சான்றிதழ் பெற்று, மேற்படி ஆய்வகங்களின் பகுப்பாய்வு தரம் மற்றும் கண்காணிப்புத் திறனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகரில் புதிய மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம் ஏற்படுத்துதல்:**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மறைமலை நகர், ஒரகடம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் போன்ற தொழிற்பேட்டைகளில் தொடர்ந்து வளர்ந்து வரும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் நீர், காற்று,

ஒலி ஆகியவற்றின் மாசு மற்றும் அபாயகரமான கழிவுகளைப் பகுப்பாய்வு செய்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், 2011-2012 ஆம் நிதியாண்டில் ரூபாய் 58 இலட்சம் செலவில் ஒரு புதிய மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தினைத் தொடங்க திட்டமிட்டுள்ளது. மேலும், இந்த மாவட்டச் சுற்றுச்சூழல் ஆய்வகத்திற்கு ஒரு தலைமை விஞ்ஞான அலுவலர், மூன்று சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள், இரண்டு ஆய்வக உதவியாளர், ஒரு பொது உதவியாளர், ஒரு தட்டச்சர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் பணியிடங்களைப் புதிதாக உருவாக்கவும் வாரியம் திட்டமிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே, வெட்டுத் தீர்மானத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர் அவர்கள் பேசும்போது, பிளாஸ்டிக் பைகள் தடைபற்றிச் சொன்னார். சென்னை உயர் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட பொதுநல வழக்கில், சென்னை உயர் நீதிமன்றம் 27-7-2009 ஆம் நாளிட்ட ஆணையில், 60 மைக்ரான் அளவிற்குக் குறைவான தடிமன் உள்ள பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டினைத் தடை செய்வதுபற்றி மற்ற மாநிலங்களில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் கருத்தில்கொண்டு, அரசு பரிசீலிக்கும் என்று குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆணையின் அடிப்படையில், தற்போது தமிழகத்தில் தூய்மையான பிளாஸ்டிக் அல்லது மறு சுழற்சி பிளாஸ்டிக்மூலம் 60 மைக்ரான் தடிமனுக்குக்கீழ் மற்றும் 8 X 12 அங்குலம் அளவிற்குக்கீழ் பிளாஸ்டிக் பைகள் தயாரிப்பதற்குத் தடை விதிக்க அம்மாவின் அரசு முடிவு செய்துள்ளது. மறு சுழற்சியின்மூலம் தயாரிக்கப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் இந்திய தர நிர்ணயம்மூலம் வகுத்துள்ள தர அளவுக்குட்பட்டு தயாரிக்கப்படுகின்றனவா என்று உறுதி செய்யப்படும். இதற்கான சட்டமுன்வடிவு தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்கு பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

கும்மிடிப்பூண்டி தொகுதி உறுப்பினர், சகோதரர் திரு. சி.எச். சேகர் பேசும்போது, வாகனப் புகை பற்றி தகவலைக் கேட்டார்கள். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், சென்னையில் அம்பத்தூரில் ஒரு வாகனப் புகை சோதனை



மையத்தை நிறுவி, வாகனங்களுக்குப் புகை சோதனை செய்து வருகிறது. இதில் தர அளவீடுகளுக்கு உட்பட்ட வாகனங்களுக்குச் சான்றிதழ் வழங்கி வருகிறது. இதைத் தவிர, சென்னையில் 67 தனியார் வாகனப் புகை சோதனை மையங்கள் மேற்படி பணிகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும் தமிழகத்தில் 268 தனியார் வாகனப் புகை சோதனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேற்படி தனியாருக்குப் போக்குவரத்துத் துறை அனுமதி வழங்கியுள்ளது.

அருமை அண்ணன் உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள் பேசும்போது, ஒரு கருத்தினைக் கேட்டார்கள். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், மாநிலத்தில் உள்ள தோல் தொழிற்சாலைகள் மற்றும் சாயப் பட்டறைகள் அனைத்தும் பூஜ்ய நிலையை அடையக்கூடிய சுத்திகரிப்பு அமைப்பினை ஏற்படுத்த வலியுறுத்தியுள்ளது. இவ்வமைப்பினை ஏற்படுத்தாத தொழிற்சாலைகள் இயங்க அனுமதிக்கப்படுவதில்லை. இதன்மூலம், நிலத்தடி நீர் மாசுபடுவது தடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், தொழிற்சாலைகளில் உள்ள கழிவுநீர்த் தொட்டிகளைச் சுத்தம் செய்யும்போது ஏற்படும் உயிரிழப்பைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்க மாண்புமிகு அம்மா அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல அரிய கருத்துகளையும், நியாயமான கோரிக்கைகளையும் தந்துள்ளனர். மேலும், வெட்டுத் தீர்மானங்கள்மூலம் அரசின் கவனத்திற்கும், பரிசீலனைக்கும் பல முக்கிய பிரச்சினைகளைப் பற்றியும் கூறியுள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்கு மிகுந்த அக்கறையோடு செயல்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில் உங்களது சீரிய கருத்துகளெல்லாம் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்ற உறுதியைப் பேரவையின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கிறேன். ஆகவே, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முதன்மையாக விளங்கிட வேண்டுமென்ற இலக்குடன் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பேரறிஞர் அண்ணாவின் பேராற்றல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்-இன் அன்பு உள்ளம், தந்தை பெரியாரின் துணிச்சல் ஆகியவற்றை ஒருங்கே கொண்ட தமிழினப் பாதுகாவலர், எதிரிகளின் தடைகளைத் தகர்த்தெறிந்து, அடிமைப்பட்டுக் கிடந்த தமிழகத்தைக் காக்க ஆயிரத்தில் ஒருவராய்ப் புறப்பட்டு, *(மேசையைத் தட்டும் ஒலி)* அனைவர் வாழ்விலும் ஒளி விளக்காய்த் திகழ்ந்து, எங்களின் தங்கமாய், குடியிருந்த கோயிலாய், தமிழகத்தைக் காக்கும் காவல்காரனாய், இது நம் நாடு என்று ஒவ்வொருவரையும் உணரச் செய்த அன்னை, பட்டிக்காட்டையும், பட்டணத்தையும் காக்க வந்த தெய்வ மகள் பெற்றெடுத்த திருவிளக்கு, தமிழகத் தேர்தலில் தனிப் பெரும்பான்மை பெற்று தமிழகத்தின் தலைவிதியை திருத்தி எழுதிய திராவிடக் குலத் தலைவி, ஊழலின் ஊற்றுக்கண்ணாய் விளங்கியவர்களை ஊரை விட்டே ஓடச்செய்த உத்தமத் தலைவி, *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழ்நாட்டிற்குத் தலைவலியாக இருந்த தாத்தாவையும், தாதாக்களையும் தலை குனியச் செய்த அவர்களது எண்ணக் கனவுகளை கானல் நீராக்கிய காவல் தெய்வம், தனக்கென வாழாது, தமிழினத்திற்காக வாழும் தகைசால் பெருந்தகை, பார் வியக்கும் வண்ணம் பத்திரிகையாளர்களுக்கு பதிலளித்த பன்மொழிப் புலவர், சகாப்தம் படைத்த சரித்திர நாயகி, தரணி போற்றும் தாலாட்டும் தங்கத் தாரகை, நாளைய இந்தியாவை நாடாள இருக்கும் வீர மங்கை, மாற்றத்தைத் தந்த தமிழக மக்களுக்கு ஏற்றத்தைத் தந்துகொண்டிருக்கும் எங்கள் குல தெய்வம், 10 கோடி உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி, மனிதர் குல மாணிக்கம், 3-ஆவது முறையாகத் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் இந்தியாவின் இணையற்ற முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தென் கோடியில் அமைந்துள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் தம்மத்துகோணம் என்னும் சிறிய கிராமத்தில் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்குக் கிளைக் கழகச் செயலாளர், பேரூர் கழகத்தினுடைய செயலாளர், ஒன்றிய எம்.ஜி.ஆர். மன்றச்



செயலாளர், ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளர், மாவட்டக் கழகச் செயலாளர், மாவட்டக் கழகத்தினுடைய துணைச் செயலாளர் ஆகிய பதவிகளைத் தந்து, 2006 முதல் ஒருங்கிணைந்த மாவட்டக் கழகச் செயலாளராகவும், 3 முறை சட்டமன்ற உறுப்பினராகவும் போட்டியிட வாய்ப்பளித்து, 2001-இல் குளச்சல் சட்டமன்ற உறுப்பினராக்கியும், 2006-இல் மீண்டும் குளச்சல் சட்டமன்ற வேட்பாளராகப் போட்டியிடச் செய்தும், 2011-இல் நடைபெற்ற தேர்தலில் கன்னியாகுமரி சட்டமன்ற வரலாற்றையே மாற்றி, என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கியும், இந்த வனத் துறை அமைச்சர் பொறுப்பையும் வழங்கி, இம்மாமன்றத்திலே வனத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு பதில் அளிக்கும் வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்குகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1-50*

மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வாக்களித்து, என்னை வெற்றிப் பெறச் செய்த கன்னியாகுமரி சட்டமன்றப் பேரவைத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றி கூறுகின்றேன். காடு செழித்தால், நாடு செழிக்கும் என்பது பழமொழி. ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் காடும் செழிக்கவில்லை; நாடும் செழிக்கவில்லை; கருணாநிதியினுடைய வீடுதான் செழித்தது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனங்கள் ஆயிரக்கணக்கான உயிரினங்களின் இருப்பிடமாகவும், மூலிகைகளின் சுரங்கமாகவும் விளங்குகின்றது. நாம் உண்ணும் பல தாவரங்களின் மூல விதைகளும் காடுகளில் காணப்படுகின்றன. எனவேதான், ஒரு நாட்டின் வளம், வன வளத்தில் அமைந்துள்ளது என்று சொல்வார்கள். மண்ணுயிர்களின் மாபெரும் சக்தியாக விளங்கும் வனம்போல், கோடானு கோடி தமிழ் மக்களின் இதயத் துடிப்பாய் விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்டைத் தமிழர் தாம் வாழ்ந்த நிலப் பரப்பை இயற்கைக் கூறுகளின் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகைகளாக

வகைப்படுத்தி, அதற்குண்டான நெறிமுறைகளை வகுத்து வாழ்ந்தனர். குறிஞ்சி நிலம் என வகைப்படுத்தப்படும் மலையும், மலை சார்ந்த பகுதிகளும், முல்லை நிலமான காடு நிலப் பரப்பும், ஒரு நாட்டின் இயற்கை வளங்களைப் பறைசாற்றும் சொத்துக்களாய் உள்ளன. இத்தகைய பல்வேறு பெருமைகளைப் பெற்று வளமுடன் இருந்த தமிழகம், கடந்த ஐந்து ஆண்டுகளில் மைனாரிட்டி அரசால் சுரண்டப்பட்டு, குறிஞ்சி, முல்லை இலக்கணத்திற்குட்பட்ட மலைகள் மற்றும் காடுகள், அதனைச் சார்ந்த நிலப் பரப்புகள், பாலைவனமாய் மாறுவதைத் தடுத்து, நாட்டை மட்டுமல்ல; காடுகளிலும், அதிலுள்ள பலகோடி உயிரினங்களையும் காப்பாற்றியவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதனால் கோடானு கோடி தமிழர்கள் மட்டுமல்லாமல், காடுகளில் வாழும் கோடிக்கணக்கான உயிர் இனங்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வாழ்த்துகின்றன. நீல மணி போன்ற நீரைக் கொண்ட அகழியும், வெட்ட வெளியான நிலப்பரப்பும், நெடிதுயர்ந்த மலைத் தொடரும், மரங்களின் நிழல் செறிந்த வளமான காடுகளும்தான் ஒரு நாட்டிற்குப் பாதுகாப்பு என்பதையே,

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்"

என வள்ளுவப் பெருந்தகை குறிப்பிட்டதற்கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, பல்வேறு சீரிய வளர்ச்சித் திட்டங்கள்மூலம் தமிழ்நாட்டில் வன வளத்தைப் பெருக்க, நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**வனங்களின் மேன்மை:**

வனவியலை வேளாண்மையின் வளர்ப்புத் தாய் என்பார்கள் அறிஞர்கள். இதை நன்கு உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2001 முதல் 2006 வரை தமிழகத்தின் தலைமைப் பொறுப்பேற்று ஆட்சி செய்தபோது, வனப் பாதுகாப்பில் ஈடுபட்டு வரும் கள அலுவலர் மற்றும் களப் பணியாளர்களுக்கு விரைவான தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்தினை உறுதிப்படுத்தும் வகையில் 2005 ஆம் ஆண்டில் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத



வகையில், ஒரு சரித்திர சாதனையாக, அனைத்து வன உயிரின சரகங்களுக்கும், ஒரே நேரத்தில் 225 ஈப்புகளும், கைப்பேசிகளும் வழங்கி ஆணையிட்டார்கள் என்ற தகவலை இந்தப் பேரவைமுன் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**தமிழ்நாட்டினுடைய வன வளம்:**

தமிழ்நாட்டில் இயற்கை வளங்கள் மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலை மற்றும் கடற்கரைத் தொடர் என மூன்று பெரு அமைப்புகளாக உள்ளன. இந்தியாவில் அமைந்துள்ள 16 பெருவகையான காடுகளில் 9 வகைக் காடுகள் நமது மாநிலத்தில் அமைந்திருக்கின்ற காரணத்தினால், இந்தியத் திருநாடு பல்உயிர் எனப் பரவல் செறிந்த பல மாநிலமாகத் திகழ்கின்றது. தமிழ்நாட்டில் மொத்தம் 22,827 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வனங்கள் அமைந்துள்ளன. இது மாநிலத்தில் மொத்த நிலப்பரப்பில் 17.59 விழுக்காடாகும். இந்திய வன நில அளவை நிறுவனத்தின்மூலம் 2009 ஆம் ஆண்டின் கணக்கீட்டின்படி, மாநிலத்தின் வனங்கள் மற்றும் மரங்களின் மொத்த பரப்பு 28,306 சதுர கிலோ மீட்டர் ஆகும். இது மாநில பரப்பில் 21.76 விழுக்காடாகும்.

**தேசிய மற்றும் மாநில வனக் கொள்கை:**

தமிழகத்தின் வனக் கொள்கை மற்றும் வனத் துறையின் செயல்பாடுகள் 1988 ஆம் ஆண்டைய தேசிய வனக் கொள்கையைச் சார்ந்தே உள்ளன. வனங்கள் தரும் சுற்றுச்சூழல் நிலைத் தன்மை, நீராதாரப் பெருக்கம், மண்வளப் பாதுகாப்பு, பிற சூழலியல் சேவை போன்ற மறைமுகப் பலன்களுக்கு தேசிய வனக் கொள்கை முக்கியத்துவம் தருகின்றது. நாட்டில் மூன்றில் ஒரு பகுதி, நிலப் பரப்பை வனப் பரப்பின்கீழ் கொண்டு வருவது, தேசிய வனக் கொள்கையின் முக்கிய குறிக்கோளாக உள்ளது. மாநிலத்தின் வனக் கொள்கையானது உயிர்ப்பன்மை மற்றும் மரபியல் வளங்களைப் பாதுகாத்தல், தரம்குன்றிய காடுகளை மீட்டு புனர் வாழ்வளித்தல், நீர்ப் பிடிப்புப் பகுதிகளைச் செழிப்பாக்குதல் மற்றும் மாநிலத்தின் வனம் மற்றும் வனப் பரப்பினை அதிகரித்தல், பழங்குடியினர் மற்றும் வனத்தையொட்டி வாழும் கிராம மக்களின் பொருளாதார மேம்பாடு மற்றும் நலன் பேணுதல் போன்ற முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது. இதுபோன்று பல்வேறு முக்கியத்துவங்களைக் காடுகள் பெற்றுள்ளதால், இதைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு

தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

பிற்பகல் 1-55

**வனப் பாதுகாப்பு.**

தமிழக வனப் பகுதிகளிலே சந்தன மரம், சிவப்பு சந்தனம், தேக்கு, ஈட்டி, பலா போன்ற தடி மரங்கள் மற்றும் இதர மரங்களைத் திருட்டுத்தனமாக வெட்டிக் கடத்துதல், வன விலங்கு வேட்டை, நில ஆக்கிரமிப்பு, கஞ்சா பயிரிடுதல், சாராயம் காய்ச்சுதல் போன்ற வனக் குற்றங்கள் ஆங்காங்கே நிகழ்கின்றன. வனப் பகுதிகளில் வனக் குற்றங்கள் நிகழ வாய்ப்புள்ள இடங்கள் கண்டறியப்பட்டு, அவ்வாறான பகுதிகளில் களப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் அடிக்கடி ரோந்துப் பணிகளை மேற்கொள்கிறார்கள். வனத்தைச் சார்ந்து வாழும் மக்கள் வனக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு வனப் பாதுகாப்பு மற்றும் தீத் தடுப்பு நடவடிக்கைகளிலே ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். பழங்குடி இனத்தவரைக் கொண்டே வேட்டைத் தடுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, வேட்டைத் தடுப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. மேலும், நடைமுறையிலே உள்ள வனப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மீதான கண்காணிப்பு, வனப் பாதுகாப்புப் படைகள்மூலம் வலுப்படுத்தப்படுகிறது.

**வன எல்லைகள் பராமரிப்பு.**

வன நிர்ணயப் பணிகளை முனைப்புடன் செயல்படுத்த காப்பு நிலங்கள் அரசுக் காப்புக் காடுகளாக அறிவிக்கை செய்யப்பட்டு வருகின்றன. வன நிலங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், வன எல்லைகளைச் சரியாக நிர்ணயித்து நிரந்தர எல்லைத் தூண்கள் கட்டப்பட்டு அதன்மூலம் வன நிலங்களில் புதிய ஆக்கிரமிப்புகள் ஏற்படுத்தப்படாமல் தடுக்கவும் முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் வனப் பணியாளர்கள் வனப் பகுதிகளில் தங்கிப் பணிபுரிய ஏதுவாக களப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டித் தரப்படுகின்றன. பணியாளர்களது பணித் திறனை வலுப்படுத்த உரிய தகவல் தொடர்பு சாதனங்கள், படைக்கலன்கள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.



**மனிதவள மேம்பாடு.**

வனத் துறையில் 12,581 பணியிடங்கள் உள்ளன. அவற்றில் தற்போது 1,785 காலியிடங்கள் உள்ளன. காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று விரைவான நடவடிக்கை எடுக்கப்படும்.

**வனச் சட்டங்கள்.**

தமிழ்நாட்டின் வனச் செல்வங்கள் 1882 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வனச் சட்டம், 1972 ஆம் ஆண்டைய வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம், 1994 ஆம் ஆண்டைய தமிழ்நாடு ரோஸ் வுட் பாதுகாப்புச் சட்டம் மற்றும் இதரச் சட்டங்கள் மற்றும் விதிகள் மூலமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 1949 ஆம் ஆண்டைய தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1995 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மலைத் தல மரங்கள் பாதுகாப்புச் சட்டம் ஆகியவைமூலம் தனியார் காடுகள் மற்றும் மலைத் தலங்களிலுள்ள மரங்கள் வெட்டுவது வரைமுறைப்படுத்தப்படுகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் வனப் பாதுகாப்பு மற்றும் வன வள மேலாண்மைத் திட்டங்களின்மூலமாக மிகச் சிறப்பாகப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியதன்மூலம் 2001 ஆம் ஆண்டு, 27.536 இலட்சம் ஹெக்டேராக இருந்த வன மற்றும் மரங்களின் பரப்பளவு, 2005 ஆம் ஆண்டு 28.66 இலட்சம் ஹெக்டேராக உயர்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, 2001 முதல் 2005 வரையிலான இடைப்பட்ட காலத்தில் மத்திய அரசின் ஃபாரஸ்ட் சர்வே ஆப் இந்தியாவின், 2005 ஆம் ஆண்டு அறிக்கையின்படி தமிழ்நாட்டில் வனம் மற்றும் மரத்தின் பரப்பளவு 1.129 இலட்சம் ஹெக்டேர் அளவில் உயர்ந்தது. ஆனால், 2009 ஆம் ஆண்டு மத்திய அரசினுடைய ஃபாரஸ்ட் சர்வே ஆப் இந்தியாவினுடைய அறிக்கையிலே தமிழ்நாட்டில் வனம் மற்றும் மரங்களின் பரப்பளவு 28.306 இலட்சம் ஹெக்டேர் என கணக்கிடப்பட்டு அதாவது கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வனம் மற்றும் மரங்களினுடைய பரப்பளவு 36,900 ஹெக்டேர் குறைந்துள்ளது என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் 2005 ஆம் ஆண்டில் மரங்களினுடைய பகுதி 4.32 விழுக்காடாக இருந்தது. அதாவது, அகில இந்திய அளவில் 2-வது இடத்தில் தமிழகம் இருந்தது. ஆனால், கடந்த திராவிட முன்னேற்றக்

கழக ஆட்சியில் 2009 ஆம் ஆண்டு, மத்திய அரசினுடைய சர்வேயின்படி மரங்களினுடைய விழுக்காடு 3.82 விழுக்காடாகக் குறைந்து தமிழகம் 3-ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டது. மரங்களினுடைய பகுதி விழுக்காடு பரப்பில் இந்திய மாநிலங்களிலே தமிழகத்தை முதன்மையாகக் கொண்டுவரும் மாண்புமிகு அம்மாவினுடைய முயற்சி, கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சுரண்டல் கொள்கையால் 3-ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டது என்பது வேதனையான உண்மை. இதனைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, காடுகளின் வளத்தையும் மரங்களின் பரப்பளவையும் பெருக்கி, தமிழகத்தை இந்தியாவிலே முதன்மை மாநிலமாக்குவதற்குப் பல்வேறு சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**வனப் பகுதியிலே காடுகளின் அடர்த்தியை மேம்படுத்துதல்.**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரம் குன்றிய காடுகளிலே மரங்களின் அடர்த்தியை அதிகரித்து இயற்கை மர உற்பத்தியை ஊக்குவிக்கும்வகையில் உள்ளூர் மக்களை இணைத்து வன மேலாண்மைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்த நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் 57.80 கோடி செலவிலே பணிகளை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தில் வனக் கோட்ட அளவிலான வன வளர்ச்சி முகமைகள் ஏற்படுத்தப்பட்டு தரம் குன்றிய காடுகளின் தரம் உயர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டம்.**

தமிழ்நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலை சுமார் 450 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைந்துள்ளது. நீலகிரி மாவட்டம் நீங்கலாக, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலுள்ள வனப் பகுதிகளில் சூழல் அமைப்பினை மேம்படுத்தி மரங்கள் அடர்த்தியான



பகுதிகளை அதிகரிக்க மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தை 3.10 கோடி ரூபாயில் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீலகிரி மாவட்டத்திலே, வனப் பகுதிகளில் காடு வளர்ப்புப் பணி, மண்வளப் பாதுகாப்புப் பணி, சோலைக் காடுகளைச் சுற்றி வேலியமைத்தல், தீத்தடுப்புப் பணி, வேட்டைத் தடுப்பு நடவடிக்கை மற்றும் வன உயிரின, உறைவிட மேம்பாட்டுப் பணி போன்றவை மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தவகையில், இந்த ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் 5.8 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே இத்தகைய பணிகளைச் செயல்படுத்துவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**புனித காடுகளைப் பாதுகாத்துப் பேணுதல்.**

தனித்தன்மை வாய்ந்த காடுகள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பராமரித்துப் பாதுகாத்தல் மற்றும் மீட்டல். வனப் பகுதிகளை ஆக்கிரமித்துள்ள களைத் தாவரங்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் அகற்றுதல், மூங்கில் காடுகளின் மேலாண்மையை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் முனைப்புடன் செயல்படுத்தப்படும். வேளாண்மைத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு 4.24 கோடி மதிப்பீட்டிலே செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**பழங்குடியினர்.**

பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில், அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், அவர்கள் வசிப்பிடங்களில் குடியிருப்பு, குடிநீர் வசதி, தகவல் தொடர்பு மற்றும் கல்வி, சுகாதாரம் போன்ற கிராம அடிப்படை வசதிகளை வழங்கவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கல்விச் செல்வத்தைப் பழங்குடி இனத்தவருக்குத் தரும் வகையில், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஜவ்வாது மலை மற்றும் கோவை மாவட்ட ஆனைமலை, புலிகள் காப்பகப் பகுதிகளில் பழங்குடியினருக்கான 20 பள்ளிகளைத் தமிழ்நாடு வனத் துறை பல ஆண்டுகளாகச் சிறப்பாக நடத்தி வருகிறது. இப்பள்ளிகளில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பழங்குடியின

மாணவர்கள் மேல்நிலைக் கல்விவரை பயின்று பயன்பெற்று வருகின்றனர். இப்பள்ளிகளில் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் புறப் பாதுகாப்புப் பணிகள் போன்றவை சிறப்பாக மேற்கொள்ள, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பல்வேறு சீரிய திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

**வனங்களுக்கு வெளியே மரப் பரப்பை அதிகரித்தல்.**

தேசிய வனக் கொள்கையில் கண்டுள்ள மொத்த நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு வனம், மரப் பரப்பாக இருக்க வேண்டுமென்ற இலக்கினை அடையவும், மாநிலத்தில் தடி மரம் மற்றும் விறகு தட்டுப்பாடின்றிக் கிடைக்கவும், வனங்களுக்கு வெளியே உள்ள நிலங்களில் அதிகமாக மரங்களை நட்டு வளர்க்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**தேக்குத் தோட்டங்கள் வளர்த்தல்.**

காப்புக் காடுகளுக்கு வெளியே பாசனக் கால்வாய்கள் மற்றும் ஆற்றங்கரையோரங்களில் தேக்கு மரங்களை நடுவதன்மூலம் கால்வாய் மற்றும் ஆற்றுப் படுகைகள் மண் அரிமானம் தடுக்கப்பட்டு மாநிலத்தின் செடிமர . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை நாளை தொடரும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் மற்றும் கம்யூனிஸ்டு கட்சிகளைச் சார்ந்த சில உறுப்பினர்கள் இந்தத் தடுப்பணை கட்டுகின்ற திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டு, அதைக் கதவணையாக மாற்றிக் கட்டலாம் என்று இங்கே கருத்து தெரிவித்தார்கள். ஆற்றின் குறுக்கே நிலத்தடி நீரைச் செறிவூட்டவும், நீர் இருப்பைக் கூட்டவும் தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. கம்பரசன்பேட்டை கிராமம், முத்தரசநல்லூர் அருகே இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களின் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகரக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றிற்கு நிலத்தடி நீர் எடுக்கப்படுவதால் காவிரி ஆற்றுப் படுகை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, இந்தப் பகுதிகளில் குடிநீர் மற்றும்



விவசாயம் ஆகியவற்றுக்குப் பிரச்சினை ஏற்படுகிறது. இவற்றைத் தடுத்து கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு வருடம் முழுவதும் நீர் கிடைக்கவும், காவிரிப் படுகை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு, கிணறுகளில் நீர்மட்டம் உயரவும், நீரின் தன்மை மேம்படவும் வழிவகை செய்யும்வகையில் ஸ்ரீரங்கம் வட்டம், கம்பரசன்பேட்டை கிராமம், முத்தரசநல்லூர் அருகே 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தடுப்பணை 1.5 மீட்டர் உயரம்தான் இருக்கும். எனவே, இதன்மூலம் கரைப் பகுதிகளுக்கு எந்தவித சேதமும் ஏற்படாது. கதவணை என்பது பாசனத்திற்காகத் தண்ணீரை மாற்றி விடுவதற்கான அமைப்பாகும். இதற்கு சுமார் 200 கோடி ரூபாய் செலவு ஏற்படும். ஆனால், தற்போது தடுப்பணை கட்டப்படும் இடத்திலிருந்து நீர்ப் பாசனத்தைப் பெருக்குவதற்கு வழிவகை எதுவும் இல்லை. தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள தடுப்பணை நிலத்தடி நீர் மேம்பாட்டிற்கும், குடிநீர்த் திட்டங்களுக்கும் ஆண்டு முழுவதும் நீர் கிடைக்கச் செய்வதற்கும் மட்டும்தான் பயன்படும். எனவே, கதவணை கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் நாளை பதிலுரையைத் தொடருவார். மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் நாளை, (30-8-2011) பதிலுரை வழங்குவார்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-8-2011) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

- ஏதுமில்லை -

[பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்]

**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

*70. மானியக் கோரிக்கை எண் 10-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)*

*71. மானியக் கோரிக்கை எண் 11-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)*

*72. மானியக் கோரிக்கை எண் 54-வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)*

*73. வனம் (சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய செயலாக்க வரவு செலவுத் திட்டம், 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)*

*74. வனம் (சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய மக்கள் சாசனம், 2011. (தமிழ், ஆங்கிலம்)*

*75. மானியக் கோரிக்கை எண் 15-சுற்றுச் சூழல் (சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)*

*76. சுற்றுச்சூழல் (சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய செயலாக்க வரவு செலவுத் திட்டம், 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)*

*77. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பற்றிய மக்கள் சாசனம், 2011. (தமிழ், ஆங்கிலம்)*

*78. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011-2012. (தமிழ்)*

*79. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011-2012. (தமிழ்)*

*2011 ஆகஸ்ட் 29]*

# இணைப்பு I

*(463 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 10

## [வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2011 – 2012

**முன்னுரை**

தமிழக அரசு குடிமக்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழக மக்களின் சிறந்த சுகாதாரம், கல்வி மற்றும் ஊட்டச் சத்து அளவீடுகள் இந்நிலையினை பிரதிபலிக்கின்றன. மேலும், உள்கட்டமைப்புகளில் தொடர்ந்து செய்யும் முதலீட்டால் அரசு தமிழகத்தில் விவசாயம், தொழில் துறை மற்றும் சேவைத் துறை ஆகிய மூன்று பொருளாதாரத் துறைகளின் வளர்ச்சியை உறுதி செய்துள்ளது. மாநிலத்தின் வருவாயில் மூன்றில் இரண்டு பங்கினை ஈட்டித் தருவதன்மூலம், இம்மாநிலத்தின் வளர்ச்சி மற்றும் மக்கள் நலத் திட்டங்களுக்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் வணிக வரித் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. வணிகர்களுக்கு தொல்லை கொடுக்காமல் வரி ஆதாரங்களைப் பெருக்க வேண்டும் மற்றும் வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டும் என்பதை இத்துறை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

**2. நிருவாக அமைப்பு**

வணிக வரி ஆணையரிடம், வணிக வரித் துறையின் நிருவாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணியை, அவர் 5 கூடுதல் ஆணையர்கள், 3 இணை ஆணையர்கள் மற்றும் இதர அலுவலர்களின் துணையுடன் செய்து வருகிறார். இத்துறை நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

(1) **வரிவிதிப்புப் பிரிவு:** இப்பிரிவு, கோயம்புத்தூரிலுள்ள இரு விரைவு வழி வரிவிதிப்பு வட்டங்கள் உள்பட 319 வரிவிதிப்பு வட்டங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வரிவிதிப்பு வட்டமும் துணை ஆணையர்/உதவி

[2011 ஆகஸ்ட் 29

ஆணையர்/வணிக வரி அலுவலர் தலைமையில் இயங்கி வருகிறது. இவ்வரிவிதிப்பு வட்டங்கள் மாவட்ட/சரக அளவில் வரிவிதிப்பு துணை ஆணையர்கள் கட்டுப்பாட்டிலும், கோட்ட அளவில் இணை ஆணையர்கள் கட்டுப்பாட்டிலும் உள்ளன. மாநிலத்தில் 40 வரிவிதிப்பு துணை ஆணையர்களும், 10 கோட்ட இணை ஆணையர்களும் உள்ளனர். மேற்குறிப்பிட்ட வரிவிதிப்பு வட்டங்களைத் தவிர ஒரு இணை ஆணையர் தலைமையில் பெருமளவில் வரி செலுத்துவோர் பிரிவு ஒன்று (Large Tax Payers Unit) சென்னையில் இயங்கி வருகிறது.

(2) **தணிக்கைப் பிரிவு:** ஒவ்வொரு வணிக வரி மாவட்டத்திலும்/சரகத்திலும் ஒரு உதவி ஆணையர் மற்றும் ஒரு வணிக வரி அலுவலர் கொண்ட உள் தணிக்கைக் குழு செயல்பட்டு வருகிறது. வரிவிதிப்பு இணை ஆணையரால் வகுத்தளிக்கப்படும் கால அட்டவணைப்படி தணிக்கைக் குழு ஒவ்வொரு காலாண்டிற்குரிய தணிக்கையை மேற்கொள்கிறது. இது தவிர, வரிவிதிப்பு மற்றும் வரி திரும்ப அளித்தல் தொடர்பாக ஆண்டுக்கு ஒரு முறை மாநிலக் கணக்காயராலும் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

(3) **மேல்முறையீட்டுப் பிரிவு:** வரிவிதிப்புக்கு எதிரான முதல் மேல்முறையீட்டினை அந்தந்தப் பகுதி மேல்முறையீட்டு துணை ஆணையர்/இணை ஆணையருக்கு சமர்ப்பிக்க வேண்டும். மாநிலம் முழுவதிலும் 20 மேல்முறையீட்டுத் துணை ஆணையர்களும், 2 மேல்முறையீட்டு இணை ஆணையர்களும் உள்ளனர். விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் இரண்டாவது மேல்முறையீடு செய்யலாம். சென்னையில் முதன்மை தீர்ப்பாயமும், சென்னை, கோவை மற்றும் மதுரையில் கூடுதல் தீர்ப்பாயங்களும் உள்ளன.

(4) **செயலாக்கப் பிரிவு:** இப்பிரிவில் எட்டு செயலாக்கக் கோட்டங்களும், மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுக் குழு ஒன்றும் இணை ஆணையர்களின் தலைமையில் இயங்குகின்றன. செயலாக்கப் பிரிவு குழுக்களாகவும், சுற்றும் படைகளாகவும் செயல்படுகிறது. பிரதான இரயில் போக்குவரத்து நிலையங்கள் மற்றும் சரக்குக் களங்கள் ஆகியவற்றில் அலுவலர்கள் பணிபுரிகின்றனர். வணிக இடங்களில் திடீர் சோதனைகள் மற்றும் ஆய்வுகள் மேற்கொள்வதன்மூலம் செயலாக்கப் பிரிவு வரி ஏய்ப்புகளைக் கண்டறிகிறது. மேலும், வணிகர்களுக்கு முன்னறிவிப்பு செய்து அவர்களது இடங்களுக்குச் சென்று செயலாக்கப் பிரிவின் அலுவலர்கள் கணக்குகளைத் தணிக்கை செய்கின்றனர்.



2011 ஆகஸ்ட் 29]

வரி ஏய்ப்பைக் கண்டறிவதில் சோதனைச் சாவடிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மாநிலத்தில் மொத்தம் இருபத்தெட்டு சோதனைச் சாவடிகள் உள்ளன. அவற்றில் பதினைந்து பெரிய சோதனைச் சாவடிகளாகும். பதின்மூன்று சிறிய சோதனைச் சாவடிகளாகும். இவை அனைத்தும் எல்லையோர சோதனைச் சாவடிகளாகும். சோதனைச் சாவடிகளில் சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் அந்தந்த வரிவிதிப்பு வட்டத்திற்கு அனுப்பப்பட்டு வணிகர்களின் கணக்குகளுடன் ஒப்பிடப்பட்டு சரிபார்க்கப்படுகின்றன. அண்மையில் இப்பணிக்காக ரூ.9.91 இலட்சம் செலவில் சென்னை மற்றும் கோயம்புத்தூர் செயலாக்கப் பிரிவுகளுக்கு 35 கையடக்க மின்முனையங்கள் (Personal Digital Assistants) வழங்கப்பட்டுள்ளன. இதற்கு ஆண்டொன்றுக்கு, தொடர் செலவினமாக ரூ.2.54 இலட்சங்கள் செலவாகும். இம்முனையங்கள் மைய கணினியுடன் இணைக்கப்பட்டு சரக்கு அனுப்புபவர் மற்றும் பெறுபவர்களின் உண்மைத் தன்மையை அறிய சுற்றும் படைகளுக்கு உதவுகின்றன.

### 3. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

வணிக வரித் துறையில் திட்டமிடுவதற்கும், கொள்கை முடிவுகள் மேற்கொள்வதற்கும் தகவல் பகுப்பாய்வு மிகவும் முக்கியமானதொன்றாகும். இப்பணிக்காக வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் புள்ளியியல் இணை இயக்குநர் தலைமையில் புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. கள அலுவலகங்களிலிருந்து சரியான புள்ளிவிவரங்கள் பெறுவதை உறுதி செய்யும் பொருட்டு, ஒவ்வொரு வரிவிதிப்பு கோட்டத்திலும் ஒரு இளநிலை ஆராய்ச்சி அலுவலரும் மற்றும் ஒவ்வொரு வணிக வரி மாவட்டத்திலும்/சரகத்திலும் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் பணிபுரிந்து வருகின்றனர்.

[2011 ஆகஸ்ட் 29

இப்பிரிவில் கீழ்க்கண்ட அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன:

(i) "வணிக வரித் துறை — ஒரு கண்ணோட்டம்" — ஆண்டுதோறும்

(ii) வணிக வரித் துறை — முக்கிய குறியீடுகள் (மடிப்புத் தாள்) — ஆண்டுதோறும்

(iii) வணிக வரித் துறையின் புள்ளிவிவரத் தொகுப்பு — காலமுறை அறிக்கை — ஆண்டுதோறும்

(iv) அனைத்துக் கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் 100 பெரு வணிகர்களின் வருவாய் ஆய்வு — மாதந்தோறும்

(v) அனைத்துக் கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் அதிக வருவாய் ஈட்டும் பொருட்கள் குறித்த வருவாய் ஆய்வு — மாதந்தோறும்

(vi) சட்ட வாரியான மற்றும் கோட்ட வாரியான வருவாய் அறிக்கை — மாதந்தோறும்

(vii) கோட்டங்களின் செயல்பாடு குறித்த அறிக்கை — மாதந்தோறும்

(viii) விற்பனைப் பொருட்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வரி ஏய்ப்பினை மதிப்பீடு செய்துத் தெரியப்படுத்துதல் — தேவைக்கேற்ப

(ix) வரி ஏய்ப்பு அதிகம் காணப்படும் பொருட்கள் குறித்த அறிக்கைகள் — தேவைக்கேற்ப

(x) மதிப்புக் கூட்டு வரி பொருட்களின் விலைகள்மீது ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்காக மதிப்புக் கூட்டு வரிக்கு உட்பட்ட சுமார் 260 பொருட்களின் விலையைக் கண்காணித்து, அறிக்கை தயாரித்தல் — மாதந்தோறும்

**4. வணிக வரிப் பணியாளர் பயிற்சி மையம்**

வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலையம் 1982 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, இணை ஆணையர் பணி தரத்தில் ஒரு இயக்குநர் தலைமையில் இயங்கி வருகிறது. வணிக வரித் துறையில் பணிபுரியும்



2011 ஆகஸ்ட் 29]

அலுவலர்களுக்கு துறை நிருவகிக்கும் சட்டங்கள் மற்றும் வரிவிதிப்பு தொடர்பான விவரங்கள் குறித்து பயிற்சியளிப்பதே இப்பயிற்சி நிலையத்தின் நோக்கம் ஆகும். துறை செயல்பாட்டில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு அதிகரித்துள்ளதால், அலுவலர்களுக்கு அவர்களது பணி தொடர்பான மென்பொருட்களில் பயிற்சி அளிப்பதற்கு ஒரு ஆதார மையமாகவும் இப்பயிற்சி மையம் செயல்படுகிறது.

முன்னதாக மதிப்புக் கூட்டு வரியும் தற்போது சரக்கு மற்றும் சேவை வரியும் (செயல்படுத்தப்படும் போது) நாட்டின் மறைமுக வரிவிதிப்பு முறையில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறிக்கின்றன. இதனை உணர்ந்து இத்துறையின் அலுவலர்கள் சிறப்பாகச் செயல்பட இப்பயிற்சி மையத்தின் பங்கு மேலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

**5. வணிக வரித் துறையில் நிருவகிக்கப்படும் சட்டங்கள்**

வணிக வரித் துறை கீழ்க்கண்ட சட்டங்களை நிர்வகித்து, வரி வசூலிப்பதைச் செயல்படுத்துகிறது :

1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 (31-12-2006 வரை)
2. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970 (31-12-2006 வரை)
3. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 (1-1-2007 முதல்)
4. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956
5. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939
6. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
7. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981
8. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 1990

*[2011 ஆகஸ்ட் 29*

9. *தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் சரக்குகள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001*

*(சென்னை உயர் நீதிமன்றம் தனது 23-3-2007 நாளிட்ட தீர்ப்பின்படி இச்சட்டம் செல்லாது என ஆணையிட்டது இதன் மீதான மேல்முறையீடு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது)*

10. *தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983*

## 6. வரி வருவாய்

*துறை நிர்வகிக்கும் சட்டங்களின்கீழ் ஈட்டிய வருவாய் விவரம் பின்வருமாறு:—*

| ஆண்டு | வருவாய் (ரூபாய் கோடியில்) | வளர்ச்சி விகிதம் |
|---|---|---|
| 2005–2006 | 16,615 | 19.47% |
| 2006–2007 | 19,217 | 15.66% |
| 2007–2008 | 19,952 | 3.83% |
| 2008–2009 | 22,570 | 13.12% |
| 2009–2010 | 24,819 | 9.96% |
| 2010–2011 | 31,117 | 25.37% |
| 2011–2012 (ஜூலை முடிய) | 11,722.08 | 19.73% |

*மேற்கண்ட அட்டவணையிலிருந்து முந்தைய ஆண்டின் அதே காலத்துடன் ஒப்பிடும்போது இந்த நிதியாண்டின் முதல் நான்கு மாதங்களில் ஏறத்தாழ 20% வளர்ச்சியுடன் வரி வருவாய் ஆரோக்கியமான வளர்ச்சிப் பாதையில் உள்ளது எனத் தெளிவாகிறது.*



*2011 ஆகஸ்ட் 29]*

## 7. கடந்த ஆண்டுகளில் சட்ட–வாரியான வருவாய்

*கடந்த ஆறு ஆண்டுகளுக்கான சட்ட வாரியான வருவாய் விவரம் வருமாறு :*

*(ரூபாய் கோடியில்)*

| சட்டம் | 2005–2006 | 2006–2007 | 2007–2008 | 2008–2009 | 2009–2010 | 2010–2011 | 2011–2012 (ஜூலை முடிய) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டம் | 13,658 | 13,416 | 429 | 293 | 218 | 520 | 65 |
| 2. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் | –– | 2,290 | 16,472 | 19,440 | 21,477 | 26,389 | 10,045 |
| 3. மத்திய விற்பனை வரிச் சட்டம் | 1,799 | 2,033 | 1,744 | 1,653 | 1,773 | 2,263 | 865 |
| 4. கேளிக்கை வரிச் சட்டம் | 44 | 25 | 16 | 12 | 13 | 15 | 10 |
| 5. பந்தய வரிச் சட்டம் | 6 | 6 | 6 | 6 | 7 | 6 | 2 |
| 6. ஆடம்பர வரிச் சட்டம் | 92 | 128 | 160 | 170 | 169 | 216 | 82 |
| 7. நுழைவு வரிச் சட்டம் (வாகனம் மற்றும் சரக்குகள்) | 1,016 | 1,319 | 1,125 | 996 | 1,162 | 1,708 | 653 |
| **மொத்தம்** | **16,615** | **19,217** | **19,952** | **22,570** | **24,819** | **31,117** | **11,722** |

[2011 ஆகஸ்ட் 29

**8. வரி நிருவாகத்திற்கான செலவு**

கடந்த ஆறு ஆண்டுகளுக்கான வணிகவரித் துறையின் வருவாய் மற்றும் நிருவாகச் செலவு விவரங்கள் பின்வருமாறு :

(ரூபாய் கோடியில்)

| | 2005–2006 | 2006–2007 | 2007–2008 | 2008–2009 | 2009–2010 | 2010–2011 |
|---|---|---|---|---|---|---|
| 1. வரி வருவாய் | 16,615 | 19,217 | 19,952 | 22,570 | 24,819 | 31,117 |
| 2. செலவுகள் | 110.44 | 128.52 | 143.73 | 187.227 | 205.10 | 196.45 |
| 3. வரி வருவாயில் செலவின் விழுக்காடு | 0.66% | 0.79% | 0.72% | 0.83% | 0.83% | 0.63% |

**9. வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயு மீதான மதிப்புக் கூட்டு வரி நீக்கம்**

மத்திய அரசு, சமையல் எரிவாயுவின் விலையினை 24-6-2011 நள்ளிரவு முதல் சிலிண்டருக்கு ரூ.50/- உயர்த்தியது. இன்றைய நிலையில் சமையல் எரிவாயு அடித்தள, நடுத்தர வகுப்பினராலும் பயன்படுத்தப்பட்டு வருவதால், இவ்விலை உயர்வு அவர்களைப் பெரிதும் பாதித்துள்ளது. வீட்டுப் பெண்மணிகளின் இடரினைக் களையும்பொருட்டு, இந்த அரசானது வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயுமீது விதிக்கப்பட்ட 4 சதவீத மதிப்புக் கூட்டு வரியை 1-7-2011 முதல் முற்றிலுமாக நீக்கிவிடுவதென முடிவு செய்தது. இந்நடவடிக்கையினால், சிலிண்டர் ஒன்றின் விலை ரூ.14.73 குறைந்தது. இதனால் மாநிலத்திலுள்ள 1.36 கோடி வீட்டு சமையல் எரிவாயு உபயோகிப்பாளர்கள் பயன் பெற்றுள்ளனர். மேலும், இனிவருங்காலங்களிலும் இவ்வினத்தில் மதிப்புக் கூட்டு வரி விதிக்க வேண்டியதில்லை எனவும் அரசு முடிவு செய்தது. இதன்மூலம் மாநில அரசுக்கு ஆண்டுதோறும் ரூ.120 கோடி வருவாய் இழப்பு ஏற்படுகிறது.



2011 ஆகஸ்ட் 29]

**10. வேளாண் சாதனங்கள், தெளிப்பான்கள், சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள், இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள், உயிர்க் கொல்லிகள், எலிக்கொல்லிகள் போன்றவற்றின் மீதான மதிப்புக் கூட்டு வரி நீக்கம்**

முன்னதாக, வேளாண் சாதனங்கள், தெளிப்பான்கள், சொட்டுநீர்ப் பாசனக் கருவிகள், இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள், உயிர்க்கொல்லிகள் மற்றும் எலிக்கொல்லிகள் போன்றவை 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் முதல் அட்டவணையில் பகுதி-B-இன்கீழ் சேர்க்கப்பட்டு 4 சதவீத வரி விதிக்கப் பெற்றன. வேளாண் சுமைகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு, இந்த அரசு, இப்பொருட்களுக்கு மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்களித்து, அவற்றைத் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டத்தின் நான்காவது அட்டவணையில் பகுதி-B-ன்கீழ் சேர்த்துள்ளது. இச்சலுகையை அளித்ததனால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.87 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

**11. தமிழ்த் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்களிப்பதற்கான தகுதிகள் குறித்த மாற்றம்**

முன்னர் திரைப்படத் துறையை ஊக்குவிக்க வேண்டும் மற்றும் தமிழ் ஆர்வத்தை வளர்க்க வேண்டும் என்று சொல்லப்பட்ட நோக்கங்களுக்காக தமிழ் பெயர் கொண்ட திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டு வந்தது. அதன் விளைவாக தமிழ்ப் பண்பாட்டிற்கும், பெருமைக்கும் மதிப்பளிக்காத பல தரம்குறைந்த திரைப்படங்கள் கேளிக்கை வரி செலுத்து வதிலிருந்து விலக்கு பெற்றன. இந்நிலையை சரி செய்வதற்காக, கேளிக்கை வரி விலக்கு பெறுவதற்கு திரைப்படத் தணிக்கை வாரியம் அளித்த 'யு' சான்றிதழ் மற்றும் தமிழ் மொழியையும் தமிழ்ப் பண்பாட்டையும் வளர்க்கும் வெளிப்படையான கூறுகள் கொண்ட திரைக்கதை போன்ற கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. திரைப்படங்களைப் பார்வையிட்டு, கேளிக்கை வரி செலுத்துவதிலிருந்து விலக்கு பெறுவதற்கான அவற்றின் தகுதி குறித்து ஆய்வு செய்ய சமூகத்தின் பல்வேறு துறைகளின் வல்லுநர் மற்றும் தமிழ் வளர்ச்சி, கலை மற்றும் பண்பாட்டுத் துறை மற்றும் வணிக வரித் துறை அலுவலர்கள் அடங்கிய ஆய்வுக் குழு ஒன்று ஏற்படுத்தப்படும்.

[2011 ஆகஸ்ட் 29

## 12. தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராகும் தகுதியை சிறு வணிகர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது மற்றும் ஆண்டுதோறும் புதுப்பித்தல் வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்பட்டது

வணிகர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உதவும் நோக்கில் தமிழ்நாடு வணிகர் நல வாரியம், பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்த நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக வாரியம் தொடங்கப்பட்டபோது வாரியத்திற்கு அரசு ரூ.2 கோடி மானியமாக அளித்தது. மேலும், புதிய உறுப்பினர்கள் வாரியத்தில் சேரும்போது அவர்கள் செலுத்தும் உறுப்பினர் கட்டணத்திற்கு இணையாக அரசு ஒவ்வோர் உறுப்பினருக்கும் ரூ.500/ வீதம் மானியம் அளித்து வருகிறது.

முன்னர் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற வணிகர்கள் அல்லது தொழில் வரி செலுத்தும் வணிகர்கள் மட்டுமே இவ்வாரியத்தில் உறுப்பினராகலாம் என வரையறுக்கப்பட்டிருந்தது. இதனால் சிறு வணிகர்கள் வாரியத்தின் நலத் திட்டங்களின் பலன்களைப் பெற முடியவில்லை. மேலும், ஆண்டுதோறும் ரூ.100/- கட்டணமாகச் செலுத்தி உறுப்பினர் தகுதியை புதுப்பித்துக்கொள்ளல் வேண்டும் என்ற இடர்பாடும் இருந்தது. வாரியத்தின் திட்டங்களின் பலன்கள் சிறு வணிகர்களையும் சென்றடைய வேண்டும் என்பதை உறுதி செய்யும் வகையில், தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிய உரிமம் பெற்று வணிகம் செய்யும் சிறு வணிகர்களை, அவர்கள் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006-ன்கீழ் பதிவு பெறாவிட்டாலும் அல்லது தொழில் வரி செலுத்துபவராக இல்லாமல் இருந்தாலும், வாரியத்தில் உறுப்பினராகச் சேர அனுமதித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், ஆண்டுதோறும் உறுப்பினர் தகுதியை புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையையும் நீக்கி அரசு ஆணையிட்டுள்ளது. தற்போது வணிகர்கள் உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணமாக ஒவ்வொரு வருடமும் ரூ.100/- செலுத்த வேண்டியதில்லை. உறுப்பினராகச் சேரும்போது உறுப்பினர் கட்டணமாக ஒருமுறை ரூ.500/- மட்டும் செலுத்தி வாழ்நாள் முழுவதற்கும் உறுப்பினராகத் தொடரலாம்.



2011 ஆகஸ்ட் 29]

வாரியத்தில் 31-7-2011 வரை 46,129 வணிகர்கள் உறுப்பினராகச் சேர்ந்துள்ளனர். குடும்ப நல உதவி, மருத்துவ உதவி, கல்வி உதவி, தீ விபத்துக்கான உதவி போன்ற பல நலத் திட்டங்கள்மூலம் மொத்தம் 508 உறுப்பினர்களுக்கு ரூ.100.82 இலட்சம் அளவில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 13. சமாதானத் திட்டம்

பல்வேறு வணிகர் சங்கங்கள் மற்றும் அமைப்புகளுடன் 1-8-2011 அன்று நடைபெற்ற “வரவு—செலவுத் திட்டத்திற்கு முந்தைய கலந்தாய்வுக் கூட்டத்தில்” வரி நிலுவைகளைத் தீர்வு செய்ய ஏதுவாக “சமாதானத் திட்டத்தை” மறுபடியும் கொண்டுவர வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டன. அக்கோரிக்கைகளை ஏற்று, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் அதன் தொடர்புடைய சட்டங்களின்கீழ் நிலுவையில் இருக்கும் வரி பாக்கிகளை தீர்வு செய்ய ஒரு திட்டத்தை 1-10-2011 முதல் 31-3-2012 வரை நடைமுறைப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ஒரு மசோதா நடப்பு சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தின்மூலம் ரூ.83 கோடி வரி வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 14. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST)

கடந்த சில ஆண்டுகளாக, மறைமுக வரிகளில் விரிவான சீர்திருத்தம் செய்வதற்காக மைய அரசு சரக்குகள் மற்றும் சேவைகள் வரியை அமல்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மதிப்புக் கூட்டு வரி முறையைச் சீராக செயல்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட அமைச்சர் குழு சரக்குகள் மற்றும் சேவைகள் வரியையும் நடைமுறைப்படுத்த தொடர்ந்து செயல்படுகிறது. மாநிலங்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிப்பதற்காகவும், மைய அரசிடம் இது தொடர்பான பிரச்சினைகளை எழுப்பி தீர்த்துக்கொள்ளவும் இக்குழு ஓர் அமைப்பாக செயல்படுகிறது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியைச் செயல்படுத்தும்பொருட்டு முதல்படியாக பாராளுமன்ற வரவு—செலவுக் கூட்டத் தொடரில் அரசியலமைப்பு (115—வது சட்டத் திருத்தம்) மசோதா, 2011 அறிமுகப்படுத்தப்பட்டு பாராளுமன்ற நிதிநிலைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பாராளுமன்ற நிதிநிலைக் குழு இம்மசோதாமீது மாநிலங்களின் கருத்துகளைக் கோரியுள்ளது.

*[2011 ஆகஸ்ட் 29*

*பொருளாதார நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துகிற வகையிலும், பொருளாதார செயல்திறனை மேம்படுத்தும் வகையிலும் பொதுமக்களுக்கு நன்மை செய்யும் வகையிலும், வரிச் சீர்திருத்தங்கள் செய்ய தமிழக அரசு தயாராக இருக்கிறது. அதே வேளையில், அவ்வாறான சீர்திருத்தங்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வரையறுத்துள்ளபடியான மாநிலங்களின் நிதி தன்னாட்சிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தக்கூடாது என்பதில் தமிழக அரசு முனைப்பாக உள்ளது. இந்தக் கொள்கைக்கு ஏற்ப, பாராளுமன்ற நிதி நிலைக் குழுவிற்கு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டத்திருத்த மசோதாவின் தாக்கங்களைக் கருத்தில்கொண்டு இது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். மேலும், இந்த முழுமையான மறைமுக வரி சீர்திருத்த முயற்சியில் மாநிலங்களின் ஒன்றுபட்ட செயல்பாட்டினை உறுதி செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிற மாநில முதலமைச்சர் பலருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.*

**15. மதிப்புக் கூட்டு வரி அறிமுகத்தால் ஏற்பட்ட வரி இழப்பை ஈடு செய்தல்**

*தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரி 1-1-2007-ல் அறிமுகப்படுத்தப்பட்டு, 2007 ஆம் ஆண்டுக்கு 75 விழுக்காடும் 2008 ஆம் ஆண்டுக்கு 50 விழுக்காடும் மத்திய அரசிடமிருந்து இழப்பீடு பெற நமது மாநிலம் தகுதி பெற்றிருக்கிறது. இந்த இரண்டு வருடங்களுக்காக, மத்திய அரசிடம் ரூ.4011.80 கோடி இழப்பீட்டுத் தொகை கோரப்பட்டுள்ளது. ஆனால், இது நாள் வரை ரூ.3361.36 கோடி மட்டுமே பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.650.44 கோடி நிலுவையில் உள்ளது. இந்த நிலுவைத் தொகையை மத்திய அரசிடமிருந்து பெற தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**16. மத்திய விற்பனை வரியை படிப்படியாக குறைத்து நீக்குவதால் ஏற்படும் வரி இழப்பை ஈடுசெய்தல்**

*சரக்குகள் மற்றும் சேவைகள் வரியை அறிமுகம் செய்வதை நோக்கி இந்திய அரசு அடியெடுத்து வைப்பதால் மத்திய விற்பனை வரியை படிப்படியாக நீக்குவது என மத்திய அரசு முடிவு எடுத்தது. அதன் அடிப்படையில் 1-4-2007 முதல் மத்திய விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாகவும், பின்னர், 1-6-2008 முதல் 3 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகவும் குறைக்கப்பட்டது.*



*2011 ஆகஸ்ட் 29]*

*இவ்வாறு வரி விகிதத்தை குறைத்ததால் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பீட்டினை ஈடு செய்ய இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், மாநிலங்கள் புகையிலைமீது வரி விதிப்பதற்கும் ஒப்புதல் அளித்திருந்தது. அதன்படி சில புகையிலைப் பொருட்களுக்கு தமிழக அரசு மதிப்புக் கூட்டு வரியின்கீழ் வரி விதித்தது. சமீபத்தில் அரசு புகையிலை மற்றும் புகையிலை சார்ந்த பொருட்களை (14.5% மதிப்புக் கூட்டு வரி விதிக்கப்படும் பீடி மற்றும் பீடி புகையிலை தவிர) மதிப்புக் கூட்டு வரி அல்லாத பொருட்களின் பட்டியலில் சேர்த்து 20 விழுக்காடு வரி விதிப்பு செய்துள்ளது.*

*இழப்பீட்டுத் தொகையைப் பொறுத்தவரையில் இந்திய அரசாங்கத்திடம் இருந்து கீழ்க்கண்டவாறு ஒரு பெரும் தொகை இன்னமும் பெறப்பட வேண்டியுள்ளது :—*

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | பெற வேண்டிய நிகர தொகை | இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட தொகை | பெற வேண்டிய நிலுவைத் தொகை |
|---|---|---|---|
| 2007–2008 | 1,052.27 | 647.54 | 404.73 |
| 2008–2009 | 1,623.71 | 643.24 | 980.47 |
| 2009–2010 | 1,512.40 | 1,286.80 | 225.60 |
| மொத்தம் | 4,188.38 | 2,577.58 | 1,610.80 |

*2010-2011 ஆம் ஆண்டிற்கான மத்திய விற்பனை வரி இழப்பீட்டுத் தொகையை அளிப்பதற்கான வழிமுறைகளை மத்திய அரசு இதுவரை வெளியிடவில்லை என்றாலும், முந்தைய ஆண்டுகளில் வெளியிடப்பட்ட வழிமுறைகளின்படி ரூ.2309.24 கோடி இழப்பீட்டுத் தொகை கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.*

**17. தகவல் தொழில்நுட்பம்**

*தகவல் தொழில்நுட்பத்தைப் பகுப்பாய்வு சார்ந்த நோக்கங்களுக்காக முதலில் பயன்படுத்திய துறைகளுள் வணிக வரித் துறையும் ஒன்றாகும். 1988 ஆம் ஆண்டிலேயே இத்துறை*

[2011 ஆகஸ்ட் 29

தனக்கென தகவல் விவர மையம் ஒன்றை நிறுவியது. இத்தகவல் விவர மையம் நிதிநிலை அறிக்கை தயாரிப்பதற்கு ஏதுவாக MIS அறிக்கைகளைத் தயாரித்தளித்து வந்தது. அதன் பிறகு தகவல் தொழில்நுட்பத்தை இத்துறையில் அறிமுகப்படுத்துவதன்மூலம் வணிகர்களுக்குண்டான தொடர்புகளை மேம்படுத்தவும், துறையின் செயல்பாடுகளை மேலும் திறனுடையதாக ஆக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2003 ஆம் ஆண்டில் பெருமுயற்சி எடுக்கப்பட்டு துறையின் அனைத்து அலுவலகங்களுக்கும் கணினிகள் வழங்கப்பட்டன. இவ்வலுவலகங்கள் அனைத்தும் ஒரு பெரும் பரப்பு வலையமைப்பு (Wide Area Network) மூலம் சென்னையில் உள்ள மைய கணினியுடன் இணைக்கப்பட்டு தகவல் பரிமாற்றம் செய்யப்பட்டது.

தற்போது துறையின் 215 இடங்களில் அமைந்துள்ள 500—க்கும் மேற்பட்ட வணிக வரி அலுவலகங்களுக்கு தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) மூலம் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் அலுவலகத்திற்கும் அதற்கு அருகில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் இருப்பு நிலையிலிருந்து (TNSWAN Point of Presence) ஒப்பந்த முறையில் 2 MBPS இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**17.1. மின்னணுச் சேவைகள்**

தற்போது துறையுடன் தொடர்புகொள்ள வணிகர்களுக்குப் பின்வரும் மின்னணுச் சேவைகள் நிகழ்நிலையில் அளிக்கப்பட்டு வருகின்றன.

**17.1.1. வணிகர்கள் பதிவு**

வணிகர்கள் மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் புதியதாக பதிவு செய்ய இணையதளம்மூலம் நிகழ்நிலையில் விண்ணப்பம் செய்யலாம். அவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பங்கள் அவற்றிற்குரிய வரி விதிப்பு வட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டு கணினியில் பதிவுச் சான்றிதழ் தயாரிக்கப்பட்டு பதிவுத் தபாலில் வணிகர்களுக்கு அனுப்பப்படுகிறது.

**17.1.2. மாதாந்திர அறிக்கைகளை மின்னணு வழி தாக்கல் செய்தல்**

தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம் ஆகியவற்றின்கீழ் மாதாந்திர அறிக்கைகளைத்



2011 ஆகஸ்ட் 29]

தாக்கல் செய்யும் வணிகர்கள் அவற்றை மின்னணு வழியாக தாக்கல் செய்ய வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதன் பலனாக, 2.57 இலட்சத்துக்கும் அதிகமான வணிகர்கள் துறையின் இணைய தளமான www.tnvat.gov.in மூலம் நிகழ்நிலையில் மாதாந்திர அறிக்கைகளைத் தாக்கல் செய்கின்றனர். தற்போது 81% வணிகர்கள் இம்முறையைப் பின்பற்றுகின்றனர். 100% வணிகர்களும் இம்முறையைப் பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**17.1.3. மின்னணு வழி வரி செலுத்துதல்**

வணிக வரித் துறையின் இணையதளமான www.tnvat.gov.in மூலம் மின்னணு முறையில் நிகழ்நிலையில் வணிகர்கள் வரி செலுத்துவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போது பாரத ஸ்டேட் வங்கி, பரோடா வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் கனரா வங்கி ஆகிய ஐந்து வங்கிகள் இவ்வசதியை அளிக்க அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 60 விழுக்காட்டுக்கு மேல் மின்னணு வழியாக வரி செலுத்தும் முறையில் வரி பெறப்பட்டுள்ளது. மேலும், விஜயா வங்கி, ஐடிபிஐ வங்கி, கார்ப்பரேசன் வங்கி, யுனைடெட் இந்தியா வங்கி, யூகோ வங்கி, இந்திய யூனியன் வங்கி மற்றும் பஞ்சாப் நேஷனல் வங்கி ஆகிய ஏழு வங்கிகளின் வழியாக இந்த வசதியை அளிப்பதற்காக பாரத ரிசர்வ் வங்கியின் ஒப்புதல் பெற தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**17.1.4. விற்பனைக்குரிய படிவங்களைப் பெற மின்னணு வழியில் விண்ணப்பம் செய்யும் வசதி**

விற்பனைக்குரிய படிவங்களான C, E1, E2, F மற்றும் H போன்ற படிவங்களைப் பெறுவதற்கு வணிகர்கள் நிகழ்நிலையில் அவர்களுக்குரிய வரி விதிப்பு அலுவலகங்களுக்கு விண்ணப்பம் செய்யலாம். அவர்களுக்குத் தேவையான படிவங்களை எப்போது வேண்டுமானாலும் வரி விதிப்பு அலுவலகத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளலாம் என மின்னஞ்சல்மூலம் வணிகர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

**17.1.5. வரித் திருப்புகை கேட்பு படிவம்—W-ஐ மின்னணு முறையில் தாக்கல் செய்தல்**

ஏற்றுமதியாளர்கள் வரித் திருப்புகை விண்ணப்பப் படிவம்-W-ஐ துறையின் இணையதளம் மூலம் மின்னணு முறையில் தாக்கல்

[2011 ஆகஸ்ட் 29

செய்யலாம். இக்கோரிக்கைகள் நிகழ்நிலையில் அலுவலர்களால் பரிசீலனை செய்யப்பட்டு வரித் திருப்புகை ஆணை அளிக்கப்படுகிறது. ECS வழியாக வரித் திருப்புகை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 17.1.6. பிற நிகழ்நிலைச் சேவைகள்

வணிகர்களுக்காக இத்துறையின் இணையதளம் வழியாக பின்வரும் சேவைகள் அளிக்கப்படுகின்றன:

(1) சட்டங்கள், விதிகள், படிவங்கள், சுற்றறிக்கைகள், தெளிவுரைகள், அரசாணைகள் மற்றும் அறிவிக்கைகள் தொடர்பான தகவல்கள்

(2) அவர்களது முகப்பு விவரங்கள் மற்றும் வரி செலுத்திய விவரங்கள்

(3) பல்வேறு பொருட்கள் மீதான வரி விவரங்கள்

(4) பிற வணிகர்களது பதிவின் தற்போதைய நிலை குறித்த விவரங்கள்

வணிகர்களுக்காக மேலும் பின்வரும் வசதிகளை துறை விரைவில் செயல்படுத்த உள்ளது:

(1) வருடாந்திர அறிக்கைகளை மின்னணு முறையில் சமர்ப்பித்தல்

(2) திருத்திய மாதாந்திர அறிக்கைகளை மின்னணு முறையில் சமர்ப்பித்தல்

(3) நுழைவு வரி குறித்த மாதாந்திர அறிக்கைகளை மின்னணு முறையில் சமர்ப்பித்தல்

(4) வணிகர் தன்னுடைய மாதாந்திர அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் ‘C’—படிவங்களை நிகழ்நிலையில் வழங்குதல்

### 17.2. துறையின் செயல்பாடுகளில் தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வரி வசூலை செம்மையாகச் செயல்படுத்தவும், கண்காணிக்கவும் ஏதுவாக துறை அலுவலர்களுக்கு பின்வரும் முக்கிய வசதிகள் செய்து



2011 ஆகஸ்ட் 29]

தரப்பட்டுள்ளன:

(1) வட்டம்/சரகம்/கோட்டம் ஆகியவற்றில் மாதந்திர அறிக்கைகள் தாக்கல் செய்தவர்கள் / செய்யாதவர்கள் பற்றிய விவரங்கள்

(2) வரி திருப்புதல் மற்றும் வரி அதிகம் செலுத்தியது போன்ற கோரிக்கைகளைக் கண்காணிக்க வரி செலுத்தியது குறித்த MIS அறிக்கைகள், உள்ளீட்டு வரி சரி செய்த விவரங்கள், வகுப்புவாரியான உள்ளீட்டு வரி கோரிக்கை விவரங்கள்

(3) வணிகரது முகப்பு விவரங்கள்

(4) மாதாந்திர அறிக்கைகள் குறித்த ஆய்வு மற்றும் தணிக்கைக் குறிப்புகள்

(5) சோதனைச் சாவடிகளில் சரக்குகள் மற்றும் வண்டிகளின் நடமாட்டம் குறித்த அறிக்கைகள்

### 17.3. முழுமையான கணினிமயமாக்கம்

துறையின் மேம்பட்ட செயல்பாட்டிற்கு படிப்படியாக கணினிமயமாக்கும் அணுகுமுறை பெருமளவு உதவியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை என்றாலும், இந்த அணுகுமுறை துறையில் இரண்டு இணையான கட்டமைப்புகளைக் கையாளுதல், எண்ணிக்கையில் அதிகரித்துள்ள வணிகப் பரிமாற்றங்களைக் கையாள இயலாமை, பேரிடர் தகவல் மீட்சி (Disaster Recovery System) அமைப்பு இல்லாமை போன்ற சில இடர்களுக்கும் வழி வகுத்துள்ளது. இந்தக் குறைபாடுகளைத் தீர்ப்பதற்காகவும், செயல்முறை சீரமைப்பு, துறையுடன் வணிகர்களுக்கான தொடர்பு முகப்புகளை மேம்படுத்துதல் மற்றும் வரி ஏய்ப்பைத் தடுத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட முழுமையான தகவல் தொழில்நுட்பத் தீர்வு ஒன்றைத் திட்டமிடவும், நடைமுறைப்படுத்தவும் திருவாளர் அக்செஞ்சர் சர்வீஸஸ் பிரைவேட் லிமிடெட் என்னும் நிறுவனத்தை கலந்தற்குரியர்களாக துறை நியமனம் செய்துள்ளது. இத்திட்டத்தை துறையுடன் சேர்ந்து செயல்படுத்த தனியார் நிறுவனமொன்று வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி முறையில் தேர்வு செய்யப்படும். அந்நிறுவனம் கணினி வடிவமைப்பு, அமலாக்கம் மற்றும் ஒப்பந்த காலத்தில் பராமரிப்பு ஆகியவற்றுக்கு

[2011 ஆகஸ்ட் 29

பொறுப்பேற்கும். இந்த முழுமையான தகவல் தொழில்நுட்ப கட்டமைப்புக்குத் தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்தல், நிறுவுதல் மற்றும் செயல்பாட்டுக்குக் கொண்டுவருதல் ஆகியவற்றுக்கு ஒருமுறை செலவாக ரூ.78.73 கோடி ஆகுமென உத்தேசமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், முதலாம் ஆண்டுக்கு தொடர் செலவினமாக ரூ.21.45 கோடி ஆகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மின் ஆளுமையில் ஒரு குறிப்பிட்ட தரத்தை எட்டவும் அதன் மூலம் மாநிலங்களுக்கிடையே சீரான மற்றும் எளிதான தகவல் பரிமாற்றத்தை உறுதி செய்யவும் மத்திய அரசு தேசிய மின் ஆளுமை திட்டத்தின்கீழ் குறிக்கோள் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களில் வணிக வரித் துறையும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இக்குறிக்கோள் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.45.37 கோடி முதலீடு செய்ய மத்திய அரசு ஏற்பளித்துள்ளது. இச்செலவினத்தில் மத்திய அரசின் பங்கு ரூ.31.26 கோடியாகும். மாநில அரசின் பங்கு ரூ.14.11 கோடியாகும். மேற்கண்ட மத்திய அரசால் ஏற்பளிக்கப்பட்டுள்ள குறிக்கோள் திட்டத்தையும் கருத்தில் கொண்டே முழுமையான தகவல் தொழில்நுட்பத் தீர்வு திட்டமிடப்பட்டு வருகிறது.

## 17.4. தகவல் மீட்பு ஆய்வகம்

பல நிகழ்வுகளில் வணிகர்கள் மேம்பட்ட தகவல் தொழில்நுட்ப மென்பொருட்களின் உதவியால் வரி ஏய்ப்பு போன்ற தவறான செயல்களில் ஈடுபடுகின்றனர். ஒவ்வொரு முறையும் வணிகர்களின் கணினியிலிருந்து தகவல்களை மீட்பு செய்ய தொழில்நுட்ப வல்லுநர் ஒருவரை நியமனம் செய்வது நடைமுறையில் சாத்தியமில்லை என்பதாலும், இரகசியங்கள் பாதுகாக்கப்பட வேண்டியிருப்பதாலும் சென்னையில் தகவல் மீட்பு ஆய்வகம் (Date Retrieval Lab) ஒன்றினை ஏற்படுத்த ரூ.21.37 இலட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## 18. தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

வணிகர்களுடன் தொடர்பு கொள்ளும்போது, துறையின் செயல்பாட்டில் வெளிப்படைத் தன்மை இருப்பதற்கு இத்துறை முக்கியத்துவம் அளித்து வருகிறது. பொதுமக்கள் துறை தொடர்பான தகவல்களைப் பெற தகவல் அறியும் உரிமைச் சட்டம் உதவுகிறது.



2011 ஆகஸ்ட் 29]

2010 ஆம் ஆண்டில், அதாவது 1-1-2010 முதல் 31-12-2010 வரையில், இச்சட்டத்தின்கீழ் இத்துறையில் 303 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதன்மீது குறித்த காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

## 19. 2011–2012 ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டம்

நடப்பு நிதியாண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ் வணிக வரித் துறைக்கு பின்வரும் புதியத் திட்டங்கள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன:

(1) ஒன்பது வணிக வரி அலுவலகங்களில் வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.15.24 இலட்சத்தில் நகல் எடுக்கும் இயந்திரங்கள், நிகரி இயந்திரங்கள் மற்றும் லேசர் அச்சுப்பொறிகள் வழங்குதல்

(2) வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலைய வகுப்பறைகளை ரூ.12 இலட்சம் செலவில் மேம்படுத்துதல்

(3) வணிக வரித் துறையின் செயலாக்கப் பிரிவின்கீழ் இயங்கும் 16 தணிக்கைச் சாவடிகளுக்கு மின் உற்பத்தி சாதனங்கள் வழங்க ரூ.12.16 இலட்சம் ஏற்பளிக்கப்பட்டுள்ளது

(4) வணிக வரி ஆணையர் அலுவலகத்திற்கு ரூ.4.18 இலட்சம் செலவில் இரண்டு பல்வகை திறன் கொண்ட நகலெடுக்கும் கருவிகள் வழங்குதல்

(5) ரூ.5.72 இலட்சம் செலவில் துறையின் 6 அலுவலகங்களுக்கு அறைகலன்கள் வாங்குதல்

(6) ரூ.0.70 இலட்சம் செலவில் வேலூர் கோட்ட அலுவலகங்களுக்கு அகத் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்துதல்

[2011 ஆகஸ்ட் 29

# இணைப்பு II

(463 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 11–

## முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு [வணிக வரி மற்றும் பதிவுத் துறை]

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012

### முன்னுரை

1864 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட தமிழ்நாடு அரசின் பதிவுத் துறை, கடந்த 147 ஆண்டுகளாக பொதுமக்களுக்கு சீரிய தொண்டாற்றி வருகிறது. முதலில் முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டம் ஆகிய இரண்டு சட்டங்களை நிருவகிக்கும் பணியுடன் தனது நடவடிக்கையைத் துவக்கிய பதிவுத் துறை, 1865-66 ஆம் ஆண்டில 1,26,373 ஆவணங்களைப் பதிவு செய்து ரூ.1,42,671 வருவாயை ஈட்டியது. ஆனால் கடந்த ஆண்டுகளில் பதிவுத் துறையின் நடவடிக்கைகள் பலவாறாகப் பெருகி தற்போது 5 சட்டங்களை முழுமையாகவும், 9 சட்டங்களைப் பகுதியாகவும் நிர்வகிக்கிறது. 2010-2011 ஆம் ஆண்டில், பதிவுத் துறையில 32.80 இலட்சத்திற்கும் கூடுதலான ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு, 31.64 இலட்சத்திற்கும் கூடுதலான வில்லங்கச் சான்றுகள் வழங்கப்பட்டு, ரூ.5,020 கோடிக்கும் மேல் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் சுமார் 2 கோடி பொதுமக்கள் இத்துறையின் அலுவலகங்களை அணுகியுள்ளனர் என்பது எந்த அளவுக்கு பொதுமக்களுடன் இத்துறை தொடர்பு கொண்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது. தற்போது, அரசுக்கு வருவாயை ஈட்டித் தருவதில் மூன்றாவது இடத்தில் உள்ள பதிவுத் துறை இதன்மூலம் அரசின் பல்வேறு வளர்ச்சி மற்றும் மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துவதில் தனது பங்கை ஆற்றி வருகிறது.

பொருளாதாரப் பின்னடைவு காரணமாக 2008-2009 மற்றும் 2009-2010 ஆண்டுகளில் பதிவுத் துறையால் ஈட்டப்பட்ட வருவாய் சிறிது குறைந்து இருந்தாலும், அதன் பின்னர் ஈட்டப்பட்டு வரும் வருவாய் ஆரோக்கியமான வளர்ச்சியை அடைந்துள்ளது. நடப்பு நிதியாண்டின் முதல் நான்கு மாதத்தில், அதாவது ஜூலை 2011



2011 ஆகஸ்ட் 29]

முடிய, பதிவுத் துறையால் ரூ.1,835.66 கோடி வருவாய் ஈட்டப்பட்டு, கடந்த நிதியாண்டில் இதே கால கட்டத்தில் ஈட்டப்பட்ட வருவாயை விட 17.75 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

### 2. நிருவாக அமைப்பு

பதிவுத் துறைத் தலைவரின் தலைமையில் செயல்படும் இத்துறையில் அவருக்கு உதவியாக மூன்று கூடுதல் பதிவுத் துறைத் தலைவர்கள், ஒரு கூடுதல் சீட்டுப் பதிவாளர், நேர்முக உதவியாளர் (பொது), நேர்முக உதவியாளர் (சீட்டு), கணினிமயமாக்கும் பணிக்காக ஓர் உதவி பதிவுத் துறைத் தலைவர் மற்றும் கணக்கு அலுவலரும் உள்ளனர்.

பதிவுத் துறையில் 700-க்கும் மேற்பட்ட கள அலுவலகங்கள் மாநிலமெங்கும் பரவியுள்ளதால், பொதுமக்களுடன் அதிக தொடர்பு கொண்டுள்ள துறைகளுள் ஒன்றாகத் திகழ்கிறது.

### 2.1. மண்டல அலுவலகங்கள்

மாநிலம் முழுவதும் 9 பதிவு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் துணைப் பதிவுத் துறைத் தலைவர் ஒருவரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இந்த 9 பதிவு மண்டலங்கள் சென்னை, வேலூர், கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டுள்ளன. மண்டலம் முழுவதையும் நிருவகிப்பது, வருவாய் ஈட்டுவதை ஆய்வு செய்வது, தமது கட்டுப்பாட்டிற்குள் உள்ள அனைத்து பதிவுத் துறை அலுவலகங்களையும் திடீராய்வு செய்வது, விசாரணை மேற்கொள்வது ஆகியவற்றிற்கு துணைப் பதிவுத் துறைத் தலைவர் பொறுப்பாவார். 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின்கீழ் இவர் இணை சீட்டுப் பதிவாளராவார்.

### 2.2. வட்டார அலுவலகங்கள்

சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய பெரிய மண்டலங்களிலுள்ள துணைப் பதிவுத் துறைத் தலைவர்களுக்கு உதவியாக மேற்கண்ட 5 இடங்களில் உதவி பதிவுத் துறைத் தலைவர் ஒருவரின்கீழ் வட்டார அலுவலகங்கள் செயல்படுகின்றன. இவர்கள் சார்பதிவாளர்

[2011 ஆகஸ்ட் 29

அலுவலகங்களில் திடீராய்வு செய்வது, புகார் மனுக்களின்மீது விசாரணை செய்வது, தணிக்கை மாவட்டப் பதிவாளரின் பணியினை சோதனை ஆய்வு செய்வது, சீட்டு நிறுவனங்கள் மற்றும் சங்கங்களை ஆய்வு செய்வது ஆகிய பணிகளை மேற்கொள்கின்றனர்.

## 2.3. மாவட்ட அலுவலகங்கள்

மாநிலம் முழுவதும் 50 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு நிர்வாக மாவட்டப் பதிவாளரின் தலைமையில் செயல்படுகின்றன. இந்த 50 பதிவு மாவட்டங்களில் அதிக வேலைப்பளு உள்ள 13 மாவட்டங்கள் உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலை அலுவலர்களாலும், எஞ்சியுள்ள 37 மாவட்டங்கள் மாவட்டப் பதிவாளர்களாலும் நிருவகிக்கப்படுகின்றன. இந்த 50 பதிவு மாவட்டங்களின் தலைவர்கள், தங்களது எல்லைக்குட்பட்ட சங்கங்களின் பதிவாளராகவும், துணை சீட்டுப் பதிவாளராகவும், திருமணப் பதிவாளராகவும் மற்றும் கூட்டுப் பங்காண்மை நிறுவனங்களின் பதிவாளராகவும் உள்ளனர். முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கு உரிமம் வழங்கும் அலுவலர்களாகவும் இவர்கள் உள்ளனர்.

## 2.4. தணிக்கை அலகுகள்

பதிவுத் துறையைப் போன்றதொரு துறைக்கு வலுவான உள் தணிக்கை தேவையான ஒன்றாகும். தணிக்கை மாவட்டப் பதிவாளரின் தலைமையில் மொத்தம் 45 தணிக்கை அலகுகள் தங்களது எல்லைக்குட்பட்ட பதிவுத் துறை அலுவலகங்களில் முழுத் தணிக்கையைச் செய்கின்றன.

## 2.5. சார்-பதிவாளர் அலுவலகங்கள்

மாநிலத்தில் மொத்தமுள்ள 578 சார்-பதிவாளர் அலுவலகங்களில் 575 அலுவலகங்கள் முறையான அலுவலகங்களாகவும், 3 அலுவலகங்கள் முகாம் அலுவலகங்களாகவும் உள்ளன. ஆவணங்களைப் பதிவு செய்வது இவ்வலுவலகங்களின் முக்கியமான பணியாக இருப்பதோடு, சார்-பதிவாளர்கள் 1955 ஆம் ஆண்டு இந்துத் திருமணச் சட்டத்தின்கீழ் திருமணப் பதிவாளர்களாகவும், 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் திருமணப் பதிவாளர்களாகவும், 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணங்கள் சட்டத்தின்கீழ் திருமண அலுவலர்களாகவும், பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளின் பிறப்பு, இறப்புப் பதிவேடுகளைப் பாதுகாப்பவர்களாகவும் மற்றும் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் உதவிப் பதிவாளர்களாகவும் உள்ளனர்.



2011 ஆகஸ்ட் 29]

## 2.6. பதிவுத் துறைப் பயிற்சி மையம்

பல்வேறு சட்டங்களை நிருவகிக்கும் பதிவுத் துறையில் அதன் அலுவலர்கள் அச்சட்டங்கள் மற்றும் அது தொடர்பான விதிகளில் நன்கு பரிச்சயமானவர்களாக இருக்க வேண்டுமென்பது இன்றியமையாததாகும். இதனை உறுதி செய்யும்பொருட்டு, 1996 ஆம் ஆண்டு முதல் பதிவுத் துறை பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையம் துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையில் உள்ள ஓர் இயக்குநரின் தலைமையில் செயல்படுகிறது. தகவல் தொழில்நுட்பப் பயன்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டு வருவதால் பதிவுத் துறையில் பயன்படுத்தப்படும் மென் பொருள்களைக் கையாள்வதற்கும் இத்துறையின் அலுவலர்களுக்கு இம்மையம் பயிற்சி அளிக்கிறது.

பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் கீழ்க்கண்ட சிறப்பு பொறுப்புகளைக் கொண்ட குழுக்கள் செயல்படுகின்றன:

## 2.7. புலனாய்வுப் பிரிவு

ஆவணப் பதிவு செய்யும்போது கட்டடமும் சேர்த்து மாற்றப்பட்டால் அதன் மதிப்பிற்கான முத்திரைத் தீர்வையும் பதிவுக் கட்டணமும் செலுத்த வேண்டும். ஆவணங்களைப் பதிவு செய்யும் போது கட்டடங்கள் பற்றிய தகவல்கள் மறைக்கப்படாமல் தடுக்க ஒரு கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் தலைமையிலான புலனாய்வுப் பிரிவு ஒன்று துறையில் செயல்படுகின்றது. 8 மாவட்டப் பதிவாளர்கள், 4 சார்-பதிவாளர்கள் மற்றும் 2 உதவி செயற் பொறியாளர்கள் இப்பிரிவில் உள்ளனர்.

## 2.8. விழிப்புக் குழு

2002 ஆம் ஆண்டிலிருந்து ஒரு உதவி பதிவுத் துறைத் தலைவர் மற்றும் ஒரு சார்-பதிவாளரைக் கொண்ட விழிப்புக் குழு செயல்படுகின்றது. ஊழல் ஒழுங்கீனம் மற்றும் முறைகேடு தொடர்பாக பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களின்மீது விசாரணை செய்கின்றது.

[2011 ஆகஸ்ட் 29

## 3. துறையால் நிருவகிக்கப்படும் சட்டங்கள்

பதிவுத் துறையால் இன்றுள்ளவாறு, பின்வரும் 14 சட்டங்கள், 5 முழுமையாகவும், 9 பகுதியாகவும் நிருவகிக்கப்படுகின்றன:

### 3.1. முழுமையாக நிருவகிக்கப்படும் சட்டங்கள்

**(அ) 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899)**

மத்திய அரசால் பிரகடனப்படுத்தப்பட்ட இச்சட்டம், பல்வேறு பரிவர்த்தனைகளுக்காக முத்திரைத் தீர்வையை வசூலிக்க வழிவகுக்கின்றது. இச்சட்டத்தின்படி முத்திரைத் தீர்வையைத் தாங்கி இல்லாத ஆவணங்கள் நீதிமன்றத்தில் சாட்சியமாக அனுமதிக்கப்படாது.

**(ஆ) 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 16/1908)**

ஆவணங்களைப் பதிவு செய்வதற்கான நடைமுறைகளை ஒருங்கிணைத்து இயற்றப்பட்டதாகும் இச்சட்டம். ஆவணங்களைப் பதிவு செய்வதற்கு முன்னரும், பின்னரும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகளைப் பற்றி தெரிவிப்பது இச்சட்டத்தின் நோக்கமாகும். பதிவு செய்யப்படாத ஆவணத்தை விட, பதிவு செய்யப்பட்ட ஆவணத்திற்கே சட்டத்தின் பார்வையில் முன்னுரிமை அளிக்கப்படும்.

**(இ) 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 16/1972)**

இலாபம் மற்றும் வணிக நோக்கு இல்லாத நிறுமங்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.

**(ஈ) 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975)**

பொதுமக்களால் அமைக்கப்படும் பல்வேறு கூட்டமைப்புகள் மற்றும் சங்கங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளை முறைப்படுத்த இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.



2011 ஆகஸ்ட் 29]

**(உ) 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982)**

மாநிலத்திலுள்ள சீட்டு நிறுவனங்களின் செயல்பாட்டை இச்சட்டம் முறைப்படுத்துகின்றது. பதிவு செய்யப்பட்ட சீட்டு நிறுவனங்கள் தங்களால் நடத்தப்படும் சீட்டுக் குழுக்கள் குறித்த விவரங்களைத் தெரிவித்தல் வேண்டும்.

### 3.2. பகுதியாக நிருவகிக்கப்படும் சட்டங்கள்

**(அ) 1872 ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 15/1872)**

கிறித்துவ மதத்தினரிடையே நடைபெறும் திருமணங்களின் பதிவை இச்சட்டம் முறைப்படுத்துகிறது.

**(ஆ) 1886 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்கள் பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 6/1886)**

பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்களைப் பதிவு செய்யவும் அதற்கான சான்றிட்ட நகல்களை வழங்கவும் இச்சட்டம் வழிவகுக்கிறது.

**(இ) 1932 ஆம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் (மத்திய சட்டம் 3/1932)**

பார்சி இனத்தவரிடையே நடைபெறும் திருமணம் மற்றும் விவாகரத்து ஆகியவை இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகிறது.

**(ஈ) 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 43/1954)**

வெவ்வேறு மதங்களைச் சார்ந்த மணமக்களிடையே நடைபெறும் திருமணம் இச்சட்டத்தின்கீழ் நடத்தி வைக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**(உ) 1955 ஆம் ஆண்டு இந்துத் திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 25/1955)**

இந்துக்களிடையே ஏற்கெனவே நடைபெற்ற திருமணம் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு, அதற்கான சான்றிட்ட நகல்கள் சார்-பதிவாளர்களால் வழங்கப்படுகிறது.

[2011 ஆகஸ்ட் 29

**(ஊ) 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/2009)**

இச்சட்டத்தின்படி, 24-11-2009-க்குப் பின்னர் எந்த மதங்களைச் சார்ந்தவர்களிடையே நடைபெறும் திருமணங்களாக இருப்பினும் அவை அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பதிவுத் துறையின் அலுவலர்கள் கீழ்க்கண்ட சட்டங்களின்கீழ் சில வரையறுக்கப்பட்ட பணிகளைச் செய்ய அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர்:

**(அ) 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம் (மத்திய சட்டம் 9/1932)**

வியாபாரத்தில் பெறப்படும் இலாபத்தினைப் பங்கிட்டுக்கொள்ளும் பொருட்டு கூட்டாகத் தொடங்கப்படும் கூட்டுப் பங்காண்மை நிறுவனங்களைப் பதிவு செய்ய இச்சட்டம் வழி வகுக்கிறது.

**(ஆ) 1961 ஆம் ஆண்டு வரதட்சணைத் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 28/1961)**

வரதட்சணைக் கொடுமை குறித்த நிகழ்வுகள் ஏதும் சார்-பதிவாளரின் கவனத்திற்கு வரப்பெற்றால, அது குறித்து உள்ளூர் காவல் நிலையத்தில் சார்-பதிவாளர்கள் புகார் அளிக்க இச்சட்டத்தில் வழிவகை உள்ளது.

**(இ) 1969 ஆம் ஆண்டு பிறப்பு மற்றும் இறப்புச் சட்டம் (மத்திய சட்டம் 18/1969)**

இச்சட்டத்தின்படி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் வருவாய்த் துறை அலுவலர்களால் பராமரிக்கப்படும் பிறப்பு, இறப்புப் பதிவேடுகள் 5 ஆண்டுகளுக்குப் பின் பாதுகாத்து வைப்பதற்காக சம்மந்தப்பட்ட சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

**4. ஈட்டப்பட்ட வருவாய் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள்**

கடந்த 10 ஆண்டுகளில் பதிவுத் துறையால் ஈட்டப்பட்ட வருவாய் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விவரம் பின்வருமாறு:



2011 ஆகஸ்ட் 29]

| ஆண்டு | வருவாய் (ரூபாய் கோடியில்) | வளர்ச்சி விகிதம் | பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் | வளர்ச்சி விகிதம் |
|---|---|---|---|---|
| 2001–02 | 1,264.20 | 15.54% | 13,90,394 | 0.49% |
| 2002–03 | 1,648.86 | 30.43% | 15,81,764 | 13.76% |
| 2003–04 | 1,732.91 | 5.10% | 15,92,934 | 0.71% |
| 2004–05 | 1,881.53 | 8.58% | 17,61,696 | 10.59% |
| 2005–06 | 2,348.64 | 24.83% | 20,11,566 | 14.18% |
| 2006–07 | 3,407.50 | 45.08% | 24,92,294 | 23.90% |
| 2007–08 | 4,232.36 | 24.21% | 26,91,002 | 7.97% |
| 2008–09 | 4,099.54 | –3.14% | 28,32,686 | 5.27% |
| 2009–10 | 3,818.25 | –6.86% | 27,31,026 | –3.59% |
| 2010–11 | 5,020.50 | 31.49% | 32,80,503 | 20.12% |

**5. இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47ஏ—ன்கீழ் தனித் துணை ஆட்சியர் (முத்திரை) / மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) ஆகியோரால் மதிப்பு நிர்ணயம்**

சொத்துப் பரிமாற்றத்தினைப் பதிவு செய்யும்போது, சொத்தின் சந்தை மதிப்பை ஆவணதாரர்கள் சரியாக தெரிவிக்க வேண்டும். சொத்தின் சந்தை மதிப்பு ஆவணத்தில் சரியாக பிரதிபலிப்பதை உறுதிப்படுத்த பதிவு அலுவலர்களுக்கு வழிகாட்டி மதிப்புப் பதிவேடு வழங்கப்பட்டுள்ளது. ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட மதிப்பு, வழிகாட்டி மதிப்பின்படி கணக்கிடப்பட்ட மதிப்பை விடக் குறைவாக இருப்பின், 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47ஏ-ன்படி, அந்த ஆவணத்தில் கண்டுள்ள சொத்தின் சந்தை மதிப்பை நிர்ணயம் செய்யும்பொருட்டு தனித் துணை ஆட்சியருக்கு (முத்திரை), சார்-பதிவாளர் அனுப்ப வேண்டும். தனித் துணை ஆட்சியர் (முத்திரை) சொத்தினைக் கள ஆய்வு செய்து, உள்ளூர் விசாரணை செய்து சொத்தின் சந்தை மதிப்பினை நிர்ணயம் செய்கிறார். சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி,

[2011 ஆகஸ்ட் 29

மதுரை, சேலம், வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 11 இடங்களில் தனித் துணை ஆட்சியர் (முத்திரை) அலுவலகங்கள் உள்ளன. பணிப்பளுவைக் கருத்தில கொண்டு சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இப்பணியிடங்களில் மாவட்ட வருவாய் அலுவலர் நிலை அலுவலர்களும், எஞ்சிய 9 இடங்களில் தனித் துணை ஆட்சியர் நிலை அலுவலர்களும் உள்ளனர். தனித் துணை ஆட்சியர் (முத்திரை) / மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) ஆகியோரால் பிறப்பிக்கப்படும் ஆணையை எதிர்த்து பதிவுத் துறைத் தலைவரிடம் மேல் முறையீடு செய்யலாம். இவர்களின் ஆணையை பதிவுத் துறைத் தலைவரும் தன்னிச்சை சீராய்வு செய்யலாம்.

கடந்த ஆறு ஆண்டுகளில் இதன்மூலம் பெறப்பட்ட வருவாய் விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | முடிக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | வசூலிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2005–06 | 6,715 | 3,414.61 |
| 2006–07 | 5,862 | 2,548.24 |
| 2007–08 | 7,800 | 2,885.08 |
| 2008–09 | 6,800 | 3,091.08 |
| 2009–10 | 5,734 | 2,192.06 |
| 2010–11 | 4,890 | 2,271.57 |

## 6. சமாதானத் திட்டம்

சார் பதிவகங்களில் பதிவு செய்யப்பட்டு, இந்திய முத்திரைச் சட்டப் பிரிவுகள் 47ஏ(1), 47ஏ(3) மற்றும் 19பி(4) ஆகியவற்றின்படி சந்தை மதிப்பு நிர்ணயம் செய்வதற்காக மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ள ஆவணங்கள் அதிக அளவில்



2011 ஆகஸ்ட் 29]

நிலுவையாக உள்ளன. இதனால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அவர்களது ஆவணம் திரும்பக் கிடைக்காமலும் அரசுக்கு வரவேண்டிய வருவாய் முடங்கியும் உள்ளது. நிதிநிலை அறிக்கையில் இவ்வாறு முடங்கியுள்ள வருவாயை ஈட்டவும், பொது மக்கள் தங்களது ஆவணத்தைத் திரும்பப் பெறவும் ஏதுவாக சமாதானத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிக்கை விரைவில் வெளியிடப்படும். அரசின் இந்த முயற்சியால் கூடுதலாக ரூ.125 கோடி வருவாய் நடப்பு நிதியாண்டில் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 7. வழிகாட்டி மதிப்புகளை மாற்றியமைத்தல்

வழிகாட்டி மதிப்புகள் இறுதியாக ஆகஸ்ட் 2007-ல் திருத்தியமைக்கப்பட்ட பின்னர், நில உடைமைகளின் மதிப்பு பலவாறாக உயர்ந்துள்ளது. வழிகாட்டி மதிப்புகள் சந்தை மதிப்பிற்கு ஏற்ப உள்ளதை உறுதி செய்யவும், அவற்றிற்கு சட்ட அங்கீகாரம் வழங்கவும், மாநிலக் குழுவும் மற்றும் மாவட்ட அளவில் உப குழுக்களும் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாநில அளவிலான குழுவிற்கு பதிவுத் துறைத் தலைவரும், மாவட்ட அளவிலான உப குழுக்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களும் தலைவர்களாக உள்ளனர். தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களிலும் புதிய சந்தை மதிப்பு வழிகாட்டி தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

இப்பணியை விரைந்து முடிக்க ஏதுவாக, கணினியில் விவரங்களை உட்புகுத்த தகவல தொகுப்புப் பணியாளர்களை நியமிப்பது மற்றும் இது தொடர்பான பணிகளுக்கான செலவினத்திற்காக ரூ.5 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 8. உள்ளாட்சி மன்றங்களுக்கான மாற்றுத் தீர்வை

விற்பனை, பரிமாற்றம், தானம், நிலையான குத்தகை போன்ற ஆவணங்களைப் பதிவு செய்யும்போது 2 சதவிகிதமும், அனுபவ உரிமையுடன்கூடிய அடமான ஆவணங்களைப் பதிவு செய்யும்போது 1 சதவிகிதமும் மாற்றுத் தீர்வையாக பதிவுத் துறை வசூலிக்கின்றது. முத்திரைத் தீர்வை மட்டுமன்றி மாற்றுத் தீர்வையும் வசூலிக்கப்படுகின்றது. இவ்வாறு வசூலிக்கப்படும் மாற்றுத் தீர்வையில் 3 சதவிகிதத்தை வசூலிப்புக் கட்டணமாக பதிவுத் துறை இருத்தி

வைத்துக் கொண்டு எஞ்சிய 97 சதவிகிதத்தை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்குகின்றது. நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை அரசாணை (நிலை) எண் 62, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 28-2-2011-ல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, வசூலிக்கப்பட்ட மாற்றுத் தீர்வையில் நகர்ப்புறங்களிலுள்ள உள்ளாட்சி மன்றங்களுக்குப் பாதியும், மிகுதியை தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு நிதிக்கு நகர்ப்புற உள்ளாட்சிகளில் பெரிய திட்டங்களை செயல்படுத்துவதற்காகவும் அளிக்கப்படுகிறது. கடந்த 2010-11 ஆம் ஆண்டில் ரூ.743.79 கோடி மாற்றுத் தீர்வையாக வசூலிக்கப்பட்டு, அதில் ரூ.723.05 கோடி உள்ளாட்சிகளுக்கு மாற்றப்பட்டு, ரூ.20.74 கோடி வசூலிப்புக் கட்டணமாக இருத்திக் கொள்ளப்பட்டது.

## 9. இதர பணிகள்

### 9.1. சங்கங்கள்

மக்களால் ஒரு கூட்டாக அமைக்கப்படும் அமைப்புகளையோ அல்லது சங்கங்களையோ பதிவு செய்ய 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் ஏதுவாக்குகிறது. நிருவாக மாவட்டப் பதிவாளரிடம் சங்கங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் தங்களது ஆண்டுக் கணக்குகளை நிருவாக மாவட்டப் பதிவாளரிடம் கோர்வை செய்ய வேண்டும். சங்கங்கள் தொடர்பான புகார்களை விசாரிக்க இவருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ் பதிவுத் துறைத் தலைவர் சங்கப் பதிவாளராவார். பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிட பதிவுத் துறைத் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

31-7-2011 அன்றுள்ளவாறு மாநிலத்தில் மொத்தம் 2,37,689 பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் உள்ளன.

### 9.2. சீட்டுகள்

1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் பதிவுத் துறைத் தலைவர் சீட்டுகளின் பதிவாளர் ஆவார். சீட்டு நிறுவனங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்கக் கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில் கூடுதல் சீட்டுப் பதிவாளரும், நேர்முக உதவியாளரும்



(சீட்டு), பதிவுத் துறைத் தலைவருக்கு உதவுகின்றனர். தங்களுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் துணைப் பதிவுத் துறைத் தலைவர்கள் இணை சீட்டுப் பதிவாளர்களாகவும், மாவட்டப் பதிவாளர்கள் துணை சீட்டுப் பதிவாளர்களாகவும் உள்ளனர். மேலும் மாவட்டங்களில் சீட்டுகள் தொடர்பான பணிகளை கவனிக்க 47 சார்-பதிவாளர்கள் சீட்டுகளின் ஆய்வாளர்களாகப் பணியாற்றுகின்றனர். சீட்டுகள் தொடர்பான வழக்குகளை விசாரித்து தீர்வு செய்ய வட மற்றும் தென் சென்னை, மத்திய சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 3 இடங்களில் சீட்டு நடுவர்கள் உள்ளனர். இதர இடங்களில் நிருவாக மாவட்டப் பதிவாளர் சீட்டு நடுவர் பணியை மேற்கொள்கின்றனர். சீட்டு நடுவர்களின் ஆணையை எதிர்த்து அரசிடம் மேல்முறையீடு செய்யலாம்.

தமிழ் நாட்டில் 31-7-2011 அன்றுள்ளவாறு 1,630 சீட்டு நிறுவனங்களும், இவற்றால் 41,960 சீட்டுகளும் நடத்தப்படுகின்றன.

### 9.3. கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள்

1932 ஆம் ஆண்டு கூட்டுப் பங்காண்மை சட்டத்தின்படி, கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும். அனைத்து நிருவாக மாவட்டப் பதிவாளர்களும் இச்சட்டத்தின்கீழ் பதிவாளர்களாவர். நிறுவனத்தின் அமைப்பில் ஏதேனும் மாற்றம் செய்தால் அதையும் இச்சட்டத்தின்படி கோர்வை செய்ய வேண்டும். 31-7-2011 அன்றுள்ளவாறு 5,19,777 பதிவு செய்யப்பட்ட கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

### 9.4. திருமணப் பதிவு

திருமணங்களை கட்டாயமாகப் பதிவு செய்ய வழிவகுக்கும் 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம் இயற்றப்பட்டவுடன், திருமணப் பதிவு மேற்கொள்ளும் துணைமைப் பணியானது துறையின் முக்கியமான பணிகளுள் ஒன்றாகி விட்டது. இது தொடர்பான முக்கிய சட்ட நடைமுறை செயல்பாடுகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:

[2011 ஆகஸ்ட் 29

### 9.4.1. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம்

உச்ச நீதிமன்றம், தனது 14-2-2006 நாளிட்ட தீர்ப்பில் (AIR 2006 SC 1158) இந்தியக் குடிமக்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும் அவர்களிடையே நடைபெறும் திருமணத்தினைப் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட வேண்டுமென்றும், இதற்கேற்றவாறு அனைத்து மாநிலங்களும் தக்க சட்டம் கொண்டு வர வேண்டும் என்றும் ஆணையிட்டது. உச்ச நீதிமன்ற ஆணையினை செயல்படுத்தும் முகத்தான் 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, 24-11-2009-க்குப் பின்னர் எந்த மதங்களைச் சார்ந்தவர்களிடையே நடைபெறும் திருமணங்களாக இருப்பினும் அவை அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கடந்த 2010-2011 ஆம் ஆண்டில் 78,323 திருமணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 9.4.2. 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம்

இருவேறு மதத்தைப் பின்பற்றுபவர்களுக்கிடையே திருமணத்தை நடத்தி வைக்கவும் அதனைப் பதிவு செய்யவும் இச்சட்டம் வழிவகுக்கிறது. மாவட்டப் பதிவாளர்களும் சார்-பதிவாளர்களும் இச்சட்டத்தின்கீழ் திருமண அலுவலர்களாக உள்ளனர். இச்சட்டத்தின்படி, உத்தேசிக்கப்பட்ட திருமணம் குறித்த அறிவிப்பை சம்பந்தப்பட்ட திருமண அலுவலரிடம் தாக்கல் செய்து 30 நாட்கள் கடந்த பின்னர், ஆட்சேபணை ஏதும் பெறப்படாத பட்சத்தில், திருமண அலுவலரால் திருமணம் நடத்தி வைக்கப்பட்டு பதிவு செய்யப்படும். 2010-2011 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் 4,750 திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 9.4.3. 1872 ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டம்

இச்சட்டத்தின்படி, திருமணத்தை நடத்தி வைக்க உரிமம் பெற்றவர்கள், திருமணத்தை நடத்தி வைத்த பின் அது குறித்த விவரத்தை சம்பந்தப்பட்ட நிருவாக மாவட்டப் பதிவாளரிடம் தெரிவிக்க வேண்டும். மாவட்டப் பதிவாளர், இவ்விவரத்தை, இதற்கான பதிவேட்டினைப் பராமரிக்கும் பதிவுத் துறைத் தலைவருக்கு அனுப்பி வைத்து அப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட பின் இதற்கான வடிப்புகள் வழங்கப்படுகிறது.



2011 ஆகஸ்ட் 29]

2010-11 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 2,977 திருமணங்கள் பதிவு செய்யப்பட்டு, 3,275 வடிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

## 10. மின்னணு முத்திரை

போலி முத்திரைத் தாள்களின் புழக்கத்தைத் தடுத்து முத்திரைத் தீர்வையை மாற்று வழியில் செலுத்தும் சுலபமான, பாதுகாப்பான, தடையற்ற வழியாகும் மின்னணு முத்திரையிடும் முறை. இதற்கு கீழ்க்கண்ட சிறப்பம்சங்கள் உள்ளன:

(அ) வேகமான தடையற்ற முத்திரைத் தீர்வை செலுத்தும் வசதி

(ஆ) அரசுக் கணக்கில் உடனடி வரவு

(இ) இணையதளம்மூலம் மின்னணு முத்திரைச் சான்றிதழ்

(ஈ) முத்திரை சான்றிதழை எந்த நேரமும் வாங்கும் வசதி

(உ) இணையதளம்மூலம் முத்திரைத் தீர்வை செலுத்தியதை உறுதி செய்ய வசதி

தற்போது சென்னை மண்டலத்திலுள்ள 60 சார்-பதிவாளர் அலுவலகங்களிலும் [Stock Holding Corporation of India Ltd. (SHCIL)] நிறுவனத்தின்மூலம் மின்னணு முத்திரையிடுவது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. 31-7-2011 முடிய ரூ.65.27 கோடி மதிப்பிலான 2,539 மின்னணு முத்திரை சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு தற்போது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, கார்ப்பரேஷன் வங்கி மற்றும் இந்திய சென்ட்ரல் வங்கி ஆகியவை அங்கீகரிக்கப்பட்ட வசூலிப்பு மையங்களாக உள்ளன.

## 11. வருவாய் அதிகரித்தல்

மாநிலத்தின் நிதி ஆதாரங்களை அதிகரிக்கும் பொருட்டு, பொது மக்களை பாதிக்காத வண்ணம் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் துறையால் எடுக்கப்பட்டுள்ளன.

### 11.1. உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு உடன்படிக்கைகளை பதிவு செய்வதற்கான கட்டணங்களில் மாற்றம்

அதிகமான சொத்துப் பரிமாற்றங்களுக்கு வங்கிக் கடன்மூலம் நிதி வசதி செய்யப்படுகின்றது. அவ்வாறு கடன் வழங்கும் போது,

[2011 ஆகஸ்ட் 29

சொத்துரிமை தொடர்பான ஆவணங்களை ஒப்படைக்க வங்கிகள் கடன் பெறுபவரிடம் உடன்படிக்கை செய்து கொள்கின்றன. இத்தகைய உடன்படிக்கைகளின் பதிவை இந்திய ரிசர்வ் வங்கி கட்டாயமாக்கியுள்ளது. இத்தகைய ஆவணங்களைப் பதிவு செய்வதால் சொத்து தொடர்பான வில்லங்கச் சான்றுகளில் இப்பதிவு இடம் பெறுவதால் வங்கிகளும் தங்களது கடனை வசூலிக்க சுலபமாகிறது. இத்தகைய ஆவணங்களுக்கான அதிகபட்ச முத்திரைத் தீர்வை ரூ.5,000 என்றும் பதிவுக் கட்டணம் ரூ.1,000 என்றும் 2004 ஆம் ஆண்டில் அப்போது நிலவிய சொத்துக்களின் மதிப்பு மற்றும் அவற்றை வாங்கப் பெறப்படும் கடன்மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டது. அதன் பின்னர் சொத்துக்களின் மதிப்பும் அவற்றை வாங்க வங்கிகளில் பெறப்படும் கடன்களின் மதிப்பும் கணிசமாக உயர்ந்துள்ளதாலும், இத்தகைய ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்களின் உச்சவரம்பு முறையே ரூ.25,000 மற்றும் ரூ.5,000 என 12-7-2011 முதல் மாற்றியமைக்கப்பட்டது.

### 11.2. குத்தகை ஆவணங்களுக்கான பதிவுக் கட்டணத்தில் மாற்றம்

அசையாச் சொத்தின் மீதான அனுபவ உரிமையைக் குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக் கொண்டு குறிப்பிட்ட காலத்திற்கு மாற்ற குத்தகை ஆவணங்கள் வழிவகுக்கின்றன. இதற்கான பதிவுக் கட்டணத்தின் உச்சவரம்பு ரூ.5,000 என 2004 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்டது. தற்போது சொத்துக்களின் மதிப்பு கணிசமாக உயர்ந்துள்ளதால் குத்தகை ஆவணங்களுக்கான பதிவுக் கட்டணத்தின் உச்சவரம்பு ரூ.20,000 என 12-.7-2011 முதல் மாற்றியமைக்கப்பட்டது.

### 11.3. பொது அதிகார ஆவணங்களுக்கான பதிவுக் கட்டணத்தில் மாற்றம்

பொது அதிகார ஆவணம் என்பது ஒரு சொத்தின் உரிமையாளர் அச்சொத்தின் விற்பனையை முடிவு செய்வது, அதற்கான தொகையைப் பெறுவது, விற்பனை ஆவணத்தில் கையொப்பம் இடுவது மற்றும் அதனைப் பதிவு செய்து கொடுப்பது ஆகியவற்றிற்கு முகவரை நியமிக்க பயன்படுத்துவதாகும். இதற்கான பதிவுக் கட்டணம் ரூ.50 ஆக இருந்தது. ஆனால் இந்தப் பொது அதிகார ஆவணத்தைத் தவறாகப் பயன்படுத்தி விற்பனை ஆவணங்கள் பதிவு செய்வதைத் தவிர்ப்பதுடன், அதனால் அரசுக்கு கிடைக்கப்பெறும்



2011 ஆகஸ்ட் 29]

முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டண வருவாயை ஏய்க்கும் போக்கும் பெருமளவில் நிலவி வருகிறது. எனவே, பொது அதிகார ஆவணங்களுக்கான கட்டணத்தை முறைப்படுத்தும் நோக்குடன், இதற்கான பதிவுக் கட்டணம் ரூ.10,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், குடும்ப உறுப்பினர்களுக்கிடையேயான பொது அதிகார ஆவணப் பரிமாற்றங்களின்போது, அவர்களின் சுமையைக் குறைக்கும்பொருட்டு அவற்றுக்கான பதிவுக் கட்டணம் ரூ.1,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்மாற்றம் 12-7-2011 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

### 11.4. 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழான கட்டணங்கள் மாற்றம்

பொதுமக்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து ஏற்படுத்தும் அமைப்புகள் தங்களது செயல்களுக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்கின்றனர். இச்சட்டத்தின்கீழான பல்வேறு நடவடிக்கைகளுக்கான கட்டணங்கள் 2002 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் துறையால் சங்கங்களின் பதிவு மற்றும் அதன் பின்னர் செய்யப்படும் சேவைகளுக்கு ஏற்றவாறு இல்லை. எனவே இச்சட்டத்தின்கீழான கட்டணப் பட்டியலை மாற்றியமைக்க முடிவு செய்யப்பட்டு அதற்கான சட்டத் திருத்த மசோதா சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

### 11.5. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழான கட்டணங்கள் மாற்றம்

சீட்டு நிறுவனங்களால் சீட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட சீட்டிற்கும், அங்கீகரிக்கப்படாத சீட்டிற்கும் இடையே வேறுபாடு ஏற்படுத்துவதற்காக சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றது. இச்சட்டத்தின்கீழான பல்வேறு பணிகளுக்கான கட்டணங்கள் 2003 ஆம் ஆண்டு இறுதியாக நிர்ணயிக்கப்பட்டு எட்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இச்சட்டத்தின்கீழான கட்டணப் பட்டியலை மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சட்டத்தின்கீழான கட்டணங்களை சீட்டு நடத்துபவர் கட்டுவதால் இம்மாற்றத்தினால் சீட்டுகளில் சேரும் பொதுமக்கள் பாதிக்கப்படமாட்டார்கள். மாற்றியமைக்கப்பட்ட கட்டணப் பட்டியல் இந்திய ரிசர்வ் வங்கியின் இசைவுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 29

## 12. மின்னணு ஆளுமை

பொதுமக்களுக்கு செய்யப்படும் சேவைகளை மேம்படுத்த தகவல்தொழில் நுட்பத்தை முதலில் அரவணைத்ததில் அரசுத் துறைகளுள் பதிவுத் துறையும் ஒன்றாகும். இதன் காரணமாக, துறையில் உள்ள 578 சார்-பதிவாளர் அலுவலகங்களும், 50 நிருவாக மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களும் மற்றும் 9 துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பின்வரும் சேவைகளை பதிவுத் துறை அளிக்கின்றது:

(அ) வில்லங்கச் சான்றுகள் வழங்குவது

(ஆ) ஒளிவருடல்மூலம் ஆவணங்களைப் பாதுகாப்பது மற்றும் நகலெடுப்பது

(இ) சான்றிட்ட ஆவண நகல்கள் வழங்குவது

(ஈ) சொத்து மதிப்பீடு பட்டியல்களை தயாரித்து வழங்குவது

(உ) திருமணங்கள், சங்கங்கள் மற்றும் சீட்டுகள் பதிவு

(ஊ) வழிகாட்டி மதிப்பு குறித்த தகவல்களை பொதுமக்களுக்கு அளிப்பது

### 12.1. ரெஜிநெட் சேவை

மாநிலத்திலுள்ள பதிவுத் துறையின் அனைத்து சார்-பதிவாளர் அலுவலகங்களையும் இணைக்கும் விதமாக தனியாக அமைக்கப்பட்ட வலைப்பின்னலே ரெஜிநெட் ஆகும். மாநிலம் முழுவதுமுள்ள அலுவலகங்களிலிருந்து அட்டவணை-2 விவரங்கள் மைய சேவையகத்தில் சேமித்து வைக்கப்படுகின்றது. இவ்விவரங்களை எங்கிருந்து வேண்டுமானாலும் அணுக முடியுமென்பதால் எந்த சார்-பதிவாளர் அலுவலகத்திலும் வில்லங்கச் சான்று வழங்க ஏதுவாகிறது. அலைவரிசையை மேம்படுத்தும் நோக்குடன், ரூ.5.64 கோடி செலவில் 427 இடங்களை தமிழ்நாடு மாநில பெரு வலைப்பின்னல் (TNSWAN) மூலம் இணைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

இணையதளம்மூலம் வில்லங்கச் சான்று, பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் நகல் சீட்டு நிறுவனம் மற்றும் சங்கங்களால் கோர்வை செய்யப்பட்ட ஆவணங்கள், பதிவு செய்யப்பட்ட இந்துத்



2011 ஆகஸ்ட் 29]

திருமணத்தின் வடிப்பு ஆகியவற்றைப் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. இணையதளம்மூலம் அளிக்கப்படும் மனுவினைப் பரிசீலித்தபின் தேவையான சான்றிதழ்/ஆவணம் நேரிலோ அல்லது தனியார் விரைவஞ்சல் அல்லது விபிபி சேவைமூலம் பெற்றுக்கொள்ளலாம்.

## 13. புதிய வாகனங்கள்

பதிவுத் துறையின் அலுவலர்கள் பல்வேறு இடங்களுக்குச் சென்று தங்களது பணிகளை ஆற்றுவதற்கு ஏதுவாக, இத்துறையின் 24 அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 4-7-2011 அன்று வாகனங்கள் வழங்கப்பட்டன. இவ்வாகனங்கள் ரூ.1.25 கோடி செலவில் வாங்கப்பட்டவையாகும்.

## 14. 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம்

பதிவுத் துறையில் அதிக அளவில் கள அலுவலகங்கள் உள்ளதால் பொதுமக்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. பல முக்கியமான சேவைகளைத் துறை ஆற்றி வருவதால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் கோரப்படும் முக்கியமான தகவல்களைத் தந்து, வெளிப்படையான செயல்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. கடந்த 2010 ஆம் ஆண்டில் 6,183 மனுக்கள் பெறப்பட்டு பதிலளிக்கப்பட்டுள்ளது.

## 15. 2011–2012 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டங்கள்

பகுதி 2 திட்டங்களின்கீழ், நடப்பு நிதியாண்டில் பதிவுத் துறைக்காக கீழ்க்காணும் புதிய திட்டங்கள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன:

(1) 25 சார்-பதிவாளர் அலுவலகங்களுக்கு ரூ.41.55 இலட்சம் செலவில் ஜெனரேட்டர்கள் வாங்குதல்

(2) பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் ஒருங்கிணைந்த நூலகம் அமைக்க ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு

(3) பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திற்கு ஒரு சாதாரண புரொஜெக்டர் மற்றும் எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய புரொஜெக்டர் வாங்குதல்

(4) பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திற்கு ரூ.2 இலட்சம் செலவில் இணையதள இணைப்பு வழங்குதல்

[2011 ஆகஸ்ட் 29

# இணைப்பு III

(463 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 54—வனம்

## [சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை]

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2011 – 2012

### முன்னுரை

வனங்கள் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, சூழலியல் பாதுகாப்பு, நீர் மற்றும் உணவு பாதுகாப்பு போன்றவற்றை வழங்குவதுடன், வனத்தையொட்டி வாழும் மக்களுக்குத் தேவையான வாழ்வாதார பாதுகாப்பினையும் வழங்குகிறது. வனங்களிலுள்ள மருத்துவ தாவரங்கள், பாரம்பரிய மருத்துவ முறைகளைச் சார்ந்து வாழும் பல இலட்சம் மக்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பினை அளிக்கிறது. உயிரின புவி வேதியியல் சுழற்சியில், குறிப்பாக கரிம மற்றும் நீர் சுழற்சியில் வனம் முக்கிய பங்கு வகிக்கிறது. கரியமில வாயுவினை உறிஞ்சும் ஆற்றலுடைய வனங்கள், தட்பவெப்ப மாறுதலைத் தடுப்பதில் முக்கியத்துவம் பெற்று, மனித இனம் உயிர் வாழ நேரடி பங்காற்றுகிறது.

வளமான காடுகளைக்கொண்ட மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலை மற்றும் கடற்கரை பிரதேசங்களைத் தமிழ்நாடு இயற்கையாகப் பெற்றுள்ளது. குறும்பரப்பு உயிரினங்கள் நிறைந்த பெருமையமாகவும், உலகில் உயிர்ப்பன்மை மிகுந்த 25 பேரிடங்களுள் ஒன்றாகவும் திகழும் மேற்குத் தொடர்ச்சி மலை, தமிழகத்தில் பெரிய அளவில் வியாபித்துள்ளது. நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களுக்குள் மிகவும் அதிகமாக பூக்கும் தாவரங்களைக் கொண்டுள்ள மாநிலமாகத் தமிழகம் விளங்குவதால், நாட்டின் இந்த வளத்தினைப் பாதுகாக்கும் பொறுப்பு அதற்கு உள்ளது. தமிழக வனங்கள் பெருமளவில் மருத்துவ குணங்களைக் கொண்ட தாவரங்களையும், வனம் சார்ந்து பயிரிடப்படும் தாவர வகைகளையும் தன்னிடத்தே கொண்டுள்ளதால் அவற்றைப் பாதுகாப்பது முக்கியத்துவம் பெறுகின்றது. மேற்குத் தொடர்ச்சி மலையினைச் சார்ந்த 14 வகையான குறும்பரப்புக்கு உரித்தான பாலூட்டி இனங்களும், தீபகற்ப இந்திய பகுதியிலுள்ள 5 வகையான



2011 ஆகஸ்ட் 29]

குரங்கினங்களும் தமிழகத்தில் உள்ளன. மேலும், தமிழகத்தில் தேசிய பாரம்பரிய விலங்குகளான யானை மற்றும் புலி ஆகியன குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உள்ளன. அவற்றின் எண்ணிக்கையும் தற்போது பெருகி வருகிறது.

### 2. வனங்களின் பரப்பளவு

தமிழகத்தின் 1,30,058 சதுர கி.மீ. நிலப் பரப்பளவில், 22,877 சதுர கி.மீ. பதிவு செய்யப்பட்ட வனப் பகுதி உள்ளது. இது, 17.59 விழுக்காடு ஆகும். தமிழகத்தில் வனப் பரப்பு மற்றும் மரங்களின் பரப்பு ஆகிய இரண்டையும் சேர்த்து, 28,306 சதுர கி.மீ. உள்ளதாக இந்திய வன நில அளவீட்டு நிறுவனம், 2009 ஆம் ஆண்டில் கணித்துள்ளது. இது 21.76 விழுக்காடு ஆகும். இது 1988 ஆம் ஆண்டு தேசிய வனக் கொள்கையில் நிர்ணயிக்கப்பட்ட அளவான 33.33 விழுக்காட்டிற்கும் குறைவானதாகும். எனவே, மாநிலத்தின் வனங்கள் மற்றும் மரங்களின் பரப்பளவை அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது.

### 3. வனக் கொள்கை

மாநிலத்தின் வனங்களை நிருவகிப்பதற்காக 1988 ஆம் ஆண்டைய தேசிய வனக் கொள்கையை இந்திய அரசு உருவாக்கியுள்ளது. அக்கொள்கையின் அடிப்படை குறிக்கோள்கள்:—

- சுற்றுச்சூழல் நிலைத்தன்மை பராமரிப்பு மற்றும் சூழலியல் சமன்பாடு சீராக்கம்
- மரபியல் வளம் மற்றும் உயிர்ப்பன்மையைக் கொண்ட இயற்கை பாரம்பரிய வனங்களைப் பேணி பாதுகாத்தல்
- வெள்ளம் மற்றும் வறட்சி ஆகியவற்றைத் தவிர்க்கும்பொருட்டு ஆறுகள், குளங்கள், நீர்நிலைகள் போன்ற நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மண் அரிமானத்தை தடுத்தல்
- பெருமளவில் காடுகளை வளர்த்து வனம் மற்றும் மரங்களின் பரப்பளவினை அதிகரித்தல்
- மலைவாழ் மக்கள் மற்றும் கிராம மக்களின் விறகு, மாட்டுத் தீவனம், சிறு வனப்பொருட்கள் மற்றும் சிறிய தடிமரங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

[2011 ஆகஸ்ட் 29

- முக்கியமான தேவைகளுக்காக வனங்களின் வளத்தினைப் பெருக்குதல்
- வனப்படு பொருட்களைத் திறம்பட கையாளுதலை ஊக்குவித்தல் மற்றும் மரங்களுக்குப் பதிலாக மாற்றுப் பொருட்களைப் பெருக்குதல்
- மேற்கூறிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகவும், தற்போது உள்ள வனங்களின்மீது ஏற்படும் தாக்கத்தை குறைப்பதற்காகவும் மகளிரை ஈடுபடுத்தி, பெருமளவில் ஒரு மக்கள் இயக்கத்தை உருவாக்குதல்

மனிதன், விலங்கு மற்றும் தாவர இனங்கள் உயிர் வாழ்வதற்கு முக்கியமாகக் கருதப்படும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்வதும் மற்றும் வளிமண்டல நடுநிலையுடன் சூழலியலை நிலைநிறுத்துவதும் வனக் கொள்கையின் முக்கிய நோக்கமாகும். வனங்களிலிருந்து பொருளாதாரப் பலன்கள் பெறுவது என்பது மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்கு அடுத்தபடியாகவே கருதப்படவேண்டும். மேற்கூறிய குறிக்கோள்களை அடைவதற்காக மாநிலத்திலுள்ள வனங்கள் நிருவகிக்கப்படுகிறது.

### 4. வன மேலாண்மை குறிக்கோள்கள்

தமிழ்நாட்டில் வனங்களின் மேலாண்மை கீழ்க்கண்டுள்ள குறிக்கோள்களின் அடிப்படையில் செய்யப்பட்டு வருகிறது:—

- வனம் மற்றும் வன உயிரினங்களை பாதுகாப்பதன்மூலம், உயிர்ப்பன்மை மற்றும் மரபியல் வளங்களைப் பேணிப் பாதுகாத்தல்
- வனங்களின் நீர்ப்பிடிப்பு வளங்களை மேம்படுத்துதல்
- காடுகளின் பரப்பளவை அதிகரிப்பதற்காக தரங்குன்றிய வனங்களை மீட்டு சீர்செய்தல்
- வாழ்வாதாரப் பாதுகாப்பிற்கும் தட்பவெப்ப மாறுபாட்டினால் ஏற்படும் தாக்கத்தை தணிப்பதற்கும் வனங்களுக்கு வெளியே மரங்களின் பரப்பளவினை விரிவுபடுத்துதல்
- பழங்குடியினர் மற்றும் வனத்தையொட்டிய கிராம மக்களின் நலன் பேணுதல் வாயிலாக பொருளாதார மேம்பாடு மற்றும் சூழலியல் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துதல்



2011 ஆகஸ்ட் 29]

### 5. செயலாக்கம்

புதிய வழிமுறை, அணுகுமுறை ஆகியவற்றுடன் வேகமாக வளர்ந்துவரும் சமூகச் சுற்றுச்சூழல் மற்றும் வனத் தேவைகளுக்கேற்ப, கீழ்க்கண்ட முறைகளைக் கையாண்டு, ஒரு முழுமையான வனம் சார்ந்த வளர்ச்சியினைக் கொண்ட மாநிலமாகத் திகழ வனக் கொள்கை வழிவகுக்கிறது:

- வன வளங்கள் மற்றும் வன உயிரினங்களைப் பேணிப் பாதுகாத்தல்
- வனப் பாதுகாப்பு மற்றும் வன வளத்தின் மேலாண்மை
- நீர்வளத்தினை அதிகரிக்க, நீர்ப்பிடிப்பு பகுதி மேலாண்மை
- வனங்களுக்கு உள்ளே வனம் மற்றும் மரங்களின் பரப்பளவினை அதிகரித்து, மக்களுக்கு சூழலியல் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்
- மக்களின் வாழ்வாதார பாதுகாப்பிற்காக வனங்களுக்கு வெளியே மரங்களின் பரப்பளவினை அதிகரித்தல்
- பழங்குடியினரின் நலத்தினை மேம்பாடு செய்து சூழலியலை நிலைநிறுத்தல் மற்றும் பொருளாதார வளத்தினை உறுதிப்படுத்துதல்
- கடலோர சூழலமைப்பை பாதுகாத்து பேணுதல் மற்றும் மேலாண்மை
- ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பம்மூலம், அறிவியல் ரீதியான வன மேலாண்மை
- வனங்களை, தொடர்ந்து நல்ல நிலையில் மேலாண்மை செய்ய, மகளிர்க்கு அதிகாரம் வழங்குதல்
- மனிதவள மேலாண்மை மற்றும் துறையின் சிறப்பான செயல்பாட்டிற்கு, உட்கட்டமைப்பு வளர்ச்சி

### 6. உயிர்ப்பன்மை பாதுகாப்பு

உயிர்ப்பன்மை வனங்களின் உயிராகும். தமிழ்நாடு உயிர்ப்பன்மைக்கு அறியப்பட்ட மாநிலமாகும். இம்மாநிலத்தில், 10

[2011 ஆகஸ்ட் 29

வன உயிரினச் சரணாலயங்கள், 5 தேசிய பூங்காக்கள், 3 உயிர்க்கோள் காப்பகங்கள், 13 பறவைகள் சரணாலயங்கள் மற்றும் ஒரு பாதுகாக்கப்பட்ட புகலிடம் ஆகியன அமைந்துள்ளன. மேலும் ஓர் உயிரினப் பூங்கா, 8 உயிரினக் காட்சி சாலைகள், 4 யானை காப்பகங்கள், 3 புலி காப்பகங்கள் ஆகியன உள்ளன. இந்திய நாட்டில் பாதுகாக்கப்பட்ட பகுதி 1,58,515 சதுர கி.மீ. ஆகும். இது நாட்டின் மொத்த நிலப் பரப்பளவில் 4.82 விழுக்காடாகும். தமிழகத்தின் பாதுகாக்கப்பட்ட பகுதி 4,578 சதுர கி.மீ. ஆகும். இது இம்மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பளவில் 3.52 விழுக்காடு ஆகும். எனவே தேசிய சராசரி அளவான 4.82 விழுக்காட்டினை எய்த, மாநிலத்தின் பாதுகாக்கப்பட்ட பகுதியினை மேலும் 1,691 சதுர கி.மீ. பரப்பளவில் அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது.

மாநிலத்தில் உள்ள சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள், உயிர்க்கோள் காப்பகங்கள், பாதுகாக்கப்பட்ட புகலிடங்கள் போன்றவற்றின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

| வரிசை எண் | வன உயிரின சரணாலயங்களின் பெயர் |
|---|---|
| | **வன உயிரின சரணாலயங்கள் (10)** |
| 1. | முதுமலை வன உயிரின சரணாலயம் |
| 2. | இந்திராகாந்தி வன உயிரின சரணாலயம் |
| 3. | முண்டந்துறை வன உயிரின சரணாலயம் |
| 4. | களக்காடு வன உயிரின சரணாலயம் |
| 5. | சாம்பல்நிற அணில்கள் சரணாலயம் |
| 6. | கோடியக்கரை வன உயிரின சரணாலயம் |
| 7. | வல்லநாடு வெளிமான் சரணாலயம் |
| 8. | கன்னியாகுமரி வன உயிரின சரணாலயம் |
| 9. | சத்தியமங்கலம் வன உயிரின சரணாலயம் |
| 10. | மேகமலை வன உயிரின சரணாலயம் |



2011 ஆகஸ்ட் 29]

| | |
|---|---|
| | **பறவைகள் சரணாலயங்கள் (13)** |
| 1. | வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் |
| 2. | கரிகிளி பறவைகள் சரணாலயம் |
| 3. | பழவேற்காடு பறவைகள் சரணாலயம் |
| 4. | வேட்டங்குடி பறவைகள் சரணாலயம் |
| 5. | கஞ்சிரம்குளம் பறவைகள் சரணாலயம் |
| 6. | சித்திரங்குடி பறவைகள் சரணாலயம் |
| 7. | உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம் |
| 8. | வடுவூர் பறவைகள் சரணாலயம் |
| 9. | கூந்தன்குளம்—காடன்குளம் பறவைகள் சரணாலயம் |
| 10. | கரைவெட்டி பறவைகள் சரணாலயம் |
| 11. | வெள்ளோடு பறவைகள் சரணாலயம் |
| 12. | மேலசெல்வனூர்—கீழசெல்வனூர் பறவைகள் சரணாலயம் |
| 13. | தேர்தங்கல் பறவைகள் சரணாலயம் |
| | **தேசிய பூங்காக்கள் (5)** |
| 1. | முதுமலை தேசிய பூங்கா |
| 2. | இந்திரா காந்தி தேசிய பூங்கா |
| 3. | முக்குருத்தி தேசிய பூங்கா |
| 4. | கிண்டி தேசிய பூங்கா |
| 5. | மன்னார் வளைகுடா தேசிய பூங்கா (21 தீவுகள்) |
| | **உயிர்க் கோள் காப்பகங்கள் (3)** |
| 1. | நீலகிரி |
| 2. | மன்னார்வளைகுடா |
| 3. | அகத்தியர் மலை |
| | **பாதுகாக்கப்பட்ட புகலிடம் (1)** |
| 1. | திருப்புடை மருதூர் பறவைகள் பாதுகாப்பு புகலிடம் |

[2011 ஆகஸ்ட் 29

**யானைகள் காப்பகம் (4)**

1. நீலகிரி—கிழக்குத் தொடர்ச்சி மலை
2. நிலாம்பூர்—அமைசி பள்ளத்தாக்கு—கோயம்புத்தூர்
3. ஆனைமலை—பரம்பிக்குளம்
4. திருவில்லிப்புத்தூர்—பெரியார்

**புலிகள் காப்பகம் (3)**

1. களக்காடு—முண்டந்துறை
2. ஆனைமலை
3. முதுமலை

அழிந்துவரும் வெப்பமண்டல தாவர இனங்களைப் பேணி பாதுகாப்பதற்காக நீலகிரி மாவட்டத்தில் உள்ள நாடுகாணி என்ற இடத்தில் 242.14 எக்டேர் பரப்பளவில் மரபியல் தோட்டம் (ஜீன்பூல்) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. எனவே தாவர இனங்களைப் பாதுகாப்பதில் தமிழகம் வழிகாட்டி மாநிலமாகத் திகழ்கிறது. இம்மரபியல் தோட்டத்தில் மொத்தம் 451 தாவர இனங்கள் ஒரே இடத்தில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, தமிழகத்தில் மருத்துவ தாவரங்கள் பாதுகாப்பிற்காகவும், அதன் அபிவிருத்திக்காகவும் 12 மருத்துவ தாவரங்களின் பாதுகாப்பு பகுதிகளும், 8 மருத்துவ தாவரங்கள் அபிவிருத்தி பகுதிகளும் நிறுவப்பட்டுள்ளது.

5,640 வகையான பூக்கும் தாவர இனங்கள் அமையப்பெற்று தமிழகம், நாட்டின் முதல் மாநிலமாக உள்ளது. 533 குறும்பரப்பு வகை தாவரங்கள், அழிந்துவரும் நிலையிலுள்ள 230 வகை தாவரங்கள், 1,559 வகை மருத்துவ தாவரங்கள், வனம் சார்ந்து பயிரிடப்பட்டுள்ள 260 வகையான தாவர இனங்கள் ஆகியவை அவற்றுள் அடங்கும். தமிழகத்தின் விலங்கியல் பரவலில் 165 நன்னீர் மீன்கள், 76 நிலம் நீர்வாழ் இனங்கள், 177 ஊர்வன இனங்கள், 454 பறவையினங்கள் மற்றும் 187 பாலூட்டியினங்கள் ஆகியவை அடங்கியுள்ளன.

முறையாக நடத்திச் செல்வதன்மூலம் வனங்களின் பாதுகாப்பை பலப்படுத்தியும், அவ்வப்போது முறையான தணிக்கை செய்தும் வேட்டை தடுப்பு முகாம்களை நடத்தியும், சிறப்பு அதிரடி



2011 ஆகஸ்ட் 29]

சோதனை மேற்கொண்டும் உயிர்ப்பன்மையைப் பாதுகாக்க தமிழகத்தில் முன்னுரிமை தரப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் வனத் துறையில் வனப் பாதுகாப்பினை பலப்படுத்துவதற்காக வன உயிரின மற்றும் வன நிருவாகப் பிரிவுகளில் வனச்சரகு அலுவலர்களுக்கு 225 ஈப்புகள் வழங்கப்பட்டுள்ளன. வாகன வசதிகள் வழங்கப்பட்டதால், மாநிலத்தின் வனப் பாதுகாப்பு முழுமையாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

**முக்கியமான வன விலங்குகளின் தற்போதைய எண்ணிக்கை விவரம்**

ஒவ்வோர் ஆண்டும் முக்கியமான விலங்கினங்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்க ஒருங்கிணைந்த மற்றும் அறிவியல் சார்ந்த முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. தமிழகத்தில் புலிகள் மற்றும் யானைகளின் எண்ணிக்கையை மிகத் துல்லியமாக கணிப்பதற்கு பல்வேறு பகுதிகளில் ஒரே காலக் கட்டத்தில் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

சமீபத்திய கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான வன விலங்குகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு:—

புலி — 163

சிறுத்தை — 244

யானை — 4,015

வெளிமான் — 2,343

நீலகிரி வரையாடு — 1,250

சிங்கவால் குரங்கு — 1,107

சாம்பல் நிற அணில் — 477

காட்டெருமை — 8,110

**7. இயற்கை பாதுகாப்பு**

மாநிலத்திலுள்ள வன உயிரினங்களின் உறைவிட பகுதிகளை மேம்படுத்துவதற்காக, பாதுகாப்புடன்கூடிய வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மாநிலத்திலுள்ள வன உயிரின உறைவிடங்களும் மற்றும் பறவைகள் சரணாலயங்களும் அறிவியல் ரீதியாக பராமரிக்கப்பட்டு வருகின்றன. வன உயிரின

[2011 ஆகஸ்ட் 29

உறைவிடங்களின் பாதுகாப்பினை பலப்படுத்த வனவிலங்கு பாதுகாப்பு காவலர்கள் நியமிக்கப்படுவதுடன், கண்காணிப்பு கோபுரங்களும் மற்றும் வேட்டைத் தடுப்புக் கூடாரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. 2010-2011 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் ரூ.0.35 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டில், ரூ.0.59 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 8. மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

2010-2011 ஆம் ஆண்டில், ரூ.17.80 கோடி செலவில் 39 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள், மத்திய அரசின் 100 விழுக்காடு நிதி உதவியுடன் 33 திட்டங்களும் மத்திய, மாநில அரசுகளின் பங்கீட்டுடன் இதர திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன. மத்திய அரசு நிதியுடன் பல்வேறு வன உயிரின சரணாலயங்கள் மற்றும் தேசிய பூங்காக்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழகத்தில் புலிகள் திட்டம், யானைகள் திட்டம், அலையாத்திக் காடுகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு, ஈர நிலப் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு, உயிர்ச்சூழல் காப்பகச் செயல்திட்டம் ஆகியவை மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்களாகும்.

## 9. புலிகள் திட்டம்

புலிகளையும் அவற்றின் புகலிடங்களையும் பாதுகாத்து பராமரிக்க, வனத் துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. புலிகள், அவை வாழும் சூழல் அமைப்பின் ஆரோக்கியத்தை அடையாளம் காட்டுபவையாக விளங்குவதால், அவற்றின் பாதுகாப்பு முக்கியத்துவம் பெறுகிறது. எனவே புலிகள் காப்பகங்களின் மேலாண்மை மற்றும் பாதுகாப்பிற்கென மத்திய அரசு, தொடரா செலவினப் பணிகளுக்காக 100 விழுக்காடு நிதியுதவியும் தொடரும் செலவினப் பணிகளுக்காக 50 விழுக்காடு நிதி உதவியும் திட்ட நிதியாக வழங்கி வருகிறது. வாழ்விடப் பாதுகாப்பு, சூழல் மேம்பாட்டுப் பணிகள், வனப் பாதுகாப்பு, வனத் தீ தடுப்பு நடவடிக்கைகள், நீர் ஆதார மேம்பாடு, சுற்றுலா வளர்ச்சி, மனித—வன உயிரின மோதல் கட்டுப்பாடு மற்றும் உள்கட்டமைப்பு வசதி மேம்பாடு போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2010-2011 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூ.6.43 கோடி செலவிடப்பட்டது.



2011 ஆகஸ்ட் 29]

2011-2012 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை ரூ. 6.35 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 10. யானைகள் திட்டம்

நீலகிரி யானைகள் காப்பிடம், கோயம்புத்தூர் யானைகள் காப்பிடம், ஆனைமலை யானைகள் காப்பிடம் மற்றும் பெரியார் யானைகள் காப்பிடம் ஆகிய நான்கு யானைகள் காப்பிடங்களில், யானைகள் திட்டம் செயல்படுத்தப்படுகிறது, அதிக யானைகளின் எண்ணிக்கையைக்கொண்டு, அவற்றின் உறைவிடங்களை மேம்படுத்துவதில் தமிழகம், ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இந்தியாவில் கணக்கிடப்பட்டுள்ள சுமார் 26,000 யானைகளில், இம்மாநிலத்தில் 4,015 யானைகள் உள்ளன. இத்திட்டத்திற்கென, ஒவ்வோர் ஆண்டும் 100 விழுக்காடு நிதி உதவி மத்திய அரசிடமிருந்து பெறப்படுகிறது. மனித—வன உயிரின மோதல்களை கட்டுப்படுத்தும்பொருட்டு இத்திட்டத்தின்கீழ், யானைகள் பாதுகாப்பு, அவற்றின் வாழ்விடங்களை மேம்பாடு செய்தல், தீ தடுப்புப் பணிகள், நீர் வசதி செய்தல், யானைகளால் ஏற்படும் பயிர் மற்றும் உயிர்ச் சேதங்களுக்கு நிவாரணத் தொகை வழங்குதல் மற்றும் யானை தடுப்பு அகழி அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2010-2011 ஆம் ஆண்டில் வனப் பகுதியில் அநாதையாக கைவிடப்பட்டு, மீட்டெடுக்கப்பட்ட யானைகள் மற்றும் தனியாரிடமிருந்து மீட்கப்பட்ட அங்கீகரிக்கப்படாமல் பராமரித்து வரப்பட்ட யானைகள், ஆகியவற்றை பராமரிக்க மறுவாழ்வு மையம் ஒன்றினை அமைப்பது உட்பட ரூ.2.64 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

2011-2012 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை ரூ.3.09 கோடி செலவில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 11. தமிழகத்தில் ஈர நில பாதுகாப்பு

வெள்ளப்பெருக்கு மற்றும் கடலோர அரிமானம் போன்றவற்றைத் தடுத்தும், கடல் அலை சீற்றம் மற்றும் புயல் போன்ற இயற்கைப் பேரிடர்களின் தாக்கத்தை குறைத்தும், மழைநீரைத் தேக்கிவைத்தும், நிலத்தடி நீர் ஆதாரங்களைப் புதுப்பித்தும், நீர்வாழ் பறவைகளுக்கு வாழ்வாதாரத்தை அளித்தும், பாலூட்டிகளுக்கு உணவு, உறைவிடங்கள் அளித்தும், பலவித மாசுக்கள் மற்றும் கரியத்தை அகற்ற உதவும் இயற்கைத் தேக்கமாகவும் திகழ்ந்து,

[2011 ஆகஸ்ட் 29

இலட்சக்கணக்கான மக்களுக்கு பலவித சேவைகள் மற்றும் வாழ்வாதாரங்களையும் நேரடியாகவும் மறைமுகமாகவும், ஈரநிலங்கள் வழங்குகின்றன. இந்தியாவில் தெரிவு செய்யப்பட்டுள்ள 94 ஈர நிலப் பகுதிகளில் மூன்று தமிழ்நாட்டில் உள்ளன. அவை கோடியக்கரை, கழுவேலி மற்றும் பள்ளிக்கரணை ஈர நிலப் பகுதிகளாகும். ஈர நிலப் பகுதிகளின் மேலாண்மையியலில் வாழ்விட மேம்பாடு, வன உயிரின பாதுகாப்பு, ஈர நிலப் பகுதிகளின் அருகில் சூற்றுச்சுழல் மேம்பாடு, உயிரியல் மேம்பாடு, விழிப்புணர்வு, ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்புப் பணிகள், இயற்கை கல்வி ஆகியவை முக்கியமான நடவடிக்கைகளாகும். 2010-2011 ஆம் ஆண்டில், இப்பணிகள் ரூ.1.27 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை ரூ.2.17 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது தவிர வனத் துறையின்மூலம் ரூ.15.80 கோடி செலவில் பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பகுதி மேம்படுத்தப்படும்.

## 12. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டம் நீங்கலாக, மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள வனப் பகுதிகளை பாதுகாப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், கன்னியாகுமரி, மதுரை, தேனி, திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தீத்தடுப்பு பணிகள், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள், வேட்டைத் தடுப்புப் பணிகள், சூரிய மின்வேலி அமைத்தல் போன்ற முக்கிய பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2010-2011 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக ரூ.2.70 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதைத்தவிர திண்டுக்கல், மதுரை, மற்றும் தேனி மாவட்டங்களில் இத்திட்டம் ரூ.1.82 கோடி செலவில் தமிழ்நாடு நீர்ப்பிடிப்பு முகடு மேம்பாட்டு நிறுவனத்தின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை ரூ.310 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2011 ஆகஸ்ட் 29]

## 13. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டத்தின் வனப் பகுதிகளைப் பராமரித்து பாதுகாத்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள், சோலைக்காடுகளைச் சுற்றி வேலி அமைத்தல், தீத்தடுப்புப் பணிகள், வேட்டைத்தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் வன உயிரின உறைவிட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2010-2011 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.4.25 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது.

2011-2012 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை ரூ.5.84 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 14. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா

சென்னைக்கு அருகே வண்டலூரில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா 602 எக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது. இப்பூங்காவில் 47 வகை பாலூட்டி இனங்கள், 59 வகை பறவையினங்கள் மற்றும் 31 வகை ஊர்வனயினங்கள் ஆக மொத்தம் 137 வன உயிரினங்களைச் சேர்ந்த 1,541 விலங்குகள் பார்வைக்கு விடப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் 17 இலட்சம் பார்வையாளர்களை, அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா ஈர்த்து வருகின்றது.

2011-2012 ஆம் ஆண்டில், இந்த உயிரியல் பூங்காவை மேலும் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 15. மனித—வன உயிரின மோதலைத் தவிர்த்தல்

வன உயிரின மற்றும் உயிர்ப்பன்மைப் பாதுகாப்புப் பணிகள், சவால்கள் நிறைந்தவையாக உள்ளன. மனித—வன உயிரின மோதல் பிரச்சினை வன உயிரின பாதுகாப்பில் பெரும் சவாலாக அமைந்துள்ளது. உணவு, நீர் மற்றும் வாழ்விடம் அல்லது பிற காரணங்களுக்கான நடவடிக்கைகளில் மனிதன் மற்றும் வன உயிரினத்திற்கு ஏற்படும் வெகுவான போட்டியின் காரணமாக மனித-வன உயிரின மோதல் உருவாகின்றன. இவ்வாறு ஏற்படும் மோதல்களினால் மனிதர்களுக்கு பெரும் உயிரிழப்பு மற்றும் உடமையிழப்பு ஏற்படுவதோடல்லாமல் வன உயிரினங்கள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களுக்கும் ஈடு செய்யமுடியாத இழப்பு ஏற்படுகிறது.

[2011 ஆகஸ்ட் 29

தமிழகத்தில் மனித—வன உயிரின மோதல்களில் பெரும்பாலும் யானைகள், புலிகள், சிறுத்தைகள், காட்டுப் பன்றிகள் மற்றும் காட்டு எருமைகள் சம்பந்தப்பட்டுள்ளன. இது போன்று மனித—வன உயிரின மோதலில் பெரும்பாலும் மனிதர்கள் ஏற்படுத்தும் தொந்தரவுகளாலும், வன உயிரினங்களின் செயல்பாடுகளில் மனிதர்கள் தலையிடுவதாலும் வன உயிரினங்களின் வாழ்விடங்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறது.

பெரும்பாலும், வன விலங்குகள் இடம்பெயருவதாலும், அவற்றின் வாழ்விடங்கள் அழிக்கப்படுவதாலும், துண்டாடப்படுவதாலும் அவை காட்டை விட்டு வெளியேறுவது நடந்தேறுகிறது. அவ்வாறு வெளியேறும் வன விலங்குகள், மனிதர்களின் வாழ்விடங்களைக் குறுக்கிடும் போது மனித—வன உயிரின மோதல்கள் ஏற்படுகின்றன. அதுபோன்ற மோதல்கள் பயிர் சேதம், உடமைகள் சேதம் மற்றும் கால்நடைகளின் இழப்பு, மனித காயம் மற்றும் மனித உயிர் இழப்புகளில் முடிவடைகின்றன.

மனித—வன உயிரின மோதல் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காக கீழ்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

1. வனப் பகுதிகளுக்குள் நீர்வள ஆதாரங்களை மேம்படுத்துதல்
2. வனப் பகுதிகளுக்குள் மரத் தீவன ஆதாரங்களை மேம்படுத்துதல்
3. யானை தடுப்பு அகழி மற்றும் சூரிய மின் வேலி போன்ற தடுப்பு அமைப்புகளை உருவாக்குதல்
4. கூர்ந்தாய்வு மற்றும் சேதத்தடுப்பு படைகளை செயல்படுத்துதல்
5. இழப்பு ஏற்பட்டுள்ள குடும்பத்தினருக்கு உடனுக்குடன் உரிய நிவாரணத் தொகை வழங்குதல்

2010-2011 ஆம் ஆண்டில் ரூ.2.27 கோடி மதிப்பீட்டில் 125 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின் வேலி அமைக்கப்பட்டுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.1.98 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.



2011 ஆகஸ்ட் 29]

மனித—வன உயிரின மோதல்களினால் ஏற்படும் மனித உயிரிழப்பு மற்றும் நிரந்தர ஊனம் ஆகியவற்றுக்கு நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டு வந்த ரூ.1.5 இலட்சம் இந்த ஆண்டு உயர்த்தப்பட்டு ரூ.3.0 இலட்சம் என ஆணையிடப்பட்டுள்ளது. ரூ.2.5 கோடிக்கு சுழல் நிதி ஏற்படுத்தப்பட்டு, கோரிக்கை பெறப்படும்போது உடனுக்குடன் முதன்மை தலைமை வனப் பாதுகாவலரால் உடனுக்குடன் நிவாவண நிதி வழங்கப்படும்.

2011-2012 ஆம் ஆண்டில் மனித—யானை முரண்பாடு நிகழ்வுகளைக் கட்டுப்படுத்த கோயம்புத்தூர், தருமபுரி, ஈரோடு, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி வன மண்டலங்களில் ரூ.10 கோடி செலவில் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

## 16. வனப் பாதுகாப்பு

மாநிலத்தின் வனங்கள் கடுமையான சமுதாயத் தாக்கத்திற்கு உட்படுத்தப்பட்டு, பல்வேறு காரணங்களால் வன வளங்கள் தொடர்ந்து பாதிப்பிற்குள்ளாகின்றன. சந்தனமரக் கடத்தல், விலையுயர்ந்த மரங்களின் திருட்டு, வன நில ஆக்கிரமிப்பு, வனத் தீ, கால்நடை மேய்ச்சல், கஞ்சா பயிரிடுதல் போன்றவை இவற்றுள் அடங்கும். அச்சுறுத்தும் வகையிலான இந்த நடவடிக்கைகள் நிலையாகக் கண்காணிக்கப்படுகிறது. துறையின் வனப் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பிரிவினால் வனம் மற்றும் வன உயிரின பாதுகாப்பு குறித்த தகவல்கள் தொடர்புடைய வனக்கோட்டங்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது. வனப் பணியாளர்களுக்கு, நவீன படைகலன்களைக் கையாளுதல் மற்றும் எதிர்ப்புகளை முறியடிக்கும் பயிற்சி, ரோந்துப் பணி யுத்திகள் மற்றும் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் முறைகள் குறித்த சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. வனங்களை ஒருங்கிணைக்க வன எல்லைகளில் எல்லைக் கற்களை நடவு செய்தல், புதிய தீ தடுப்புக் கோடுகள் அமைத்தல், பழைய தீ தடுப்புக் கோடுகளைப் பராமரித்தல், உள்ளூர் மக்களின் உதவி கொண்டு தீ தடுப்புப் பணிகளைக் கூட்டுவன நிர்வாகக் குழுக்களை அமைப்பதனமூலம் மேற்கொள்ளுதல், வறண்ட காலங்களில் நிரந்தரமாக தீத்தடுப்புக் காவலர்களை ஈடுபடுத்துதல், தீ நிகழ்வினைக் கண்டறிய கண்காணிப்பு கோபுரங்கள் அமைத்தல் மற்றும் வேட்டைத் தடுப்புக் காவலர்களை நியமித்தல் போன்ற நடவடிக்கைகள் யாவும் வனப் பாதுகாப்பு நடவடிக்கையில் அடங்கும்.

[2011 ஆகஸ்ட் 29

## 17. வனச் சட்டங்கள்

தாவர மற்றும் விலங்கினங்களைப் பயன்படுத்தும் காலம், வரலாற்று காலத்திற்கும் முந்தையதாகவுள்ளது. தொழிற்புரட்சி மற்றும் வன உயிரினங்களை நுகரும் தன்மை ஆகிய இரண்டும் வனப் பாதுகாப்பில் பிரச்சினையாகவுள்ளன. 1894 ஆம் ஆண்டில் வனக் கொள்கை வனப் பாதுகாப்பிற்காக இயற்றப்பட்டது. ஆனால், வனப்படுபொருட்கள் மற்றும் வன உயிரினங்களை வியாபார நோக்குடன் அளவிற்கு அதிகமாக பயன்படுத்தியதால் சூழலியல் மண்டலத்திற்கு அதிக பிரச்சினையாகி அனேக உயிரினங்கள் அழிந்துபோக வழிவகுத்தது.

வனப் பாதுகாப்பில் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. அன்றைய சென்னை மாகாணத்தில் 1882 ஆம் ஆண்டில் காடுகளை பேணிப் பாதுகாப்பதற்காக மதராஸ் வனச் சட்டம் 1882-ஐ இயற்றியது. தற்போது இச்சட்டம் தமிழ்நாடு வனச் சட்டமாக அறியப்படுகிறது. 1873 ஆம் ஆண்டிலேயே காட்டு யானைகளைப் பாதுகாப்பதற்காக மிகப் பெரிய முயற்சி எடுக்கப்பட்டு, காட்டு யானைகளை முரட்டுத்தனமாக கொல்வதைத் தடுக்கும் பொருட்டு மதராஸ் வன யானைகள் பாதுகாப்புச் சட்டம் 1873 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது.

தற்போது இம்மாநிலம் மத்திய அரசின் சட்டமான வன உயிரின பாதுகாப்புச் சட்டம் 1982 (வன உயிரினம் மற்றும் தாவரங்களை பாதுகாப்பதற்காக), வனப் பாதுகாப்புச் சட்டம் 1980 (வன நிலங்களை வனம் அல்லாத பணிகளுக்கு மாற்றம் செய்வதை நடைமுறைபடுத்துவதற்காக) மற்றும் உயிர்ப்பன்மை பரவல் சட்டம் 2002 ஆகியவற்றை செயல்படுத்துகிறது. தனியார் நிலங்களில் வனங்கள் மற்றும் மரப்பரப்பினை அதிகரித்து பாதுகாக்க தமிழ்நாடு மலை தல (மர பாதுகாப்பு) சட்டம் 1955 மற்றும் தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949 ஆகியவற்றை இயற்றியுள்ளது.

அட்டவணைப்படுத்தப்பட்ட மரங்கள் மற்றும் தடிமரங்களின் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துவதற்கென தமிழ்நாடு தடிமர போக்குவரத்து விதிகள் 1968, தமிழ்நாடு சந்தரனமர போக்குவரத்து விதிகள் 1967, தமிழ்நாடு அட்டவணை பெரு மரங்களின் கணக்கு பராமரிப்பு விதிகள் 1988, தமிழ்நாடு பெருமரம் (போக்குவரத்து



2011 ஆகஸ்ட் 29]

கட்டுப்பாட்டு) ஆணை 1982 மற்றும் தமிழ்நாடு வன உயிரின (போக்குவரத்து) விதிகள் 1991 ஆகிய விதிகள் வனத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## 18. முனைப்புடன் செயல்படுத்தப்படும் வன மேலாண்மை

வனத் தீயைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தீத்தடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், வனங்களில் நில ஆக்கிரமிப்புகளைத் தடுக்க வன எல்லைகளை நிர்ணயித்து, நிலையான எல்லைத் தூண்கள் நடுதல், சிறப்பான வனப் பாதுகாப்பிற்காக சாலை மேம்பாடு சிறப்பான தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்துதல், வனக் கோட்டங்களை அறிவியில் பூர்வமாக மேலாண்மை செய்ய வனச்செயல் திட்டங்களைத் தீட்டுதல் போன்ற பணிகளை செயல்படுத்தி, வனவளத்தினை காப்பதே முந்தைய ஒருங்கிணைந்த வனப் பாதுகாப்புத் திட்டத்தின் குறிக்கோளாக இருந்து வந்தது.

ஏற்கெனவே நடைமுறையில் இருந்த ஒருங்கிணைந்த வனப் பாதுகாப்புத் திட்டத்தினை விரிவுபடுத்தும் நோக்குடன், மத்திய அரசு இத்திட்டத்தினை “முனைப்புடன் செயல்படுத்தப்படும் வன மேலாண்மை” என்று பெயர் மாற்றம் செய்துள்ளது. ஏற்கெனவே உள்ள செயலாக்கப் பணிகளுடன் கீழ்கண்டுள்ள நான்கு புதியவகை செயலாக்கப் பணிகளும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

* புனிதத்தலங்களில் உள்ள மரங்கள் அடர்ந்த சோலைகளைப் பாதுகாத்துப் பேணுதல்
* தனித்தன்மை வாய்ந்த காடுகள் மற்றும் சூழல் அமைப்புகளை பழைய நிலையிலேயே பராமரித்து பாதுகாத்தல்
* வனப் பகுதிகளை ஆக்கிரமித்துள்ள களைத் தாவரங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் அகற்றுதல்
* மூங்கில் காடுகள் பூப்பதால் ஏற்படும் கடும் விளைவுகளை எதிர்கொள்ள தயார்நிலைபடுத்துதல் மற்றும் மூங்கில் காடுகளின் மேலாண்மை மேம்படுத்துதல்

2010-2011 ஆம் ஆண்டில், இத்திட்டப் பணிகள் ரூ.2.44 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 29

2011-2012 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை ரூ.4.24 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**19. நீர் பிடிப்புப் பகுதி மேலாண்மை**

மண், நீர் மற்றும் இயற்கைவள ஆதாரங்களைப் பராமரித்து பாதுகாப்பதே நீர்பிடிப்புப் பகுதி மேலாண்மையின் குறிக்கோளாகும். இந்தக் கொள்கையின் அடிப்படையில் வனப் பகுதியிலும், அதனை ஒட்டியுள்ள நீர்பிடிப்புப் பகுதிகளிலும், மேலாண்மைப் பணிகள் தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டத்தின்கீழ் 1997 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம், மக்களின் ஒத்துழைப்பு, பேராதரவு மற்றும் பங்கேற்புடன் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் வனப் பகுதிகளிலும் மற்றும் வனத்தையொட்டிய பகுதிகளிலும் நீர்வள ஆதாரத்தைப் பெருக்கி, நிலத்தடி நீர் மட்டத்தை உயரச் செய்ய, தடுப்பணைகள் மற்றும் கசிவுநீர்க் குட்டைகள் கட்டப்பட்டுள்ளன. 2010-2011 ஆம் ஆண்டு வரை 28,226 தடுப்பணைகளும், 3,729 கசிவுநீர்க் குட்டைகளும் கட்டப்பட்டுள்ளன. இத்தகைய கட்டமைப்புகள் 1,967 மில்லியன் கன அடி நீரைத் தேக்கி வைத்துக்கொள்ளும் திறனைக் கொண்டுள்ளன.

2011-2012 ஆம் ஆண்டில் மாநில நிதியிலிருந்து ரூ.14.38 கோடி செலவில் இத்திட்டத்தினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**20. வனங்களின் உள்ளே காடுகளின் அடர்த்தியை அதிகப்படுத்துதல்**

தரம் குன்றிய காடுகள் மீண்டும் மரவளர்ச்சி, உயிர்ப்பன்மையை முழுவதுமாக மீட்பது, வனங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், இதன்மூலம் வனம்சார்ந்து வாழ்வோரின் வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகியவை முக்கிய குறிக்கோள்களாக உள்ளது. வனம் சார்ந்து வாழ்வோருக்கு வாழ்வாதாரமாக வனங்கள் திகழ்வதால், அவர்தம் பங்கேற்புடன் தமிழகத்தில் உள்ள தரம் குன்றிய காடுகளை மேம்படுத்துவதும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதும் அவசியமாகிறது. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் மற்றும் தேசிய காடு வளர்ப்புத் திட்டம் ஆகிய முக்கிய திட்டங்கள் வனங்களின் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யும் பங்கினை வகிக்கின்றன



2011 ஆகஸ்ட் 29]

**21. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்**

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை-I ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி நிதி ஆதாரத்துடன் 1997-1998 முதல் 2004-2005 வரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ரூ.688 கோடி செலவில் 4.80 இலட்சம் எக்டேர் தரம் குன்றிய காடுகளின் தரம் மேம்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை-II, 2005-2006 ஆம் ஆண்டு தொடங்கி ரூ.567.42 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2012-2013 ஆம் ஆண்டு வரை இத்திட்டம் செயல்படுத்தப்படும், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்புப் பணிகளுடன், வனத்தையொட்டிய கிராம மக்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு வழங்குவதன்மூலம் வனப் பரப்பினை மீட்பதை இத்திட்டம் முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டிலிருந்து 2008-2009 ஆம் ஆண்டு வரை, 800 திட்ட கிராமங்களில், 1.78 இலட்சம் எக்டேர் பரப்பில் தரங்குன்றிய காடுகளின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவனத்தின் நிதி உதவியுடன் 95,000 எக்டேர் பரப்பில் அமைந்துள்ள தோட்டங்களின் பராமரிப்புப் பணிகளும், 460 கிராமங்களில் சமுதாய வளர்ச்சிப் பணிகளும், வருமானத்தைப் பெருக்கும் பணிகளும் ரூ.45.21 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். கடந்த ஆண்டு 31,050 எக்டேர் பரப்பளவில் உருவாக்கப்பட்ட தோட்டங்களின் பராமரிப்புப் பணிகளுடன் மூன்றாமாண்டு இடைதாங்கு மண்டல பணிகள், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் (நிலை-I) பகுதிகளில் நீர் ஆதாரங்களைப் பெருக்க மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப்பணிகள் ஆகியவை மாநில அரசின் நிதியிலிருந்து ரூ.12.59 கோடி செலவில் 2011-2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். மொத்தமாக 2011-2012 ஆம் ஆண்டில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவனத்தின் நிதி மற்றும் மாநில அரசு நிதியிலிருந்து ரூ.57.80 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**22. தமிழ்நாடு உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம்**

உயிர்ப்பன்மையைப் பாதுகாக்கவும், வனப் பகுதிகளுக்கு வெளியே மரங்களின் பரப்பை அதிகரிக்கவும், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு

[2011 ஆகஸ்ட் 29

நிறுவனத்தின் நிதியுதவியுடன் "தமிழ்நாடு உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல்" என்ற திட்டம் தமிழ்நாடு வனத் துறையால் செயல்படுத்தப்படும் இந்திய அரசும் ஜப்பான் அரசும் இதற்கான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. 2011-2012 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை இத்திட்டம் ரூ.686.00 கோடி மதிப்பீட்டில் அங்கீகரிக்கப்பட்ட திட்ட மேலாண்மை அமைப்பின்மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.

## 23. தேசிய காடு வளர்ப்புத் திட்டம்

இத்திட்டம், 100 விழுக்காடு மத்திய அரசு நிதியுதவி பெறும் திட்டமாகும். வன வளர்ச்சி முகமைகளால் கூட்டுவன மேலாண்மைமூலம் தரம் குன்றிய காடுகளை மேம்படுத்துவது இதன் கொள்கையாகும். பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் நான்காண்டு காலமாகிய 2007-2008 ஆம் ஆண்டு முதல் 2010-2011 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ் ரூ.29.39 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டில் ரூ.6.87 கோடி மதிப்பீட்டில் முன்னோடிப் பணிகள் மேற்கொள்ள மத்திய அரசிற்கு கருததுரு அனுப்பப்பட்டுள்ளது.

## 24. பசுமை இந்தியாவிற்கான தேசியப் பணி திட்டம்

பருவ நிலை மாற்றத்திற்கான தேசிய செயல் திட்டத்தின் எட்டு தேசிய செயல் திட்டங்களில் ஒன்றாக "பசுமை இந்தியா" பணித் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:—

(அ) வன/வனமற்ற நிலப் பகுதிகளில் வனம்/மரப்போர்வை ஆகியவற்றை அதிகரித்தல், மற்றும் வனத்தின் தரத்தை மேம்படுத்துதல்

(ஆ உயிர்ப்பன்மயம், கரியம் பிரித்தல், சேமித்தல், நீரியல் பணிகள் ஆகிய சூழலியல் சேவைகளை மேம்படுத்துதல்

(இ) வனம் மற்றும் வனத்தைச் சுற்றி வாழும் குடும்பங்களுக்கு வனம் சார்ந்த வாழ்க்கை வருமானம் பெருக வழிவகை செய்தல்

(ஈ) கரியமில வாயுவை உறிஞ்சும் ஆற்றலை அதிகப்படுத்துதல்



2011 ஆகஸ்ட் 29]

மாநிலத் திட்டப் பணிகளை தயார் செய்ய, இப்பணித் திட்டத்திற்கான செயலாக்க வழிகாட்டுதல் நெறிமுறைகள் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

## 25. வனங்களுக்கு வெளியே பசுமைப் போர்வையை அதிகப்படுத்துதல்

வனங்களுக்கு வெளியே பசுமைப் போர்வையை அதிகரிக்கச்செய்யும் பொருட்டு, தனியார் நிலங்களில் மரம் நடுதல், ஆற்றுப்படுகை மற்றும் ஆற்றங்கரை ஓரங்களில் தேக்கு மரத் தோட்டம் உற்பத்தி செய்தல், பொதுமக்களுக்கும், நிறுவனங்களுக்கும் இலவச மரக் கன்றுகள் வழங்குதல் போன்ற சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் விறகு மற்றும் தடிமரம் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் தேவையின் இடைவெளியினைக் குறைப்பதற்கு இதுபோன்ற சிறப்புத் திட்டங்கள் ஏதுவாக அமைகின்றன. சென்னை பொருளாதார பள்ளி, 2009 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் மர உற்பத்தி தேவை குறித்த ஆய்வு அறிக்கையில், மாநிலத்தில் 2013 ஆம் ஆண்டில் விறகு மரத் தேவை 15.17 முதல் 23.22 மில்லியன் க.மீ. ஆக இருக்கும் எனவும், தடிமரங்களின் தேவை 2013 ஆம் ஆண்டில் 5.4 முதல் 6.5 மில்லியன் கமீ. ஆக இருக்கும் எனவும், அதுவே 2018 ஆம் ஆண்டில் 5.7 முதல் 7.7 மில்லியன் க.மீ. ஆக இருக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளது. எனவே, உற்பத்தி மற்றும் தேவையின் இடைவெளியைக் குறைக்க வனங்களின் வெளியே மர வளர்ச்சிப் பரப்பினை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் எழுந்துள்ளது.

## 26. தனியார் நிலங்களில் மரம் வளர்த்தல்

வனங்களுக்கு வெளியே மரங்கள் வளர்ப்பதை ஊக்குவிப்பதற்காக மாநிலத்தில் 2007 ஆம் ஆண்டில் ஒரு புதிய திட்டம் கொண்டுவரப்பட்டு, அத்திட்டம் 2008-2009 மற்றும் 2010-2011 ஆம் ஆண்டுகளிலும் தொடரப்பட்டுள்ளது. சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில், தரமிக்க மரக்கன்றுகளை நடுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்குத் தேவைப்படும் தரமிக்க மரக்கன்றுகள், துறையின் விதைப் பண்ணைகளிலிருந்து தருவிக்கப்பட்ட விதைகளைக்கொண்டு உருவாக்கப்படுகின்றன. விவசாயிகளின் வருமானம் பெருகுவதை உறுதி செய்வதுடன், மரம் சார்ந்த தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கூழ்மரங்கள், தீக்குச்சி மரங்கள் மற்றும் மரச்சாமான்கள் செய்ய தடிமரங்கள் ஆகியன

[2011 ஆகஸ்ட் 29

வருங்காலங்களில் சீராக கிடைக்கவும், இத்திட்டம் வழிவகை செய்கிறது. மரங்களின் பரப்பளவு அதிகரிப்பதால் கிராமப்புறங்களில், சுற்றுச்சூழல் சீரடைவதுடன் ஊரக வளர்ச்சிக்கும் இத்திட்டம் வழிவகை செய்கிறது. 2007-2008 முதல் 2010-2011 வரை தனியார் நிலங்களில் மரம் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.43.74 கோடி செலவில், 49,195 எக்டேர் பரப்பளவில் 3 கோடி மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்மூலம் 2009-2010 ஆம் ஆண்டு வரை 71,454 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

2011-2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை ரூ.13.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 27. தேக்குத் தோட்டங்கள் வளர்த்தல்

காப்புக் காடுகளுக்கு வெளியே, பாசனக் கால்வாய் மற்றும் ஆற்றங்கரையோரங்களில் தேக்கு மரங்களை வளர்த்து, காப்புக் காடுகளுக்கு வெளியே மரப்பரப்பினை அதிகரிப்பதும், கால்வாய் மற்றும் ஆற்றுப்படுக்கைகளில் மண் அரிமானத்தைத் தடுப்பதும், மாநிலத்தின் தடிமர வளத்தை உருவாக்குவதுமே, இத்திட்டத்தின் நோக்கமாகும். 2008-2009 ஆம் ஆண்டு முதல் 2013-2014 ஆம் ஆண்டு வரை, தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களின் பாசனக் கால்வாய் மற்றும் ஆற்றங்கரையோரங்களில் ரூ.35.31 கோடி செலவில், 6 ஆண்டுகளில், 20,700 எக்டேர் பரப்பில் தேக்குத் தோட்டங்களை உற்பத்தி மற்றும் பராமரிப்பு செய்ய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டு முதல் 2010-2011 ஆம் ஆண்டு வரை ரூ.25.52 கோடி செலவில் 19,986 எக்டேர் பரப்பளவில் தேக்குத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டதோடு ஏற்கெனவே உருவாக்கப்பட்ட தோட்டங்களில் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டில், முந்தைய ஆண்டுகளில் எழுப்பப்பட்ட தேக்குத் தோட்டங்களின் பராமரிப்புப் பணிகள் ரூ.6.44 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 28. மரக் கன்றுகள் இலவசமாக வழங்குதல்

இயற்கை வளங்களை அதிக அளவில் கட்டுப்பாடின்றி பயன்படுத்தியதால், மாசு அளவு, ஏற்பு அளவைவிட அதிகமாகியுள்ளது. குறிப்பாக, வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் வாயுக்கள் நகரப் பகுதி சுற்றுப்புறத்தை மாசுபடுத்தி, அங்கு வாழும் மக்களின் உடல்



2011 ஆகஸ்ட் 29]

நலத்திற்குக் கேடு விளைவிக்கிறது. பசுமைப் போர்வையினை அதிகரிப்பதன்மூலம் மாசினால் ஏற்படும் தீய விளைவுகளைக் கட்டுப்படுத்த முடியும். 2010-2011 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 4 இலட்சம் மரக் கன்றுகள் ரூ.0.20 கோடி செலவில் உற்பத்தி செய்யப்பட்டு, நிறுவனங்களுக்கும், வீடுகளுக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 29. வன விரிவாக்க மையங்கள்

மாநிலத்திலுள்ள, 30 வன விரிவாக்க மையங்கள் வழியாக கிராமப் பகுதிகளில் மரங்கள் வளர்ப்பதற்குத் தேவையான வன விரிவாக்கப் பணிகள் மற்றும் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆதரவு வழங்கப்பட்டு வருகின்றன. வன விரிவாக்க மையங்களின்மூலம் நல்ல வருமானம் தரும் முள்ளில்லா மூங்கில், சவுக்கு, தேக்கு, வேம்பு, மலைவேம்பு, ஒட்டு புளி மற்றும் ஒட்டு நெல்லி ஆகிய மரங்களின் கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இந்த மரக் கன்றுகள் தனியார் நிலங்களில் நடப்பட்டுள்ளன. அந்த விளைநிலங்கள் செயல்விளக்கத் தோட்டங்களாகத் திகழ்கின்றன.

## 30. பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடியினரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திட கிராம வளர்ச்சிப் பணிகள், தொடர்பு வசதிகள், கல்வி, சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதிகள் ஆகியவற்றைச் செயல்படுத்த வேண்டியது அவசியமாகும். ரூ.7.78 கோடி மதிப்பீட்டில் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்துவதற்கு நபார்டு வங்கியின் நிதி உதவி கோரப்பட்டுள்ளது. பழங்குடியினரின் மேம்பாட்டின்பொருட்டு தொடர்பு வசதியை மேம்படுத்துதல், கல்வி வசதிகள் மற்றும் இதர இனங்களுக்காக ரூ.30.09 கோடி மதிப்பீட்டிலான கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 31. வன ஆராய்ச்சி

ஆராய்ச்சி ஆய்வுகளின்மூலம் உயிர்ப்பன்மைப் பாதுகாப்பினை மேம்படுத்துதல், உற்பத்தித் திறனைப் பெருக்குதல் அதன்மூலம் மக்களின் பயன்பாட்டிற்காக அதிக பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேம்படுத்தப்பட்ட வனவியல்

[2011 ஆகஸ்ட் 29

மற்றும் பண்ணைத் தோட்ட நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்கும் விதத்தில் தொழில்நுட்பத்தை மாற்றம் செய்து வழங்குவதற்கு துறையின் வன ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் வனவிரிவாக்கப் பிரிவுகள் இணைந்து செயல்படுகின்றன.

2010-2011 ஆம் ஆண்டில் வன ஆராய்ச்சிப் பணிகளுக்காக ரூ.2.32 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை ரூ.3.56 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**32. மகளிர் மேம்பாடு**

காடுகளைப் புதுப்பித்தல், கூட்டுவன நிர்வாகம், வன விளைப்பொருட்களைப் பங்கிடுதல் வேலைவாய்ப்பினை உருவாக்குதல் போன்ற பணிகளில் முக்கிய முடிவுகளை எடுப்பதில் கிராமப்புற மகளிரின் பங்கு உறுதுணையாக உள்ளதென்ற உண்மையினை வனத் துறையின் திட்டங்கள் நிரூபித்துள்ளன. கிராம வனக் குழு உறுப்பினர்களில் குறைந்தது 50 விழுக்காடு மகளிர் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளதோடு, செயற்குழுக்களில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மகளிராக இருக்க வேண்டும் என விதிமுறைகள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2009-2010 ஆம் ஆண்டு வரை உருவாக்கப்பட்டுள்ள 2,317 கிராம வனக் குழுக்களில் சேர்க்கப்பட்டுள்ள 6,92,754 மொத்த உறுப்பினர்களில் 3,47,224 உறுப்பினர்கள் பெண்களாவர். 132 கிராம வனக் குழுககளுக்கு பெண்கள் தலைவராக உள்ளனர். மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைப்பதன்மூலம் கிராமப்புற பெண்களிடையே பொருளாதார எழுச்சிக்கு வழி ஏற்பட்டுள்ளது. நுண்நிதி நடவடிக்கைகளில் பெண்கள் திறமை பெற்றவர்களாக விளங்குகின்றனர். வனத் துறையில், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தில் மகளிரின் பொருளாதார வளர்ச்சிக்காக தொடர்ந்து மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகிறது. 1997-1998 ஆம் ஆண்டு முதல் 2009-2010 ஆம் ஆண்டு வரை 7,174 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 1,04,976 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர்.

**33. மனிதவள மேம்பாடு**

தமிழ்நாடு வனத் துறையானது மிகப்பெரிய அளவிலான மனித வளத்தைக் கொண்டுள்ளது. வனத் துறையில், மொத்தம் உள்ள 11,384 பணியிடங்களில், நிரந்தரப் பணியிடங்கள் 3,375, தற்காலிகப்



2011 ஆகஸ்ட் 29]

பணியிடங்கள் 5,744 மற்றும் மிகைப் பணியிடங்கள் 2,265 ஆகும். வனக் கொள்கையின் குறிக்கோள்களை எய்த இப்பணியாளர்களின் திறனை உரிய பயிற்சிகளின்மூலம் மேம்படுத்த வேண்டும். கோயம்புத்தூரில் இயக்கி வரும் தமிழ்நாடு வனவியல் உயர் பயிற்சியகம் மற்றும் வைகை அணையில் இயங்கி வரும் தமிழ்நாடு வனவியல் கல்லூரி ஆகியவை இந்த சவால்களை சந்திக்க பயிற்சியினை அளித்து வருகின்றன. கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வனவியல் உயர் பயிற்சியகத்தில் வனச்சரக அலுவலர்களுக்கு 18 மாதகால பயிற்சியும், வனவர்களுக்கு 6 மாதகால பயிற்சியும், வைகை அணையில் உள்ள தமிழ்நாடு வனவியல் கல்லூரியில் வனக் காப்பாளர்களுக்கு 6 மாதகால பயிற்சியும், வனக் காவலர்களுக்கு ஒரு மாதகால பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இவற்றைத் தவிர 3 முதல் 10 நாட்கள் வரையிலான குறுகிய கால சிறப்புப் பயிற்சிகளும் குறிப்பிட்ட திட்டங்களுக்காக தேவையானபோது வழங்கப்பட்டு வருகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் பயிற்சி நிலையங்களில் பணியாளர்களுக்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகளான குடியிருப்பு மற்றும் உள் கட்டமைப்பு வசதிகள் மேலும் மேம்படுத்தப்படும்.

**34. 13–வது நிதிக் குழு மானியம்**

12-வது நிதிக் குழுவின் பரிந்துரைப்படி, 2005-2006 ஆம் ஆண்டு முதல் 2009-2010 ஆம் ஆண்டு வரை வனங்களின் பராமரிப்பிற்காக, ரூ.27.35 கோடி மானிய உதவி பெற்று வனமேம்பாடு செய்யப்பட்டது. 13-வது நிதிக் குழு 2010-2011 ஆம் ஆண்டு முதல் 2014-2015 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில், வனங்களைப் பராமரிக்க தமிழ்நாட்டிற்கு ரூ.142.48 கோடி மானிய உதவி வழங்கிட பரிந்துரை செய்துள்ளது. இந்த மானியத் தொகை வனத்தினைப் பேணிப் பாதுகாப்பதற்காகவும், வன மேம்பாட்டிற்காகவும் செலவிட பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.6.88 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது.

2011-2012 ஆம் ஆண்டில் ரூ.28.74 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**35. வனச் சாலைகள் மேம்பாடு**

தமிழ்நாடு வனத் துறையின் கட்டுப்பாட்டில் 1,380 கி.மீ. நீள கல் மற்றும் தார் பரப்பிய சாலை, 1,943 கிமீ. மண் சாலை, ஆக மொத்தம் 3,323 கிலோ மீட்டர் நீளம் கொண்ட சாலைகள் உள்ளன.

*[2011 ஆகஸ்ட் 29*

*இவ்வகை சாலைகள் வன அலுவலர்களாலும், வனப் பகுதியை சார்ந்துள்ள பொது மக்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இயற்கை சூழ்நிலைக் காரணங்களால் இச்சாலைகள் சேதமடைகின்றன. எனவே இவ்வனச் சாலைகள் மேம்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன 2010-2011 ஆம் ஆண்டில் 19.53 கி.மீ. நீளத்திற்கு வனச் சாலை மேம்பாட்டுப் பணிகள் ரூ.2.04 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.16.79 கோடி மதிப்பீட்டில் 156.30 கி.மீ. நீளமுள்ள வனச் சாலைகள் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

### 36. பகுதி–II திட்டங்கள்

*2011-2012 ஆம் ஆண்டில் ரூ.461.69 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்டுள்ள 19 பகுதி—II திட்டங்கள் நிறைவேற்றப்படும். மனித—வன உயிரின மோதலைத் தவிர்த்தல், பழங்குடியினர் மேம்பாடு, பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளில் வனச் சாலை மேம்பாடு பொது மக்கள் மற்றும் விவசாயிகளுக்கு இலவசமாக விதைகள் மற்றும் மரக் கன்றுகள் உற்பத்தி செய்து வழங்குதல் போன்ற பணிகளுக்கு முக்கியத்துவம் தரப்படும்.*

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வன எல்லை ஓரங்களில் 67 கிலோ மீட்டர் தூரத்திற்கு யானைகள் தடுப்பு அகழிகள் தோண்டுதல் (கிலோ மீட்டர் ஒன்றுக்கு ரூ.2.10 லட்சம் வீதம்) | 140.70 |
| 2 | இடையூறு விளைவிக்கும் வன உயிரினங்களை வனப் பகுதிக்குள் திருப்பி அனுப்புதல் | 30.00 |
| 3 | தருமபுரி, ஸ்ரீவில்லிபுத்தூர், வேலூர் மற்றும் சத்தியமங்கலம் ஆகிய வனக் கோட்டங்களில் தலா ரூ.5 இலட்சம் வீதம் நான்கு நீர் நிலைகள் உருவாக்குதல் | 20.00 |
| 4 | நான்கு பழங்குடியினர் குடியிருப்பு பகுதிகளுக்கு தலா ரூபாய் 4.2 இலட்சம் வீதம் குடிநீர் வசதி செய்து கொடுத்தல் | 16.80 |



*2011 ஆகஸ்ட் 29]*

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 5 | பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கிட 5,00,000 செடிகள் உற்பத்தி செய்தல் | 30.00 |
| 6 | வனப் பகுதிகளில் வனச் சாலைகளை மேம்படுத்துதல் | 59.50 |
| 7 | சர்வதேச வன ஆண்டு விழாக் கொண்டாட்டம் (IYF 2011) | 25.00 |
| 8 | சிவகங்கை கோட்டம், சிவகங்கையில் மாவட்ட வன அலுவலர் குடியிருப்பினை ரூ.25.00 இலட்சத்திலும் மற்றும் பொள்ளாச்சி ஆனைமலை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட மஞ்சம்பட்டி மற்றும் கரட்டூரில் இணைந்த வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர் குடியிருப்புகளை தலா ரூ.10.00 இலட்சத்திலும் கட்டுதல் | 45.00 |
| 9 | சென்னை பனகல் மாளிகையில் உள்ள முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அலுவலகத்தில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல் | 10.00 |
| 10 | தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கல்லூரி வைகை அணையில் உள்ள பழைய கட்டடங்களை மேம்படுத்துதல் | 10.00 |
| 11 | சிறப்பு அதிரடிப்படையினரால் 300 வனக் காப்பாளர்களுக்கு தடுப்புப் பயிற்சி அளித்தல் | 1.58 |
| 12 | முள்ளில்லா மூங்கில் மரபணு வங்கியினைப் பராமரித்தல் | 1.00 |
| 13 | மாநில தலைமை வனத் துறை அலுவலகத்தில் உள்ள நூலகத்தை மேம்படுத்துதல் | 6.00 |
| 14 | இயக்க ஊர்திகள் வாங்குதல் (ஒரு சிறு சுமை ஊர்தி மற்றும் ஒரு இரு சக்கர வாகனம்) | 8.00 |
| 15 | கசிவுநீர்க் குட்டையினை மேம்படுத்துதல் | 5.00 |
| 16 | விதை பரப்பும் மற்றும் மகரந்த சேர்க்கைக்கு உதவும் உயிரினங்களுக்காக பழ மகசூல் தரும் மரங்களின் மரபணு வங்கி உருவாக்குதல் | 15.00 |

[2011 ஆகஸ்ட் 29

| | | |
|---|---|---|
| 17 | தரமான சிறந்த மர வகைகளின் விதைகளை சேகரித்து, மரங்களை உற்பத்தி செய்வதற்காக விவசாயிகளுக்கு வழங்குதல் | 12.11 |
| 18 | குளோனல் சந்தனமர மரபணு வங்கி அமைத்தல் | 20.00 |
| 19 | பழங்குடியின பெண்களின் துணைத்தொழில் ஆனைமலைப் பகுதியில் உள்ள மாவடப்பு, குலிப்பட்டி, குறுமலை வனப் பகுதிகளில் பழங்குடியின பெண்களின்மூலம் விதை தூவுதல் | 6.00 |
| | **மொத்தம்** | **461.69** |

**வனக் கழகங்கள்**

**37. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், திருச்சிராப்பள்ளி**

*தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், 1974 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 13 ஆம் நாள் திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக்கொண்டு இந்திய கம்பெனிச் சட்டம், 1956-ன்கீழ் நிறுவப்பட்டது. இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.10.00 கோடியும், செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.5.64 கோடியும் ஆகும். சுமார் 75,000 எக்டேர் பரப்புள்ள காப்புக்காடுகள் மற்றும் காப்பு நிலங்கள், தமிழ்நாடு வனத் துறையிடமிருந்து குத்தகை அடிப்படையில் எடுக்கப்பட்டது.*

*இக்கழகம், உற்பத்தித் திறன்மிக்க வீரிய தைல நாற்றுக்கள் நடுதல், முந்திரி ஒட்டுக்கன்று நாற்றுக்கள் நடுதல் மற்றும் மண்ணின் தன்மைக்கு ஏற்றவாறு வீரிய நாற்றுக்கள் நடுதல் மற்றும் விதைச்செடிகள் நடுதல் போன்ற நவீன தொழில்நுட்பங்களைக் கையாண்டு வருகிறது. இவ்வாறான செயல்பாடுகளால் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டு 1995 ஆம் ஆண்டு முதல் இக்கழகம் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகின்றது. 2010-2011 ஆம் ஆண்டு 1.94 இலட்சம் மெட்ரிக் டன் கூழ் மரங்கள் காகித நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2011-2012 ஆம் ஆண்டில் 1.85 இலட்சம் மெட்ரிக் டன் கூழ் மரங்களை காகித நிறுவனங்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.*



2011 ஆகஸ்ட் 29]

**உற்பத்தி மற்றும் நிதிநிலை முடிவுகள்:**

கூழ்மர உற்பத்தி

| வருடம் | உற்பத்தி (மெட்ரிக் டன்களில்) |
|---|---|
| 2008–2009 | 1.37 இலட்சம் |
| 2009–2010 | 1.51 இலட்சம் |
| 2010–2011 | 1.94 இலட்சம் |
| 2011–2012 | 1.85 இலட்சம் (உத்தேசமாக) |

**நிதிநிலைச் செயல்பாடுகள்**

| வ.எண் | விவரம் | 2008–2009 | 2009–2010 | 2010–2011 |
|---|---|---|---|---|
| 1 | வருவாய் | 4,616.97 | 5,165.22 | 6,380.75 |
| 2 | செலவினம் | 3,684.25 | 4,304.16 | 4,411.33 |
| 3 | லாபம் (+)/ நட்டம் (–) | (+) 932.72 | (+) 861.06 | (+) 1,969.42 |

**எதிர்கால கருத்துருக்கள்**

*2011-2012 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு புதிய தோட்டங்கள் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

| | | திட்ட இலக்கு எக்டேரில் | நிதி இலக்கு ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|---|
| (1) | தைல மரத் தோட்டங்கள் | 3,600 | 701.08 |
| (2) | முந்திரி மரத் தோட்டங்கள் | 800 | 169.84 |

[2011 ஆகஸ்ட் 29

## 38. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர்

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் மறுவாழ்வின் பொருட்டு நீலகிரி மாவட்டத்தில், 1968 ஆம் ஆண்டு தமிழக அரசால் 'அரசு தேயிலைத் திட்டம்' 4,432 எக்டேர் பரப்பளவில் தொடங்கப்பட்டு வனத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டது. பின்னர் 1976 ஆம் ஆண்டு 'டான்டீ' என்று பலராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் அரசு நிறுவனமாக 1956 ஆம் வருடத்திய நிறுவனங்களுக்கான சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது.

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.10.00 கோடி மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.5.96 கோடியாகும். இக்கழகத்தின் மொத்தப் பங்கு முதலீடும் தமிழ்நாடு அரசை சார்ந்ததாகும். இக்கழகம் நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் ஒரு பெரிய நிறுவனமாக விளங்கி வருகிறது.

இக்கழகம், 4,431.92 எக்டேர் பரப்பில் தேயிலைத் தோட்டத்தினை உருவாக்கியுள்ளது, ஆண்டொன்றிற்கு 120 இலட்சம் கிலோ கிராம் தேயிலைத் தூள் உற்பத்தி செய்யும் திறனுள்ள 8 நவீன தேயிலை தொழிற்சாலைகள் தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்திடம் உள்ளன. இக்கழகம், சுமார் 6,350 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும், சுமார் 2,500 தொழிலாளர்களுக்கு தற்காலிக வேலைவாய்ப்பும் வழங்குகிறது. இலவச வீட்டு வசதி, குடிநீர், இலவச மருத்துவ வசதிகள் போன்ற பிற வசதிகளும் இக்கழக தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இக்கழகம் மூன்று தோட்ட மருத்துவமனைகளையும், ஏழு ஆரம்ப பள்ளிகளையும் தொழிலாளர்களுக்காக நடத்தி வருகின்றது. இந்த மருத்துவமனைகளில் தற்காலிகத் தொழிலாளர்களுக்கும், அவரது குடும்பத்தைச் சார்ந்தோருக்கும் மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படுகின்றது.

இக்கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் 01-04-2011 முதல், நாள் ஒன்றுக்கு ரூபாய் 132.94 தின ஊதியமாகப் பெறுவதற்கு அரசு அறிவிப்பு செய்துள்ளது. இவர்களுக்கு தொழிலாளர் வைப்பு நிதி, போனஸ், பணிக்கொடை போன்ற சட்டபூர்வமான பயன்பாடுகளும் கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறது.



2011 ஆகஸ்ட் 29]

### உற்பத்தி மற்றும் நிதி நிலை முடிவுகள்

தேயிலைத் தூள் விற்பனை விலை 2009-2010 ஆம் ஆண்டில் உயர்ந்ததன் காரணமாக, இக்கழகம் ரூ.1047.40 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இருப்பினும் சாதகமற்ற பருவநிலை மற்றும் தேயிலைத் தூள் விலை வீழ்ச்சி காரணமாக 2010-2011 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு, நாட்டம் ஏற்பட்டது.

தேயிலைத் தூள் உற்பத்தி மற்றும் நிதிநிலை முடிவுகள்

| வருடம் | தேயிலைத்தூள் உற்பத்தி (இலட்சம் கிலோவில்) | லாபம் (+)/ நட்டம் (–) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2008-2009 | 101.05 | (+) 921.21 |
| 2009-2010 | 103.98 | (+) 1,047.40 |
| 2010-2011 | 93.22 | (-) 1,532.50 (தணிக்கை செய்யப்படாதது) |
| 2011-2012 | 108.00* | – |

* இலக்கு

இக்கழகம், 2011-2012 ஆம் ஆண்டில் ஜுன் 2011 வரை 26.42 இலட்சம் கிலோ தேயிலைத் தூள் உற்பத்தி செய்து அதில் 24.57 இலட்சம் கிலோ விற்பனை செய்துள்ளது.

### எதிர்கால கருத்துருக்கள்

#### (i) சில்லரை விற்பனையை அதிகரித்தல்

இக்கழகம், பாக்கெட் தேயிலைத் தூள் விற்பனையை மேம்படுத்தவும், விற்பனை அளவை அதிகரிக்கவும், பாரத் பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட் போன்ற பொதுத் துறை நிறுவனங்கள்மூலமும் மற்றும் தேயிலைத் தூள் விற்பனை முகவர்களை அதிகரிப்பதன் மூலமும் சில்லரை விற்பனையைப் பெருக்க தக்க நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது. மேலும், 2009-2010 ஆம் ஆண்டில் பாரத் பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்ததையடுத்து தமிழ்நாட்டிலுள்ள இந்நிறுவனத்தின் சில்லரை அங்காடிகள்மூலமாக பாக்கெட் தேயிலைத் தூள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

[2011 ஆகஸ்ட் 29

**(ii) இயற்கை தேயிலைத் தூள் உற்பத்தி செய்தல்**

முற்றிலும் இயற்கை உரங்களைக் கொண்டு மண்ணின் ஆரோக்கியம், சுற்றுச்சூழல மற்றும் உற்பத்தி பொருளின் தரத்தை மேம்படுத்தி இயற்கை சார்ந்த தேயிலை உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் முதல் கட்ட நடவடிக்கையாக குன்னூர் தேயிலைக் கோட்டத்தில் 7.5 எக்டேர் பரப்பளவில் இயற்கை தேயிலையை (organic Tea) உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(iii) இந்திய தரக் கட்டுப்பாடு சான்றிதழ்**

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம் முழுவதற்கும் ஐ.எஸ்.ஓ. 22000 : 2005 தரச் சான்றிதழ் பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**39. அரசு இரப்பர் கழகம், நாகர்கோவில்**

அரசு இரப்பர் கழகம் முழுவதுமாக மாநில அரசின் கீழ் இயங்கும் பொதுத் துறை நிறுவனமாகும். மண்வளம், பருவ நிலை, சாதகமான இடம் ஆகியன இரப்பர் மரத்தை வளர்ப்பதற்கு உகந்ததாக உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில், அரசு இரப்பர் கழகம் 4,279.78 எக்டேர் வளப் பரப்பினை வனத்துறையிலிருந்து குத்தகைக்கு எடுத்து இரப்பர் மரங்களை உற்பத்தி செய்து வருகிறது. இந்தக் கழகம், கம்பெனிச் சட்டம் 1956-ன்படி பதிவு செய்யப்பட்டு 1-10-1984 முதல் செயல்பட்டு வருகின்றது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களைச் சார்ந்த 336 தொழிலாளர்கள் உட்பட இக்கழகத்தில் 1,637 நிரந்தரத் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.10.00 கோடி மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.8.45 கோடியாகும்.



2011 ஆகஸ்ட் 29]

**(i) உற்பத்தி மற்றும் வரவு செலவு விவரம்**

| வ. எண் | வருடம் | உற்பத்தி (மெட்ரிக் டன்களில்) | | மொத்த வருவாய் (ரூபாய் இலட்சத்தில்) | இலாபம் (+) / நட்டம் (–) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | | |
| 1 | 2001–2002 | 2800 | 2511 | 998.38 | (–) 646.47 |
| 2 | 2002–2003 | 2800 | 2828 | 1238.29 | (+) 59.27 |
| 3 | 2003–2004 | 2700 | 2668 | 1450.35 | (+) 117.44 |
| 4 | 2004–2005 | 2025 | 2037 | 1252.42 | (+) 20.82 |
| 5 | 2005–2006 | 2500 | 2562 | 1872.83 | (+) 69.41 |
| 6 | 2006–2007 | 2115 | 2116 | 1937.98 | (+) 543.41 |
| 7 | 2007–2008 | 2100 | 2003 | 1946.82 | (+) 178.12 |
| 8 | 2008–2009 | 2000 | 1680 | 1758.73 | (+) 10.80 |
| 9 | 2009–2010 | 2050 | 2030 | 2331.87 | (+) 216.07 |
| 10 | 2010–2011 | 1700 | 1823 | 4487.77 | (+) 1738.56 |
| 11 | 2011–2012 | 2000 | *121.52 | *428.60 | |

*(2011 ஜூன் மாதம் வரையிலான காலத்திற்கு தோராயமாக கொடுக்கப்பட்டுள்ளது).

**(ii) எதிர்காலத் திட்டங்கள்**

திருத்திய மறு நடவு திட்டத்தின்படி ஐந்து ஆண்டுகளில் 1,100 எக்டேர் பரப்பில் முதிர்ந்த இரப்பர் மரங்களை அகற்றி, இரப்பர் மறு நடவு செய்வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவ்வாணையின்படி 2011-2012 ஆம் ஆண்டில் 340 எக்டேர் பரப்பளவில் இரப்பர் மரக்கன்றுகள் நடப்படும்

[2011 ஆகஸ்ட் 29

# இணைப்பு IV

(464 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 15—சுற்றுச்சூழல்

## [சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை]

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2011 – 2012

அனைத்து உயிரினங்கள் வாழ்வதற்கும், வளர்வதற்கும் ஆரோக்கியமான சுற்றுச்சூழல் அவசியமானதாகும். ஒரு மாநிலத்தின் நீடித்த முன்னேற்றமானது பொருளாதார வளர்ச்சி, சமூக மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் என்ற மூன்றின் அடிப்படையில் அமையும். இயற்கை ஆதாரங்களின் மீதான அதிக நெருக்கடியால் சுற்றுச்சூழலை பாதுகாப்பது என்பது ஒரு மிகப் பெரிய சவாலாக உள்ளது. மனித இனத்தின் செயல்பாடுகளால் நீடித்த வாழ்க்கை முறையில் வளர்ந்து வரும் நெருக்கடியான உலகம் வெப்பமயமாதல், சூழல் மாசடைதல், சுத்தமான நீர் தட்டுப்பாடு மற்றும் உயிரின அழிவு போன்றவற்றைக் குறைக்க தேவையான நடவடிக்கை அவசியமாகிறது. மனிதனின் எதிர்காலம் தாவரம், விலங்குகள் மற்றும் உயிர் சூழல் அமைப்பு ஆகியவற்றோடு தவிர்க்க இயலாத நிலையில் இணைந்துள்ளது.

எனவே, சூழலியல் சமன்பெற நிலம், நீர், காடுகள் மற்றும் பல்லுயிரினப் பெருக்கம் ஆகியவற்றைப் பாதுகாத்து மேம்படுத்துதல் அவசியமாகும். சுற்றுச்சூழல் பாதிப்பால் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக நதிநீர் மற்றும் ஏரிகளில் மாசுத் தடுப்பு, பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை பெருமளவில் ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

### 2. சுற்றுச்சூழல் துறையின் செயல்பாடுகள்

தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை 1995 ஆம் ஆண்டு மாநிலத்தின் சுற்றுச்சூழல் மேலாண்மை மேற்கொள்ளும் இணைப்புத் துறையாக உருவாக்கப்பட்டது. இத்துறை கீழ்க்கண்ட பணிகளை பொறுப்பேற்று செயல்படுத்தி வருகிறது.



2011 ஆகஸ்ட் 29]

- ❖ காவிரி, வைகை மற்றும் தாமிரபரணி ஆறுகள் மற்றும் சென்னை நகர நீர்வழிகள் ஆகியவற்றின் கரையோரங்களில் மாசுத் தடுப்பு பணிகளை தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை மூலமாக செயல்படுத்துதல்
- ❖ தேர்ந்தெடுக்கப்பட்ட மாசடைந்த ஏரிகளில் மாசு தடுப்புப் பணிகளை தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்துதல்
- ❖ தேசிய பசுமைப் படை மூலமாக பள்ளி மாணவர்களிடையே பலதரப்பட்ட சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொள்ளுதல்
- ❖ கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையினை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்தல்
- ❖ உலக வங்கி நிதியுதவியுடன் அவசர கால சுனாமி மறு சீரமைப்புத் திட்டத்தினை செயல்படுத்துதல்
- ❖ சுற்றுச்சூழல் தகவல் மையத்தின் வலைதளம் வாயிலாக இம்மாநில சுற்றுச்சூழல் பற்றிய தகவல்கள் மற்றும் அது தொடர்பான விவரங்களை வெளியிடுதல்

### 3. தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நதிகளின் மாசுத் தடுப்பு பணிகள்

மைய அரசு 1985 ஆம் ஆண்டு மாசுபட்டிருந்த கங்கை நதியின் நீர் தரத்தை மேன்மைப்படுத்த கங்கை செயல் திட்டத்தினை மேற்கொண்டது. இத்திட்டம் 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நாட்டிலுள்ள முக்கியமான நதிகளுக்கும் “தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டமாக” விரிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் காவிரி, வைகை, தாமிரபரணி கரையோரங்களில் உள்ள நகரங்களிலிருந்து ஆற்றில் கலக்கும் கழிவுநீரைத் தடுத்து, வழிப்படுத்தி, சேகரித்து, சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[2011 ஆகஸ்ட் 29

**3.1. காவிரிப் படுகை**

காவிரிப்படுகையில் மாசு ஏற்படாமல் தடுக்க மத்திய அரசின் நிதியுதவியுடன் தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.380.58 கோடி செலவில் 1996-1997 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக இதுவரை ரூ.329.36 கோடி செலவிடப்பட்டுள்ளது. முக்கியப் பணிகளான கழிவு நீரைத் தடுத்து வழிப்படுத்துதல் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டம் வழியாக கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் (1) ஈரோடு, (2) பவானி, (3) குமாரபாளையம், (4) பள்ளிபாளையம், (5) திருச்சி, (6) தஞ்சாவூர், (7) மயிலாடுதுறை, (8) கரூர்-இனாம் கரூர், (9) திருச்சி-ஸ்ரீரங்கம் ஆகிய நகரங்களிலும் (10) கும்பகோணம் நகரத்தில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் வழியாகவும் மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட பணிகள் பவானி மற்றும் பள்ளிபாளையம் தவிர மற்ற நகரங்களில் முடிவடைந்துள்ளது. பவானியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்த இடத்திற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் பணி நிறுத்தப்பட்டுள்ளது. பள்ளிபாளையத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. மயிலாடுதுறை மற்றும் தஞ்சாவூரில் கூடுதல் பணிகள் முறையே ரூ.2.98 கோடி மற்றும் ரூ.2.54 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறு பணிகளான குறைந்த செலவிலான சுகாதாரத் திட்டம், எரியூட்டு மேடை மற்றும் ஆற்றங்கரைப் பாதுகாப்புப் பணிகள் ஆகியவை உள்ளாட்சி அமைப்புகள்மூலம் நிறைவேற்றப்பட்டன.

**3.2. வைகை நதி**

முக்கிய பணிகள் மதுரை நகரில் ரூ.165 கோடி செலவில் 2007 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. கழிவுநீரைத் தடுத்து வழிப்படுத்தும் பணி மற்றும் கழிவு நீரேற்று நிலையம் அமைக்கும் பணி (சிப்பம் I & II) சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. மதுரை மாநகராட்சியால் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் (JNNURM) நிதி உதவியோடு



2011 ஆகஸ்ட் 29]

நடைபெற்று வருகிறது. மேலும் சிப்பம் 4-ல் கழிவுநீரைத் தடுத்து வழிப்படுத்தும் பணி மற்றும் கால்வாய்களின் சீரமைப்பு பணிகள் (lining) மதுரை மாநகராட்சிமூலம் செயல்படுத்தப்பட வேண்டும். இப்பணிக்காக இதுவரை ரூ.111.90 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**3.3. தாமிரபரணி நதி**

திருநெல்வேலி நகரத்திற்கு, பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.66 கோடி செலவில் 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.56.90 கோடி செலவிடப்பட்டுள்ளது. சிறு பணியான திடக்கழிவு மேலாண்மை திருநெல்வேலி மாநகராட்சியால் நிறைவேற்றப்பட்டது.

**3.4. சென்னை மாநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்**

மத்திய அரசின் ரூ.491.52 கோடி நிதி உதவியுடன் சென்னை நகரின் முக்கிய ஆறு நீர் வழித் தடங்களான கூவம், பக்கிங்ஹாம் கால்வாய், அடையாறு, ஓட்டேரி ஓடை, கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் மாம்பலம் கால்வாய் ஆகியவற்றில் மாசுத் தடுப்புப் பணிகள் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. முக்கிய நீர்வழித் தடங்களில் சேரும் கழிவுநீர்க் கால்வாய்களைத் தடுத்து நிறுத்தி, குழாய்மூலம் மாற்று வழியில் எடுத்துச் சென்று பெருங்குடி (நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர்), கோயம்பேடு (நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர்), நெசப்பாக்கம் (நாளொன்றுக்கு 40 மில்லியன் லிட்டர்), மற்றும் கொடுங்கையூர் (நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டர்), ஆகிய இடங்களில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிப்பு செய்வது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்மூலம் கூடுதலாக நாளொன்றுக்கு 264 மில்லியன் லிட்டர் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலமாகச் சுத்திகரிப்பு செய்யப்படும்.

கூடுதல் பணிகள் ரூ.22.16 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன. சிறு பணியான எரிவாயு மயான மேடை அமைக்கும் பணி, ஆலந்தூர் நகராட்சியால் செயல்படுத்தப்பட்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 29

**நிதி மற்றும் செயல் இலக்கு முன்னேற்றம்**

| விவரங்கள் | முதன்மை பணிகள் | கூடுதல் பணிகள் |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| மத்திய அரசினால் ஒப்பளிக்கப்பட்ட தொகை | 491.520 | – |
| ஒப்பளிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீட்டுத் தொகை | 382.707 | 22.16 |
| இதுவரை பெறப்பட்ட தொகை | 380.500 | – |
| 31–3–2011 வரையிலான செலவினம் | 381.34 | 8.80 |

## 4. தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம்

*சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் 2004 ஆம் ஆண்டு மாநிலத்திலுள்ள மாசடைந்த ஏரிகளைக் கண்டறிந்து, தேசிய ஏரி பாதுகாப்புத் திட்டத்தின் வழிகாட்டுதல்படி அனுப்புமாறு கேட்டுக்கொண்டது. அதன்படி, கீழ்க்கண்ட 15 ஏரிகள் கண்டறியப்பட்டு, மைய அரசிற்கு அனுப்பப்பட்டது.*

| வ.எண் | மாவட்டம் | ஏரியின் பெயர் |
|---|---|---|
| 1. | உதகமண்டலம் | ஊட்டி |
| 2. | திண்டுக்கல் | கொடைக்கானல் |
| 3. | காஞ்சிபுரம் | கொளவாய் |
| 4. | சேலம் | ஏற்காடு |
| 5. | சென்னை | வேளச்சேரி |
| 6. | காஞ்சிபுரம் | திருநீர்மலை |
| 7. | கோயம்புத்தூர் | பெரியகுளம் |
| 8. | காஞ்சிபுரம் | நாராயணபுரம் |
| 9. | மதுரை | மாடக்குளம் |
| 10. | கோயம்புத்தூர் | சிங்காநல்லூர் குளம் |
| 11. | கோயம்புத்தூர் | கிருஷ்ணாம்பதி |
| 12. | நாகப்பட்டினம் | தாமரைக்குளம் |
| 13. | காஞ்சிபுரம் | நெமிலிச்சேரி |
| 14. | காஞ்சிபுரம் | கடப்பேரி |
| 15. | காஞ்சிபுரம் | பீர்க்கன்கரணை |



2011 ஆகஸ்ட் 29]

*மேற்கண்ட பட்டியலில் உள்ள ஊட்டி மற்றும் கொடைக்கானல் ஏரிகளைப் புதுப்பிக்கும் பணிக்கான ஒப்புதல் தேசிய ஏரி பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முன்னரே பெறப்பட்டு விட்டது.*

### 4.1. ஊட்டி ஏரியைப் புதுப்பிக்கும் பணி

*மைய அரசு இத்திட்டத்தை ரூ.1.75 கோடியில் பொதுப் பணித் துறைமூலம் செயல்படுத்த ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்தின்கீழ், களை அகற்றுதல் மற்றும் வண்டல் அகற்றுதல், நுண்ணுயிரிகளைக் கொண்டு நீரினைத் தூய்மையாக்குதல் ஆகிய பணிகள் 2005 ஆம் ஆண்டு ரூ.1.73 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டன. இதற்கு மைய அரசு 100 விழுக்காடு நிதியுதவி வழங்கியுள்ளது.*

### 4.2. கொடைக்கானல் ஏரியைப் புதுப்பிக்கும் பணி

*கொடைக்கானல் ஏரியைப் புதுப்பிக்கும் பணிக்காக, ரூ.10.42 கோடியிலான திருத்திய விரிவு அறிக்கைக்கு மைய அரசு 2007 ஆம் ஆண்டு ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்தில், கழிவுநீரைத் தடுத்து வழிப்படுத்தும் பணி மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி ஆகியவை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வழியாகவும், (மத்திய மாநில அரசின் 70:30 விழுக்காடு நிதி உதவியுடன்) நீர்ப்பரப்பில் களை அகற்றுதல் மற்றும் வண்டல் அகற்றுதல், நுண்ணுயிரிமூலம் நீரினைத் தூய்மையாக்குதல் ஆகிய பணிகள் மைய அரசின் 100 விழுக்காடு மானியமாக பொதுப்*

[2011 ஆகஸ்ட் 29

பணித் துறை வழியாகவும் மற்றும் குறைந்த செலவிலான சுகாதார கழிப்பிடத் திட்டத்தையும் மைய அரசின் 100 விழுக்காடு மானியமாக கொடைக்கானல் நகராட்சி வழியாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக இதுவரை ரூ.3.99 கோடி செலவிடப்பட்டுள்ளது. மைய அரசு இத்திட்டத்திற்காக இதுவரை ரூ.2.00 கோடி நிதி விடுவித்துள்ளது.

### 4.3. ஏற்காடு ஏரியைப் புதுப்பிக்கும் பணி

இதற்கான விரிவான திட்ட மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் பொதுப் பணித் துறையினரால் ரூ.5.48 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, தேசிய ஏரிகள் பாதுகாப்பு இயக்ககத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. திட்ட மதிப்பீடு தற்போதைய விலைப்பட்டியல் அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட்டு வருகிறது.

### 5. தேசிய பசுமைப் படை

தமிழகத்தில் தேசிய பசுமைப் படை, மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் உதவியுடன் 2003 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:

- ❖ பள்ளி மாணவர்களை சுற்றுச்சூழலையும், சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகளையும் புரிந்து கொள்ளச் செய்தல்
- ❖ பள்ளி மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் கல்விக்கான வாய்ப்புகளை வழங்குதல்
- ❖ மாணவர்களை தங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றுச்சூழல் தொடர்பான செயல் திட்ட நடவடிக்கைகளில் பங்கேற்கச் செய்தல்

தற்போது தமிழகத்தில் மாவட்டத்திற்கு 250 பள்ளிகள் வீதம் 7,500 பள்ளிகளில் தேசிய பசுமைப் படை செயல்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் பள்ளி ஒன்றிற்கு ரூ.2,500/- வீதம் மத்திய அரசு நிதியுதவி வழங்குகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்களுக்கும், கல்வி மாவட்ட சுற்றுச்சூழல்



2011 ஆகஸ்ட் 29]

ஒருங்கிணைப்பாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 100% மானியத்துடன் செயல்படும் இத்திட்டம் நடப்பு ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 3 இலட்சம் மாணவ, மாணவியர்கள் தேசிய பசுமைப் படையில் உறுப்பினர்களாக உள்ளனர். நடப்பு ஆண்டில் மேலும் 500 பள்ளிகளில் இத்திட்டத்தினை விரிவுபடுத்தி கூடுதலாக 20,000 மாணவ, மாணவியர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட உள்ளனர்.

### 5.1. தேசிய பசுமைப் படையில் மேற்கொள்ளப்படும் செயல்முறை நடவடிக்கைகள்

- மரக்கன்று நடவு செய்தல்
- சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஊர்வலங்கள் குறைந்தது 6 பசுமை தினங்களை ஓராண்டில் கொண்டாடுவது (உ.ம். உலக சுற்றுச்சூழல் தினம், சர்வதேச ஓசோன் தினம், உலக பாரம்பரிய நாள், தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம், சர்வதேச உயிர் பன்மய தினம், உலக ஈர நில நாள், உலக வன நாள், உலக நீர் நாள், உலக பூமி தினம்)
- மண் புழு உரம் தயார் செய்தல்
- சுற்றுச்சூழல் கருத்துக்காட்சி
- சுற்றுச்சூழல் தொடர்பான போட்டிகள்
- பிளாஸ்டிக் பொருட்களுக்கு எதிரான பிரச்சாரம்
- சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தொடர்பான கலை நிகழ்ச்சிகள்
- இயற்கை சூழல் முகாம்
- அனைத்து மாவட்டங்களிலும், மாணவ, மாணவியர் மற்றும் ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்களுக்கு சிறப்புப் பயிற்சித் திட்டங்களை வனவியல் விரிவாக்க மையங்களில் நடத்துதல்

புதிய முயற்சியாக பள்ளிகளில் மூலிகைத் தோட்டம், காய்கறித் தோட்டம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 29

## 5.2. மத்திய அரசு வழங்கியுள்ள நிதி உதவி விவரங்கள்

| ஆண்டு | பள்ளிகளின் எண்ணிக்கை | ஒரு பள்ளிக்கு வழங்கப்பட்ட நிதியுதவி (ரூ.) | மத்திய அரசால் விடுவிக்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 2002–03 | 2,885 | 500 | 0.144 |
| 2003–04 | 4,350 | 1,000 | 0.435 |
| 2004–05 | 4,350 | 1,000 | 0.435 |
| 2005–06 | 4,500 | 2,500 | 1.125 |
| 2006–07 | 7,500 | 2,500 | 1.875 |
| 2007–08 | 7,500 | 2,500 | 1.875 |
| 2008–09 | 7,500 | 2,500 | 1.875 |
| 2009–10 | 7,500 | 2,500 | 1.875 |
| 2010–11 | 7,500 | 2,500 | 1.875 |
| **மொத்தம்** | | | **11.514** |

இதுதவிர ரூ.7.50 இலட்சம் செயல்பாடுகளைக் கண்காணித்து பலப்படுத்தும் நடவடிக்கைகளுக்காகவும், ரூ.9.5 இலட்சம் நிருவாகச் செலவினங்களுக்காகவும் மத்திய அரசு வழங்குகிறது. 2010-2011 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.2.04 கோடி இத்திட்டத்திற்கு நிதி பெறப்பட்டுள்ளது.

## 6. கடற்கரைப் பகுதி மேலாண்மை

தமிழ்நாடு 1,076 கி.மீ. நீளமுள்ள கடலோரத்தைக் கொண்டுள்ளது. இது இந்தியாவின் கடலோரத்தின் 15 சதவீதத்தினை உள்ளடக்கியது. கடலோர சூழலினைப் பாதுகாப்பதற்கும், கடலோரத்திலுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை



2011 ஆகஸ்ட் 29]

ஒழுங்குபடுத்துவதற்கும், மைய அரசு திருத்திய கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கை 2011-ஐ சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986-ன்கீழ் வெளியிட்டுள்ளது. இந்த அறிவிக்கையானது கடலோரப் பகுதிகளின் இயற்கைச் சீரழிவுகளின் அபாயங்கள், உலகளாவிய வெப்பமயமாதலினால் ஏற்படும் கடல்மட்ட உயர்வு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, கடற்கரையோரங்களில் வசித்து வரும் மீனவ சமுதாயம் மற்றும் இதர உள்ளூர் சமுதாய மக்களின் வாழ்வாதாரங்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதனையும், கடலோரப் பகுதிகளின் சுற்றுச்சூழலை அதன் தன்மை மாறாது பாதுகாத்து மேம்படுத்திடவும், கடற்கரைப் பகுதிகளின் வளர்ச்சியினை விஞ்ஞான பூர்வமான கொள்கைகளின் அடிப்படையில் ஏற்புடையதாக உருவாக்குவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

கீழ்க்கண்ட கடலோரப் பகுதிகளுக்கு கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கை பொருந்தும்:—

- ❖ உயர் பேரலை வரிசையிலிருந்து (HTL) 500 மீட்டர் வரையான தரைப்பகுதி
- ❖ கடலோடு இணைந்துள்ள நீர்நிலைகளின் நிலம் நோக்கிய பகுதியில் பேரலை வரிசையிலிருந்து 100 மீட்டர் வரையிலான தரைப்பகுதி, 100 மீட்டர் வரையிலான நிலப்பரப்பு அல்லது நீர்நிலையில் அகலம், இரண்டில் எது குறைவானதோ அவ்விடங்கள் கடற்கரை ஒழுங்குமண்டல அறிவிக்கை வரம்பிற்குள் உள்ளது
- ❖ உயர்பேரலை வரிசைக்கும் இடர் வரிசைக்கும் இடைப்பட்ட பகுதி அல்லது உயர் பேரலை வரிசைக்கும் 500 மீ.க்கும் இடைப்பட்ட தரை நோக்கிய நிலப் பகுதி
- ❖ உயர்பேரலை வரிசைக்கும் (HTL) தாழ்பேரலை வரிசைக்கும் (LTL) இடைப்பட்ட நிலப் பகுதி (Inter Tidal Zone) எனப்படும் நிலப்பகுதி ஆகும்
- ❖ கடல்நீர் பகுதியில் உயர் பேரலை வரிசைக்கும் நாட்டின் கடல் எல்லைப் பகுதிக்கும் (12 நாட்டிகல் மைல்) இடைப்பட்ட கடல் பகுதியும், பேரலை தாக்கமுள்ள நீர்நிலைப் பகுதிகளில் இரு தாழ்பேரலை வரிசைகளுக்கு இடைப்பட்ட நீர்ப் பகுதி

*[2011 ஆகஸ்ட் 29*

## 6.1. கடற்கரை மண்டலங்களின் வகைப்பாடுகள் மற்றும் மேலாண்மை குழுமங்கள்

- *கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்—I (சூழல் முக்கியத்துவம் வாய்ந்தவை)*
- *கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்-II (வளர்ச்சியடைந்த பகுதி)*
- *கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்-III (கிராமப் பகுதி) மற்றும்*
- *கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்-IV (கடல்நீர் பகுதியில் உயர் பேரலை வரிசைக்கும் நாட்டின் கடல் எல்லை பகுதிக்கும் (12 நாட்டிகல் மைல்கள்) இடைப்பட்ட கடல் பகுதியும், பேரலை தாக்கமுள்ள நீர்நிலைப்பகுதிகள்)*

*புதுடில்லியில் அமைந்துள்ள மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம், தமிழக அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை செயலரை தலைவராகவும், சுற்றுச்சூழல் துறை இயக்குநரை உறுப்பினர் செயலராகவும் கொண்ட மாநில அளவிலான கடற்கரையோர மேலாண்மைக் குழுமத்தை நிறுவியுள்ளது. மாநில அரசு, மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான கடற்கரையோர மேலாண்மைக் குழுமங்களை 1998 ஆம் ஆண்டு அமைத்துள்ளது.*

*கடற்கரையோர ஒழுங்குமுறை அறிவிக்கை 2011-ன்கீழ் பெறப்படும் கருத்துருக்கள் முதலில் மாவட்ட கடற்கரையோர மேலாண்மைக் குழுவால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, ஒருநிலை வரையில் மாநில அளவிலான கடற்கரையோர மேலாண்மைக் குழுமத்தின் ஒப்புதலுக்கும், மற்றவை தேசிய மேலாண்மைக் குழுமத்தின் ஒப்புதலுக்கும் பரிந்துரைக்கப்படுகின்றன.*

*இதுநாள் வரையில் 63 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. கடந்த 11 ஆண்டுகளில் மாநில குழுமத்தால் மைய அரசிற்கு 152 திட்டங்கள் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. மாநில குழுமத்தால் 98 திட்டங்களுக்கு அனுமதிக்கப்பட்டு 9 பிரேரணைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கையை மீறுவதைத் தடுப்பதற்காக கடற்கரை பாதுகாப்பு படை அமைக்கப்பட்டுள்ளது.*



*2011 ஆகஸ்ட் 29]*

## 6.2. தமிழ்நாடு மாநில கடற்கரையோர மேலாண்மைக் குழுமத்தால் கூர்ந்தாய்வு செய்யப்பட்ட திட்டங்களின் விவரங்கள்

| ஆண்டு | தேசிய மேலாண்மை குழுமத்திற்கு அனுப்பப் பட்டவை | மாநில மேலாண்மை குழுமத்தால் அனுமதிக்கப் பட்டவை | நிராகரிக்கப் பட்டவை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2001 | 5 | 1 | | 6 |
| 2002 | 2 | | | 2 |
| 2003 | 8 | 1 | | 9 |
| 2004 | 9 | 2 | | 11 |
| 2005 | 19 | 5 | | 24 |
| 2006 | 12 | 2 | | 14 |
| 2007 | 15 | 6 | 1 | 22 |
| 2008 | 27 | 51 | | 78 |
| 2009 | 20 | 10 | 3 | 33 |
| 2010 | 33 | 19 | 5 | 57 |
| 2011 | 2 | 1 | | 3 |
| **மொத்தம்** | **152** | **98** | **9** | **259** |

## 7. அவசர கால சுனாமி மறு சீரமைப்புத் திட்டம் (ETRP)

*1,076 கி.மீ. நீளமுள்ள தமிழக கடற்கரையோரப் பகுதியானது விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில்களை ஆதாரமாகக் கொண்டும், பலதரப்பட்ட நிலப் பயன்பாடு, கிராம மற்றும் நகரப் பகுதிகளை உள்ளடக்கியும் உள்ளது. சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளை மறுசீரமைத்திடவும்,*

[2011 ஆகஸ்ட் 29

கடலோரப் பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டத்தினை உருவாக்கிடவும் உலகவங்கி நிதியுதவியுடன் கீழ்க்காணும் திட்டங்கள் இத்துறைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

**7.1. தமிழகக் கடலோரத்தின் பாலாறு முகத்துவாரம் முதல் குமரி மாவட்டத்திலுள்ள தேங்காபட்டினம் வரை உயர் அலைமட்டம் குறியிடுதல்**

சுற்றுச்சூழல் துறையால் பாலாறு முதல் குமரி மாவட்டத்திலுள்ள தேங்காபட்டினம் வரை கடலோரப் பகுதிகளிலும், அலைகளின் தாக்கத்திற்கு உள்ளாகும் அருகிலுள்ள நீர்நிலைகளிலும் உயர் அலைமட்ட குறியீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. உயர் அலை மட்டத்தினை அதற்கான கிராம வரைபடங்களில் 1:5000 என்ற அளவீட்டில் குறியீடு செய்யும் பணிகள் ரூ.2.21 கோடி திட்ட மதிப்பில், 2007-இல் அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு மையத்திடம் ஒப்படைக்கப்பட்டது. உயர் அலை மட்ட வரைபடங்கள் தயாரித்து முடிக்கப்பட்டு இதற்காக ரூ.2.19 கோடி செலவிடப்பட்டுள்ளது. இவ்வுயர் அலைமட்ட வரைபடங்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

**7.2. உயர் அலைமட்ட குறியீடு செய்யப்பட்ட இடங்களில் கல்தூண் நடுதல்**

கடலோரத்தில் வசிக்கும் மக்கள் உயர் அலை மட்டத்தை அறிந்து கொள்ள ஏதுவாக உயர் அலை மட்ட எல்லையைக் குறிக்கும் வகையில் 250 மீட்டர் இடைவெளியில் கடலோரத்தில் கல்தூண்கள் நடும்பணி ரூ.1 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2007-2008-இல் இப்பணி துவக்கப்பட்டு மூன்று மாவட்டங்களில் முடிவு பெற்றுள்ளது.

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | நடப்பட்ட தூண்களின் எண்ணிக்கை | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | சென்னை | 62 | 1.96 |
| 2 | திருவள்ளூர் | 104 | 3.36 |
| 3 | காஞ்சிபுரம் | 347 | 11.18 |
| | மொத்தம் | 513 | 16.50 |



2011 ஆகஸ்ட் 29]

எஞ்சியுள்ள 10 மாவட்டங்களில் இப்பணி வனத் துறையால் மேற்கொள்ளப்படவுள்ளது.

**7.3. ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம்**

தமிழகக் கடலோரப் பகுதி, தொழிற்சாலைகள், சுற்றுலா, மீன் பிடித்தல் போன்ற பொருளாதார நடவடிக்கைகள் பலவற்றை உள்ளடக்கியது. பல்வேறு மாறுபட்ட பயனாளிகளிடையே கருத்து வேறுபாடு மனப்பான்மையைக் குறைப்பதற்கும், அனைத்துப் பயனாளிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காகவும் ஒரு மேலாண்மைத் திட்டம் அவசியமானதாகும். தமிழகக் கடற்கரையோரப் பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பினை பாதிக்காத வகையில், பொருளாதார மேம்பாட்டினை அடைவதற்கு ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் தயாரிக்கும் பணி ரூ.4.92 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி 2007 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

இந்த மேலாண்மைத் திட்டத்தில் கீழ்க்கண்ட வரைபடங்கள் மற்றும் அறிக்கைகள் தயாரிக்கப்பட உள்ளன.

❖ நிலப் பயன்பாடு மற்றும் நிலத்தகுதி மதிப்பீட்டு அறிக்கை

❖ ஒருங்கிணைந்த அபாயத்திற்கு உள்ளாகக்கூடிய மற்றும் கடலோரத்தில் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளின் வரைபடங்களுடன்கூடிய துறைகளுக்கிடையேயான சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை

❖ புவி தகவல் அமைப்பியல் வரைபடங்களுடன் துறை சார்ந்த செயல் திட்டம்

❖ சிறப்புப் பகுதி மேலாண்மைத் திட்டம்

❖ பயிற்சித் திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு

❖ வரைபடங்களுடன்கூடிய ஒருங்கிணைந்த கடலோரப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்தகவல்கள் கடலோரப் பகுதிகளில் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்த அடிப்படையாக அமையும். பல அடுக்குகளைக் கொண்ட இத்தகவல்கள் கடலோரப் பகுதிகளில் இயற்கைப்

[2011 ஆகஸ்ட் 29

பேரிடர்களால் ஏற்படும் பாதிப்புகளை மதிப்பீடு செய்யவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் உதவியாக இருக்கும். இவ்வருட இறுதிக்குள் இப்பணியினை முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை இப்பணிக்காக ரூ.1.23 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 7.4. புவி தகவல் அமைப்பியல் கூடம் உருவாக்குதல் (GIS Cell)

உலக வங்கி நிதியுதவியுடன் இத்துறையில் ஒரு புவி தகவல் அமைப்பியல் கூடம் ரூ.23.00 இலட்சம் செலவில் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடலோரம் குறித்த பல அடுக்குகளைக்கொண்ட வரைபடம் மற்றும் வரைபடமில்லா தகவல்கள் இக்கூடத்தில் பராமரிக்கப்படும். இதுதவிர, மாற்றுத் தீர்வுகளை ஏற்படுத்திட இத்தகவல்கள் பயன்படுத்தப்படும்.

புவி தகவல் அமைப்பியல் கூடத்திலுள்ள இத்தகவல்கள் இதர துறையினருக்கு கடலோரத் திட்ட மேலாண்மை தயாரிக்க தேவைப்படும்பொழுது கையாள உதவியாக இருக்கும்.

### 7.5. பயிற்சி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் மற்றும் பாதிப்பிற்குள்ளாகக்கூடிய கடற்கரையோரப் பகுதிகளின் வரைபடம் ஆகியவை முற்றிலும் புதியதான நடைமுறைகளாகும். இவற்றின் முக்கியத்துவம் குறித்து, கடலோர மக்களுக்கும், பயனாளிகளுக்கும் பயிற்சி வடிவமைப்பின்மூலம், உரிய விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாகும். இதற்காக வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள்மூலமாக துறை சார்ந்தவர்களுக்கும் மற்றும் கடலோரம் வாழ்கின்ற மக்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 13 கடலோர மாவட்டங்களில் ரூ.1.00 கோடி செலவில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 8. சுற்றுச்சூழல் தகவல் மையம்

சுற்றுச்சூழல் துறையின் சுற்றுச்சூழல் தகவல் மையம் (ENVIS) மத்திய அரசின் நிதியுதவியுடன் 2002 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் இயங்கி வருகிறது. சுற்றுச்சூழல் தகவல் மையம், வலைதளம் வாயிலாக தமிழக சுற்றுச்சூழல் பற்றிய பொதுவான தகவல்களை சேகரித்து, தொகுத்து வழங்குகிறது. செய்திமடல், இணையதளம் வாயிலாக வினாடி வினா, உரையாடல், அடிப்படைத்



2011 ஆகஸ்ட் 29]

தகவல்களை உருவாக்குதல், சுற்றுச்சூழல் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளித்தல் மற்றும் பயிற்சிகள் ஆகியவை சுற்றுச்சூழல் தகவல் மையம் மேற்கொண்டுள்ள சில செயல்பாடுகளாகும். சுற்றுச்சூழல் துறையின்கீழ் இயங்கிவரும், சுற்றுச்சூழல் தகவல் மையம், பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் தேவையான சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய தகவல்களை செய்திமடல், புத்தகம் மற்றும் இணையதளம் மூலமாகவும் தெரிவிக்கின்றது.

### 8.1. சுற்றுச்சூழல் தகவல் மையம் நூலகம்

சுற்றுச்சூழல் தகவல் மையத்தில் சுற்றுச்சூழல் பற்றிய புத்தகங்கள், ஆராய்ச்சி கட்டுரைகள் மற்றும் பல செய்திகள் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்தும் கணினி வாயிலாக இணையதளம்மூலம் பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 8.2. சுற்றுச்சூழல் நிலை அறிக்கை (SoE)

மாநிலத்தின் சுற்றுச்சூழல் நிலை குறித்த அறிக்கை தயாரிக்கும் பணி ரூ.12.50 இலட்சம் செலவில் மத்திய அரசின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. சுற்றுச்சூழல் வரைபடம், தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் புகைப்படத் தொகுப்பு, சுற்றுச்சூழல் நிலை குறித்த குறும்படம் மற்றும் சுற்றுச்சூழல் நிலை குறித்த வலைதளம் முதலியவை இதன்கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. 2010-2011 ஆம் ஆண்டு சென்னை பெருநகரப் பகுதியின் சுற்றுச்சூழல் நிலை குறித்த அறிக்கை தயாரிக்கும் பணிக்கு மத்திய அரசு ரூ.2.20 இலட்சம் விடுவித்துள்ளது. நீடித்த சூழல் மேம்பாட்டிற்கான இருப்பிடம், நிலம், நீர், உயிர்பன்மை முதலானவைகள் குறித்த சுற்றுச்சூழலின் தற்போதைய நிலையினை இந்த அறிக்கை எடுத்துரைக்கிறது. மேலும் சமுதாயத்தின் ஏற்புத்தன்மை, கொள்கைகள் மற்றும் அவற்றின் செயலாக்கத்தை ஆய்வு செய்ததோடு, அதன் விளைவுகள் குறித்தும் அந்த அறிக்கையில் பகுத்தாய்வு செய்யப்பட்டுள்ளது. கொள்கை முடிவுகள் எடுக்க ஏதுவாக மேலும் இவ்வறிக்கை தகவல் மற்றும் புள்ளிவிவரங்களில் உள்ள இடைவெளிகளை கண்டறிவதுடன், தொடர்புடைய முக்கிய கொள்கை விவரங்களையும் அடையாளம் காட்டும். வரைவு அறிக்கை மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்திற்கு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 29

## 9. துறையின் மற்ற செயல்முறை நடவடிக்கைகள்

### 9.1. சுற்றுச்சூழல் விருதுகள்

சுற்றுச்சூழல் துறையில் சிறப்பாக செயல்படும் அரசு சாரா நிறுவனங்கள், வல்லுநர்கள் மற்றும் தனி நபர்கள் ஆகியோரது பங்களிப்பினைச் சிறப்பிக்கும் வகையில் சுற்றுச்சூழல் விருதுகள் ஆண்டுதோறும் ஜூன் 5 உலக சுற்றுச்சூழல் தினத்தன்று வழங்கப்பட்டு வருகிறது. அரசாணை எண் 126, சுற்றுச்சூழல் மற்றும் வனம் (சு.க.2) துறை, நாள் 27-5-1999 மூலம் நிறுவப்பட்டு ஆண்டுதோறும் 10 விருதுகள் ரூ.72,500/-மதிப்பில் வழங்கப்பட்டு வருகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை செயலரின் தலைமையில் ஒரு கூர்ந்தாய்வுக் குழு மூன்றாண்டு காலத்திற்கு அமைக்கப்பட்டு இதன் காலம் உரிய காலமுறையில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் வழங்கப்பட்ட விருதுகளின் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | விருதிற்கான வருடம் | விருது வழங்கப்பட்ட வருடம் | விருதுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 2001 | 2002 | 10 |
| 2. | 2002 | 2003 | 10 |
| 3. | 2003 | 2004 | 10 |
| 4. | 2004 | 2005 | 10 |
| 5. | 2005 | 2006 | 10 |
| 6. | 2006 | 2007 | 10 |
| 7. | 2007 | 2008 | 8 |
| 8. | 2008 | 2009 | 10 |
| 9. | 2009 | 2010 | 10 |
| | **மொத்தம்** | | **88** |



2011 ஆகஸ்ட் 29]

2010 ஆம் ஆண்டிற்கான விருது விண்ணப்பங்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு மதிப்பீட்டு அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

### 9.2. இரப்பர், பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதனால் ஏற்படும் விபரீதங்கள் பற்றிய விழிப்புணர்வு

போகித் திருநாளின் போது டயர்கள், பிளாஸ்டிக் மற்றும் இதரப் பொருட்களை எரிப்பதால் ஏற்படும் கேடுகளை பற்றிய மூன்று நாள் விழிப்புணர்வு பிரச்சாரம் சென்னை மாநகரம் முழுவதும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும், ஊடகங்கள் வழியாகவும் சுற்றுச்சூழல் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள சூழல் மன்றங்கள்மூலம் ஒவ்வொரு ஆண்டும் இப்பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் டயர்கள், பிளாஸ்டிக் முதலியவற்றை எரிக்கும் வழக்கம் நகர்ப்புறங்களில் பெரிதும் குறைந்துள்ளது.

### 9.3. தட்பவெப்ப நிலை மாற்றம் குறித்த மாநில செயலாக்கத் திட்டம்

தேசிய தட்பவெப்ப நிலை மாற்றம் குறித்த செயலாக்கத் திட்டம் (National Action Plan on Climate Change) பன்முகப்பட்ட தொலைநோக்குடனான ஒருங்கிணைந்த செயல் திட்டம் ஒன்றினை மையமாகக் கொண்டது. இந்தியாவின் எதிர்கால வளர்ச்சித் திட்டத்தினை உள்ளடக்கி நீடித்து நிலைக்கும் மேம்பாட்டினைக் குறிக்கோளாகக் கொண்டு இத்திட்டம் அமையும். இத்தேவையினை எதிர்கொள்ளும் வண்ணமாக மாநில தட்பவெப்ப நிலை மாற்றம் குறித்த செயலாக்கத் திட்டத்தினை உருவாக்கிட மத்திய அரசு ஊக்குவித்துள்ளது. தமிழக அரசின் சுற்றுச்சூழல் துறை இத்திட்டத்தினை வடிவமைக்கும் இணைப்புத் துறையாக நியமிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜெர்மானிய தொழில் கூட்டமைப்பு இதற்கான தொழில் நுட்ப நிறுவன பங்குதாரராகவும் நியமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மைய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் நிதியுதவியுடன் தயாரிக்கப்பட உள்ளது. தமிழ்நாட்டிற்கான மாநில தட்பவெப்ப நிலை மாற்றம் குறித்த செயல் திட்டம் மைய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் வழிகாட்டுதலின்படி தமிழக அரசின் பல்வேறு துறைகளுடன் இணைந்து தயாரிக்கப்பட உள்ளது.

*[2011 ஆகஸ்ட் 29*

தமிழ்நாட்டிற்கான மாநில தட்பவெப்ப நிலை மாற்றம் குறித்த செயல் திட்டம் தயாரிப்பதற்காக முதன்மை கருத்துப் பட்டறை சென்னையில் நடைபெற்றது. பல்வேறு துறைத் தலைவர்கள், இணைப்புத் துறையின் அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி மற்றும் தன்னாட்சி நிறுவன அலுவலர்கள் மற்றும் பயனீட்டுதாரர்கள் இக்கருத்துப் பட்டறையில் கலந்து கொண்டனர். கருத்துப் பட்டறையின் வெளிப்பாடுகளைக் நோக்கங்களாகக் கொண்டு கீழ்க்கண்ட துறை வாரியான குழுக்கள் உருவாக்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- ❖ நீராதாரம்
- ❖ கடலோர மேலாண்மை
- ❖ நீடிக்கத்தக்க வேளாண்மை
- ❖ காடு மற்றும் பல்லுயிர் பரவல் தன்மை
- ❖ மின் துறை மற்றும் புதுப்பித்தல் சக்தி
- ❖ சூரிய ஆற்றல் செயலாக்க திட்டம்
- ❖ நீடித்த தன்மையுள்ள வசிப்பிடம்
- ❖ அறிவாற்றல் மேலாண்மை

### 9.4. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி

அரசாணை எண் 43, சுற்றுச்சூழல் மற்றும் வனம் (சு.சூ 2) துறை, நாள் 19-07-2010-ன்மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி தோற்றுவிக்கப்பட்டது. இதற்காக ரூ.10.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசாணையின்படி இந்நிதி, சுற்றுச்சூழல் பாதிப்பினைத் தடுப்பதற்கும் தூய்மையான எரிசக்திப் பயன்பாட்டினை ஊக்குவிக்கவும் பயன்படுத்தப்படும்.

வனப் பகுதிகளுக்கு வெளியே மரம் நடுதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான முயற்சிகள்மூலம் தமிழ்நாட்டினை பசுமைப்படுத்திடத்தக்க முன்மாதிரி மற்றும் திட்ட வடிவிலான நடவடிக்கைகளை ஊக்குவித்து சுற்றுச்சூழல் பாதிப்பினைத் தடுத்திடவும் இந்நிதி பயன்படுத்தப்படும்.



*2011 ஆகஸ்ட் 29]*

மாநிலத்தில் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்ள இயலும் ஏற்புடைய மற்றும் நிவர்த்தி செய்யக்கூடிய செயல்பாடுகளுக்கு அரசுத் துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், சுய உதவி நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், மரம் வளர்க்கும் சங்கங்கள், சமுதாயம் சார்ந்த நிறுவனங்கள், கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களுக்கு இந்நிதியுதவி வழங்கப்படும்.

இயந்திர ஆவியாக்குதலுக்கு பதிலாக இயற்கை ஆவியாக்குதல் முறையினை பயன்படுத்தும் சென்னை இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் முன்மாதிரி திட்டமொன்று இந்நிதியின்கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நீர்நிலைகளில் விடப்படும் பிரழ் சவ்வூடு பரவுதல்மூலம் சுத்திகரிக்கப்பட்ட சாயப்பட்டறைக் கழிவு நீரின் அடர்த்தியை குறைப்பது மற்றும் சுத்திகரிப்பு, பராமரிப்பு செலவினைக் குறைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பணிக்காக 2010-2011 ஆம் ஆண்டில் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துக்கு ரூ.9.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 10. 2011-2012 ஆம் ஆண்டில் செயலாக்கப்படவுள்ள பகுதி II திட்டங்கள்

2011-2012 ஆம் ஆண்டில் 9 திட்டங்கள் ரூ.36.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

### 10.1. ஒரு புனித தலத்திற்கான சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்

தமிழ்நாட்டில் போற்றத்தக்க புனித தலங்கள் பல நகரங்களில் அமைந்துள்ளன. பழமையும், புனிதத் தன்மையும் வாய்ந்த புனிதத் தலங்களுக்கு திருவிழா காலங்கள் மற்றும் வருடாந்திர விடுமுறை நாட்களில் வருகை தரும் மக்களால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரக் கேடுகளை நிவர்த்தி செய்வதற்கு போதிய அடிப்படை வசதிகள் இல்லை. இத்தலங்களிலுள்ள சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், சமூக-பொருளாதாரத்தை மேம்படுத்தவும், சுகாதாரக் கேடுகளைக் குறைக்கவும் சுற்றுப்புறச் சூழல் மேலாண்மைத் திட்டம் அவசியமாகிறது. எனவே, தமிழ்நாட்டிலுள்ள ஒரு புனிதத் தலத்திற்கு சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் ரூ.3.00 இலட்சம் செலவில் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 29

**10.2. ஒரு சுற்றுலாத் தலத்திற்கான சுற்றுச்சூழல்**

மேலாண்மைத் திட்டம் தயாரித்தல் தமிழ்நாட்டில் போற்றத்தக்க சுற்றுலாத் தலங்கள் பல நகரங்களில் அமைந்துள்ளன. பழமையும், புனிதத் தன்மையும் வாய்ந்த புனித தலங்களுக்கு திருவிழா காலங்கள் மற்றும் வருடாந்திர விடுமுறை நாட்களில் வருகை தரும் மக்களால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரக் கேடுகளை நிவர்த்தி செய்வதற்குரிய மேலாண்மைத் திட்டம் ஏதும் இல்லை. சுற்றுலாத் தலங்களின் சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன் சுகாதாரக் கேடுகளைக் குறைக்கும் நோக்குடன் தமிழ்நாட்டிலுள்ள ஒரு சுற்றுலாத் தலத்திற்கு சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் ரூ.3.00 இலட்சம் செலவில் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**10.3. சுற்றுச்சூழல் தொடர்பான பல்வேறு வெளியீடுகள் அச்சடித்தல்**

பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்களிடையே மாசு பருவநிலை மாற்றம், பிளாஸ்டிக் உபயோகம் தொடர்பான விவரங்களை அளித்து அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை அறிந்துகொள்ள ஏதுவாக சுற்றுச்சூழல் தொடர்பான கையேடுகள், மாசு, பருவநிலை மாற்றம், பிளாஸ்டிக் பயன்பாட்டினைக் குறைத்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் பெரிதாக்கப்பட்ட விளக்கப் படங்கள், தகவல் பலகைகள், ஒட்டுப் படங்கள் ஆகியவை (ஆங்கிலம் மற்றும் தமிழில்) ரூ.5.00 இலட்சம் செலவில் அச்சடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவை பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு 2011-2012 ஆம் ஆண்டு இலவசமாக வழங்கப்படும்.

**10.4. மழைநீர் சேகரிப்பு மையம் அமைப்பதன்மூலம் பள்ளியின் நீராதாரத்தை உயர்த்துதல்**

பள்ளிகளில் மழைநீர் சேகரிப்பு பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தவும், அதைச் சுகாதாரப் பயன்பாட்டிற்கும் மற்றும் பள்ளிகளில் சுற்றுப்புறச்சூழலை மேம்படுத்தும் நோக்கத்துடன் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பள்ளியில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஒன்றினை ஏற்படுத்தி, பள்ளிகளின் தண்ணீர் தேவைக்கு நிரந்தரத் தீர்வாக அதனைப் பராமரிக்க மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.



2011 ஆகஸ்ட் 29]

**10.5. நகர்ப்புறங்களைப் பசுமையாக்குவதற்கு புதிய வழிமுறைகளில் பயிற்சி அளித்தல்**

நகர மாசினைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. மாசினைக் கட்டுப்படுத்துவதற்கு எளிய சிறந்த முறையாக மரம் வளர்ப்பது உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறையாகும். எனவே, மரம் வளர்ப்பது தொடர்பாக புதிய வழிமுறைகளைக் கண்டுபிடித்து, அதில் பயிற்சி அளித்து மாசினைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.2.00 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**10.6. சூழல் மன்றங்கள் வாயிலாக சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையம் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான குறும்படம் தயாரித்தல்**

பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்களிடையே மாசு, பருவநிலை மாற்றம், புவி வெப்பமயமாதல் அதனால் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை அறிந்துகொள்ள தேசிய பசுமைப்படையின் சூழல் மன்றங்கள் வாயிலாக இரு பள்ளிகளில் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்மையங்களில் சுற்றுச்சூழல் தொடர்பான புத்தகங்கள், மாசு, பருவநிலை மாற்றம், நீடித்து நிலைக்கும் சுற்றுச்சூழல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் பெரிதாக்கப்பட்ட விளக்கப் படங்கள், தகவல் பலகைகள், ஆங்கிலம் மற்றும் தமிழில் இருக்கும். மேலும் பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மாசு, பருவநிலை மாற்றம், பிளாஸ்டிக் பயன்பாட்டினைக் குறைத்தல், திடக் கழிவு மேலாண்மை மற்றும் மழைநீர் சேகரிப்பு ஆகிய பொருட்களை உள்ளடக்கிய சுற்றுச்சூழல் தொடர்பான குறும்படம் ஒன்றும் தயாரிக்கப்படும். இத்திட்டம் 2011-2012 ஆம் ஆண்டு ரூ.10.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

**10.7. தமிழ்நாட்டில் மரங்களைப் பற்றிய கையேடு தயாரித்தல்**

இந்திய தீபகற்பத்தில், தென்கோடி பகுதியின் கிழக்குப் பகுதியில் தமிழ்நாடு அமைந்துள்ளது. தமிழகத்தின் கிழக்குப் பகுதியில் வங்காள விரிகுடாவும், மேற்குப் பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலையும், வடமேற்குப் பகுதியில் கிழக்குத் தொடர்ச்சி மலையும்

[2011 ஆகஸ்ட் 29

அமைந்துள்ளன. 22,877 சதுர கிலோ மீட்டர் அளவில் காணப்படுகிற தமிழக வனப் பகுதி, தமிழக நிலப்பரப்பில் 17.59% ஆகும். பூக்கும் தாவரங்களில் 5,640 வகைகளைக் கொண்ட தமிழக வனப் பகுதி, இந்தியாவிலேயே பல்லுயிர் பரவலில் முதல் இடத்தை வகிக்கிறது. மதிப்பு மிக்க இந்த இயற்கை ஆதாரங்களைப் பாதுகாப்பது மிக முக்கியமாகும். 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் செலவில் தமிழக மரவகைகளை அடையாளம் காண்பதற்கான கையேடு வெளிக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

## 11. துறையின் முனைப்பான செயல்பாடுகள்

### 11.1. பிளாஸ்டிக் குவியல்களை ஒன்றுதிரட்டி சுத்தப்படுத்தும் செயலாக்கம்

பிளாஸ்டிக்கினால் தயாரிக்கப்பட்ட பைகள், கோப்பைகள் போன்றவற்றின் அதிக அளவிலான பயன்பாடு, திடக் கழிவு மேலாண்மையில் ஒரு பெரும் சவாலை உருவாக்கியுள்ளது. தற்காலத்தில் நகர்ப்புறங்களில் மட்டுமல்லாது, கிராமப்புறங்களிலும் பிளாஸ்டிக் கழிவுகள் அதிகரித்துள்ளது. மொத்த திடக் கழிவுகளில் பிளாஸ்டிக் கழிவுகள் எடையில் சிறிதளவாக இருப்பினும், திடக் கழிவு மேலாண்மையில் அதிக பங்கு வகிக்கும் ஒன்றாக உள்ளது. பிளாஸ்டிக் கழிவுகளின் குவியல்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரக் கேடுகளை நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்வது அவசியமானது. எனவே, பிளாஸ்டிக் குவியல்களை ஒன்றுதிரட்டி சுத்தப்படுத்தும் செயலாக்கத்தினை மாநிலம் முழுவதும் செயல்படுத்த தமிழக அரசு 2011-2012 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு—செலவுத் திட்ட அறிக்கையில் ரூ.5.00 கோடி ஒதுக்கியுள்ளது. பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளிட்ட திடக் கழிவுகளை அகற்றும் பணியில், நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் நேரடியாக ஈடுபட்டு வருவதால், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகியவற்றின் மூலமாக ரூ.5.00 கோடி செலவில் இப்பணி மேற்கொள்ளப்படும். இந்தச் செயலாக்கத்தின்கீழ், பிளாஸ்டிக் கழிவுகளைச் சேகரிப்பதற்கும், அதனைத் திறம்பட அகற்றுவதற்கும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி உதவி அளிக்கப்படும்.



2011 ஆகஸ்ட் 29]

### 11.2. பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் மீளமைத்தல்

பிளாஸ்டிக்குகள் மக்கும் தன்மையற்றவை. அவற்றை பாதுகாப்பான முறையில் அகற்றுவது நவீன சமுதாயத்திற்கு மிகப் பெரும் பிரச்சினையாக உள்ளது. பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் முயற்சியாக, நுகர்வோர் பயன்படுத்திய பின்னர் உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகளை மறுபயன்பாட்டின்மூலம் சாலைகள் அமைப்பதற்கு உபயோகிக்கும் சாத்தியக்கூறுகள் குறித்து ஊரக வளர்ச்சித் துறை முயற்சிகள் மேற்கொண்டது. பிளாஸ்டிக்குகளைப் பயன்படுத்தி, மாநிலத்தில் பல சாலைகள் ஊரக வளர்ச்சித் துறையால் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பிளாஸ்டிக் சாலைகள் தரத்திலும், சாலை தேய்மானத்தை எதிர்கொள்வதில் வலுவானதாகவும், அதிக பராமரிப்புத் தேவையின்றி நீடித்து உழைக்கக் கூடியவையாகவும் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. ஏற்கெனவே எடுத்த முயற்சிகளை ஊக்குவிக்கும் விதமாக, பாதுகாப்பான முறையில் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதற்கு வழிவகை செய்யும் விதத்தில் தமிழக அரசு 2011-2012 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் ரூ.50.00 கோடியினை சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி மேம்பாட்டு நிதியின்கீழ் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தச் செயலாக்கத்தின்கீழ், பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி, சாலைகளை மறு முறை அமைப்பதற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கப்படும். ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகள் ஆகியவற்றின் மூலமாக இச்செயல்பாடு மேற்கொள்ளப்படும்.

[2011 ஆகஸ்ட் 29

## 2. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்

### முன்னுரை

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் (த.மா.க.வா.) தமிழக அரசால் 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி (1974 ஆம் ஆண்டு மத்திய அரசு சட்டம் 6-ன்படி) 1982 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இது 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1977 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம், 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் அடங்கிய பின்வரும் விதிகளைச் செயல்படுத்துகிறது:

- 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள்
- 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 2008 ஆம் ஆண்டின் தீங்கு விளைவிக்கும் கழிவுகள் (மேலாண்மை, கையாளுதல் மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள்
- 1994 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட 1989 ஆம் ஆண்டு அபாயகரமான இரசாயனங்கள் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகள்
- 2000 மற்றும் 2003 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1998 ஆம் ஆண்டு மருத்துவ நுண்ணுயிர் கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்
- 2011 ஆம் ஆண்டு பிளாஸ்டிக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்
- 2000 ஆம் ஆண்டு ஒலி மாசு (முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடு) விதிகள்
- 2000 ஆம் ஆண்டு நகர திடக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்
- 2010 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 2001 ஆம் ஆண்டு மின்கலன்கள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்



2011 ஆகஸ்ட் 29]

### 2. வாரிய அமைப்பு

மாநில அரசால் நிறுவப்பட்ட தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில், முழுநேர தலைவர், மாநில அரசால் நியமிக்கப்பட்ட ஐந்து அலுவலர்கள், உள்ளாட்சி நிறுவனங்களின் சார்பில் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்கள், விவசாயம், தொழில் மற்றும் மீன் வளம் ஆகிய தொழில்களைச் சார்ந்த மூன்று அலுவல் சாரா உறுப்பினர்கள், மாநில அரசு நிறுவனங்கள் அல்லது அரசு கழகங்களைச் சார்ந்த இருவர் மற்றும் ஒரு முழுநேர உறுப்பினர் செயலர் ஆகியோர் உள்ளனர். வாரியம், சென்னையில் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் என்ற இரு நிலை அமைப்பாக மொத்தம் 708 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. வாரியத்தின் கள அமைப்பில் 31 மாவட்ட அலுவலகங்கள் உள்ளன. 28 மாவட்ட அலுவலகங்கள், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையிலும் மற்றும் 3 உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையிலும் இயங்குகின்றன.

தொழிற்சாலைகளைக் கண்காணிக்கும்பொருட்டு, வாரியத்தில் 5 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள், 9 மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் ஆகியவை செயல்படுகின்றன. இந்த ஆய்வகங்கள் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர், வாயுக் கழிவு மற்றும் அபாயகரமான கழிவுகள் ஆகியவற்றின் மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்கின்றன.

### 3. தொழிற்சாலை கண்காணிப்பு மற்றும் இசைவாணை வழங்குதல்

தமிழ்நாட்டில் வேகமாகப் பெருகிவரும் தொழில்மயமாக்கல் காரணமாக தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் மாசினைத் தொடர்ந்து கண்காணிப்பது, மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. வாரியத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவீட்டின்படி, தொழிற்சாலைகள் மாசினைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. வாரியத்தின் கள அலுவலர்கள் தங்களின் பகுதிக்குட்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலையையும், குறித்த கால இடைவெளிகளில் ஆய்வு செய்து, செயல்முறைக் கழிவுநீர் மற்றும் வாயுக் கழிவுகளைச் சுத்திகரிக்க அமைக்கப்பட்டுள்ள மாசுக் கட்டுப்பாடு சாதனங்களின் செயல்திறனைத் தொடர்ந்து கண்காணிக்கின்றனர். மேலும், பொதுமக்கள், அரசு மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் மாசு பற்றிய புகார்களையும்

[2011 ஆகஸ்ட் 29

ஆய்வு செய்கின்றனர். தொழிற்சாலைகளைச் சீரிய முறையில் கண்காணிப்பதற்காக அவற்றின் மாசு தன்மையின் அடிப்படையில் அதிக சிவப்பு, சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை என பிரிவுகளாக பிரிக்கப்பட்டு தொழிற்சாலையின் மொத்த முதலீட்டின் அடிப்படையில் அவை பெரிய, நடுத்தர மற்றும் சிறு வகை தொழிற்சாலைகளாகவும் பிரிக்கப்பட்டு அவற்றின் வகைப்பாடுகளுக்கு ஏற்ப குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கண்காணிக்கப்படுகின்றன.

### 3.1. தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்கும் நடைமுறை

தொழிற்சாலைகள், வடிகால் கழிவுநீர் மற்றும் செயல்முறைக் கழிவுநீரினை நீர்வழி அல்லது கிணறு அல்லது வடிகால் கழிவுநீர் அல்லது நிலத்தில் வெளியேற்றுவதற்காக 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் இசைவாணையும், காற்று மாசுக் கட்டுப்பாடு பகுதியில் தொழிற்சாலையினை இயக்குவதற்காக 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் இசைவாணையும் வாரியத்திடம் பெறவேண்டும். வாரியம் தொழிற்சாலைகளுக்கு இரண்டு கட்டமாக இசைவாணைகளை வழங்குகிறது. தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை, தொழிற்சாலை கட்டுமானப் பணிகளைத் துவங்குவதற்குமுன், அது அமையவிருக்கும் இடத்தின் தகுதியைப் பொறுத்து வழங்கப்படுகிறது. வாரியத்தால் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் காற்று மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை தொழிற்சாலை அமைத்த பின்னர் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும் முன் தொழிற்சாலையை இயக்குவதற்கான இசைவாணை வழங்கப்படுகிறது.

31-3-2011 வரை, வாரியம் 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் தொழிற்சாலைகள் அமைக்க 13,994 இசைவாணைகளையும் மற்றும் தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்க 33,055 இசைவாணைகளையும் வழங்கியுள்ளது. 31-3-2011 வரை, வாரியம் 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் தொழிற்சாலைகள் அமைக்க 13,922 இசைவாணைகளையும் மற்றும் தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்க 30,199 இசைவாணைகளையும் வழங்கியுள்ளது.



2011 ஆகஸ்ட் 29]

### 3.2. உதவி மையம்

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியமானது, 1974 ஆம் ஆண்டின் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 ஆம் ஆண்டின் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1986 ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளை அமல்படுத்தி வருகிறது.

பல வருடங்களாக, தொழிற்சாலைகளால் வாரியத்தின் இசைவாணை/அங்கீகாரம் பெறுவதில் தாமதம் ஏற்பட்டு வந்தது. பெரும்பாலான விண்ணப்பங்கள் சரிவர பூர்த்தி செயயப்படாமலும், தேவையான விவரங்கள் இன்றி உரிய ஆவணங்கள் இணைக்கப்படாமலும் பெறப்பட்டதையடுத்து அவ்விண்ணப்பங்களைத் திருப்பி அனுப்பும் நிலை உருவானதால் காலதாமதம் ஏற்பட்டது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட அலுவலகங்கள் தொழிற்சாலைகளுக்கும், உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான உதவிகளைச் செய்துவருகிறது. இருப்பினும், விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பப் படிவங்களை சரிவர பூர்த்தி செய்வதற்குப் போதுமான கால அவகாசம் இலலாத நிலை இருந்து வந்தது. இதனை கருத்தில்கொண்டு வாரியம், விண்ணப்பதாரர்களின் வசதிக்காக விண்ணப்பப் படிவங்களை எளிமையானதாக்கியும், விண்ணப்பப் படிவங்களை எளிதில் பூர்த்தி செய்யவும், சிரமம் இன்றி வாரியத்தில் சமர்ப்பிக்கவும், இசைவாணைகளை உரிய நேரத்தில் அளிக்கவும் தனியாக ஒரு குழு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை உணர்ந்தது.

எனவே, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளுக்கு உதவும் வகையிலும், விண்ணப்பப் படிவங்களை விண்ணப்பதாரர்கள் சிரமமின்றி பூர்த்தி செய்து அதனை வாரியத்தில் எளிய முறையில் சமர்ப்பிக்கவும், இசைவாணைகளை உரிய காலத்திற்குள் வழங்கும் வகையில் இதற்கென தனியாக ஒரு உதவி மையத்தை ஏற்படுத்தியுள்ளது. இசைவாணையினைப் பெற தேவையான அனைத்துக் கட்டணங்களையும் இந்த உதவி மையத்தில் செலுத்த முடியும். முதல் கட்டமாக, உதவி மையமானது சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் அமைந்துள்ள வாரிய அலுவலகமான சென்னை, தாம்பரம், அம்பத்தூர், காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர் மறறும் திருவள்ளூர் ஆகியவற்றின் கட்டுப்பாட்டுக்குள்

[2011 ஆகஸ்ட் 29

அமைந்துள்ள தொழிற்சாலைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை உதவி மையம் பூர்த்தி செய்யும். உதவி மையமானது விண்ணப்பப் படிவத்தினை எளிமையாக்கியதோடு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பெறுவதற்கான நடைமுறை ஏற்படுத்தியுள்ளது. உதவி மையமானது, விண்ணப்பப் படிவங்கள் பெறப்பட்டதிலிருந்து இசைவாணை வழங்கும் வரை விண்ணப்பங்களை அவ்வப்பொழுது உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றது. இந்த மையமானது சுற்றுச்சூழல் சட்டங்கள் குறித்து தொழிற்சாலைகளுக்கு விளக்கங்களை அளிப்பது, விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து வாரியத்திற்கு சமர்ப்பிப்பதற்கு உதவுவது, விண்ணப்பப் படிவங்களின் நிலை குறித்து தெரிவிப்பது, இசைவாணைகளை உரிய கால அளவிற்குள் வழங்குவது போன்ற பணிகளை ஒற்றை சாளர முறையில் செய்யும். இதற்கென மூன்று அலுவலர்கள் பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு இசைவாணை, கீழ்க்குறிப்பிட்டுள்ள கால அளவுக்குள் உதவி மையத்தின் மூலமாகவே வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது:

| வரிசை எண் | தொழிற்சாலைகளின் வகை | விண்ணப்பத்தின்மீது இசைவாணை வழங்கிட குறித்த கால அளவு |
|---|---|---|
| 1. | சிவப்பு | 30 நாட்கள் |
| 2. | ஆரஞ்சு | 15 நாட்கள் |
| 3. | பச்சை | 10 நாட்கள் |

உதவி மையத்தில் விண்ணப்பம் கொடுத்த அனைத்து விண்ணப்பதாரர்களும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் வலைதளத்தில் தங்களது விண்ணப்பப் படிவத்தின் தறபோதைய நிலை குறித்து அறிந்துகொள்ள இயலும். இது தவிர, விண்ணப்பங்கள் பூர்த்தி செய்வதில் ஏற்படும் சந்தேகங்கள், தங்களது விண்ணப்பங்களின் நிலை, இசைவாணை, அங்கீகாரம் வழங்கும் நிலை, போன்ற விவரங்களை தொலைபேசி மூலமும் உதவி மையத்தினைத் தொடர்புகொண்டு அறிந்து கொள்ளலாம். உதவி



2011 ஆகஸ்ட் 29]

மையத்தின் நடவடிக்கைகளை வாரியத்தின் உயர் அதிகாரிகள் அவ்வப்போது ஆய்வு செய்து வருகின்றனர்.

### 3.3. தொழிற்சாலைகளில் ஆய்வு மற்றும் மாதிரிகளை எடுப்பதற்கான காலவரையறை

மாவட்ட அலுவலகத்தில் உள்ள களப் பொறியாளர்கள் பெரிய முதலீட்டில் இயங்கும் அடர் சிவப்பு வகை தொழிற்சாலைகளை மாதம் ஒரு முறையும், சாதாரண சிவப்பு வகை தொழிற்சாலைகளை மூன்று மாதத்திற்கு ஒரு முறையும், நடுத்தர முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகை தொழிற்சாலைகளை நான்கு மாதத்திற்கு ஒரு முறையும், சிறிய முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகை தொழிற்சாலைகளை வருடத்திற்கு ஒரு முறையும் ஆய்வு செய்கின்றனர். இதைப் போன்றே பெரிய மற்றும் நடுத்தர முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளை ஆறு மாதத்திற்கு ஒரு முறையும், சிறு முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளை இரண்டு வருடத்திற்கு ஒரு முறையும் ஆய்வு செய்கின்றனர். குறைந்த அளவு மாசு ஏற்படுத்தும் பச்சை வகை தொழிற்சாலைகள் அனைத்தும் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை சோதனை செய்வதன்மூலம் அத்தொழிற்சாலைகள் மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனவா என்பது கண்காணிக்கப்படுகிறது. பெரிய முதலீட்டில் இயங்கும் அடர் மற்றும் சாதாரண சிவப்பு வகை தொழிற்சாலைகளிலிருந்து மாதம் ஒரு முறை கழிவுநீர் மாதிரிகள் சோதனைக்காக சேகரிக்கப்படுகின்றது. நடுத்தர முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகை தொழிற்சாலைகளிலிருந்து மூன்று மாதத்திற்கு ஒரு முறையும், சிறு முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகை தொழிற்சாலைகளிலிருந்து மூன்று முதல் ஆறு மாதத்திற்கு ஒரு முறையும் கழிவுநீர் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன. பெரிய முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளிலிருந்து நான்கு மாதத்திற்கு ஒருமுறையும், நடுத்தர மற்றும் சிறு முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளிலிருந்து ஆறு மாதத்திற்கு ஒரு முறையும் கழிவுநீர் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட கழிவுநீர் மாதிரிகள் ஆய்வுக்குட்படுத்தப்படுகிறது. வாரியம் நிர்ணயித்த தர அளவிற்கு உட்பட்டு கழிவுநீரின் தன்மை இல்லாத தொழிற்சாலைகளுக்கு,

[2011 ஆகஸ்ட் 29

கழிவுகளை முறையாக சுத்திகரிப்பு செய்ய அறிவுறுத்தப்படுவதோடு தொடர்ந்து கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்யாத தொழிற்சாலைகள் மீது நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தொழிற்சாலைகள் மாசுத் தடுப்பு நடவடிக்கைகளை முறையாக செயல்படுத்துமாறு தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. மாசுத் தடுப்பு சாதனங்களின் செயல்பாடுகளை சீரிய முறையில் கண்காணித்து மாசுத் தடுப்பு முறைகளை முழுமையாக நிறைவேற்றும் தொழிற்சாலைகளுக்கு குறித்த காலத்தில் இசைவாணை புதுப்பிக்கப்படுகிறது. உரிய நேரத்தில் இசைவாணையைப் புதுப்பித்து வழங்குவதன் மூலம் தொழிற்சாலைகள் இசைவாணையில் குறிப்பிட்டுள்ள மாசுத் தடுப்பு நிபந்தனைகளைக் கடைபிடிப்பதை வாரியம் ஊக்குவிக்கிறது.

**4. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்**

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தொகுப்பாக அமைந்திருக்கும் சிறு தொழிற்சாலைகளுக்காக பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதில் வாரியம் முக்கிய பங்காற்றி வருகிறது. சிறு தொழிற்சாலைகளுக்குப் போதிய இட வசதி மற்றும் நிதி வசதி இல்லாத மற்றும் பிற காரணங்களால் தனி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க சாத்தியமில்லை. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சிறு தொழிற்சாலைகளுக்குப் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதிலும், திட்டக் கருத்துருவின்மீது தொழில்நுட்ப நுண்ணாய்வு செய்வதிலும் உதவி செய்கிறது.

**4.1. தமிழ்நாட்டில் அமைந்துள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் நிலை:**

பல்வகை தொழிற்சாலைகளுக்கென திட்டமிடப்பட்ட பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 15 திட்டங்கள் |
| 2. | சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் | 31 திட்டங்கள் |
| 3. | உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 1 திட்டம் |
| | **மொத்தம்** | **47** |



2011 ஆகஸ்ட் 29]

தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கான 15 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், எதிர்மறை சவ்வூடு அமைப்பு மற்றும் அடர்கசடு மேலாண்மை, 7 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டத்தில் உள்ளது. மேலும் 6 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 2 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், அதிலிருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை, அப்பகுதியில் அமைந்துள்ள நகராட்சியில் அமைக்கப்பட இருக்கும் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் மூன்றில் ஒரு பங்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீருடன் கலந்து மொத்தம் கரைந்துள்ள உப்புகளின் அளவை கழிவுநீர் தர அளவில் வெளியேற்ற திட்டமிட்டுள்ளது. அதற்கான அனுமதி இன்னமும் பெறப்படவில்லை. மேலும் சாயப் பட்டறைகளுக்கான 31 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 18 நிலையங்களில் எதிர்மறை சவ்வூடு அமைப்பு மற்றும் அடர்கசடு மேலாண்மை அமைப்பு முடிக்கப்பட்டுள்ளது. இரு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இவ்வமைப்பு அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது. மீதமுள்ள 11 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், கழிவுநீர் வெளியேற்றத்தில் நடைமுறையில் உள்ள சுத்திகரிப்பு அமைப்புகளை நிறுவியுள்ளன எனினும், எதிர்மறை சவ்வூடு அமைப்பு மற்றும் அடர்கசடு மேலாண்மை அமைப்பினை எவையும் நிறுவவில்லை. உணவகம் மற்றும் தங்கும் விடுதிகளுக்காக ஒரு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது.

**5. கழிவுப் பொருட்கள் மேலாண்மை**

**5.1. தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் மேலாண்மை**

தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவித பாதிப்பும் இன்றி பாதுகாப்பாக கையாளுவதற்குத் தகுந்த மேலாண்மை நடவடிக்கையினை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது. 2008 ஆம் ஆண்டு அறிவிக்கை செய்யப்பட்டு தீங்கு விளைவிக்கும் கழிவுகள் (மேலாண்மை, கையாளுதல் மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகளின்படி 31-3-2011 வரை 2,855 தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் உற்பத்தியாகும் தொழிற்சாலைகள் வாரியத்தால் கண்டறியப்பட்டு பட்டியலிடப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலைகள்

[2011 ஆகஸ்ட் 29

தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளன. கும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ள சிப்காட் வளாகத்தில் அபாயகரமான கழிவுப் பொருட்களை, பாதுகாப்பாக சுத்திகரித்து நிலம்நிரப்பும் பொது வசதி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதற்கு வாரியத்தால் செயல்படுதல் இசைவாணை வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, திருப்பூரில் அமைந்துள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்பாலும், கரூரில் அமைந்துள்ள பொதுக் கழிவு மற்றும் தனியார் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்பாலும், அபாயகரமான கழிவுப் பொருட்களை சுத்திகரித்துப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்த திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், நல்லூர் கிராமம் கருப்பக்கவுண்டர்பாளையத்திலும், கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மத்தகிரி கிராமத்திலும் இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இவ்விரண்டுக்கும் வாரியத்தால் கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பதற்கான இசைவாணை வழங்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் அனுமதி பெற்றவுடன் கரூர் மாவட்டத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. மறுசுழற்சி மற்றும் மறுஉபயோகக் கொள்கையை மேற்கொள்வதற்காக பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கழிவுகளை மூலப்பொருளாகப் பயன்படுத்துவதற்கு சிமென்ட் தொழிற்சாலைகள் ஊக்குவிக்கப்பட்டு, புலியூர் செட்டிநாடு சிமென்ட் ஆலையில் சோதனை ஓட்டம் நடைபெற்றுள்ளது. இதன் தொடர்பாக வாரியம் ஒப்புதல் ஆணையை வழங்கியுள்ளது. மேலும், ஏ.சி.சி., மதுக்கரை மற்றும் கிராசிம் சிமென்ட் தொழிற்சாலைகளில் பெயிண்ட், தார், கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களின் கழிவுகளை எரிபொருளாகப் பயன்படுத்த சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை சிப்காட் வளாகத்தில் அபாயகரமான கழிவுப் பொருட்களைச் சுத்திகரித்து பாதுகாப்பாக அகற்றுவதற்காக வசதியை ஏற்படுத்த, மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் தக்க இடம் ஒதுக்குமாறு சிப்காட் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

### 5.2. மருத்துவக் கழிவுகள் மேலாண்மை

திருத்தப்பட்ட 1998 ஆம் ஆண்டு மருத்துவக் கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள், மருத்துவக் கழிவுகள் உருவாக்குதல், சேகரித்தல், பெறுதல், சேமித்தல், எடுத்துச் செல்லுதல், சுத்திகரித்தல்,



2011 ஆகஸ்ட் 29]

வெளியேற்றுதல் அல்லது கையாளுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நபர்களுக்குப் பொருந்தும். இந்த விதிகளின்படி, மருத்துவ நுண்ணுயிர் கழிவுகளைக் கையாளுவதற்கு வாரியத்தின் அங்கீகாரம் பெற வேண்டும். மனித ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு எந்தவொரு பாதிப்புமில்லாமல் மருத்துவ நுண்ணுயிர் கழிவுகளைக் கையாளுவதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவது மருத்துவ நுண்ணுயிர் கழிவுகளை வெளியேற்றும் நிறுவனத்தின் உரிமையாளரின் கடமையாகும். மேற்கூறிய விதிகளின்படி மருத்துவ நுண்ணுயிர் கழிவு, சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றம் ஆகியவை இவ்விதிகளில் உள்ள அட்டவணை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடியும் மற்றும் அட்டவணை 5-ன் வரையறைக்குட்பட்டும் வெளியேற்றப்பட வேண்டும்.

வாரியம், இதுவரை தமிழ்நாட்டில் 3,283 தனியார் மற்றும் 308 அரசு மருத்துவமனைகளைக் கண்டறிந்துள்ளது. மேற்படி அனைத்து மருத்துவமனைகளும் மருத்துவக் கழிவு மேலாண்மை செய்யும் பொது அமைப்புடன் ஒப்பந்தம் செய்துள்ளன. இந்தப் பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு செய்யும் நிலையங்களில் உயர் அழுத்த நீராவி மூலம் சுத்திகரிக்கும் கருவி, நறுக்கும் கருவி, எரிப்பான் மற்றும் பாதுகாப்பான நிலநிரப்பு ஆகிய அமைப்புகள் உள்ளன. தமிழ்நாட்டில் 11 இடங்களில் பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. அவ்விடங்கள் பின்வருமாறு: காஞ்சிபுரம் மாவட்டத்தில் தென்மேல்பாக்கம் கிராமம் மற்றும் கின்னார் கிராமம், வேலூர் மாவட்டத்தில் கண்டிபேடு கிராமம், கோயம்புத்தூர் மாவட்டம் ஒரட்டு குப்பை கிராமத்தில் இரண்டு இடங்கள், நீலகிரி மாவட்டத்தில் குன்னூர், சேலம் மாவட்டத்தில் தங்காயூர், திருநெல்வேலி மாவட்டத்தில் பாப்பான்குளம், இராமநாதபுரம் மாவட்டத்தில் முத்துவயல், விருதுநகர் மாவட்டத்தில் உண்டுருமிக்கிடாக்குளம். வாரியம் மேற்படி 11 பொது அமைப்புகளுக்கும் மற்றும் 3,253 மருத்துவமனைகளுக்கும் மருத்துவக் கழிவுகளைக் கையாளுவதற்கான அங்கீகாரம் அளித்துள்ளது.

2010 ஆம் வருடம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் மருத்துவக் கழிவு மேலாண்மைக்காக தமிழ்நாட்டினை தேர்வு செய்து 2,58,000 அமெரிக்க டாலர் மானிய உதவி செய்ய முன்வந்தது. இது ஒரு மூன்றாண்டு கால அமலாக்கத் திட்டமாகும். அதன்படி ஜூன் 2010 இல் வாரியம், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

[2011 ஆகஸ்ட் 29

அமைச்சகம், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் மற்றும் பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இத்திட்டத்தின்படி 5 அரசு மருத்துவமனைகள், 1 சென்னை மாநகராட்சி மருத்துவமனை, 9 தனியார் மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்த மருத்துவமனைகள் மருத்துவக் கழிவுகளைக் கையாளுவதில் முன்மாதிரியாகத் திகழும்வண்ணம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்தின்கீழ் இந்திராகாந்தி திறந்தவெளி பல்கலைக்கழகத்தின்மூலம் மருத்துவமனை ஊழியர்களுக்கு மருத்துவக் கழிவுகளைக் கையாளுதல் பற்றிய பயிற்சியும் மற்றும் 6 மாத கால சான்றிதழ் படிப்பும் அளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி உதவித் திட்டம் தற்போது அமல்படுத்தப்பட்டு வருகின்றது.

### 5.3. நகர திடக் கழிவுகள் மேலாண்மை

நகரமயமாதல் அதிகமாவதாலும், நகர திடக் கழிவுகளின் அளவு அதிகரிப்பதாலும், அறிவியல் ரீதியாக திடக் கழிவுகளை மேலாண்மை செய்வது அவசரத் தேவையாகிறது. திடக் கழிவுகளை ஆதாரத்திலே பிரித்து கையாளுதல், குறைத்தல், மறுசுழற்சி செய்தல் மற்றும் மறுஉபயோகம் செய்தல் போன்றவற்றை வாரியம் பரிந்துரைக்கிறது. வாரியம், உயிரகக் கழிவுகளை உரமாக்குவதற்காக 122 நகராட்சிகளுக்கும் மற்றும் 7 மாநகராட்சிகளுக்கும் தடையில்லாச் சான்றிதழை வழங்கியுள்ளது. 89 நகராட்சிகளின் தடையில்லாச் சான்றிதழ்கள் உரிமங்களாக மாற்றப்பட்டுள்ளன.

### 5.4. பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை

கடந்த சில ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வகையில் பிளாஸ்டிக் போன்ற மக்காத பொருட்களின் பயன்பாடு தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் பல மடங்கு அதிகரித்துள்ளது. இந்த மக்காத பொருட்கள், பயன்பாட்டுக்குப் பின் சாலையோரங்களில் நீர்நிலைகளில், குளங்களில், கால்வாய்களில் மற்றும் திறந்தவெளிப் பகுதிகளில் தூக்கி எறியப்படுகின்றன மற்றும் அவை நகர திடக் கழிவுகளுடன் கலந்து, நகர திடக் கழிவுகள் கொட்டி வைக்கும் இடங்களுக்குச் சென்றுவிடுகின்றன. மக்காத பிளாஸ்டிக் கழிவுகள் நிலம், நீர் மற்றும் காற்று மண்டலத்தை மாசுப்படுத்துகிறது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இதுவரை பிளாஸ்டிக் பை, பிளாஸ்டிக் விரிப்பு, பிளாஸ்டிக் கயிறு, பி.வி.சி. குழாய் மற்றும் ஏனைய பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் 1,941



2011 ஆகஸ்ட் 29]

தொழிற்சாலைகளைக் கண்டறிந்துள்ளது. மேற்கண்ட 1,941 தொழிற்சாலைகளில் ஏறக்குறைய 150 தொழிற்சாலைகள், மறுசுழற்சி செய்யப்படும் பிளாஸ்டிக் பொருட்களிலிருந்து பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கின்றன. தமிழ்நாட்டில் மட்டும் ஏறக்குறைய 10,400 டன் நகர திடக் கழிவுகள் தினந்தோறும் உற்பத்தியாகிறது. மேற்கண்ட நகர திடக் கழிவுகளில் 9% (936 டன்) அளவுக்கு பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 936 டன் பிளாஸ்டிக் கழிவுகளில் 746 டன் அளவுக்கு பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுகிறது மற்றும் மீதமுள்ள 187 டன் மறுசுழற்சிக்குப் பயன்படாத பிளாஸ்டிக் கழிவுகள், திறந்த வெளிகளில் கொட்டப்படுகிறது மற்றும் எரிக்கப்படுகிறது. பிளாஸ்டிக் கழிவுகள் திறந்த வெளிகளில் கொட்டப்படுவதாலும் மற்றும் எரிக்கப்படுவதாலும் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பிளாஸ்டிக் கழிவுகளை முறையாகக் கையாளுவதற்கு பல வழிமுறைகளை வகுத்துள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளையும், ஒருமுறை பயன்படுத்தித் தூக்கி எறியும் பிளாஸ்டிக் பைகள், கப்கள், டம்ளர்கள், விரிப்புகள், தட்டுகள் மற்றும் ஏனைய பொருட்களின் பயன்பாட்டைத் தடை செய்ய தீர்மானம் இயற்றச் சொல்லி வலியுறுத்தியுள்ளது. இதன் தொடர்ச்சியாக மேற்கண்ட பிளாஸ்டிக் கழிவுகளால் உண்டாகும் தீய விளைவுகளை மக்கள் மற்றும் அரசு அமைப்புகளுக்கு உணர்த்தவும் மற்றும் இவற்றிற்கு மாற்றாக உள்ள பொருட்களைப் பயன்படுத்துவதின் தேவை பற்றியும் பல விழிப்புணர்வு முகாம்களை நடத்தியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து திருமண மண்டபங்கள், உணவு விடுதிகள், கல்விக் கூடங்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் ஆகிய இடங்களில் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்தக்கூடாது என்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் வலியுறுத்தியுள்ளது.

இந்திய அரசானது 2011 ஆம் ஆண்டு பிளாஸ்டிக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளை 4-2-2011 அன்று அறிவிக்கை செய்துள்ளது. மேற்கண்ட விதிகளின்படி எவரும் 40 மைக்ரான் தடிமனுக்குட்பட்ட புதிய அல்லது மறுசுழற்சி செய்யப்பட்ட அல்லது இரண்டும் கலந்த எந்தவிதமான பிளாஸ்டிக் பைகளை உற்பத்தி செய்யவோ, சேமித்து வைக்கவோ, விநியோகிக்கவோ மற்றும் விற்கவோ கூடாது.

[2011 ஆகஸ்ட் 29

## 5.5. பிளாஸ்டிக் கழிவினை சிமெண்ட் உலைகளில் இணை எரிபொருளாகப் பயன்படுத்துவது

அபாயகரமான கழிவுகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளினால் சுற்றுச்சூழல் சீரழிவதிலிருந்து பாதுகாக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இம்முயற்சியின் ஒரு பகுதியாக, சிமெண்ட் உலையில் மாற்று எரிபொருளாக, பிளாஸ்டிக் கழிவினை இணை எரிபொருளாக சிமெண்ட் தொழிற்சாலைகளில் பயன்படுத்த வாரியம் சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. திருநெல்வேலியிலுள்ள சிமெண்ட் தொழிற்சாலை பிளாஸ்டிக் கழிவுகளை இணை எரிபொருளாகப் பயன்படுத்தி வருகிறது. வாரியம் பிற சிமெண்ட் தொழிற்சாலைகளையும் பிளாஸ்டிக் கழிவுகளை இணை எரிபொருளாகப் பயன்படுத்த அறிவுறுத்தியுள்ளது.

## 5.6 மின்னணுக் கழிவுகளின் மேலாண்மை

மின்னணுக் கழிவுகளின் மேலாண்மை குறித்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. இதன் தொடர்பாக அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், தேசிய உலோகப் பொறியியல் ஆய்வு நிறுவனத்தின் வல்லுநர் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு மின்னணுக் கழிவு குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்த கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. மின்னணுக் கழிவுகளைப் பிரித்து மறுசுழற்சி செய்யும் 10 தொழிற்சாலைகளுக்கு மின்னணுக் கழிவுகளை முறையாகப் பிரித்து அவற்றில் உள்ள அச்சு சுற்றுத்தகடு, ஒருங்கிணைக்கப்பட்ட சுற்று, இரும்பு, செம்பு, இரப்பர், கண்ணாடி முதலியவற்றைப் பிரித்தெடுப்பதற்கு இசைவாணை வழங்கியுள்ளது. இவற்றில் அச்சுச் சுற்றுத்தகடு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சுற்று முதலியவை அமெரிக்க ஐக்கிய நாடுகள், சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற மேலை நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அவற்றில் உள்ளகன உலோகங்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன. மற்ற கழிவுகள் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளுக்கு மறுசுழற்சிக்காக அனுப்பப்படுகின்றன.



2011 ஆகஸ்ட் 29]

## 6. காற்று மற்றும் நீரின் தன்மையைக் கண்காணித்தல்

## 6.1. காற்றின் தன்மை கண்காணிப்பு

நகர்ப்புறங்களில் பெருகிவரும் தொழிற்சாலைகளிலிருந்தும், வாகனங்களிலிருந்தும் வெளியேறும் வாயுக் கழிவுகளினாலும், புகையினாலும் சுற்றுப்புறக் காற்றின் தன்மை மாசடைகிறது. காற்று (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981-ன்படி தமிழ்நாடு முழுவதும் காற்று மாசுக் கட்டுப்பாடு பகுதியாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய சுற்றுப்புறக் காற்று கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் சென்னை, கோயம்புத்தூர், தூத்துக்குடி, மதுரை ஆகிய நகரங்களில் தலா மூன்று இடங்களிலும், சேலம் நகரத்தில் ஒரு இடத்திலும் காற்று கண்காணிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. இத்திட்டமானது மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகின்றது. வாரியம் சென்னை மாநகரில் 5 சுற்றுப்புறக் காற்று தரக் கண்காணிப்பு நிலையங்களையும், திருச்சிராப்பள்ளியில் 5 நிலையங்களையும் அமைத்துள்ளது. இந்நிலையங்களின் வாயிலாக சுற்றுப்புறக் காற்றின் தன்மையினை அந்த நகரங்களின் குடியிருப்பு, தொழிற்சாலை, வர்த்தக மற்றும் பிற பகுதிகளில் கண்காணிக்கப்படுகின்றது. இது தவிர வாரியம், காற்று மாசு கண்காணிப்பினைத் தீபாவளி மற்றும் போகிப் பண்டிகைக் காலங்களில் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் மேற்கொண்டு வருகிறது. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் சுற்றுப்புறக் காற்று மாசுக்கான புதிய தர அளவுகளை நிர்ணயித்து 18-9-2009 முதல் அமல்படுத்தியுள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு 10 மைக்ரான்கீழ் உள்ள நுண் துகள்கள் மற்றும் 2.5 மைக்ரான் கீழான நுண்துகள்களை அளவிடத் தேவையான கருவிகளை வழங்கி, காற்று ஆய்வு செய்யும் 13 ஆய்வகங்களையும் மேம்படுத்த வாரியம் உத்தேசித்துள்ளது.

## 6.2. தொடர் காற்றுக் கண்காணிப்பு மையம்

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தனது தலைமை அலுவலகத்தில் தொழிற்சாலையிலிருந்து புகைபோக்கிமூலம் வெளியேறும் காற்றின் தரத்தையும், தொழிற்சாலையினைச் சுற்றியுள்ள காற்றின் தரத்தையும் கண்காணிக்கும்பொருட்டு ஒரு தொடர் காற்றுக் கண்காணிப்பு மையத்தினை அமைத்துள்ளது. வாரத்தின் ஏழு நாட்களிலும் 24 மணி நேரமும் தொடர்ச்சியாக உமிழ்வுகளில் ஏற்படும் அளவுகளை உடனுக்குடன் கண்காணிக்கும்பொருட்டு

[2011 ஆகஸ்ட் 29

அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய மையம் இந்தியாவில் வேறெங்கும் இல்லாத தனித்தன்மை வாய்ந்ததால், மத்திய அரசால் பெரிதும் பாராட்டப்பெற்றுள்ளது. தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் வாயுக்களின் தன்மை குறிப்பிட்ட தர அளவினை மீறும்பொழுது இந்த மையத்தில் ஒலி எழுப்பான்கள்மூலம் எச்சரிக்கை மணி ஒலிப்பதோடு அக்காற்றின் தன்மை அளவு மீறும் தொழிற்சாலைக்கும், மாவட்டப் பொறியாளர் மற்றும் உறுப்பினர் செயலருக்கு உடன் நிவாரண நடவடிக்கை எடுக்கும்பொருட்டு குறுந்தகவல் தானாக அனுப்பப்படும். இதுவரை சுமார் 62 தொழிற்சாலைகள் தொடர் காற்றுக் கண்காணிப்பு மையத்துடன் இணைக்கப்பட்டு இத்தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் புகையின் தன்மை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### 6.3. வாகனப் புகை கண்காணிப்பு

தமிழக அரசு தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் 1989 இல் தேவையான திருத்தங்களை செய்து சென்னை நகரில் பிற வாகனங்களைப்போல சரக்கு வாகனங்களும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் புகை சோதனை நிலையங்களில் வாகனப் புகை தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு முன் தமிழ்நாடு மாசுக் கட்டுபாடு வாரியம் மட்டுமே சென்னை நகர சரக்கு வாகனங்களுக்கு புகைச் சான்றிதழ் வழங்க முடியும். இதன்படி சென்னையில் உள்ள 75 தனியார் புகை சோதனை நிலையங்கள் அனைத்து இரக வாகனங்களுக்கும் புகை சோதனை செய்து சான்றிதழ் வழங்கி வருகின்றன. இவற்றுடன் அம்பத்தூரில் இயங்கி வரும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய புகை சோதனை நிலையத்திலும், சென்னை நகரில் உள்ள சரக்கு வாகனங்களை புகை ஆய்வு செய்து, புகை தரச் சான்றிதழ் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 6.4. நீரின் தன்மை கண்காணிப்பு

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் முக்கிய நோக்கமானது, நீரின் முழுத்தன்மையைப் பேணுதல் மற்றும் சீரமைத்தல் ஆகும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற நீரின் தன்மையை ஒழுங்காகக் கண்காணிப்பது அவசியமாகிறது. எனவே, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் காவிரி மற்றும் அதன் உப நதிகளின் நீரின் தன்மையை இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு (மினார்ஸ்) திட்டத்தின்கீழ் 29 இடங்களிலும்



2011 ஆகஸ்ட் 29]

மற்றும் புவி சுற்றுப்புறச்சூழல் கண்காணிப்பு (ஜெம்ஸ்) திட்டத்தின்கீழ் 4 இடங்களிலும் கண்காணித்து வருகின்றது. இதைத்தவிர தாமிரபரணி, பாலாறு மற்றும் வைகை ஆறுகளின் தன்மையையும், உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வீராணம், பூண்டி, செங்குன்றம், போரூர் மற்றும் பழவேற்காடு ஏரிகளின் நீரின் தன்மையையும் இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

#### 6.4.1. காவிரி ஆறு மற்றும் உப நதிகள்

காவிரி மற்றும் அதன் உப நதிகளில் 33 இடங்களில் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகிறது. பொதுவாக காவிரி மற்றும் அதன் உப நதிகளின் நீரின் தரம் குளிப்பதற்கும் முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினிமூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும், மீன் வளர்ப்பு மற்றும் வனவிலங்குகள் பெருக்கப் பயன்பாட்டிற்கும் உகந்ததாக காணப்படுகிறது.

#### 6.4.2. தாமிரபரணி ஆறு

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தாமிரபரணி ஆற்றின் நீரின் தன்மையை 12 இடங்களில் கண்காணித்து வருகின்றது. தாமிரபரணி நீரின் தன்மை பொதுவாக குளிப்பதற்கும், முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினிமூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும் உகந்ததாகக் காணப்படுகின்றது.

#### 6.4.3. பாலாறு

வாணியம்பாடி நகராட்சி குடிநீர் நீரேற்று நிலையத்தில் உள்ள நீர் சேகரிப்பு கிணற்றிலிருந்து பாலாற்றின் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. ஆய்வறிக்கையின் புள்ளியில்படி பாலாறு நீரின் தரம் பொதுவாக முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினிமூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும் உகந்ததாகக் காணப்படுகின்றது.

#### 6.4.4. வைகை ஆறு

வைகை ஆற்று நீரின் தன்மை திருப்புவனம் நீரேற்று நிலையத்தின் நீர் சேகரிப்பு கிணற்றிலிருந்து நீர் மாதிரி சேகரித்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. வைகை ஆற்று நீரின் தன்மை பொதுவாக குளிப்பதற்கும், முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினிமூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும் உகந்ததாகக் காணப்படுகின்றது.

*[2011 ஆகஸ்ட் 29*

### 6.4.5. ஏரிகள்

இந்திய தேசிய நதிநீர் ஆதாரங்களைக் கண்காணிக்கும் திட்டத்தின்கீழ் உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வீராணம், பூண்டி, செங்குன்றம், போரூர் மற்றும் புலிகேட் ஏரிகளில் நீர் மாதிரிகள் சேகரித்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஏரிகளின் நீரின்தன்மை முறையான சுத்திகரிப்பும், அதைத் தொடர்ந்து கிருமிநாசினிமூலம் சுத்திகரிப்பும் செய்து குடிநீர் பயன்பாட்டிற்கும் மற்றும் மீன் வளர்ப்பு, வனவிலங்குகள் பெருக்கப் பயன்பாட்டிற்கும் உகந்ததாக காணப்படுகிறது.

### 6.5. சென்னை மாநகர நீர்வழிக் கண்காணிப்புத் திட்டம்

சென்னை மாநகரில் அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் கால்வாய், ஓட்டேரி நல்லா ஆகிய நான்கு நீர்வழித்தடங்கள் உள்ள 34 நீர் நிலைகளிலும், 24 தொழிற்சாலை கழிவுநீர் வெளியேற்ற நிலைகளிலும் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்தும் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு நீரின் தன்மை கண்காணிக்கப்படுகிறது.

## 7. வாரியத்தின் இதர முக்கியப் பணிகள்

### 7.1. சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஒரு பகுதியான சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் 1994 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தின் முக்கியக் குறிக்கோள் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் பணிபுரிவோர், தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் அரசுசாரா அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு பயிற்சி அளித்தல் ஆகும். இந்தப் பயிற்சி நிலையம் 2010-2011 ஆம் ஆண்டில் 14 பயிற்சி வகுப்புகள் நடத்தி 757 நபர்களுக்கு பயிற்சியளித்துள்ளது.

### 7.2. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு

சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்த சென்னையில் உள்ள வாரிய தலைமை அலுவலகத்தில் விழிப்புணர்வு மற்றும் சேவை மையம் ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. காற்று மற்றும் ஒலி மாசினால் உடல் நலத்திற்கு விளையும் கேடுகள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சிறப்பு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள், பயிலகங்கள் மற்றும் பேரணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. பண்டிகைக்



*2011 ஆகஸ்ட் 29]*

காலங்களின்போது பட்டாசு வெடிப்பதனால் ஏற்படும் ஒலி மற்றும் காற்று மாசு போன்றவற்றின் தீய விளைவுகளைப் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறும் விழிப்புணர்வு முகாமின் ஒரு பகுதியாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 2010-2011 ஆண்டின் தீபாவளிப் பண்டிகையின் போது ஒலி மற்றும் காற்றுத் தர ஆய்வுகளையும், மற்றும் போகிப் பண்டிகையின்போது காற்றுத் தர ஆய்வுகளையும் மேற்கொண்டது. தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் குறிப்பாக சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, வேலூர், சேலம், ஓசூர், திருப்பூர் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் ஒலி மற்றும் காற்று தர ஆய்வுகள் நடத்தப்பட்டன. சென்னையில் போகிப் பண்டிகை அன்றும் மற்றும் போகிப் பண்டிகையின் முன் பின் நாட்களிலும் சிறப்பு காற்றுத் தர ஆய்வுகள் ஒன்பது இடங்களில் குறிப்பாக அண்ணாநகர், பெசன்ட் நகர், கீழ்ப்பாக்கம், இராயபுரம், தியாகராய நகர், வள்ளலார் நகர், திருவல்லிக்கேணி, மந்தைவெளி மற்றும் வியாசர்பாடியிலும் நடத்தப்பட்டன.

மேலும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாகனத்தின்மூலம் பள்ளி, கல்லூரி மாணவ மாணவர்களிடையே மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் இயங்கி வரும் அண்ணா எப்.எம்., சமுதாய வானொலியில் பல்வேறு தலைப்புகளில் நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டது. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாநகராட்சிப் பள்ளி, கல்லூரி, தொழிற்சாலைகள், அரசு அலுவலகங்கள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் சுற்றுலாத் தலங்களில் நடத்தப்பட்டன. 2010-2011 ஆம் ஆண்டில் 160 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

### 7.3. தூய்மையான தொழில்நுட்பங்கள்

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தொழிற்சாலைகளை கழிவுநீரைச் சுத்திகரிக்க மேற்கொள்ள செய்வது மட்டுமன்றி சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்த தூய்மையான தொழில்நுட்பத் திறனை வளர்ப்பதிலும் ஈடுபட்டுள்ளது. வாரியத்தின் முனைப்பான ஆதரவு மற்றும் ஊக்குவிப்புடன் தொழிற்சாலைகள், எரிசோடா உற்பத்தியில் பாதரசக் கலத்திற்கு பதிலாக சவ்வூடு கலம் பயன்படுத்துதல், சிமென்ட் தொழிற்சாலைகளில் காற்று மாசினைக் குறைக்க ஈர செய்முறைக்கு பதிலாக உலர் செய்முறையினைப் பின்பற்றுதல், பி.பி.சி. சிமென்ட் உற்பத்தியில் 25 முதல் 30% வரை எரிசாம்பலைப் பயன்படுத்துதல், கந்தக அமிலம் தயாரிக்கும்

*[2011 ஆகஸ்ட் 29*

தொழிற்சாலைகள் இருமுறை மாற்றம் மற்றும் உட்கிரகிக்கும் தொழில்நுட்பத்தை செயல்படுத்துதல், சயனைடு அற்ற முலாம் பூசுதல் மற்றும் சயனைடு உப்புக்குப் பதிலாக வாயு கார்புரைசிங் முறையை வெப்பக்கடினப்படுத்துதலுக்கு பின்பற்றுதல் ஆகிய தூய்மையான தொழில்நுட்பங்களுக்கு மாறியுள்ளன. மரக்கூழ் மற்றும் காகிதத் தொழிற்சாலைகள், டையாக்ஸின் உள்ளிட்ட ஆர்கேனோ—குளோரைட்ஸ் உருவாவதை குறைக்கும் வகையில் குளோரின் மூலக்கூறு இல்லாத சலவை முறையினை பின்பற்ற ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றன. ஓசோனைச் சிதைக்கும் பொருட்களை உபயோகிக்கும் தொழிற்சாலைகள் முறையாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை உபயோகப்படுத்தி வருகின்றன.

## 7.4. நூலகம்

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய நூலகம் 1989 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தற்போது இந்நூலகம் 11,092 புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைக் கொண்டுள்ளது. இந்த நூலகத்திற்கு சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட 76 இதழ்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்), 9 செய்தி மடல்கள், 16 மாத இதழ்கள் தருவிக்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து ஈடுபாடு / அக்கறை கொண்ட அனைவரும் இதில் உறுப்பினராகலாம்.

## 7.5. செய்தி மடல்

வாரியத்தின் செயல்பாடுகள், ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றிய சுற்றுச்சூழல் சம்பந்தமான செய்திகள், சுற்றுச்சூழல் சம்பந்தமான கவிதைகள் மற்றும் கட்டுரைகள் அடங்கிய செய்திமடல் ஒன்றை வாரியம் ஒவ்வொரு காலாண்டிற்கும் வெளியிட்டு வருகின்றது. இந்தச் செய்திமடல்கள் அரசு துறை அலுவலகங்களுக்கும், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் இந்தச் செய்திமடல்கள் இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றது.

———————